# கொழுகொம்பு

வ. அ. இராசரத்தினம்

# கொழுகொம்பு

வ. அ. இராசரத்தினம்

சுன்னாகம் :
வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

பதிவுரிமை] 1959 [விலை : ரூ. 3-50

முதற் பதிப்பு — 1959

ஜோதி அச்சகம், யாழ்ப்பாணம்

உரிமை பதிப்பகத்தார்க்குரியது.

# முன்னுரை

எனது முதலாவது நாவலான கொழுகொம்பை எழுதுகையில், என்றைக்காவது ஒருநாள் இதற்கு ஒரு முன்னுரையும் எழுதவேண்டியிருக்கும் என்று நான் நினைத்திருக்கவில்லை. ஆனாலும் இப்போது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

சிறுகதையோ நாவலோ எதுவாக இருப்பினும் கதைக்கு அழுத்தமான ஒரு மூலக்கருத்து இருக்க வேண்டும்; ஈழத்துச் சூழ்நிலையில் எழுதப்படவேண்டும் என்ற இரண்டு கொள்கைகளும் எழுத்துலகிற் பிரவேசம் பண்ணிய ஆரம்பகால முதலே எனக்கு உண்டு.

மனிதமனத்தின் இன்பம், துன்பம், கோபம், ஏமாற்றம், வெறுப்பு, பச்சாத்தாபம் போன்ற பல்வேறு உணர்ச்சிகளும் உலகப்பொதுவானால், என் கிராமத்து மக்களும் கதாபாத்திரங்களாவதற்குத் தகுதியானவர்கள்தான் என்று இப்போதும் திட்டமாக நம்புகிறேன்.

அந்த நம்பிக்கையிற்றான் என் கிராமத்துச் செல்லனையும், நடராஜனையும், அம்பலவாணரையும், கனகத்தையும் உங்களோடு நடமாட விடுகிறேன். அவர்களால் உங்களோடு ஒட்டிப்பழக முடியுமானால் நான் நிச்சயமாக ஆனந்தப்படுவேன்.

இந்நாவலை ஈழகேசரி வார இதழ்களில் வெளியிடுவதற்காக என்னை எழுதத் தூண்டிய அதன் ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினத்திற்கும், இதனைப் புத்தக ரூபமாக, அழகாக வெளிக்கொணர்ந்திருக்கும், சுன்னுகம், வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றி.

வணக்கம்.

மூதூர்,
1-10-59

தங்கள்
**வ. அ. இராசரத்தினம்**

# அணிந்துரை

ஈழத்தில் நாவல் இலக்கிய வளர்ச்சி தவழுங் குழந்தைப் பருவத்திலுள்ளதென்பதை மறைத்துப் பயனில்லை. அது, இன்னும் தன் காலில் நிலைத்துநின்று, ஓடியாடிப் பாடி, வாசகர்களின் சிந்தனைக்குணவீந்து மகிழ்விக்கும் அளவுக்கு வளர்ச்சியடையவில்லை. குறிப்பிடத்தக்க சில அறிஞர்கள் நாவல் இலக்கிய வளர்ச்சிக்குத் திடமான அத்திபாரம் அமைத்துத் தந்தனர் என்பது உண்மையேயாயினும், அம் முயற்சியே வளர்ச்சி என எண்ணி இறுமாந்திருத்தல் அறிவுடைமையாகாது. அந்த அடிப்படை முயற்சியின்மீது நமது சமுதாயப் படப்பிடிப்புக்கள், வளமான வளர்ச்சிக்குரிய நவநவமான கருத்துக்களோடுகூடி, பலபல கோணங்களிற் பரந்துசென்று, ஈழத்து மண்ணின் புனித மணத்தைக் கமழ்ந்துகொண்டு உருவாகவில்லை. அதனுல் நம்மிடையே நிலவிவரும் ஓரிரு மொழிபெயர்ப்புக்களையும் சொந்தப் படைப்புக்களையும் நீக்கிப் பார்த்தால் ஈழத்துத் தமிழ்நாவல் இலக்கிய வளர்ச்சியில் பெரியதொரு தேக்கநிலை ஏற்பட்டிருப்பதை உணரலாம். இந்நிலைக்கு ஈழநாட்டு வாசகர்களது மனப்போக்கும் ஒரு காரணமென்பதை மிகுந்த வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அயல் நாட்டிலிருந்து இறக்குமதியாகும் நாவல்களை — அவை சொந்தப் படைப்புக்களாயினுஞ் சரி, மொழிபெயர்ப்புக்களாயினுஞ் சரி — தலைமேல் வைத்துக் கொண்டாடி, நமது நாட்டுப் படைப்புக்களை அலட்சியபாவத்தோடு — கும்பகோணத்திற் கோதானஞ் செய்கிற தம்பியின் மனோபாவத்தோடு — வாசகர்கள் நோக்குவதனுல் நாவலிலக்கியம் ஈழத்திற் செழித்து வளரவில்லை. அன்றியும் இலக்கிய சேவையைத் தலையாய நோக்கமாக்கி, துணிவுகொண்டு நாவல்களை வெளிக்

கொணர இந்நாட்டுப் பதிப்பகத்தார் முயல்வதுமில்லை. எனவே, ஈழத்திற் குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்த சிறுகதை இலக்கியச் செழிப்பில் நூறில் ஒரு பங்குதானும் நாவல் இலக்கியம் வளர்ச்சிபெறவில்லையென்றால் அது குற்றமாகாது.

இத் தேக்கநிலையைப் போக்கி, வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்துவைக்கத் துணிந்த ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரே யாவர். அவர்களில் திரு. வ. அ. இராசரத்தினம் அவர்களுக்கு ஒரு தனியிடமுண்டு என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். அவர் சிறுகதையுலகிலே பிரபலம் வாய்ந்தவர். அவர் தாம் காணும் எப்பொருளையும் எச் சிறு சம்பவத்தையும் புதுமைப் பொலிவுடன், தமக்கே இயல்பான அழகிய நடையிலே, பல்வேறு உணர்ச்சிகளைத் துடிக்கவிட்டுக் கதை நடத்திச் செல்பவர். அவரது சிறுகதைகளிலே ஈழத்து மண்வாசனை மிகவுண்டு. அவரது கன்னிமுயற்சியே கொழுகொம்பு என்னும் இந்நாவல். கன்னிமுயற்சியேயாயினும் நன்முயற்சி. இது, ஈழகேசரி வார இதழில் தொடர்கதையாக வெளிவந்து இரசிகப் பெருமக்களின் பாராட்டுதலைப் பெற்றது.

மூதூர் அம்பலவாணரின் மகனான நடராஜன் என்னும் கொழுகொம்பும் முறைப் பெண்ணான கனகம் என்னும் இளங்கொடியும் தூய அன்புகொண்டு ஒன்றையொன்று தழுவத் துடித்தபோது, ஒரு சிறு சம்பவத்தினால் இரு குடும்பத்தலைவர்களது 'நான்' முளைத்தெழுந்து, அந்தஸ்துப் போராட்டத்தை உண்டாக்கிப் பிளவை ஏற்படுத்துகிறது. பிளவைப் பெரிதாக்கும் திருப்பணியில் ஈடுபட்ட கிராமத் 'தொண்டர்' சிலரால் அது பெரும் பிளவாகிக் காதலர்களைப் பிரித்துவிடுகிறது. நடராஜன், தன் சமூகக்கண் காணாத இடத்திலே காதல் வாழ்வு



நடத்தக் கனகத்தை யழைத்தபோது, தமிழ்க்குலப் பெண்மை அவளைத் தடுக்கிறது; சந்தர்ப்பமும் அவன் மனதிற் சந்தேகத்தை விதைக்கிறது. அதனால், தன்னையும் ஊரையும் உறவையும் வெறுத்துவிட்ட அவன் மலைநாட்டுத் தோட்டமொன்றிலே புகலடைந்து அங்கே துணையற்று வாடுங் கொடியாகக் கிடந்த பிலோமினாவுக்குக் கொழுகொம்பாகிறான். அத் தளர்கொடி, தான் படரும் அக் கொழுகொம்பு, காலாகாலமாகப் பிறிதொரு இளங்கொடிக்குச் சொந்தமானது என அறிகிறது. கொழுகொம்பை உரிய இளங்கொடிக்கே சேர்த்துவிட எண்ணிய பிலோமினா மன நிறைவுடன் தியாகத்தீயிற் குதிக்கிறாள் — இதுவே விளக்கமான கதைக்கரு.

கதை, மகாவலிகங்கையின் அரவணைப்பிலே வளங்கொழிக்கும் மூதூரிலே பிறந்து, கல்முனையையும் கொழும்பையுந் தொட்டு, மலைநாடு சென்று முடிகிறது. இப் பகைப்புலங்கள், கதையைச் சுவைகுன்றவிடாமல் நடத்திச் செல்கின்றன. இப் பகைப்புலங்களிலே அடக்கமும் அதனோடு அறிவை வென்று மேலோங்கும் உணர்ச்சித் துடிப்பும், காதலும் அதனோடு பிறர்துயர்கண்டு இரங்கும் பண்பும் ஆகிய இவைகள் கொண்டு உருவான நடராஜன்; அவன்மீது காதல்கொண்டு வாடித் தளர்ந்தபோதினும், பண்பு தவறாத கனகம்; அந்தஸ்து ஆசையும் பிள்ளைப் பாசமும் போட்டியிட, சிலசமயம் நிமிர்ந்தும் சிலசமயம் தளர்ந்தும் நடக்கும் அம்பலவாணர்; அவரோடு போட்டியிடும் கனகத்தின் தந்தை கந்தையா பிள்ளை; இருவருக்கும் பகைமை மூட்டி வேடிக்கை பார்க்கும் 'பெருந்தொண்டர்' சண்முகம்பிள்ளை; தியாகச் சுடரான பிலோமினா, இன்னும் பலர் உலாவிக் கதையை வளர்க்கின்றனர். அவர்களது பார்வையிலே, பேச்சிலே, செயலிலே, நடத்தையிலே உணர்ச்சி இழையோடிக் கதைக்கு உயிர்க் களை ஊட்டுகிறது.

ஈழத்திலே நாவலிலும் சிறுகதையிலும் நல்லதொரு வளர்ச்சியை எதிர்பார்க்கும் இத் தருணத்தில், தான் தோன்றித்தனமான விமர்சகர்கள் குத்தூசிகளாக மாறி, எழுத்தாளர்களின் உள்ளங்களைத் துன்புறுத்தப் பார்ப்பது வரவேற்கத்தக்கதன்று. பண்பட்ட முறையிற் செய்யப்படும் விமர்சனம் இலக்கியத்தை வளர்க்க உதவுமேயன்றி, தங்கள் தங்கள் மனத்து விளைந்த எண்ணங்களை அளவுகோல்களாகக்கொண்டு செய்யப்படும் விமர்சனம் நிச்சயமாக வளரும் இலக்கியத்துக்குக் குந்தகம் விளைக்கும். விமர்சகன் எழுத்தாளனுக்குப் புதுப் புதுச் சோதனைகளிலும் முயற்சிகளிலும் ஊக்கமளித்து உயர்த்த வழிகாட்டவேண்டுமேயன்றித் தான் ஒரு தடைக்கல்லாயமைதல் அழகன்று. எனவே பண்பட்ட முறையிலமைவதும் எழுத்தாளனுக்கும் வாசகனுக்கும் நற்பயன் விளைக்கக்கூடியதுமான ஒரு விமர்சனப் போக்கு ஈழத்தில் உருவாகவேண்டும். அந்தவிதமான விமர்சனத் தராசில் இக் 'கொழுகொம்பு' தக்க நிறை காட்டும் என்பது எனது எண்ணம். திரும்பவும் வாசகனுக்கும் விமர்சகனுக்கும் ஒரு வார்த்தை: ஈழத்து மண்ணில் அரும்பிய ஒரு கொழுந்து இக் 'கொழுகொம்பு'.

நாவற்குழி,
31-10-59

**சு. வே.**

# கொழுகொம்பு

## 1

## தேர்தல்

திருக்கொட்டியார்புரப்பற்று மூதூரைச் சேர்ந்த சித்திராவி அம்பலவாண பிள்ளையவர்கள் எச்சிற் கையாற் காக்கை துரத்தியதை எவரும் கண்டிருக்க முடியாது; ஓட்டாததையும் கண்டிருக்க முடியாது. இதற்குக் காரணம் அவர் சாப்பிடுவதையே யாரும் காணாததுதான்.

அவர் சாப்பிடுவதேயில்லை என்று நீங்கள் எண்ணக்கூடாது. உயிரைப்பிடித்து உடம்புள் வைத்திருக்க மட்டுமல்ல, அதற்கும் மேலாகத் தெம்பாயும் திடமாயுமிருக்க அவர் நன்றாகச் சாப்பிடுபவர்தான். ஆனால் பெரிய வைதீகம். அடுக்களைக் கதவைச் சிக்காராகச் சாத்திக்கொண்டு, பூசி மினுக்கிய சேர்வைக் காலின் மேலிருக்கும் வெண்கல வட்டிலில் கிராமத்துப் பசுநெய்யும், வீட்டுக் கொல்லையில் வளரும் காயும் பிஞ்சுமாகச் சேர்த்து, அரைப்படி ஊர் அரிசிச் சோற்றை மூக்கு முட்டப் பிடிக்கிறவர் என்ற இரகசியம் நான் கதாசிரியனாதலால் எனக்குத் தெரியும். ஆனால் அவரைத் தெரிந்த மற்றவர்கள் அவரைப் பிசினி என்று சொன்னால், அவர் தன் பணத்தை அநியாயமாக மற்றவர்களுக்குச் செலவழிப்பதில்லை என்றுதான் அர்த்தம்.

பிள்ளையவர்களுக்கு ஐம்பது வயதிருக்கும். பளபள என்று மினுங்கும் ஏறு நெற்றிக்குமேலே, அழுத்தமாக வாரிய தலையின் பின்சரிவில், வாழைப்பொத்தியைப்போல இருக்கும் குடுமியில் ஓரிரண்டு வெண் மயிர்கள் இழையோடியிருந்தாலும், நிமிர்ந்த நெஞ்சிலே வாலிபத்தின் மிடுக்குத்தான் விறைத்து நிற்கும். வட்டித்து நீண்ட சிறிய முகத்திலே அகன்று விரிந்த நாசி. தலையிற் கேசத்தை வளர்க்க எத்தனை பிரயத்தனப்பட்டிருப்பாரோ அத்தனை முயற்சி முகத்து மீசையைச் சவரம் பண்ணவும் எடுத்துக்கொண்டிருப்பார்போலும்! முகம் வழவழ வென்றுதான் இருக்கும். அரைக்குமேலே அவர் இயல்பான நிறத்தைச் சொல்ல முடியாது! வெய்யிலடித்ததாற் கறுத்துப் போயிருக்கும். ஏனென்றால் அவர் மேலுக்குச் சட்டை போட்டதே கிடையாது. தூய வெள்ளை வேட்டியை இரண்டாக மடித்து நாலுமுழத் துண்டை உடுத்துவது போல ஒற்றைப்பட்டாகவே எப்பொழுதும் தரிப்பார். வேட்டிக்குக் கீழே, முழங்காலின் அடியிற் குதிரைச் சதையில் நரம்புகள் முறுக்கேறியிருப்பது தெளிவாகத் தெரியும்.

அவர் உள்ளமும் உடலும் உரம் பெற்றிருந்ததற்குக் காரணம் உண்டு. வினோபாஜியைப் போன்ற ஒரு மகானுபாவன் இலங்கையிற் தோன்றுமட்டும் தன்னது என்று பெருமைப்படக்கூடியபடி அவர் மூதாதையர் மாவலிப் பாய்ச்சல் காணும் பெரும் பரப்பு நிலத்தை அவருக்கு என்று வைத்து விட்டுப் போயிருந்தார்கள். அந்த வயலில் மாடுவிட்டுச் சேறுக்குவது தொடக்கம் அறுத்து அடித்து நெல்லைப் பட்டடைக்குக் கொண்டுவருவதுவரையுள்ள அத்தனைவேலையையும்



அவர் கைகளும் செய்தே தீரும். இந்த வேலைகளினால் வந்த உடலுறுதியும், நெல் எறிந்தாற் பொன்னாக விளையும் அவர் வயலின் செழிப்பினால் ஏற்பட்ட உள்ளத்து விம்மிதமும் அவரை ஒரு வணங்காமுடியனாகவே ஆக்கிவிட்டன.

வேலைக்காரர்களுக்குக் கூலி கொடுப்பதிலோ, அல்லது வேலை வாங்குவதிலோ எவனும் அவரைக் குறைசொல்ல முடியாது ஆனால் உள்ளூருக்குள் ரூபாய் சதக்கணக்கில் முடிந்துவிட்ட இந்தக் கூலி விவகாரம், விளைவின் பின்னாற் பருத்தித்துறை வியாபாரியோடு சிங்கப்பூர் 'கத்தை நோட்டு'க்களாக மாறும்போது ஊரவர்கள் மனமெல்லாம் வேகும். இந்த வேக்காடு தான் அவருக்குக் 'கருமி' என்ற பெயரை நிரந்தரமாகக் கொடுத்துவிட்டது. இதற்கு ஒத்தூதுபவரைப் போலத்தான் பிள்ளையவர்களும் வயலிலே கூட மற்றவர்களோடு சாப்பிடமாட்டார். ஏன்? திருகோணமலைப் பட்டினத்துக்குப் போக நேர்ந்தாற்கூடக் கட்டுச் சோறு கொண்டு போவது தான் அவர் வழக்கம்! மாளிகை போன்ற பென்னம் பெரிய வீட்டிலே, இராஜப் பிரதிநிதி மாளிகை ராஜாஜியைப்போலத் தன் வேஷ்டியைத் தானே தோய்த்து மான் தோலின் மேலேயிருந்து இராமாயணத்தையும் படித்துக்கொண்டிருந்தால் அந்தக் கிராமம் அம்பலவாணபிள்ளையைக் கருமி என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்லும்?

அம்பலவாணபிள்ளையிடம் பணம் குவிவதைக் காணக் காண ஊரில் இருக்கும் சின்னப்பணக்காரர்களுக்கு ஒரு வயிற்றெரிச்சல்; பொறாமை! 'பாவி இடிந்து கிடக்கும் கண்ணகியம்மன் கோயிலைத் திருத்த

ஒரு கால் ரூபாய் கொடுக்கிறானா? இப்படிச் சேர்த்து வைக்கிறானே! இவனுக்கென்ன பத்துப் பன்னிரண்டு பிள்ளை குட்டியா? மருந்து போல் ஒரே ஒரு மகனாச்சே! ஏன் தான் இப்படிக் கருமித்தனம் பண்ணுகிறானோ' என்று பேசியவர்களும், பிறரைப் பேசவைத்தவர்களும் வாயலுத்துப் போகும்வரைக்கும் 'கம்' மென்றுதான் இருந்தார் அம்பலவாணபிள்ளை அவர்களும்.

ஆனாற் கடைசியில் அவர் சரியாக மாட்டிக் கொண்டு விட்டார். ஆம், அம்முறை கிராமச்சங்கத் தேர்தலிற் போட்டியிடுவதென்று அம்பலவாணபிள்ளை தீர்மானித்துவிட்டார். எதிரிகளின் வலையிற் சரியாக விழுந்து விட்டார் அம்பலவாணபிள்ளையவர்கள்!

பற்றற்ற துறவிக்கும் தான் ஒரு தூய்மையான, எல்லோராலும் போற்றப்படத்தக்க, துறவியாக இருக்கவேண்டும் என்ற ஆசை இருக்கத்தான் செய்கின்றது. அம்பலவாணபிள்ளைக்கும் ஆசை பிடித்துக் கொண்டது! கிராமச்சங்கத்தவராக மட்டும்; ஏன்? அதன் தலைவராகவும் வரலாம். அதன் பின்னால் தன் பேரோடு கிராமச் சங்கத் தலைவர் என்ற பதங்களையும் சேர்த்தே எழுதலாம். மந்திரிக்குக் கை கொடுக்கலாம். எண்பது இருத்தல் மாலை போட்டால் அந்தக் காட்சி பத்திரிகைகளில் எல்லாம் வெளிவரும்.

'சனநாயகம், சனநாயகம்' என்று கத்துகிறார்களே. 'வாக்குரிமை, வாக்குரிமை' என்று வாய்வலிக்கப் பேசுகிறார்களே இந்த வாக்குரிமையினாலும், சனநாயகத்தினாலும் நாம் கண்ட பலன் என்ன? சிங்களர் அதிகமாக உள்ள கிராமத்தில் தமிழர் அவதிப்படுகிறார்



கள். தமிழர் அதிகமாக உள்ள இடத்தில் முஸ்லீம் மக்கள் அடங்கி வாழ்கிறார்கள். வலியவன் எளியவன் குடிசைக்குத் தீ மூட்டுகிறான். வாக்குரிமையினால் இந்தக் கொடுமைகள் நீங்கியிருக்கிறதா? நீங்கத்தான் போகிறதா? ஆனால் இந்தப் பொதுசன வாக்குரிமையினால் ஒரேயொரு நன்மை ஏற்பட்டுத்தான் இருக்கிறது. சாப்பிடுவதையே பிறர் காண விரும்பாத அம்பலவாணபிள்ளையைப் போன்ற வைதிகர்களும், அவரைவிடப் பெரிய பெரிய பணமூடைகளும், ஆகக் குறைந்தது தேர்தல் காலத்திலாவது ஒவ்வொரு ஏழையின் குடிசையிலும் மண்டியிடுகின்றனர். தேர்தலன்றைக்காவது ஒவ்வொரு ஏழை வாக்காளனும் நிமிர்ந்து நடக்கிறான்; சிறிது குடித்துக் குதூகலமாக இருக்கிறான். நெஞ்சு முறியாமலே பத்துப் பதினைந்து ரூபாய்களைப் பெற்றுக்கொள்கிறான். நம் நாட்டுச் சனநாயகம் ஏழை வாக்காளனுக்கு இந்தச் சலுகையை யாவது ஒரு நாளைக்குக் கொடுக்கிறது என்பதற்காவது நாம் சனநாயகத்தைப் பாராட்டித்தான் தீர வேண்டும்.

அம்பலவாணபிள்ளை அவர்களும் தான் அரும்பாடுபட்டுச் சேர்த்த காசை இறைத்தார். ஆம், இங்கிலாந்தில் தேர்தல் கொள்கைக்காக நடக்கலாம். ஆனால் நம் நாட்டில் அது நடக்கிறதா? அதுவும் கிராமச் சங்கத் தேர்தலாக இருந்துவிட்டால் அது தனிப்பட்டவர் செல்வாக்கிலேதான் நடைபெறும். இப்படித் தனிப்பட்ட இருவருக்கிடையிற் பூசல் கிளம்பி உணர்ச்சி ஏற்பட்டுவிட்டால் அதன்பிறகு கிராமச் சங்கத் தேர்தலைப் போன்ற இரசமான சம்பவம் வேறு எதுவுமே இருக்க முடியாது. ஒரு தொகுதியில்

இருக்கும் நூறு வாக்காளர்களுக்காக ஆயிரக்கணக்கிற் காசு செலவழியும். கலன் கணக்கிற் சாராயம் அழியும். தேர்தல் நாள் நெருங்குகையிலே தான் இந்த அபாயம் அம்பலவாணபிள்ளையவர்களுக்குத் தெரிந்தது!

அதனுல் என்ன! அம்பலவாணபிள்ளையும் தமிழ னல்லவா? 'முன் வைத்த காலைப் பின்வைக்கமாட் டானுமே தமிழன்; துணிந்து இறங்கியாய் விட்டது. இனி என்ன?' என்ற வைராக்கியத்துடன் தேர்தலில் ஈடுபட்டார் அம்பலவாணர். பணம் தண்ணீராய்ச் செலவழிந்தது. ஆனுல் இந்தப் பணம் முழுவதும் வாக்காளனுக்குச் சேர்ந்தாற்கூட நன்ருயிருக்கும். ஆனுல் அதுதான் நடக்கவில்லையே. பிள்ளையின் வீழ்ச்சியிற் கண்ணுயிருந்த புல்லுருவிகள் அவரை உறிஞ்சிக் குடித்துக் கொண்டேயிருந்தன.

முடிபாகத் தேர்தலிற் படு தோல்வியடைந்தார் பிள்ளையவர்கள். அவரை ஓட்டிப் பிடித்திருந்த 'உண்ணி'களும் விட்டுக் கழன்றன.

தேர்தலிற் தோற்றுப்போன பிள்ளையவர்கள் தான் இப்போது அவர் வீட்டு ஊஞ்சற் பலகை யிலே குந்திக்கொண்டு தன் சிறிய தலைக்குள்ளிருக் கும் மூளையினுல் இப்பெரிய உலகத்தையே அளக்க முயல்கிருர்.

தன்னை அடுத்துக் கெடுத்த நயவஞ்சகர்கள், சிநேகங்காட்டி வினையஞ் செய்தவர்கள் எல்லாருமே அவர் மூளையில் வந்து போனுர்கள். தன் பணப் பெட்டியிலே இருந்து கற்றை கற்றையாக இழுத் தெடுத்த பணத்தைக் கணக்கிடுகையில் அவர் அடி



வயிறு பகீர் என்றது. வீட்டுமூலையிலே வெறுமையாக் கிடக்கும் சாராயப் போத்தல்களைப் பார்க்கையில் அவர் உள்ளம் உணர்வு எல்லாமே சூன்யமாகி விட்டதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. செல வழிந்துபோன அத்தனை ரூபாய்களுக்கும், காலியாகிக் கிடக்கும் அத்தனை போத்தல்களுக்குமாகச் சேர்த்து, அவரின் சின்னமாகிய தராசிற்குப் பத்துப்பேர் மட்டுமே அடையாளமிட்டிருந்தார்கள். ஆ! இதற்கா கத்தானு அவர் தம் பரம்பரைப் பெருமையை உதறித் தள்ளிவிட்டு, எத்தனையோ 'எளிய பயல்'களின் காலடியில் மண்டியிட்டார்? சை! துரோகிகள்! உண்டவீட்டுக்கு இரண்டகஞ் செய்த காதகர்கள்!

அம்பலவாணபிள்ளை யவர்களின் சிந்தனை இந்த மாதிரியாகக் கொதிப்பேறிக்கொண்டு செல்கையிற் தன் மனைவிகூடத் தனக்கு வாக்களித்திருக்க மாட் டாளோ என்று அவர் மனம் ஐயுற்றது. 'அவள் உடன்பிறந்த அண்ணனும் அந்தப் பயல்கூட எனக்கு வாக்குப்பண்ணியிருக்க மாட்டான்' என்று அவர் மனம் திட்டமாகச் சொல்லிற்று. 'எரட்டும் அந்தத் துரோகி; என்னிடம் மாப்பிள்ளை கேட்டாகுதல் வரு வான்தானே! அப்போது அவனைப் பார்த்துக்கொள் கிறேன் என்று அவர் மனம் வஞ்சினமுரைத்தது.

பிள்ளையவர்கள் இப்படித் தீர்மானித்துக் கொண்டிருக்கையிலேதான் நடராஜன் 'பிருந்தாவன மும் நந்தகுமாரனும்' என்ற பாட்டை முணுமுணுத் துக்கொண்டு மண்டபத்துள்ளே காலடிஎடுத்து வைத்தான்.

---

# 2

## கலக்கம்

"எங்கேடா போய் வாறா?" என்ற முழக்கத்தைக் கேட்டு நடராஜன் திகைத்து நின்றான். அப்பா தன்னைத்தானா இப்படிக் கேட்கிறார் என்ற வியப்பில் அவன் மனம் ஒரு கணம் காலைத் தூக்காமல் மலைத்துப் போனான்.

அவனுக்கு இருபத்து மூன்று வயதாகிவிட்டது. அம்பலவாணபிள்ளையின் ஒரே மகன் அவன். அதுவும் புதுமைப்பித்தன் சொன்னது போல ஆசைக்கென்று காலந் தப்பிப் பிறந்த கருவேப்பிலைக் கொழுந்தல்லவா? இந்த இருபத்து மூன்று வருடகாலத்தில் ஒரு நாளாவது அம்பலவாணபிள்ளை அவனைக் கடிந்துரைத்ததில்லை. இன்றைக்கு "எங்கேடா போய் வாறா?" என்று ஆக்ரோஷத்தோடு அவர் கேட்டபோது அவன் காதுகளையே அவனால் நம்பமுடியவில்லை.

திகைத்துப் போய் நின்ற நடராஜன் அப்பா வேறு யாரையாவது கேட்கிறாரா என்று எண்ணியவனாகச் சுற்றுமுற்றும் திரும்பிப்பார்த்தான்.

"உன்னைத்தாண்டா கேட்கிறேன்" என்று மறுபடியும் இரைச்சலிட்டார் அம்பலவாணபிள்ளை.

நடராஜனின் ஒல்லியான நீண்ட உடம்பு அவமானத்தினாற்குன்றிப்போய் ஒரு சாணாயிற்று. அரை



யில் தொத்திக்கொண்டிருந்த நீண்ட காற்சட்டை கழன்று கீழே விழுந்து விட்டதைப்போல இருந்தது. இன்பமான மெல்லிய நினைவுகளில் மலர்ந்துபோயிருந்த அவன் வட்டமுகம் திடீரென்று சுருங்கிக் கறுத்துப்போயிற்று. அப்பாவிற்கு என்ன பதில் சொல்வது என்று எண்ணிக் கொண்டிருக்கையில் 'இந்த நிலையில் என்ன பதிலைச் சொன்னாலும் அவர் கோபிப்பாரே ஒழியச் சமாதானமடையமாட்டார்' என்று அவன் மனம் சொல்லிற்று. ஆனாலும் "மாமா வீட்டிற்குப் போய்வாறேன் அப்பா" என்று தான் அவன் பதில்சொல்லி வைத்தான்.

"யாருடா உனக்கு மாமா?" என்று இரைந்தார் அம்பலவாணர்; இந்தக் கேள்விக்குப் பதில் அவருக்கே தெரியும். ஏனென்றால் நடராஜன் எப்படி அம்பலவாணரை அப்பா என்று அருமையாக அழைக்கிறானோ அப்படியேதான் அவர் மனைவியின் சகோதரனான கந்தையாவை மாமா என்று அருமையாக அழைப்பான். ஆனால் இன்றைக்கு இந்த விதண்டாவாதமான வினாவை அம்பலவாணபிள்ளையவர்கள் கேட்கையில், ஆசிரியரின் வினாவிற்கு விடைதெரியாத மாணவனைப்போல நடராஜன் பயந்துபோய்த் தலையைக் குனிந்துகொண்டு நின்றான்.

அவன் மௌனத்தைத் தொடர்ந்து அம்பலவாணர் மறுபடியும் சொன்னார்: "உனக்கு மாமாவும் இல்லை, இனி நீ அந்தப்பக்கம் போனால் நான் உனக்கு அப்பாவும் இல்லை, நீ என் மகனுமில்லை" என்றார். அவர் குரலிற் சப்தம் தணிந்திருந்தாலும் வேகமும் கடுமையும் அதிகமாகவேயிருந்தன.

தான் ஏதும் பேசினுல் அதனுல் எந்த நன்மையும் ஏற்படாது என்று எண்ணிய நடராஜன் மெல்லத் தன் அறைக்குள் நழுவினுன்.

ஆம், அவன் சிறிது படித்தவன். அப்பா ஏன் கோபமாயிருக்கிருர் என்பது அவனுக்குத் தெரியும். இந்த நேரத்தில் 'மௌனம் கலகநாஸ்தி' என்பதையறிந்த நடராஜன் யோசித்தவாறே அறைக்குட் சென்று உடுப்புகளேக்கூடக் கழற்ருமற் கட்டிலிற் சாய்ந்து கால்களேத் தரையில் தொங்க விட்டபடி நிமிர்ந்து வீட்டு முகட்டைப் பார்த்தவாறே எண்ணமிடலானுன்.

கொழும்பில் அப்போதிக்கரி உத்தியோகத்துக்குப் படித்துக் கொண்டிருந்த நடராஜன், தன் தகப்பனுரின் தேர்தலுக்காக ஒரு வார லீவு எடுத்துக் கொண்டு ஊருக்கு வந்திருந்தான். வந்த சில நாட்களிலேயே அவன் தன் தகப்பனுர் தேர்தலில் தோற்றுப் போய்விடுவார் என்பதை விளங்கியிருந்தான். அப்பாவை மட்டந்தட்டத்தான், எந்த விவகாரத்திலும் அனுவசியமாகத் தலையிட விரும்பாத தன் தகப்பனுரைச் சூழ்ச்சிக்காரர்கள் சிலர் கிளப்பிவிட்டிருக்கிருர்கள் என்பது அவனுக்குத் தெரிந்து போயிற்று.

ஆனுல் உணர்ச்சித் திரை அப்பாவின் கண்களே மறைத்திருந்தது. தன் கையை விட்டுப்போன கற்றை நோட்டுக்களின் பலத்திலேதான் தேர்தலின் வெற்றிக் கொடி நாட்டுவேன் என்று திட்டமாக நம்பியிருந்தார் அவர். அந்த நம்பிக்கையின் முறிவு, அந்த எதிர்பாராத



ஏமாற்றம், அவர் மனதையே பேதலிக்கச்செய்துவிட்டது. அதனுற்ருன் தந்தையார் சீறிவிழுகிருர்.

ஆனுல் அவர் ஏமாற்றத்திற்காக அவனுக்கா தண்டனே? அவன் இனி மாமாவீட்டுக்குப் போகக் கூடாதா?

அப்பா கோபத்தில் இப்படிச் சொல்லிவிட்டார். நாளடைவில் எல்லாம் சரியாய்ப் போய்விடும் என்ற எண்ணம் இருண்ட அவன் மனதில் மின்னலாக நெளிந்து பளிச்சிட்டது ஒரு கணந்தான். மறுகணம் அவன் மனதில் தான் மாமனுர் வீட்டுக்குப் போகக் கூடாது என்ற அந்தகாரம், சந்திரனே மறைக்கும் பூமியின் நிழல்போல அவன் மனத்தை இருளாயடைத்தது. அறைக்கு வெளியிலே திறந்திருந்த யன்னலுக்கூடாக உலகம் இருளடைந்துகொண்டு வருவது தெரிந்தது. அன்றைய கடமையை முடித்துவிட்ட சந்தோஷத்தில் வானப்புட்கள் கானம் பாடிக்கொண்டு கூட்டையடைந்துகொண்டிருந்தன.

நடராஜனும் அந்தப்பறவைகளில் ஒன்றைப்போலத்தான் பாடிக்கொண்டு அவைகளுக்கு முன்னதாகவே வீட்டுக்கு வந்தான். ஆனுல் அவன் வரும்போதிருந்த மனநிலேக்கும் இப்போதிருக்கும் மனநிலேக்கும் தான் எவ்வளவு வித்தியாசம்! வானவெளியில் ஜில்லென்று பறந்து செல்லும் சிட்டுக்குருவி போன்றிருந்த அவன் யௌவன உள்ளம், இப்போது பாருங் கல்லாகக் கனத்து அமுக்குகிறதே! அது ஏன்? சிரித்து மிதந்த அவன் உள்ளம், அழுது ஆழ்கிறதே! அது ஏன்? ஏன்? ஏன்?

இந்தக் கேள்விகளுக்கு விடை அவனுக்குத் தெரியாது. ஏனெனில் இப்படியொரு கட்டளை தன் தகப்பனாரிடமிருந்து பிறக்கும் என்பதை அவன் எதிர்பார்த்தவனல்ல. எதிர்பாராத அந்தக் கட்டளை பிறந்தபோது, அதன் கனத்தை அநுபவிக்க மட்டும் அவன் மனத்துக்குத் தெரிந்திருந்தது. இந்த மனதின் கனந்தான் அன்பின் கனமா? அல்லது தன் மாமனாரிடம் அவர் குடும்பத்திடம் அன்பாக இருந்தான் என்பதை இப்போதுதான் உணருகின்றானா? அவன் வைத்திருந்த அன்பை இப்போதுதான் தெரிந்து கொண்டானோ என்னவோ, நடராஜனால் தன் தந்தையின் கட்டளையைத் தாங்கிக்கொள்ள முடியவேயில்லை. அவன் மனத்தில் இறந்துபோன, இறந்துகொண்டிருக்கிற, சம்பவங்கள் எல்லாம் திரை போடத் தொடங்கின.

நடராஜனைப் பொறுத்தவரை தன் தந்தையின் பிரமாண்டமான வீட்டில் அவன் தனியன். பால்யத்திலோ, அல்லது வாலிபத்திலோ அவனது விளையாட்டுத் தோழர்கள் எல்லாம் மாமாவின் வீட்டிலேதான் இருந்தார்கள். 'அத்தான்' 'அத்தான்' என்று காலைக் கட்டிக்கொண்டு திரியும் சந்திரனும், நடராஜனின் பாடசாலைத் தோழன் செல்லனும் மாமாவின் வீட்டிலேதான் இருந்தார்கள். இத்தனைக்கும் மேலாகத் தன்னைக் கண்டதும் நாணிக் குழைந்துகொண்டு, அந்தக் குழைவிலும் ஒரு தைரியத்தோடு, ஓர் உரிமையோடு, சதா தன்னோடு பேசிக்கொண்டிருக்க விரும்பும் கனகமும் அங்கேதான் இருக்கிறாள். அவளையுமா இனிமேற் பார்க்க முடியாது?

நடராஜனின் சிந்தனைகள் இந்த இடத்தில் முடிந்தே போய்விட்டன. அதற்குமேல் தொடர்வதற்கு அவனால் முடியவில்லை. அதை அவன் விரும்பவுமில்லை.

கடைசியாக அவன் பிரிந்து வரும்பொழுதுகூடக் கனகம் கேட்டாள்.



"ஏன் அத்தான் அவசரமாகப் போகிறீர்கள்?"

"நேரமாகிவிட்டது; போகத்தானே வேண்டும்" என்றான் அவன்.

"ஏன் வீண்சாட்டுச் சொல்லுகிறீர்கள்? இங்கே இருப்பதற்கு விருப்பமில்லை என்றுசொல்லுங்களேன்?" என்றாள் கனகம்.

"இன்றைக்கு மட்டுமா இங்கே இருக்கிறவன்? நாளைக்கும் வரத்தானே வேண்டும்" என்று விட்டுத்தான் வந்தான் நடராஜன். ஆனால் இனிமேல் அங்கு போகவே கூடாதாம்.

வார்த்தைகள் இலேசானவைதான்; ஆனால் நடராஜனின் மனநிலையில் அவ்வார்த்தைகளின் உட்பொருள் உலகமே அஸ்தமித்தது என்று சொல்லும்படியிருந்தது.

வெளியே பொழுது நன்றாக அஸ்தமித்து உலகை இருள் சூழ்ந்துகொண்டது. வீட்டுக்குள் வந்த நடராஜனின் தாயார் மூலையிலிருந்த குத்துவிளக்கை ஏற்றிவிட்டுத் திரும்பியபோது, அவள் அருமை மைந்தன் படுத்திருந்த நிலை அவள் வயிற்றைப் பிய்த்தது.

பொன்னம்மாவிற்கு நடந்த விஷயங்கள் எல்லாமே தெரியும். ஆனாலும் அவள் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் "மாலைபடும் நேரத்திலே ஏன் படுக்கிறாய்? எழுந்து வா, கோப்பி போட்டு வைத்திருக்கிறேன். குடியப்பா" என்றாள் ஆதுரத்தோடு.

"எனக்குக் கோப்பியும் வேண்டாம், சீப்பியும் வேண்டாம்" என்று வெறுப்போடு சொல்லிவிட்டுப் புரண்டு படுத்தான் நடராஜன்.

---

## 3

## அழைப்பு

நடராஜன் படுக்கையிலிருந்து எழுந்தபோது பாதி திறந்துகிடந்த யன்னல்களுக்கூடாகச் சூரியனின் இளங்கதிர்கள் வந்துகொண்டிருந்தன. இரவில் நெடுநேரம் வரையும் நித்திரையின்றித் தவித்தவன் நேரமானபிறகுதான் நித்திரை கொண்டிருக்கிறான். அப்போது அவனுக்கு அலுப்பாயிருந்தது. உடம்பெல்லாம் சூடேறியிருப்பதுபோல் ஒரு நினைவு. கண்ணிமைகள் கனத்து அழுந்தின; சோம்பல் முறித்துக்கொண்டே யன்னலூடாக வெளியே பார்த்தான்.

வீட்டிற்கு வெளியே தூரத்திற் கணுவிற் கட்டப்பட்டிருந்த பசுவிற் பால் கறந்து கொண்டிருந்தார் அவன் தகப்பனார். துலாம்பரமாகத் திருநீறு பூசியிருக்கும் அவர் பரந்தநெற்றி ஏறுவெயிலில் மின்னிற்று.

தகப்பனாரைக் கண்டதும் அவனுக்குள் பழைய எண்ணங்கள் தலைதூக்கின. யாரோ ஓர் அறிஞன் சொன்னானாம் "படிக்கவேண்டியவைகளைப் படித்து மறந்தபின் மிஞ்சியிருப்பதுதான் கல்வி" என்று. மனித எண்ணங்களுமே இப்படித்தான். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி அந்த எண்ணங்கள் எல்லாவற்றையுமே மறந்தபின் மீந்திருக்குஞ் சிந்தனைதான் மனிதனின் செயலுக்கும் காரணமாயிருந்தது.



நடராஜனுக்கும் நேற்றைய எண்ணங்கள் இன்று தோன்றினாலும் நேற்று என்ன எண்ணினான் என்பது இன்று அவனுக்கே தெரியாமலிருக்கலாம். ஆனால் எழுந்து அப்பாவைக் கண்டதும் அவன் எண்ணத் தொடரில் மிஞ்சிநின்றது இதுதான். 'இன்றைக்கே கொழும்புக்குப் போய்விடவேண்டும்.'

இப்படித் தீர்மானித்த நடராஜன் படுக்கையை விட்டு எழுந்து மூலையிற் கிடந்த பெட்டியை எடுத்துத் திறந்துவைத்துக் கொண்டு தன் உடுப்புகளை அடுக்கத் தொடங்கினான். உள்ளிலும் வெளியிலுமாகக் கிடந்த ஒவ்வொரு பொருளையும் உடுப்புகளையும் ஒழுங்காகப் பெட்டியில் அடுக்கிக் கொண்டிருக்கையிற் 'கொழும்புக்குப் போகும் போதாகிலும் கனகத்தைக் காண்பதில்லையா?' என்ற கேள்வி அவன் மனத்துள் எழுந்தது. இந்த எண்ணம் வந்ததும் தன் வேலையைக் கைவிட்டுவிட்டு அப்படியே பிரமித்துப் போய் இருந்தான் நடராஜன்.

தாழ்ப்பாளிடப்படாத கதவைத் திறந்துகொண்டு அவன் தாயார் அவனுக்குக் கோப்பி கொண்டுவந்ததுகூட நடராஜனுக்குத் தெரியவில்லை.

கோப்பி கொண்டுவந்த பொன்னம்மா, மகன் இருந்த நிலையைக்கண்டு திகைத்தாள். தன் மகன் இரவு சாப்பிடவேயில்லை என்று எண்ணியபோது அவள் கண்கள் கலங்கின. ஆனாலும் சமாளித்துக் கொண்டு கேட்டாள். "ஏன் பெட்டியில் அடுக்கிறாய்"?

நடராஜன் எதிர்பாராத இந்த வினாவினால் திடீரென்று தலைநிமிர்ந்து கொண்டே "இன்றைக்குக் கொழும்புக்குப் போகவேண்டும்" என்று சுருக்கமாகப் பதிலளித்தான்.

"ஏன், ஒரு வாரத்திற்கு லீவு இருக்கிறது என்று சொன்னாயே போகிறதற்கு இப்போ என்ன அவசரம்?" என்று கேட்டபடியே கோப்பியை நீட்டினாள் பொன்னம்மா.

"இங்கேதான் ஒரு வேலையும் இல்லையே. வீணாக ஏன் படிப்பைப் பாழாக்க வேண்டும்? நான் இன்றைக்கே போக வேண்டும்" என்று ஆத்திரத்தோடு சொன்னான் நடராஜன்.

"போகிறபோது போய்க் கொள்ளலாம். இப்போ கோப்பியைக் குடி" என்று அன்போடு கூறியவாறே மகனின் முதுகைத் தடவிக் கொடுத்தாள் பொன்னம்மா.

பொன்னம்மா உலகந் தெரிந்தவள். முப்பது வருடங்கள் வாழ்ந்துவிட்ட அவள் மணவாழ்க்கையில் அவளுக்குத் தன் கணவனின் பிடிவாதமும் நன்றாகத் தெரியும். அவளுக்கு மகனின் ரோசமும்கூட நன்றாகத் தெரியும். எவரையுமே கண்டிக்காத படி, தன் கோபத்தை—ஏன் துக்கத்தையும் வெளிக்காட்டாத எல்லாவற்றையும் பொறுமையாக, மௌனமாகச் சரிப்படுத்திவிடவும் அவளுக்கு வழி தெரியும். எந்தக் காரியத்திற்கும் அவள் 'வெடுசுடு' என்று நிற்பதில்லை. இந்தக் குணத்தினால்தான் அவள்



வாழ்க்கையில் வெற்றிகூட அடைந்திருக்கிறாள். தந்தையின் கண்டிப்பும் மகனின் கோபமும் காலகதியிற் சரியாகப் போய்விடும் என்றுதான் அவள் கருதினாள். அவள் மகனை அவளது அண்ணனின் வீட்டுக்குப் போக வேண்டாம் என்று உத்தரவிட்டிருப்பதில் அவளுக்கும் பிடிப்பா, என்ன?

நடராஜன், தன் தாயின் அன்பான அணைப்பிலிருந்தபடியே கோப்பியைக் குடித்து முடித்தான். குடித்து முடிந்ததும் மறுபடியும் பெட்டியை அடுக்கத் தொடங்கினான்.

பொன்னம்மா அவனை இடைமறித்து, "திரிகோணமலை பஸ் இரண்டு மணிக்குத்தானே வரும். நீ போய்க் குளித்துவிட்டு வா" என்று தடுத்தாள்.

அந்த அன்பான வேண்டுகோளை மீற நடராஜனால் முடியவில்லை. அவனுக்கு எதிலும் எரிச்சலாகவே இருந்தது. இப்போதைக்கு இவ்விடத்தை விட்டுப் போனாற் போதும் என்று எண்ணியவனாகக் கட்டிலிற் கிடந்த துவாயை எடுத்துத் தோளிற் போட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

கால்போன போக்கில் நடந்து ஆற்றங்கரையடிக்கு வந்து விட்டான் நடராஜன். அப்போது ஆவணி மாதத்துக் கடைசிப் பகுதியாக இருந்ததினாற் செத்துப்போக இருக்கும் கச்சான் காற்று, தன் குறுகிய வாழ்க்கைக்கிடையில் முழுப்பலத்தையும் காட்டிவிட வேண்டுமென்ற ஆத்திரத்தோடு அந்த அதிகாலையிலும் பலமாக அடித்துக்கொண்டிருந்தது. அந்தக் காற்றினால் ஆற்றின் நீர்த்திவலைகள் அள்ளுண்டு அவன் மேற் தெறிக்கையில் அவன் உடல் நடுக்கமெடுத்துக்

குளிர்ந்ததேயொழிய உள்ளம் குளிரவில்லை. சித்தம் போக்குச் சிவன் போக்காக அவன் நடந்து கொண்டேயிருக்கையில் ஆற்றங்கரையிற் காற்றில் அசையும் கோரைப் புற்களுக்குமேலே உயர்ந்து கவிந்திருந்த கிளுவை மரங்களுக்கூடாக உதயசூரியனின் மஞ்சட் கிரணங்கள் தெறித்து அந்தச் சுற்றுப்புறத்தையே பொன்மயமாக்கிற்று. இந்த இரசவாத வித்தையை இரசிக்க நேரமில்லாதவர்களாக ஆற்றங் கரையிலே அணிவகுத்து நின்ற பருத்தித்துறைப் படகுகளில் அந்த அதிகாலையிலும் மாலுமிகள் வைக்கோலும் நெல்லும் ஏற்றுமதி செய்துகொண்டேயிருந்தனர்.

நடராஜன் நெடுந்தூரம் நடந்து மகாவலிகங்கை கடலோடு கலக்குமிடத்திற்கு – கடற்கரைக்கே – வந்துவிட்டான். அங்கே சடுதியாகச் செல்லனைக் கண்டபோது அவன் சிரித்தான். ஆம், செல்லன் முன்னால் தன் மனக்குறை எதனையுமே காட்ட அவன் விரும்பவில்லை. எனவே அவன் நேற்றுச் செல்வராஜனின் வீட்டில் மனம் விட்டுச் சிரித்ததன் பின்னால் இன்றைக்கு அவனைக்கண்டு சிரித்தான். செல்லனும் சிரித்துக்கொண்டே, "ஏன் இத்தனை நேரமாகிவிட்டது?" என்று கேட்டான்.

"படுக்கையால் எழும்ப நேரமாகிவிட்டது. எழுந்ததும் வெளிக்கிட்டு வருகிறேன்" என்றான் நடராஜன்.

அவர்களிருவரும் காலைக் கடன்களை முடித்துத் திரும்பிவருகையிற் செல்வராஜன் கேட்டான், "இப்படியே வீட்டுக்குப் போகலாமே" என்று.

அந்தக் கேள்விக்கு 'ஆம்' என்றும் பதில் சொல்ல நடராஜனால் முடியவில்லை. 'வர மாட்டேன்' என்று



சொல்லவும் முடியவில்லை. 'வரவில்லை' என்று சொல்லித் தன் தகப்பனார் தன்னைப் போகவேண்டாம் என்று கட்டளையிட்டதையோ அல்லது தன் வீட்டுக் குறைகளையோ வெளிப்படுத்த நடராஜனுக்கு விருப்பமில்லை. முகத்திலடித்தாற் போல வரமாட்டேன் என்று சொல்லித் தன் மைத்துனனின் நட்பை முறித்துக் கொள்ளவும் அவன் மனதிற் துணிவில்லை. ஒன்றும் பேசாமல் மௌனமாகவே நடந்தான்.

சில வினாடிகள் கழிந்ததும் செல்லன்தான் மறுபடியும் கேட்டான், "ஞாயிற்றுக்கிழமை வெருகற் திருவிழாவிற்கு வீட்டிலுள்ளவர்கள் எல்லாரும் போகிறார்கள். நாமும் போவோமா?"

இனிமேலும் மௌனம் சாதிக்கக் கூடாதென்று நடராஜன் எண்ணியிருக்க வேண்டும். ஆகவே செல்லனின் வினாவிற்கு உடனே விடையாக, "நான் இன்றைக்கே கொழும்புக்குப் போகவேண்டும் என்றிருக்கிறேன்" என்று பதிலளித்தான்.

"ஒருவார விடுதலையிருக்கிறதென்றாயே இப்போது போகிறதற்கு என்ன அவசரம்?" என்றான் செல்லன்.

"ஒருவார லீவு எடுத்துக் கொண்டுதான் வந்தேன். ஆனால் வந்த விஷயந்தான் முடிந்துவிட்டதே. அடுத்தமாதம் முதலாம் வருடப் பரீட்சை இருக்கிறது. வீணாக லீவு எடுத்துக்கொண்டு படிப்பைப் பாழாக்க விரும்பவில்லை" என்றான் நடராஜன்.

"அடடா! எனக்குக்கூடத்தான் அடுத்தவாரம் பாடசாலையில் 'அப்பிளிக்கேஷன் ரெஸ்ற்' இருக்கிறது. அதில் சித்தியடைந்தால் மார்கழி மாதம் எஸ். எஸ். சி. எடுக்க விடுவார்கள். ஆனால் அதற்காக இத்தனை

தூரம் வந்துவிட்டு வருடத்தில் ஒரே ஒரு தடவை வரும் வெருகல் திருவிழாவைத் தவறவிடுவதா?"

உண்மையில் நடராஜனுக்கும் அந்தத் திருவிழாவைத் தவறவிட மனமேயில்லை. தன் சீவியத்தில் அந்த உற்சவத்தில் ஒன்றைக்கூட அவன் தவற விட்டதுமில்லை. ஆனால் இந்த வருடம் அந்த ஆசைக்கே மனதில் இடங்கொடுக்க முடியாதோ என்னவோ! இந்த எண்ணத்தில் அவன் சொன்னான், "நமக்குத் திருவிழாவை விடப் படிப்புத்தானே முக்கியம்?"

"யார் இல்லையென்றார்கள்? அடுத்தவருடம் உன் அப்போதிக்கரி சோதனை முடிந்தபிறகு எங்கேயோ கண்காணாத ஊருக்கு உத்தியோகம் பார்க்கப் போகிறாய். அப்படிப் போனால் இனிமேல் வாழ்க்கையில் எத்தனை வெருகல் திருவிழாக்களை நீ காணமுடியுமோ? உனக்கு இந்த வருடத் திருவிழா மிகவும் அருமையானது, நீ வரத்தான் வேண்டும்" என்று கடகடத்துப் பேசினான் செல்லன்.

இருவரும் பேசிக்கொண்டே நடந்து செல்லன் வீட்டிற்கு வந்துவிட்டனர். சம்பாஷணையின் போக்கிலும் தன் நிலையை வெளிக் காட்டக் கூடாதே என்ற ஆசையிலும் நடராஜன் தந்தையின் கட்டளையையும் மறந்து தன் மாமன் வீட்டிற் காலடி எடுத்து வைத்தே விட்டான். வீட்டினுள்ளே கனகமும் அவள் தாயாரும் எங்கோ புறப்படுவதற்கு ஆயத்தமாகச் சாமான்களைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். உயர்ந்த கூடாரம் கட்டிய இரட்டை மாட்டு வண்டி பிரயாணத்திற்குத் தயாராக நின்றது.

நடராஜனைக் கண்ட கனகம் சடாரென்று எழுந்து அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவள் பார்வையில் இதுவரையில்லாத ஆதங்கம் ஒன்று தேங்கி நின்றது.

---

# 4

## இருவர்

அந்த அவன் வீடுதான்; இதுவரை அந்த வீட்டுக்கு வருவதிலோ, அல்லது விட்டுப் போவதிலோ எந்தத் தடங்கலுமோ இருந்ததில்லை. மாமனார் வீடு என்று இயற்கையாக ஏற்படும் வெட்கம்கூட நடராஜனிடம் இருந்ததில்லை, ஆனால் அன்று என்னவோ மனதிலே ஒரு வெட்கம், ஒரு கூச்சம். அந்த வீட்டிலுள்ளவர்கள் எவரையுமே அவனால் நிமிர்ந்து பார்க்கக்கூட முடியவில்லை

அவனுடன் வந்த செல்வராஜனும் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக அவனை விறாந்தையிலேயே விட்டுவிட்டுத் தோட்டத்துக்குள் போய்விட்டான். நடராஜன் ஒன்றுமே செய்யத் தோன்றாதவனாக விறாந்தையிற் கிடந்த கதிரையில் இருந்தான்......இருந்தான்...... புது வீட்டுக்கு வந்த குழந்தை, வீட்டிலுள்ளவர்களை அறியுமட்டும் மிரள விழித்துக் கொண்டிருப்பதைப் போலப் பேச்சு மூச்சின்றி அப்படியே இருந்தான்.

அவன் முன்னால் தலையைக் குனிந்தபடி கனகம் நின்று கொண்டிருந்தாள் வெளியே சூறாவளியாய் அடித்த கச்சான் காற்றுக் கூடத் தன் செயலை மறந்து மயங்கி நின்றது.

சில நிமிடங்களுக்கு மயங்கிநின்ற கச்சான் காற்று மறுபடியும் தன் பழைய வேகத்தோடு அடிக்கையில், மேசையின் மேலே அனாதியான கடவுளைப் போல முன்னும் பின்னுமற்றிருந்த பழைய வார இதழ் ஒன்று, அடிபட்ட குருவியைப் போலப், படபட வென்று தன் இதழ்களை அடித்துக்கொண்டு கீழே விழுந்தது.

நடராஜன் அந்தப் பத்திரிகையை எடுக்கக் கீழே குனிந்தான். கனகமும் குனிந்தாள். இருவர் தலையும் முட்டிக் கொண்டன! இருவரும் தலையைத் தடவியபடியே நிமிர்ந்து ஒருவரை ஒருவர் பார்க்கையில், இருவருமே சிரித்தனர். அந்தச் சிரிப்போடே நடராஜன் கேட்டான். "வீட்டுக்கு வந்தவரை மியூசியத்தை பார்க்கிறது போலப் பார்க்கிறதுதானா இப்போ நாகரிகமா?"

"இல்லை; ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? என்று கேட்கிறது போலத் தலையை உடைத்துக்கொள்வதுதான் நாகரீகம்" என்றாள் கனகம். அதைச் சொல்லியவாறு அவள் நாற்காலியின் சட்டத்தைப் பிசைந்து கொண்டு நெளிகையில் சுவரிலே மெதுவாக அசையும் குத்துவிளக்கின் நிழல் போல இருந்தாள் கனகம். அழகிதான்; ஆனால் அந்த அழகு இத்தனை காலமாக நடராஜனின் கண்களிற் பட்டதோ என்னவோ தெரியாது. 'அழகாயிருக்கிறது' என்று சொல்லக்கூடத் திராணியற்ற தமிழ் நாட்டு ரசிகன் தானே நடராஜனும். ஆனால் இன்றைக்கு அவன் கண்களிலே கனகம் ஒரு அப்சரஸியாகவே தோன்றினாள். இளங்கதிர் சிலிர்க்கையில், தானும் மென்னகை காட்டிச் சிரிக்கும் பூப்போன்ற அவள் முகமும், அசைந்தாடும்



தெளிந்த நீரின் அடியிற் தோன்றும் பவளப் பூச்சி போன்ற அவள் நிறமும் அவனைக் கவர்ந்தன. ஒடிந்து விழுவது போன்றிருந்த இடையைக் கதிரையிலே முட்டுக் கொடுத்தவாறு வளைந்து நின்ற தோற்றமும் அவனைக் கவர்ந்தன. அவள் பிறை நெற்றியின் மத்தியிலே, தீட்டியிருந்த குங்குமப் பொட்டுக்கூட அவன் மனதை என்னவோ செய்தது. அவள் சிரிப்பு அடங்கி, அடங்கிய சிரிப்பே ஒரு குறுநகையாக அவள் இதழ்க் கடைகளில் ஓடிக் கொண்டிருக்கையில், அந்தச் சிரிப்பையே கவனித்துக் கொண்டிருந்த நடராஜன் கண்களுக்கு, அந்தச் சிரிப்பு அவள் இதழ்களிலல்ல; ஆனால் கண்களிற் தான் இருக்கிறது என்று தெரிந்தது. அவள் கண்களை அவன் பார்த்தபோது, கனகம் தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

என்னத்தைப் பேசுவதென்று தெரியாமலே, நடராஜன் கேட்டான், "வெருகலுக்குப் போக ஆயத்தமோ?"

"ஏன்? நீங்களும் வருகிறீர்களா? என்றாள் கனகம்.

"வரவேண்டும் என்று விருப்பந்தான். ஆனால் இன்றைக்குக் கட்டாயம் கொழும்புக்குப் போக வேண்டும்" என்றான் நடராஜன்.

கனகம் வெடுக்கென்று கேட்டாள் "ஏன் பொய் சொல்லுகிறீர்கள்? உண்மையைச் சொன்னால் உங்களை யாரும் கடித்துத் தின்றுவிடப் போவதில்லையே?" ஆம்; அவளை மறைந்திருந்த நாணத்திரை விலகிவிட்டது. அந்தத்திரையகன்றதும், நடராஜனோடு எப்படி உரிமையோடு துடுக்காகப் பேசுவாளோ அப்படியே பேச

முனைந்துவிட்டாள் கனகம். ஆனால் அவள் பேச்சிற் துடுக்குத்தனத்தைவிட ஆத்திரமும் அவநம்பிக்கையும் தான் அதிகமாயிருந்தது. ஆனால் அவள் பேச்சின் அவநம்பிக்கையை நடராஜன் விளங்கிக் கொள்ளவில்லை. ஆகவே அவன் தொடர்ந்தான். "பொய் சொல்வதற்கு என்ன இருக்கிறது. உண்மையாகவே நான் இன்றைக்குக் கொழும்பிற்குப் போகிறேன்"

"போகாமல் இருந்தாற்கூட நீங்கள் எங்களோடு வரமாட்டீர்களே" என்றாள் கனகம்.

"உண்மைதான். இந்த இருபதாம் நூற்றாண்டு இயந்திரயுகத்திலும் கடகடவென்று சப்தம் போட்டுக் கொண்டு, மணிக்கு ஒரு யார் நகரும் கட்டை வண்டியில் ஏறிக்கொண்டு செல்லும் உங்களோடு நான் வரத்தான் மாட்டேன். எனக்குத் தெம்மாங்கு பாடவும் தெரியாது" என்று சொல்லிச் சிரித்தான் நடராஜன்.

"கட்டை வண்டியில் என்ன? ஆகாயக் கப்பலிற் போவதாயிருந்தாற்கூட வரத்தான் மாட்டீர்கள்" என்றாள் கனகம்.

"வெருகலுக்குப் போக ஆகாயக் கப்பலே கிடையாது என்ற தைரியத்திற்தான் இப்படிச் சொல்கிறாய்"

"நன்றாகப் பேசுகிறீர்களே. இவ்வளவு பேசத் தெரிந்த நீங்கள் ஒரு அப்போதிக்கரிக்குப் படிப்பதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது. ஒரு புறொக்ரருக்குப் படித்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்?"

"படித்திருக்கலாம். ஆனால் உன்னைப்போல ஒரு எதிரி நீதிஸ்தலத்துக்கு ஒவ்வொருநாளும் வந்துகொண்டிருக்கமாட்டான். அதனாற் தான் படிக்கவில்லை" என்றான் நடராஜன்.



அவன் சம்பாஷணையின் சுவையிலே தான் இப்படிச் சொன்னால், இந்தப் பேச்சில் மனவருத்தப்படக் கூடியதாக எதுவுமே இல்லைத்தான். ஆனால் இந்தச் சம்பாஷணையின் இடையிலேயே தான் சொல்லவந்ததைச் சொல்லிவிடவேண்டும் என்று அவாவிய கனகம், மறுபடியும் ஆத்திரத்தோடு சொன்னாள், "ஆமாம், நாங்கள் எல்லாரும் உங்கள் எதிரிகள். ஜன்ம விரோதிகள். அந்த எதிரிகளோடு நீங்கள் ஏன் எங்காவது வரப்போகிறீர்கள்? நீங்கள் இங்கே வந்தது தெரிந்தாற்கூட உங்கள் தந்தையார் தலையைச் சீவிவிடுவாரே". உணர்ச்சியோடு பேசிமுடிக்கையில் கனகத்தின் கண்களில் கண்ணீரே ததும்பி நின்றது. கனகம் சேலைத் தலைப்பாற் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

நடராஜனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தன் தந்தையார் தன்னை இந்த வீட்டுக்குப் போகவேண்டாம் என்று கட்டளையிட்டது தனக்கும் தன் தாயாருக்கும்தான் தெரியும் என்று இதுவரை எண்ணிக்கொண்டிருந்தான். அந்தக் கட்டளையை மறைப்பதற்காகத்தான் செல்வராசனிடமும், கனகத்திடமும் எங்கெங்கோ எல்லாம் சுற்றிவளைத்துக் கொண்டு பேசினான். அதற்காகத்தான் காலையில் இந்த வீட்டுக்குக் கூட வந்தான். ஏன் இதற்காகத்தான்; இன்றைக்குக் கொழும்புக்குக்கூடப் போகத் தயாராக இருந்தான். எதை மறைக்க இத்தனை பிரயத்தனங்களும் பண்ணினானோ, அதே நிலத்தைப் பீறிக் கொண்டு வரும் முள்ளையைப்போல் வெளிவந்தபோது அவனால் ஆச்சரியப்படாமலிருக்க முடிய

வில்லை. பாவம்! கிராமத்தில் இதுபோன்ற சம்பவங்கள், பரம இரகசியமாகக் காப்பாற்ற எண்ணும் விஷயங்கள் எல்லாம் எப்படிப் பரவுகின்றன என்பது அவனுக்குத் தெரியுமா? கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்த மார்க்கோனியைப் பொது அறிவுப் பாடம் படிக்கும் ஐந்தாம் வகுப்பு மாணவன் தொடக்கம் பெருத்த பெருத்த விஞ்ஞானிகள் எல்லாம் போற்றிப் புகழ்கிறார்கள். என்னைக் கேட்டால் ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் குறிக்கப்பட்ட இரண்டு மூன்று பெண்களுக்கும் கட்டாயமாக மார்க்கோனியை விட மேலதிகமான மரியாதை காட்டப்படல் வேண்டுமென்று சொல்வேன். ஏனென்றால் மார்க்கோனியின் வானொலிச்செய்திகளை வெறும் பிண்டமாகத்தான் பிறருக்குப் பரப்புகிறது. ஆனால் இந்தப் பெண்களின் தந்திச் செய்திகளுக்குக் கண், காது, மூக்கு எல்லா அவயவங்களுமே இருக்கும். கனகத்தின் செவியில் இப்படி அடியுண்ட இந்தச் செய்தி, அவள் தந்தையின் காதிலும், தாயின் செவிகளிலும் என்ன உருவில் விழுந்திருக்குமோ என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும்!

ஆச்சரியத்தில் மூழ்கிய நடராஜன் அழுதுகொண்டிருந்த கனகத்தைப் பார்த்தபோது அவனுக்குத் துக்கமாகவும் இருந்தது. ஒரேநேரத்தில் ஆச்சரியம், துக்கம், அப்பாவின்மேல் வெறுப்பு எல்லா உணர்ச்சுளுமே அவன் உள்ளத்தில் முட்டி மோதுகையில் அவன் உள்ளம் சட சட வென்று எரியும் சிகையைப் போல அவனுள் எரிந்தது. கனகத்திடம் அந்த 'இரகசியத்தைச்' சொன்னவர்களை அப்படியே



கழுத்தை நெரித்துக் கொன்றுவிடலாம் போல இருந்தது அவனுக்கு. தன் மெய்ப்பாடுகளைச் சமாளித்துக் கொண்ட அவன் "உனக்கு யார் இதை சொன்னார்கள்" என்று சாந்தமாகக் கேட்டான்.

"சொன்னவர்கள் எதற்கு? "போகவேண்டாம் என்று சொன்னது, உண்மைதானே"

நடராஜன் அதற்குப் பதில் பேசவில்லை நெஞ்சறியப் பொய் சொல்ல அவனுக்குத் தைரியமில்லை!

"அந்தக் கட்டளையினால்தானே இன்றைக்குக் கொழும்புக்குப் போகப்போகிறேன்" என்கிறீர்கள்?

"அதற்காக அல்ல; ஆனால்.........."

"என்ன ஆனால். ஒருவார விடுமுறையில் வந்திருக்கும் தாங்கள் அதற்குள் திடுதிப்பென்று புறப்பட வேறு என்னதான் காரணம்?"

நடராஜன் கனகத்தை நெருங்கிக் கலங்கும் அவள் கண்களைப் பார்த்தவாறே குழைவோடு சொன்னான், "தேர்தலிற் தோற்றுப் போனதினாற் தந்தையார் எல்லாரிலும் எல்லாவற்றிலுமே கோபமாயிருக்கிறார். அதிலும் இந்தத் தேர்தலில் தமக்கு விரோதமாயிருந்தார் என்று எண்ணிக்கொண்டு மாமாவின்மேற் பெருங் கோபமாக இருக்கிறார். அவர் மன உளைச்சலிலேதான் எனக்கும் 'இங்கே வரவேண்டாம்' என்று கட்டளை யிட்டிருக்கிறார் போலும். எல்லாம் காலப் போக்கிற் சரியாகிவிடும். அதுவரை நான் தூரமாகப் போய் இருப்பது நல்லதுதானே"

அவன் சமாதானத்தைக் கேட்கக் கனகம் ஆயத்தமாயில்லை. தலையிலடித்தாற் போலச் சொன்னாள் "போக விருப்பமாயிருந்தாற் போகிறதுதானே. அதற்கு ஏன் இந்த வர்ணம் பூசிய பேச்செல்லாம்."

"இப்போது நான் போவதினால் இருவருக்கும் நன்மைதான். உண்மையாகவே இந்த வெருகல் திருவிழாவை விட்டுப்போக எனக்கும் மனம் இல்லை. ஆனால் நிலைமை என்னைப் போகச் சொல்லுகிறது".

கனகம் நடராஜனை நிமிர்ந்து பார்த்தாள். குறுவிப் போயிருந்த அவன் முகத்தைப் பார்த்த போது அவளுக்குத் தன் வார்த்தைகளின் கூர்மை தன்னையே திருப்பித் தைத்ததுபோல இருந்தது. இத்தனை நேரமும் அவள் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகளின் ஒவ்வொரு அட்சரமும் அவனைத் தாக்குகையில் அவள் தன் சுயநலத்தை, மற்றவரின் மனதையும் நிலைமையும் அறியாத தன் தப்பிதத்தை நொந்தாள். அந்த மன வேதனையில் அவள் இதயம் பேசிற்று. "என்னை மன்னித்து விடுங்கள், அத்தான்".

நடராஜன் அவளை அணைத்தபடியே, "யார் யாரை மன்னிப்பது? நீ ஒரு குற்றமும் செய்யவில்லையே" என்றான்.

"கொழும்புக்குப் போனால் எப்போது வருவீர்கள்?" அவன் பிடியிலிருந்து தன்னைச் சடாரென்று விடுவித்துக்கொண்டே கனகம் கேட்டாள்.

"லீவு விட்டதும் வந்து விடுவேன். ஏன் வர மாட்டேன் என்று எண்ணமா?"

"இல்லை எப்போது விடுமுறை கிடைக்கும்? மார்கழி மாதந்தான் என்று நினைக்கிறேன். இன்னமும் மூன்று மாதங்கள். அதுவரையும்...'

"சரி; போய் வரட்டுமா?"

கனகம் ஒன்றுமே பேசவில்லை. நடராஜன் அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே வாயிற் படியிலிறங்கித் தெருவிலே நடந்தான்.

# 5

## தந்தையின் ஆத்திரம்

சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும் என்பது பழமொழி. மனிதர்களிற் சிலர் இருக்கிறார்கள். சமூகத்தில் அவர்களுக்கு எத்தகைய முக்கியத்துவமும் கிடையாது. சனசமுத்திரத்தில் ஒரு துளியாக ஏதோ வாழ்கிறார்கள். ஆனால் இத்தகைய மனிதர் சிலரால் அவர்களை யறியாமலேயே பெரிய உற்பாதங்கள் எல்லாம் நிகழ்ந்து விடுகின்றன. வேண்டும் என்று கூடச் செய்பவர்களும் உண்டு. கூனியை எடுத்துக் கொள்ளுங்களேன். அவள் இல்லாவிட்டால் இராமாயணமே இல்லை. கண்ணம்மாவும் இப்படித்தான்.

கண்ணம்மாவிற்கு அறுபது அல்லது அதற்கும் அதிகமாகத்தான் வயதிருக்கும். காலதேவனின் பாதச் சுவடுகள் போல அவள் முகத்திற் சுருக்கம் விழுந்து கிடந்தது. வெற்றிலையைச்சப்பிச் சிவந்து கிடக்கும் அவள் உதடுகளின் வழியாக, மூதூரின் எல்லா முக்கியமான விஷயங்களுமே வெளிவரும். அதிகாலையில் எழுந்து அப்பஞ்சுடத் தொடங்கினால் பத்து மணிக்கெல்லாம் அவள் அப்பக்கடை முடிந்துவிடும். மதியந்திரும்பியதும் அவள் தன் நிலுவையைத் திரட்டுவதற்காக ஊரைச் சுற்றி ஒரு வளையம் வருவாள். ஊரிலே எல்லா வீட்டிலும் நடக்கும் விஷயங்களும் அவளுக்குத் தெரியும்!

மனிதர்களுக்கும் ஒரு விசித்திரமான ஆசை இருக்கிறது. ஏதாவது ஒரு விஷயம், அது அவர்களுக்கு இன்பத்தைக் கொடுத்தாலும் சரி, அதை இரகசியமாக இரண்டாம் பேருக்குச் சொல்வதில் ஏதோ ஒரு அவா இருக்கிறது. ஊரிலே கண்ணம்மா, இந்த 'இரகசியமான' விஷயங்களை எல்லாம் தாங்கும் சுமை தாங்கியாக இருக்கிறாள். அதிகச் சுமையைத் தாங்க முடியாததாலோ என்னவோ, அவளும் தான் சுமந்த இரகசியங்களை இன்னொருவரிடம் 'இரகசியமாக' இறக்கி வைத்தும் விடுகிறாள். இதனால் யாருக்கு என்ன கெடுதல் வரும் என்பதை அவள் எண்ணிப் பார்ப்பதேயில்லை.

அம்பலவாணர் தன் மகனை, மாமனார் வீட்டுக்குப் போகவேண்டாம் என்று கட்டளையிட்டபோது, கண்ணம்மா அவர் வீட்டிலே தான் இருந்தாள். அவர் இரைச்சலைக் கேட்ட கண்ணம்மா" "என்ன புதினம்?" என்று விசாரிக்க, அம்பலவாணரின் மனைவி பொன்னம்மாவும் 'இரகசியமாக' அந்த விஷயத்தை விளக்கினாள்.

கையிலே இரண்டு தேங்காய்களை எடுத்துக்கொண்டு அம்பலவாணரின் வீட்டைவிட்டு வெளியேறிய கண்ணம்மா, ஊரை அளந்துவிட்டுக் கந்தையா வீட்டுக்கு வந்தபோதுதான் அம்பலவாணர் வீட்டிற் கண்ட கேட்ட, அத்தனையையுமே அங்கே சொல்லிவிட்டு அவள் பாட்டிற்குப் போய்விட்டாள்.

இதைக்கேட்ட கந்தையா மனத்திற்குள்ளே உறுமினார். அம்பலவாணருக்கு எதிலும் சளைத்தவரல்ல



கந்தையா. தன் தங்கைக்கு வந்த கணவன் என்பதால் முறையாகத் தலை வணங்கினாரே தவிர அவர் முறைத்து நின்றால் இவரும் விட்டுக் கொடுக்கவே மாட்டார். "அவர் மகனை வரவேண்டாம் என்று விட்டாராமே, வைத்துக்கொள்ளட்டும். ஆயிரத்துக்குப் பத்தாயிரத்தை விட்டெறிந்தால் என் மகளுக்கு மாப்பிள்ளையா கிடைக்கமாட்டான்? என் அப்பா உழைத்ததை எல்லாம் சீதனமாகக் கொட்டிக் கொடுத்தார். இப்போது நான் அவன் மகனுக்குக் கொடுக்க வேண்டுமா? பரம்பரை பரம்பரையாக அவனுக்கு நாம் என்ன அடிமைகளா?" என்று வீரம் பேசினார் தன் மனைவியிடம்.

என்னதான் வீரம் பேசினாலும் கந்தையாபிள்ளை நல்லவர். அதாவது நல்லவனுக்கு நல்லவர். யாராவது அவரிடம் வாலைக்காட்டினாற் பிறகு அவர் 'ரௌடிக்கு ரௌடிதான்.' அத்தகைய கந்தையாபிள்ளை தன் அத்தான் கிராமச்சங்கத் தேர்தலில் அபேட்சகராக நின்றபோது தேர்தலில் அவர் வெற்றியடைவாரா என்பதை நோட்டம் விட்டுப் பார்த்தார். நியமனப் பத்திரங்களைக் கொடுத்த சில நாட்களுக்குள் அவர் தம் மைத்துனர் தோற்றுப் போய்விடுவார், என்ற மகத்தான உண்மையைக் கண்டுபிடித்து விட்டார். எனவே அவர் அம்பலவாணரிடம் "அநியாயமாகக் காசைச் செலவழிக்க வேண்டாம்" என்று சொல்லிப் பார்த்தார். அவர் கேட்கவில்லை. எனவே தான் வெளிப்படையாக நின்று வேலைசெய்து தன் முகத்திற் தானே கரியைப் பூசிக்கொள்ள அவர் விரும்பவில்லை. தேர்தலில் மௌனமாகவே இருந்துவிட்டார். இந்த

மௌனம் அம்பலவாணரிடம் சந்தேகத்தைக் கிளப்பி விட்டது. 'தன் மைத்துனனே தனக்கு எதிரியாக இருக்கிறான்' என்று தீர்மானித்து விட்டார். இதனால் தேர்தல் நெருங்க நெருங்க அம்பலவாணர் தன் மைத்துனனிடமிருந்து தூரந் தூரமாக விலகிக்கொண்டே போனார். எப்படியிருந்தும் கந்தையா அவர்கள், தம் வாக்குரிமையைத் தம் மைத்துனருக்குத்தான் கொடுத்தார். ஆனால் ஏமாற்றமடைந்த அம்பலவாணர் 'தன் மைத்துனன் தனக்கு வாக்களிக்கவில்லை' என்று திட்டமாக நம்பினார். தேர்தலின் பின்னால் இருவருக்கும் இடையில் நிரவமுடியாத இடைவெளி ஒன்று வந்தே விட்டது.

கந்தையா தம் மகளைக் கண்டபோது, கிரகண காலச் சூரியன் போலத் தெரிந்த அவள் முகம் நடராஜனுக்கும் அவளுக்கும் ஏதோ மனத்தாங்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காட்டிற்று. அதைக் கண்டதுமே நடராஜன் தன் தந்தையின் ஏவுதலினால், தன் மகளைக் கடிந்து விட்டுச் சென்றிருக்கிறான் என்ற எண்ணமும் அவருக்குண்டாயிற்று. சரிந்துபோயிருக்கும் சுவர் என்றைக்காவது விழுந்து தான் தீரும். கொஞ்ச நாட்களாகக் கந்தையாவிற்கு அவர் மைத்துனர் அம்பலவாணர் அவர் மகன் நடராஜன், ஏன் அவர் தங்கை பொன்னம்மா மீது கூட ஒரு வெறுப்பு உண்டாகியிருந்தது. இன்றைக்கு கனகத்தின் 'விடியா முகத்தைக்' கண்டதும் அதற்கு நடராஜன் தான் காரணமாக இருக்கவேண்டும் என்ற திடீர் எண்ணத்திற் சுவர் சரிந்து விழுந்தது போல அவரின் இதயத்திலிருந்து வார்த்தைகள் சரிந்து உதடுகளைத் தள்ளிக்



கொண்டே விழுந்தன. கந்தையா கோபத்தோடு கேட்டார், "நடராஜன் ஏதும் சொன்னானா?"

தன் தந்தையின் சிம்மகர்ச்சனையைக் கேட்ட கனகம் அப்படியே வெலவெலத்துப் போனாள். இத்தகைய நேரத்தில் என்ன பதில் சொன்னாலும், அது அவர் மனதுக்குத் திருப்தி தராது என்பது அவளுக்குத் தெரியும். ஆகவே கனகம் 'சும்மா' நின்றாள்.

"அவன் அப்பர்தான் இங்கே போகவேண்டாம் என்று சொன்னானே. இவன் ஏன் இங்கு வந்தான்? இனி இங்கே வந்தால் நீயும் அவனை இங்கே வர வேண்டாம் என்று சொல்" என்றார் கந்தையா.

"அப்பா" என்று அலறினாள் கனகம். பயமும் பதட்டமும் நிறைந்த குரலில் எதையோ சொல்ல வந்தவளை இடைமறித்தபடியே கந்தையா சொன்னார், "குனியக் குனியக் குட்டிறவனும் மடையன். குட்டக் குட்ட குனியிறவனும் மடையன். எதுக்காக நாம் அவர்களுக்குப் பயப்பட வேண்டும்! நாம் என்ன அவர்கள் வீட்டுக் கொத்தடிமைகளா? நமக்கும் சுய மரியாதை உண்டு"

இதைக் கேட்கையிலே கனகத்தின் மிருதுவான கன்னங்களிற் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அந்தக் கண்ணீரைக் காணக் கந்தையாவுக்கு மேலும் மேலும் ஆத்திரம் வந்தாலும், அதைவிட மேலாக அவள் மேலிரக்கமும் உண்டாயிற்று. எனவே தம் பேச்சை அடக்கிக்கொண்டு அப்படியே நின்றார் கந்தையா.

"அப்பா, அவர் ஒன்றுஞ் சொல்லவில்லையப்பா" என்றாள் கனகம்.

"எனக்கு எல்லாம் தெரியும் அம்மா! நீ போய் உன் வேலையைக் கவனி" என்று சாந்தமாகச் சொல்லிவிட்டுத் தோட்டத்தினுள் போனார் கந்தையா. வெளியே சுள்ளென்றடித்த காலை வெய்யில், சூரியனை மறைத்த முகிலொன்றினால் தணிந்து மந்தாரமாக இருக்கையில் அந்தக் குளுமை தாயின் மடியிலே தலையை வைத்துப் படுப்பது போல இதமாக இருந்தது. கனகத்திற்குத் தன் தந்தையின் வார்த்தைகள் இத மாகவே இருந்தன. எப்போதுமே தன் சகோதரனை விடத் தன் தந்தை தன்னிடம் தான் அதிகம் அன்பு காட்டுகிறார் என்ற பெருமை கனகத்திற்குண்டு. 'எனக்கு எல்லாம் தெரியும்' என்ற வார்த்தைகளைச் சிந்தித்துக் கொண்டே கனகம் வீட்டினுள் போகை யில், தன் தந்தை தம் மனதைத் தெரிந்திருக்கிறார் என்ற எண்ணம் அவள் சிந்தையில் ஓடி நெளிகையில், அந்த எண்ணத்தினால் கவலையடைந்திருந்த அவள் நாணத்தாற் சிவக்கையில் அவள் முகம் அழகாகவே யிருந்தது. வீட்டுக்குட் சென்ற கனகம் ஏனோ நிலைக் கண்ணாடியின் முன்னால் நின்றுகொண்டு தன் நெளிந்த கேசத்தை அழுத்தமாகத் தடவிப் பதித்துக் கொண் டாள். அதற்குள் இந்தத் தேர்தல் இழவினால் இரு குடும்பங்களும் கீரியும் பாம்புமாகப் போய் விடுமே என்று அவள் எண்ணியபோது அவளுக்குத் திகிலா யிருந்தது. உடனே அவள் கைகள் இரண்டும் ஒன்றை ஒன்று தழுவிக் கூம்ப, சுவரிலே மாட்டப்பட்டிருந்த தில்லைத்தாண்டவனின் படத்திற்கு முன்னால் நின்று மானசிகமாகப் பிரார்த்தித்தாள். அப்போது "கனகம், கனகம்!" என்று அவள் தாயார் அழைத்தது அவள் காதுகளில் விழுந்தது. கனகம், "வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அறையை விட்டுச் சென்றாள்.

## 6

## எதிர்பாராதது

உமையைத் தன்னிடம் அடக்கிவைத்துக் கொண்டதால் பரமன் அர்த்தநாரீஸ்வரனுக் இருக் கிறான். அந்தப்பரமனின் கனவின் கனவான இலட்சி யத்தின் இலட்சியமான மனிதனும் ஏதோ ஒருவழியில் ஒரு 'அர்த்தனாக' இருக்கிறான். அதிலும் ஈழத்துக் கீழ்க் கரைகளில் மலைநாட்டில் மழையைப் பொழிந்து விட்டு வரண்டு போய்வரும் கச்சான் காற்று அடிக்கையில் மனிதனின் ஓர் அர்த்தபாகம் காற்றுப் பட்டுக் குளிர்ந்து இதமடைய மற்றச் செம்பாதி கோடைகாலப் புழுக்கத்தில் அவிந்து கொண்டே யிருக்கும். வெயில் ஏற ஏற நடராஜனின் உடல் மட்டுமல்ல, உள்ளங்கூட மென்மையான, இனிமை யான, வார்த்தையிலே வடித்தெடுக்க முடியாத மெல் லிசையின் இழைபோன்ற எண்ணங்களில் புளகாங் கிதம் அடைய மறுபக்கம் பிரிவு என்ற துயரிற் புழுங்கிக் கொண்டேயிருந்தது.

மூதூரிலிருந்து திருகோணமலைக்குப் போகும் ஒரே பஸ்ஸான தபால்வண்டி இரண்டுமணிக்குப் போய்விட்டது. இனிமேல் திருகோணமலைக்குப் போவதானால் மூன்றுமணிக்குப் புறப்படும் யந்திரப் படகிலேதான் போகவேண்டும். அதையும் தப்ப விட்டால் அதன் பிறகு நாளைக்குத்தான் போக வேண்டும். நடராஜன் புறப்படுவதற் காயத்தமா ன்தாக்க இருந்தான். பெட்டி தயாராக இருந்தது!

அம்மாவின் நச்சரிப்பினுற் சாப்பிட்டுவிட்டு வந்தவன், தன் கட்டிலிற் படுத்தவாறே எதையோ யோசித்துக் கொண்டிருந்தான். தேர்தலிலே தோற்றுப்போனதால் ஏற்பட்ட வெறுப்பை, அந்த வெறுப்பினின்று பிறந்த அசாதாரண அமைதியை, அந்த அமைதியின் செயலற்ற தன்மையைப் பிரதிபலித்துக் கொண்டு இமயம் போல எழுந்து நிற்கும் அந்தப் பழைய வீட்டிலே தனிமையான அறையிலே நடராஜனின் இதயத்திலிருந்து பிறந்த ஒலி அவனையே பைத்தியமாக ஆட்டிவைத்தது. அந்த ஒலி இப்போதுதான் கேட்கிறது, ‘உன் தந்தையார் உன்னை அவள் வீட்டுக்குப் போகக் கூடாது என்று கட்டளையிட்டது கனகத்திற்கு நன்ருகத்தெரியும். இந்தநிலையில் திடீரென்று அவளைவிட்டுப் போவதாயிருந்தால் அதனுல் உன்னிடம் அவளுக்கு வெறுப்பு ஏற்படாதா? சந்தேகம் வராதா? இந்த விஷயத்தில் அவன் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று தான் நடக்கவேண்டுமா? அந்த அளவிற்கு அவன் ஒரு கோழையா?’

அவன் இதய ஒலிக்கு அவனுற் பதில் சொல்லவே முடியவில்லை. ஏனென்ருல் அவன் கோழையுமல்ல வீரனுமல்ல. அவன் இப்போது ஒரு காதலன். காதலும் வீரமும்தான் தமிழர் பண்பாக இருந்தால் இந்தக் காதலனிடமும் வீரம் இருக்கலாம். ஆனுல் இருபதாம் நூற்ருண்டில் எல்லாக் காதலர்களிடமும் அவர்கள் தமிழர்களாயிருந்தாற்கூட வீரம் இருக்கும் என்று நாம் ஏன் நம்பவேண்டும்?

களைத்துப்போன நடராஜன் மறுபடியும் இன்பமான நினைவுகளிற் சாந்திகொள்ள விரும்பினுன்



கம்பனுக்குக் கைகட்டி நின்ற தமிழ்ச் சொற்கள் போல எண்ணங்களும் அவன் விருப்பத்திற்குப் பணிந்திருக்கையில் அவன் வெருகற் திருவிழாவைப் பற்றி எண்ணமிடலானுன்.

அந்தத் திருவிழாவைப்பற்றி நினைக்கத் தொடங்குகையிலேயே அவனுக்கு மாணிக்கமள்ளிப் பிச்சை கொடுத்திடும் மாவலி நதி வெருகல் கங்கை என்ற பெயருடன் மென்னடை நடப்பதுதான் அவன் மனக்கண்களிற் தோன்றிற்று. கடப்பைப் பூக்களைத் தன் மேனி முழுவதும் போர்த்துக்கொண்டு சீராக ஓடிவரும் அந்நதி, வளையும் திருப்பத்தில் பால் வெண் மணலைப் பரவிக்கொண்டு மேலே வேகமாகச் செல்கையில், அந்த வெண்மணலிற் தன்னை மறந்த நிலையில் இருந்து கொண்டு கனவு காண்பதிற்தான் எத்தனை ஆனந்தம்! அந்த வளைவிலேதான் சித்திர வேலாயுதர் கோயில் இருக்கிறது. வேலன் குறிஞ்சித் தெய்வம் என்று சொல்கிருர்கள். ஆனுல் கங்கா தீரத்திலே, மருதமரத்துச் சூழலிலே எந்தப்பெண்ணை மயக்குவதற்கு இத்தனை காலமாகத் தனியனுய் இருக்கிருனே தெரியாது. ஆனுல் அவனுக்கென்று விழா வெடுக்கத் தொடங்கியதும் கீழ்க்கரைக் கிராமங்கள் முழுவதுமே கோயிலடியிற் திரண்டுவிடும். ஆம்; அந்த விழாத் தொடங்குகையில், பெரும் போகம் முடிந்த நிலையிலிருக்கும். கங்காதேவியின் அருளால் நெல்விதைத்துப் பொன் விளைவிக்கும் அந்நாட்டு மக்கள் எல்லாரும் அக்கங்கைக் கரையிற் கோயில் கொண்டிருக்கும் வேலாயுதனுக்கு நன்றிக் கடன் செய்ய அங்கே திரண்டுவிடுவார்கள். அப்பாடா! அங்கே திரளும் கூட்டத்திற்தான் எத்தனை வகையான

மனிதர்கள்! மடிசஞ்சி வைத்துக் கட்டிய வேஷ்டியோடு ஆனையாய் அசைந்து நடக்கும் நிலம் படைத்த பிரபுக்கள், திறந்த மார்பின் தங்கச் சங்கிலியைப் புரளவிட்டு நிமிர்ந்து நடக்கும் புதுப் பணக்காரர்கள், உழைத்து உரம் பெற்ற தேகத்திலே கைத்தறிச் சேலையைச் சுற்றிக் கொண்டு வெற்றிலையை மென்று கொண்டேயிருக்கும் கிராமத்துப் பெண்கள், இரட்டைப் பின்னலை மார்பின் மேல் எடுத்து விட்டுக் கொண்டு சனக்கூட்டத்தில் அசுரசாதனையோடு மிதந்து செல்லும் படித்த பெண்கள், மணிக்கட்டுக்குக் கீழே, ஆனால் முழங்கைக்கு மேலே, தங்கள் 'சேட்' கையை மடித்துவிட்டுக் கொண்டு பம்பரமாகச் சுழன்று திரியும் மாணவர்கள், 'சில்க் சேட்'டுக் காடையர்கள், 'புஷ் கோட்'டுக் காவாலிகள்...

மஞ்சட் கடலையைக் கொறித்தவாறே முட்டி மோதும் அந்தச் சனக்கூட்டத்தில் நெருக்குண்டு தள்ளுண்டு திரியும் அந்த உரசற் சுகத்திற்தான் எத்தனை இன்பம் இருக்கிறது. அதை விடக் கூட்டத்தை விட்டுச் சற்று ஒதுங்கிநின்று, அமைதியான கிராமத்து நாகரீகமும், ஆர்ப்பாட்டமான பட்டணத்து நாகரீகமும் முட்டி மோதுவதைப் பார்த்துக் கொள்வதிற்தான் எத்தனை இன்பம்!

நடராஜனைப் போலச் சிந்திக்கத் தெரிந்தவனுக்கு அது இன்பமாகவும் இருக்கலாம். துன்பமாகக்கூட இருக்கலாம். ஆனால் எந்தக் காலத்திலும், அந்தச் சனக்கூட்டத்திற்கூட கனகம் அவனோடே இருந்தாலோ என்ற இன்ப நினைவாகவே இருந்தது.



சென்ற வருடம் கூட முண்டியடிக்கும் அந்தச் சனக் கூட்டத்திலே, பிரகாசமாய் எரியும் மின்சார விளக்குகளின் புழுக்கமான ஒளியில் கோயிலின் மேற்கு வீதியிலே நெருக்கி நிரைத்திருந்த கடைத் தெருவிலே கனகத்திற்கு 'றிபன்' வாங்கியதை எண்ணியபோது அவனுக்கு மனது புல்லரித்தது. உலைக்கு வைக்கும் சருவப் பானையைக் கனகத்தின் தாயார் 'கிண் கிண்'ணென்று ஐந்தாறு தடவை தட்டிப் பார்த்து, அந்தக் காத்தான்குடி வியாபாரியோடு பேரம் பேசியதை எண்ணியபோது நடராஜனுக்குச் சிரிப்பு வந்தது. அண்ணா, அண்ணா என்று அவன் வாலைப் பிடித்துக்கொண்டு திரிந்த அவன் ஒன்றுவிட்ட தம்பி சித்திவினாயகன் அப்போதுதான் வாங்கிக் கொடுத்த 'பப்பா மம்மா' ஊதி டப்பென்று வெடிக்க வைத்து விட்டு அழுததை எண்ணியபோது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அப்படியே சுற்றிக்கொண்டு வந்தவன் திடீரென்று தன் பாடசாலை நண்பர்கள் ஐந்தாறு பேரைக் கண்டபோது அவர்கள் 'என்னப்பா கையோடேயே கொண்டு போறா' என்று கனகத்தைக் குறித்து அவனைக் கேலி செய்ததும் அவனுக்கு ஞாபகம் வந்தது. அந்த நண்பர்களை எல்லாம் இன்னொரு தடவை பார்க்க வேண்டும் போல இருந்தது நடராஜனுக்கு.

திருகோணமலைப் பகுதியிலுள்ள மாணவர்கள் மட்டக்களப்பிற்குக் கல்வி கற்கப்போவது உண்மைதான். ஆனால், தங்கள் படிப்பை முடித்துவிட்டு வந்ததும், மட்டக்களப்பிற்கும் அவர்களுக்கும் அதிகமாக எந்தத் தொடர்புமே இருப்பதில்லை. யாழ்ப்பாணத்திற்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு ஏன் மட்டக்களப்பிற்கு இல்லை என்பது ஒரு ரசமான கேள்விதான். பிரயாண வசதிகள் இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாம். வேறு சமூக அரசியல் முறையான காரணங்களும் இருக்கலாம். ஆனால் எப்படியிருந்

தாலும் திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் இடையிலே எல்லையில் இருக்கும் சித்திரவேலாயுதர் இவர்களை இணைத்துவைக்கிறார். அங்கேதான் அவர்கள் சந்திக்கிறார்கள். நடராஜனும் தன் மட்டக்களப்பு நண்பர்களைச் சந்திக்க வேண்டும் என்று எண்ணியது ஒருவேளை தெய்வ சங்கற்பமாகத்தான் இருக்குமோ என்னவோ எப்படியும் அவன் கடைசியாய்த் தன் கொழும்புப் பயணத்தைக் கைவிட்டு வெருகலுக்குப் போயே தீருவது என்று தீர்மானித்து விட்டான்.

மனிதன் தன் பலவீனங்களுக்குச் சமூகத்தைக் குறைசொல்கிறான். சந்தர்ப்பத்தைக் குறைசொல்கிறான். தற்கொலை செய்ய எத்தனித்துப் பயத்தினால் அந்த யத்தனத்தைக் கைவிட்டவன், கடைசியாய் 'என் குழந்தைக்காகத்தான் வாழ்கிறேன்' என்று சொல்லிக் கொள்கிறான். அப்படித்தான் நடராஜனும் தன் மட்டக்களப்பு நண்பர்களைச் சந்திப்பதற்காகத் தான் வெருகலுக்குப் போவதாகச் சொல்லிக் கொள்கிறான். இதில் இன்னொரு வசதி என்னவென்றால், இது தன் தந்தையின் கட்டளையை மீறிய தாகவும் இருக்காது. ஆகவே அவன் வெருகலுக்குப் போயே தீருவது என்று தீர்மானித்த போது ஆயிரம் சங்குகளுக்கிடையே முழங்கும் பாஞ்சசன்யச் சங்கு போல அவன் எண்ண, ஒலிகளுக்கு மத்தியில் அவன் இதய ஒலி கேட்டது, 'கனகம் ' அங்கே வருவாள்'.

தீர்மானித்த நடராஜன் அறைக்குள் இற்றை வரை தேடுவாரற்றுக் கிடந்த சைக்கிளைத் தள்ளுகையில் தெருவாசலிலும் சைக்கிள் மணிச்சப்தம் கணகணத்துக் கேட்டது!

கடிதமோ, தந்தியோ வந்திருக்கும் என்று கலவரப்பட்டுக்கொண்டே நடராஜன் தெருப்படலைக்கு விரைந்து சென்றான்.

# 7

## போகும் வழியில்

நடராஜன் கலவரத்தோடு தெருப் படலைக்கு வந்தபோது அங்கே செல்வராஜன் நிற்பதைக் கண்டான். வேகும் வெயிலிலே தலை கலைந்து நெற்றியில் வெயர்வை கொட்ட, உடம்போடு தோல்போல் ஒட்டித் தெப்பமாக நனைந்திருந்த சேட்டோடு களைப் புற்று நிற்கும் தன் மைத்துனனை 'வந்திரேன்' என்று சம்பிரதாயத்திற்குத் தானும் சொல்ல நடராஜன் மனதிற் திராணியில்லை. அவன் பார்த்த பார்வை 'ஏன், இங்கே வந்தாய்?' என்று செல்லனைக் கேட்பது போல இருந்தது.

"கொழும்புக்குப் போவதாகச் சொன்னாயாமே; ஏன் போகவில்லையா?" அந்த மௌனத்தைக் கலைத்தான் செல்லன்.

"நான் இங்கே இந்நேரம் நிற்பதைப் பார்த்தால் போகவில்லை என்றுதானே பொருள்" என்றான் நடராஜன் சிரித்துக்கொண்டே. ஆம், மணமற்ற பூவும் தன் சிரிப்பினால் மானத்தைக் காப்பாற்றிக் கொள்கிறது. மனிதனும் தன் சிரிப்பினால் தன் உள்ளத்தை மறைத்து மற்றவர்களுக்குமுன் தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறான். நடராஜனும் தன் உள்ளத்தை மறைக்கத்தான் அப்படிச் சிரித்தான்.

"நீ போகமாட்டாய் என்று எனக்குத் தெரியுமே" என்றான் செல்லன்.

நடராஜனுக்கு அவன் பேச்சு நெருஞ்சி முள்ளைப் போலச் சுருக்கெனத் தைத்தது. தன் நிலையற்ற மனதின் இளப்பத்தைச் செல்லன் கேலி செய்தது போல இருந்தது. அவனுக்கு 'கனகத்தின் காலடியில் நாய்போலச் சுற்றிக் கொண்டு திரிபவன் தானடா நீ' என்று செல்லன் தன்னை நையாண்டி செய்பவன் போலத் தோன்றிற்று. அடுத்த கணம், இதற்காகத் தானா இன்றைக்குக் கொழும்புக்குப் போகாமல் நின்றோம் என்று தன்னையே நொந்து கொண்டான். அடுத்த கணம் இந்தச் சிந்தனைகள் எல்லாம் அவன் மனதில் ஓடிக்கொண்டிருக்கையில் நடராஜன் வேண்டா வெறுப்புடன் சொன்னான், "போக என்று தான் புறப்பட்டேன், ஆனால் பஸ் தவறி விட்டது". "நான் பஸ்ஸடியில் உன்னைக் காணவில்லையே" என்றான் செல்லன்.

நடராஜன் தன் பொய்யை மறைக்க மேலும் ஒரு பொய் சொல்லவேண்டியதாயிற்று. "சாப்பாடு முடியும்போதே நேரம் ஆகிவிட்டது. அதன் பிறகு நான் பஸ்ஸடிக்குப் போகவேயில்லை."

"அதனால் என்ன குறைந்துவிட்டது? இப்போது வா; திட்டமிட்டபடி வெருகலுக்குப் போய்வரலாம்" என்றான் செல்லன்.

"சரி? பார்ப்போம்" என்றிழுத்தான். "என்னத்தைப் பார்க்கிறது. நான் போய்ச் சிறிது பொழுது தாழ்ந்ததும் வருகிறேன். ஆயத்தமாக இரு" என்ற செல்லன், அவன் பதிலை எதிர்பார்க்காமலே சைக்கிளில் ஏறிக்கொண்டு விரைந்தான்.



அந்தி மயங்கி இருட்டாகி விட்டபோது பிச்சைக்காரனின் முதுகைப்போல மேடும் பள்ளமுமாக ஓடும் அந்த வீதியிலே இரண்டு துவிச்சக்கரவண்டிகள் வேகமாகச் சென்று கொண்டிருந்தன. தெருவின் இரு கரையிலும் நிமிர்ந்து சடைத்து நின்ற காட்டுமரங்களின் நிழல், கிழக்கே அடிவானத்திலிருந்து வெண்கல உருண்டையாகக் கிளம்பிக்கொண்டிருந்த சந்திரனின் தெளிவற்ற ஒளியை விழுங்கிக் கொண்டிருக்கையில் அந்தப் பாதை இருண்டு தான் கிடந்தது அந்த இருளில் தூரத்தே மரங்களற்றிருக்கும் வெறுமையான இடத்தில் சந்திர ஒளி, பிய்ந்து விழுந்த தங்கப் பாளம் போலத் தெருவிலே தேடுவாரற்றுக்கிடக்கையில், அந்த ஒளியே ஒரு பயப் பிராந்தியைக் கொடுத்தது. தெரு ஓரத்திலே, மழைத் துளிக்காக வாயைப் பிளந்து கொண்டு நிற்தம் முத்துச்சிப்பியைப் போலக் கடுங் கோடையில் அடியுண்ட தரை, பாளம் பாளமாக வெடித்துக் கார்காலத் துளிக்காக ஏங்கி நின்றது. பகல் முழுவதும் சுழற்றியடித்த கச்சான் காற்று வலியற்றுச் சோர்ந்து, நாளைக்கும் உலகில் வந்து உலவுவமா அல்லது இப்படியே 'கம்' என்று இருந்து விடுவோமா என்றெண்ணுவது போலப் பூதாகாரமாகத் தெரியும் மரங்களின் மேலே இலைகளின் பின்னால் ஒளிந்துகொண்டது. இயற்கையின் இந்த மந்த கதிக்குப் பின்னணி போலத் தூரத்தே 'கடபுட' என்ற சப்தத்தோடு மாட்டு வண்டிகள் அணியாகச் சென்று கொண்டிருந்தன. இடையிடையே அலறல் ஓசையை எழுப்பிக் கொண்டு பறந்து சென்ற மோட்டார் வண்டிகள் அந்த அமைதியான சூழலின் இதயத்தைப் பிளந்து கொண்டிருந்தன.

நெடுந்தூரம் ஓடிவந்து விட்ட அவ்விரண்டு துவிச் சக்கரவண்டிகளும் தெருவின் இரு கரையிலும் நட்டு வளர்க்கப்பட்டன போல நிரைத்து இருந்த வேப்ப மரங்களிடையே வந்த போது நிலவும் சிறிது மேலே கிளம்பியிருந்தது. ஆனாலும் அந்நிலா தாவளையமாக எறிக்கும் சித்திரைப் பௌர்ணமி அல்ல திட்டுத் திட்டாக மேகங்கள் மண்டியிருக்கும் கார்கால ஆரம் பத்திலே எறிக்கும் பிரபையற்ற நிலவுதான். அந்த நிலவொளியில் தெளிந்த நீரிற் பிரதிபலிக்கும் மர நிழலைப்போலத்தான், வேப்பமரங்கள் தோன்றின. அந்த வேப்பமரங்களின் உச்சியிலே ஊசலாடிக் கொண்டிருந்த தூக்கணாங்குருவிக் கூண்டுகளிலே மின் மினிப் பூச்சிகள் மின்னிக்கொண்டிருந்தன.

சிறிது நேரமாக எதையுமே பேசிக்கொள்ளாத இருவரும் இப்போது ஒரு நேரத்திற் பேச ஆசைப் பட்டனர் போல இருந்தது. முதலிற் செல்லன்தான் கேட்டான். "மின்மினிப் பூச்சிகள் எப்படி மின்னு கின்றன மச்சான்!"

"எப்படி மின்னுகின்றனவா? எல்லாம் இயற் கையின் அற்புதந்தான்" என்றான் நடராஜன்.

"இயற்கையின் அற்புதம் என்று எழுந்தமான மாகச் சொல்லிவிட்டாயே. எஸ். எஸ். சி. க்கு எல் லாச் சயன்ஸ் பாடமும் எடுத்த உனக்கு அதன் விஞ்ஞான இரகசியம் ஒன்றும் தெரியாதா?

"என்னவோ அப்போது எல்லாவற்றையும் படித் தேன். ஆனால் இப்போது இந்த மின்மினிப் பூச்சிகள்



மின்னுகிறதைக் காணும்போது எனக்கு ஒரு பாட்டுத் தான் ஞாபகம் வருகிறது. பாடுகிறேன் கேளேன்" என்று நடராஜன் தன் இனிமையான குரலில் அந்த மட்டக்களப்புக் கிராமியப் பாடல் ஒன்றைப் பாடி னான்.

**கன்னிக் கிரான் குருவி கடுமழைக்கு ஆற்றுது**
**மின்னி மின்னிப் பூச்செடுத்து**
**விளக்கேற்றும் கார் காலம்.**

அந்தப் பாட்டு முடிந்ததும் செல்லன் கேலியாகச் சொன்னான்: "எதையுமே விஞ்ஞானக் கண்கொண்டு பார்க்கத் தமிழனுக்குத் தெரியாது. பாட்டுப் பாடத் தான் தெரியும். தமிழனின் இழிநிலைக்கு இதுவும் ஒரு காரணந்தான்."

"ஏன், அணுக்குண்டைக் கண்டுபிடித்து உலகையே நாசம் செய்யாதது தமிழனின் குற்றமா?"

"அதில்லை, அணுக்குண்டு செய்யத் தெரியா விட்டாலும் ஒரு ஆணிதானும் செய்யத் தமிழனுக் குத் தெரியாதே. தமிழ்நாட்டுப் பாடசாலைகளில் இத்தனை விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களிருந்தும் என்ன பயன்?" என்றான் செல்லன்.

"தமிழன் அழிவைத் தேடுபவனல்ல ஆக்கத் தைத் தேடுபவன். செத்த பிறகும் வாழ எண்ணு பவன். அதற்காகத்தான் அவன் இயற்கை நிகழ்ச் சிகளைப் பாட்டாகப் பாடுகிறான். அதிலும் இந்தக் கிழக்குக் கரைத் தமிழன் இருக்கிறானே; அவன் கல்வியறிவில்லாமலே பாடுவான். வயலிலே நெல்லும்

வாவியிலே மீனும், தென்னையிலே காயும் இருக்கும் போது அவனுக்கு விஞ்ஞானமேன்? விஞ்ஞானப் பட்டம்பெற்ற நமது சுவாமி விபுலானந்தர்கூட இன்றும் தம் 'நீரரமகளிர்' என்ற பாட்டிலல்லவா வாழ்ந்துகொண்டிருக்கிறார்" என்று நடராஜன் சொன்னபோது சைக்கிளிலே கூனிக்கிடந்த அவன் உடல் நிமிர, நெஞ்சு பெருமிதத்தால் நிமிர்ந்து நின்றது. அந்தப் பெருமிதத்தில் மீண்டும் அந்தப் பாட்டையே பாடினான். பாட்டு முடிந்ததும் மறுபடியும் செல்லன் சொன்னான். "இப்போது கார் காலமில்லையே"

"ஏன் இல்லை? சுழன்றடிக்கும் கச்சான் காற்றுச் செத்துவிட்டதே இன்னும் இரண்டு மூன்று நாட்களில் மழைபெய்யத் தொடங்கிவிட்டால் கார் காலமில்லையா?" என்றான் நடராஜன்.

அவர்களிருவரும் பேசிக்கொண்டே போகையில் அந்த அமைதியான இரவின் மோன அலைகளில் மணிச்சப்தம் மிதந்துகொண்டு வந்தது. மென்மையும் இனிமையும் குழைந்து வரும் அந்த நாதம் பழக்கப்பட்ட குரல்போல அவர்களுக்கு ஒலித்தது. அந்த ஒலியை அவர்கள் நெருங்கிப் போய்த் தெருவின் வளைவிற் திரும்பியபோது எதிரே வண்டி ஒன்று போய்க்கொண்டிருந்தது.

நடராஜன் வண்டியைக் கவனமாகப் பார்த்தான். வண்டிக்குள்ளிருந்து அந்த ஒரு சோடிக் கண்கள் அவனைக் கூறுகுறிப்பாகப் பார்த்தன! அந்தக் கண்களிற்தான் என்ன ஆச்சரியம்! என்ன ஆவல்! 'கொழும்புக்குப் போகிறேன் என்றவர், ஏன்



போகவில்லை? என்னைத் தேடிக் கொண்டுதானா இங்கு வருகிறார்? அப்படியாயின் ஏன் அவர் என்னிடம் பொய் சொன்னார்?' என்று கனகம் எண்ணமிடுகையிலே நடராஜன் அவளைப் பார்த்துச் சிரித்தான். தன் சிந்தனைகளை மறந்து, ஆச்சரியத்தையும் தோற்றுக் கனகமும் சிரித்தாள்! மேலே முகில்களுள் மறைந்திருந்த சந்திரனும் தன் திரையை நீக்கிவிட்டுச் சிரித்தது.

அந்தப் புன்சிரிப்புக்குப் பின்னால் கனகம் தன் முகத்தைக் கோபமாக வைத்துக் கொண்டாள். நடராஜன் வண்டியைத் தாண்டி மேலே செல்ல எத்தனிக்கையில் பின்னால் மோட்டார் வண்டி ஒன்று அலறியது. அவசரத்தில் நடராஜனின் சைக்கிள் ஒரு கல்லின் மேல் ஏறிப் பள்ளத்தில் விழுந்தது.

பின்னால் வந்த மோட்டார் நடராஜனைத் தள்ளி விட்டுச் செல்கையில் வண்டிக்குள் 'ஐயோ!' என்ற குரல் தீனமாக ஒலித்தது.

# 8

## விபத்து

நடராஜன் மெதுவாகக் கண்களைத் திறந்த போது அவன் ஓடும் காருக்குள் இருப்பதைக் கண்டான். கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் தன் தலை செல்வராஜனின் மடிமீதிருப்பதைக் கண்டான். உடனே நடந்தவைகளை எல்லாம் அவதானித்துக் கொண்டான். விபத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியையும் வலியையும் வெட்கம் திரையிட்டு மறைத்தது. திரும்பவும் கண்ணை மூடிக்கொண்டு விஷமத்துக்காகத் தானும் இருக்கவேண்டும் என்று தோன்றிற்று அவனுக்கு. ஆனால் கால்மாட்டிலே தன் மாமனாரின் மறுபக்கத்தில் கலங்கிப்போயிருந்த அந்த நீள்விழிகள் பரிவோடும் பாசத்தோடும் அவனையே பார்த்துக் கொண்டிருக்கையில் அவனால் விழித்திருக்கவும் முடியவில்லை; கண்களை மூடிக்கொள்ளவும் மனமில்லை.

"உடம்பில் எங்காவது நோகிறதா?" என்று கம்மிய குரலிற் கேட்டான் செல்லன்.

தன் பலவீனத்தைக் கனகத்தின் முன்னாற் காட்டிக்கொள்ளக் கூடாது என்ற கவலை மேலிட, "இல்லையே, பலமாக அடிபடவில்லையே" என்றவாறு எழுந்திருக்க முயன்றான் நடராஜன்.



"வேண்டாந் தம்பி! அப்படியே படுத்துக்கொள்" என்று ஆதங்கத்தோடு அவனைத் தடுத்தார் கந்தையா.

நிலவின் குளுமையில் திறந்திருந்த கண்ணாடியன்னலுக்கூடாக எதிர் காற்று முகத்திற் சில்லென்று அடித்துக்கொண்டிருந்த அந்த வண்டிக்குள்ளே, கனகம் அப்போதுதான் விட்ட பெருமூச்சு கணநேரம் அனலாய்த் தகித்து நின்றது

கார் ஓடிக் கொண்டிருந்தது. பாவம்! வாடகைக் கார்க்காரன் அல்விஸ் நல்லவன் தான். விபத்து நடந்த கணத்திலேயே காரைத் தரிக்கவைத்துத், தான் கொண்டுவந்திருந்தவர்களையெல்லாம் நடுவழியிலிறக்கி, அவர்களைக் கந்தையாவின் வண்டியிற் போகச் சொல்லி விட்டு இவர்களைத் திருப்பி ஏற்றிக்கொண்டு மூதூருக்கு வருகிறான். இவர்களைக் கொண்டு போய் அங்கே விட்டதும் திரும்பி வந்து நடுவழியில் விட்டவர்களை ஏற்றிக்கொண்டு திரும்பவும் வெருகலுக்குப் போகவேண்டும். எனவே பகிரங்க வேலைப் பகுதியினரின் அசட்டுத்தனத்தைப் பறையடித்துக் கொண்டு கல்லாய்க் கலட்டியாய்க் கிடக்கும் அந்தப் பாதையில் அசுவகமனத்திற் காரையோட்டிச் செல்கிறான்.

கார் அந்த வளைவிற் திரும்பிய போது, எதிரே பரந்து விரிந்துகிடக்கும் வயல் வெளிக்குப் பின்னால், தென்னைமரங்கள் நிலவொளியிற் தங்கள் நீண்ட குருத்துக்களை விகசிக்க விட்டுக்கொண்டு நின்றன. அத் தென்னைமரங்களின் கீழே திட்டுத் திட்டாய்க் கூரை

வீடுகள் தோன்றின. இடைக்கிடை ஊர்ப் பொருளா தாரத்திற்குக் கணன ரேகை வரைந்து காட்டியதைப் போல ஒன்றிரண்டு ஓட்டு வீடுகள் நிமிர்ந்து நின்றன. ஊர் வந்தே விட்டது.

அம்பலவாணபிள்ளை எதிலும் ஒரு நியதியைக் கடைப்பிடிப்பவர். எட்டு மணிக்குப் பூசை அறைக்குள் புகுந்து இரண்டு தேவாரங்களைப் பாடித் துதித்து, தன் பரந்த நெற்றியில் நீறணிந்து காதிலே வில்வம் இலை யைச் செருகிக்கொண்டு வெளிவந்ததும் சாப்பிட்டு விட்டுப் படுத்தாரானல் பிறகு ஊரில் ஒரு பகுதி பற்றி எரிந்தாற் கூட அடுத்த நாள் வைகறைக்கு முன்னர் எழுந்திருக்கவே மாட்டார். இந்த நியதி கந்தையா வுக்குத் தெரிந்தாலும், நடராஜனைத் தன் வீட்டுக்குக் கொண்டுபோக அவர் விரும்பவில்லை. அத்தானின் கண் டிப்பு அவருக்கல்லவா தெரியும்? எனவே கார் வந்து அம்பலவாணரின் வீட்டுப் படலையிற் தான் தரித்தது.

கார் நின்றதும் நடராஜன் முதலிலேயே இறங்கி விட்டான். அந்தக் காருக்குள், அதுவும் கனகத்தின் முன்னல் ஒரு வருத்தக்காரனுக இருப்பது அவனுக்கு முள்ளின்மேலிருப்பதைப் போல இருந்தது. மேலும் விபத்தினல் அவனுக்கு எந்த ஆபத்துமே இல்லை. விழும்போது தரையிற் கையைக் குத்தியதால் உள்ளங் கையிற் கூழாங்கற்கள் குத்தி இரத்தங் கசிந்திருந்தது. மற்றப்படி அதிர்ச்சியில் ஸ்மரணை தப்பியிருந்தது என்னவோ உண்மைதான்.

பலமுறை ஹோணை அடித்து அலுத்த அல்லிஸ் "மாத்தயா! நான் போய் வாறேன்" என்று



சொல்லிவிட்டுக் காரைத் திருப்பிக் கொண்டு போய் விட்டான்.

தெருப்படலையில் நின்றவாறே 'அத்தார்! அத்தார்!' என்று உரிமையோடு பலமாகக் கத்தினர் கந்தையாபிள்ளை.

நடராஜனும் 'அப்பா! அப்பா!' என்று கத்தி னன். வெகு நேரத்திற்குப் பிறகு உள்ளேயிருந்து "யாரது?" என்ற அதிகாரத்தொனியோடு படலையைத் திறந்தார் அம்பலவாணர். நித்திரை கலைந்ததாற் கோபத்தோடு வந்த அவருக்குத் தெருப் படலையில் நடராஜனைத் தன் மைத்துனரோடும் அவர் குடும்பத் தோடும் கண்டபோது அவர் ருத்திரமூர்த்தியாகவே மாறிவிட்டார். ஆனல் மலையொத்த அவர் மனத் திண்மை அவரை ஒன்றுமே பேசவிடவில்லை. உள்ளே எரிமலையாய்க் குமுறும் எண்ணங்களோடு விறுக் கென்று திரும்பி வீட்டுக்குள் நடந்தார் அம்பலவாணர். நடராஜனும் அவரைப் பின் தொடர்ந்தான்.

சற்றுத் தரித்துநின்ற கந்தையா அவர்களும் அவர்கள் பின்னல் நடக்க அவர் குடும்ப முழுதுமே அவரைத் தொடர்ந்தது.

தொடர்ந்து சென்றவர் விரைந்துபோய், அம்பல வாணரை அண்மியதும் "போகும் வழியில் நடராஜ னுக்கு விபத்து நேர்ந்து விட்டது" என்றார். அவர் குரல் கம்மி நடுங்கிற்று.

"உங்களை யார் அவனைக் கூட்டிப் போகச் சொன்னது?" என்று வீடே அதிரும்படி இரைந்தார் அம்பலவாணர்.

"அவர்கள் கூட்டிப் போகவில்லையப்பா நான் தான் என்பாட்டிற்குச் சைக்கிளிற் போனேன்" என்றான் நடராஜன்.

"போனவன் செத்துத் தொலைகிறது தானேடா. இந்தத் துரோகியை ஏன்டா என் வாசலுக்குக் கூட்டி வந்தாய்?" என்றுகொண்டே கையை ஓங்கியவாறு நடராஜனை நெருங்கினார் அம்பலவாணர். அதற்குள் அவர் மனைவி இடையில் விழுந்து "கொஞ்சம் ஆறுதலாய்ச் சொல்லுங்களேன்" என்று கெஞ்சினாள்.

"உன்ரை இளக்காரந்தான் இந்தப் பயலுக்கு இத்தனை கொழுப்பு" என்றுகொண்டே மறுபடியும் மதர்த்துக்கொண்டு நிமிர்ந்தார் அம்பலவாணர்.

"மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல நீங்கள் அவனைக் கொல்லவா போகிறீர்கள்?" என்று சிறிது கோபத்தோடு கேட்டாள் பொன்னம்மா.

சற்றுத் தரித்த அம்பலவாணர், தன்முன்னுவிருந்த சுவரைப் பார்த்தவாறே "இந்த நயவஞ்சகர்கள் எல்லாரும் ஏன் என் வீட்டில் அடியெடுத்து வைத்தார்கள்? நான் போ என்று சொல்லமுன்



மரியாதையாய் உன் அண்ணனைப் போகச்சொல்லி விடு" என்றார்.

"ஏன் நீங்கதான் சொல்லுங்களேன்" என்றாள் பொன்னம்மா. தன் கணவன் வீட்டுக்கு வந்தவர்களைப் பிடரியைப் பிடித்துத் தள்ளும் அளவுக்கு அத்தனை கொடுமை நிறைந்தவரல்ல என்பது அவளின் நம்பிக்கை.

ஆனால் இந்த நம்பிக்கை சரியானதா, பிழையானதா என்று பரிசோதனை பண்ணிப் பார்க்கக் கந்தையா அவகாசம் கொடுக்கவில்லை. அம்பலவாணர் சகோதரியைக் கட்டிய மச்சானாகவே இருக்கலாம். ஆனாற் கந்தையாவும், இன்னமும் அத்தாரிடம் சலுகையாய் ஐந்துசதம் கேட்டுக் கச்சான் கொட்டை வாங்கித்தின்னும் சிறுபிள்ளையல்ல. அவருக்கும் தோளுக்குமேலே தலையிருந்தது; உள்ளத்திலே உணர்ச்சியிருந்தது. மனத்திலே தானும் மனிதன் என்ற நினைவு இருந்தது. காய்ந்த ஓட்டிடிலே பட்டுச் சிலுசிலுக்கும் எண்ணெயைப்போல அவர் உள்ளத்து உணர்வுகள் சிலுக்கையில் "இந்த வீட்டிலே இனி என் நாய்கூட மிதிக்காது" என்று உரத்துச் சொல்லி விட்டு நடையிலிறங்கி வெளியே நடந்தார்.

"போகாதே அண்ணு!" என்று கதறிக்கொண்டே ஓடிவந்தாள் பொன்னம்மா. தன்னைப் பிடித்த தங்கையின் கைகளை உதறிவிட்டுக்கொண்டே ஆக்ரோசத்தோடு நடந்தார் கந்தையா.

கையைப் பிய்த்துக்கொண்டு பாய்ந்து செல்லும் வளர்த்த நாயைப்போல, கந்தையா சென்ற பிறகு, பொன்னம்மா திரும்பியதும் கனகம் அவள் கைகளுக்குள் தன் ஒல்லியான உடலைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். மிருதுவாயிருந்த அவள் தலைமயிரைத் தடவிக்கொண்டே பொன்னம்மா நிற்கையில், அவள் கண்ணீரே அவள் புறங்கையில் விழுந்து சுட்டது.

இந்தக் காட்சியைக் காணவிரும்பாதவர் போல அம்பலவாணர் தன் அறைக்குள் புகுந்துகொண்டு கதவைப் படீர் என்று சாத்திக் கொண்டார்.

ஏதோ அருமையான தொன்றைப் பறிகொடுத்தவன் போல நடராஜன் சுவரிலே சாய்ந்து கொண்டு சிலைபோல நின்றான். அவன் பக்கத்திலே செல்வராஜனும் கல்லாய்ச் சமைந்து நின்றான். ஆனால் அவனால் இன்னமும் அப்படியே நிற்கமுடியவில்லை. அதற்குள் வெளியேயிருந்து "செல்வா! இன்னும் வரவில்லையா?" என்ற அதிகாரத்தொனி கேட்டது.

# 9

## சண்முகத்தின் தூது

மூதூரிற் கூத்தாடுபவர்கள் இல்லை. ஆனால் 'ஊர் இரண்டுபட்டாற் கூத்தாடிக்குத் தாயம்' என்ற பழமொழி இன்னமும் இருந்து வருகிறது. இந்தப் பழமொழி இருப்பதிலிருந்தே இங்கே இன்னமும் ஆகக் குறைந்தது, வேஷமிட்டு ஆடாத கூத்தாடிகளாவது இருக்கிறார்கள், என்பது தெரிகிறதல்லவா?

அன்றிரவு அம்பலவாணருக்கும் அவர் மைத்துனர் கந்தையாவுக்குமிடையில் நடைபெற்ற வாக்குவாதம் ஊரில் எல்லாருக்கும் விடிவதற்குள் தெரிந்து விட்டது. இரவில் சுவர்களுக்கும் காதுகள் இருக்குமாமே, ஆனால் சுவர்களுக்கு மட்டும் கேட்கக் கூடியதாக அவர்கள் வாக்குவாதம் இருக்கவில்லையே. அம்பலவாணர் இரைந்த இரைச்சல், இரவின் மௌனத்தில் அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் எல்லாருக்கும் தெளிவாகத்தான் கேட்டது. எனவே விடிந்ததும், வேஷமிடாமற் கூத்தாடி, இரு மைத்துனர்களுக் கிடையிலுள்ள பகைமையை வளர்த்து இலாபம் பெறக் கருதிய சண்முகராசா அவர்கள், கந்தையாவின் வீட்டைத் தேடிக்கொண்டு வந்தார்.

உயர்திரு சண்முகராசா அவர்களுக்குத் தொழிலே இது தான். அவருக்கென்று சொந்தமாக வேறு வேலையே கிடையாது. ஊரிலே வரும் நன்மை தின்மை

களுக்கு எல்லாருக்கும் 'ஆபத்பாந்தவனாக' இருப்பதினாலேயே அவர் காலம் கடந்து கொண்டிருந்தது. ஊரில் ஒரு கல்யாணம் நடக்க வேண்டுமா? அதற்குக் கட்டாயம் சண்முகம் அவர்களின் உதவிவேண்டும்! இழவு வீட்டுச் சாப்பாட்டிற்கு இலை வெட்ட வேண்டுமாயிருந்தாலும் அதற்குஞ் சண்முகத்தின் உதவி அவசியம். இப்படியே எந்தக் கல்யாணத்தைக் குழப்புவதாக இருந்தாலும் அதற்கும் அவர்தான் வேண்டும். ஆனால் நாரதரின் கலகம் கடைசியில் நன்மையாக முடிவதுபோல, சண்முகராசா அவர்கள் ஒரு கல்யாணத்தைக் குழப்பினால் அந்த மாப்பிள்ளைக்கு அடுத்த சுபமுகூர்த்தத்திலேயே வேறொருத்தியைக் கைப்பிடித்து வைத்துச் சுபமாகவே முடித்தும் விடுவார்.

இத்தகைய ஒரு புனிதமான தொண்டைச் செய்யும் நோக்கத்தோடுதான் சண்முகம் இன்றைக்கும் இங்குவந்திருந்தார். அவரா வந்தார்? அடுத்த தெருவிலே குடியிருக்கும் அகிலேச பிள்ளையல்லவா அவரையனுப்பியிருக்கிறார்.

அகிலேசபிள்ளையும் ஊரிலே ஒருகாலத்தில் 'பத்தும்பெற்றுப்' பாக்கியமாக வாழ்ந்தவர்தான். ஆனால் ஒன்றின்பின் ஒன்றாகப் பிறந்த மூன்று பெண்கள், தன் ஒன்றுவிட்ட சகோதரியின் கணவனோடு நெடுங்காலமாக ஆடிய சிவில் வழக்கு இவைகளினால் கைநொடித்துப் போயிருந்தார். ஆனால் இவைகள் எல்லாம் அவருக்குக் கவலையாகத் தோன்றவில்லை! அவருடைய இளைய மகன் சுந்தரலிங்கத்தை எல்லாரையும் போலத்தான் அவரும் மட்டக்களப்புச் சிவானந்த வித்தியாசாலைக்குப் படிக்க



அனுப்பிவைத்தார். ஆனால் அவன் நாலைந்து வருடங்களாக எஸ். எஸ். சி. யிற் குட்டிக்கரணம் போட்டுக் கொண்டே வீட்டோடு இருப்பதுதான் அவருக்குப் பெருங்கவலையாக இருந்தது! நொடித்துப்போன தன் குடும்பத்தைக் கை தூக்கிவிடத் தன் ஒரே நம்பிக்கையாக இருந்த அவன் இன்றைக்கு உத்தியோகமும் பார்க்க முடியாமல், அதே நேரத்தில்தன் பரம்பரைத் தொழிலையும் செய்ய முடியாமல் 'வாழா வெட்டி' யாக இருப்பதுதான், பூவைக் குடையும் வண்டைப்போல அகிலேசர் அவர்களின் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது. சுந்தரம் என்னவோ நீட்டுக் காற்சட்டை போடவும், அழகாகத் தலையை வாரிவிட்டுத் தெரு அளக்கவுந்தான் படித்திருந்தான்! பரம்பரையாக வந்த தன் குடிப் பெருமையையும் கௌரவத்தையும் மறுபடியும் நிலை நாட்டுவதற்கு அகிலேச பிள்ளைக்கு அவனை விட்டாலும் வேறு கதியே இல்லை. இந்த மகனே இப்படித் திரிந்தால்......

இந்த நிலையில் அவனைச் சிறிது 'பச்சையுள்ள' இடத்திற் கல்யாணம் முடித்து வைத்தால், தன் கஷ்டங்கள் சிறிது தீரும்; மகனும் உருப்படுவான் என்று அகிலேசர் எண்ணினார்.

ஆனால் தன் மகனுக்குப் பெண் கொடுக்கப் பசையுள்ளவர்கள் சம்மதிப்பார்களா? என்றாலும் கந்தையாவின் வீட்டிலே அகிலேச பிள்ளையவர்களுக்கு எப்போதும் ஒரு கண் இருந்தது. இன்றைக்குக் கந்தையாவும் அம்பலவாணரும் தீராப் பகைவர்களாகி விட்டனர் என்று கேள்விப்பட்டதும் இந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கந்தையாவிடம் பெண் கேட்க

விரும்பினர். அந்த எண்ணத்திலேதான் உயர்திரு சண்முகராசா அவர்களையும் கந்தையாவிடம் அனுப்பி வைத்தார்.

கந்தையா அவர்களுக்குச் சண்முகராசா அவர்களின் திருவுருவமே பிடிப்பதில்லை. ஆனாலும் வீட்டுக்கு வந்த 'தூதுவனை'க் கடிந்து பேசுவது தமிழனின் பண்பாடல்ல என்று அவர் எண்ணினரோ என்னவோ! திரு. சண்முகம் அவர்கள் தன் உச்சிக் குடுமி ஸ்பஷ்டமாகத் தெரிய, வெற்றிலைக் காவியேறிய தன் தெத்துப் பற்களைத் திறந்தபடி சிரித்துக் கொண்டே வீட்டு விருந்தையிற் கால் வைத்தபோது கந்தையா அவர்களும் சிரித்தார். சிரித்ததுமட்டுமல்ல, "ஏது! இந்தப்பக்கம்?" என்று அன்போடு கேட்கவும் கேட்டார்.

"சும்மா வந்தேன்" என்றிழுத்த சண்முகம் அவர்கள் "ஏது கவலையாயிருக்கிறீர்களே! என்ன இருந்தாலும் சகோதரியைக் கட்டின மச்சான்தானே, எல்லாம் சரியாகிவிடும்" என்றுகொண்டே கந்தையாவின் முகத்தில் நெளியும் உணர்ச்சி ஓட்டங்களை எடைபோட்டார்.

"அந்த எளிய சாதிப் பயலோடா இனிமேற் சமாதானம்?" என்று எரிந்து விழுந்தார் கந்தையா அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

நிலைமை தனக்குச் சாதகமாகத்தான் இருக்கிறது. தன் மாத்திரை சரியாகத்தான் வேலைசெய்கிறது என்பதை நொடிப்பொழுதில் விளங்கிக்கொண்ட சண்



முகம், "ஆமாம், என்னதான் இருந்தாலும் உங்களை 'வீட்டை விட்டு வெளியே போ' என்று சொல்லியிருக்கக்கூடாது ஊரெல்லாம் இதைப்பற்றித்தானே பேச்சாயிருக்கிறது" என்ருர்.

"எல்லாம் எங்கப்பா சீதனமாகக் கொடுத்த பணம் செய்த திமிர். பயலின் வாய்க்கொழுப்பை அடக்காவிட்டால் என் பேரை மாற்றிக்கூப்பிடுங் காணும்" என்ருர் கந்தையா.

"எல்லாம் இலேசாகச் சொல்லிவிடலாம். ஆனல் இன்னம் இன்னமும் நாம் அவரிடந்தானே போக வேண்டும். நம்ம காலந்தான் போச்சு, இருக்கிற பிள்ளை குட்டிகளுக்கிடையிலேயுமா உறவு விட்டுப் போய் விடும்?" என்ருர் சண்முகம்.

"இனி ஒரு உறவுதான், என் வம்சத்துக்கே அவன் வீட்டு உறவு ஒன்றும் வேண்டாம்" என்று கத்திய கந்தையா ஆக்ரோஷத்தில் தன் இருக்கையை விட்டே எழுந்து நின்ருர். அவர் உடலம் முழுவதுமே ஆவேசத்தாற் துடிதுடிக்கையில் உரோமங்கள் குத்திட்டு நின்றன.

"ஆமாம், என்னதான் இருந்தாலும் அவர் அப்படிச் சொல்லியிருக்கவே கூடாது. சும்மாவா சொன்ஞர்கள், 'சினந்துகொண்டு அறுத்த மூக்கைச் சிரித்துக் கொண்டு ஒட்டினல் ஒட்டுப்படுமா?' என்று. அதிலும் நம்ம கனகத்திற்கா மாப்பிள்ளை கிடையாது? அவர் மகன் மட்டுந்தானு வைத்தாற் குடுமி, சிரைத்தால் மொட்டை"

"அப்படித்தான் அவன் எண்ணிக்கொண்டான் போல இருக்கிறது? அவன் தலை குனிகிறதற்கு, இந்த மாரி விதைப்புக்கு முன் கனகத்தை வேறு யாருக்காவது கல்யாணம் பண்ணி வைக்காவிட்டால் நீர் இருந்து பாரும்?" என்றார் கந்தையா.

"அதுதான் சரி. மாப்பிள்ளை துரும்பைக் கையில் வைத்துக் கொண்டு தானே அவரும் இத்தனை வீராப்புப் பேசுகிறார். பெண்ணைப் படைத்த கடவுள், அவளுக்கு எங்கேயோ ஒரு மாப்பிள்ளையையும் சிருட்டித்துத் தான் இருப்பார். ஏன்? நம் அகிலேசபிள்ளை மகன் சுந்தரம் இருக்கிறானே. அவனைச் செய்து வைத்தால் என்ன?" என்று சாதுரியமாக விஷயத்தில் இறங்கினார் சண்முகம்.

"சுந்தரமா? அவனுக்குத்தான் ஒரு தொழிலும் இல்லையே" என்றார் கந்தையா.

"தொழில்தான் தொழில்; நட்டுவன் பிள்ளைக்கு நொட்டியா காட்டவேண்டும்? ஏதோ விளையாட்டுப் புத்தியில் திரிகிறான். குடும்பத் தொல்லைமட்டும் இருக்குமானால் எவன்தான் அப்படித் திரிய முடியும்? நம் நிலத்தையாவது பார்த்துக் கொண்டு வீட்டோடு இருப்பான்."

"என்றாலும் ஒரு சின்ன உத்தியோகமாவது இருந்தாற்தான் மரியாதையாக இருக்தும்."

"அடடா! உத்தியோகத்திற்கென்ன? எங்கெங்கோ அலைந்து உத்தியோகம் பார்த்துக்கொண்டு கண் காணாத இடத்திலா நம்பிள்ளை இருக்கவேண்டும்?



அவனுக்கென்ன? படித்திருக்கிறான் இப்போது ஊரில் இருக்கும் விதானைக்குப் 'பென்சன்காலம்' வந்துவிட்டது. ஊரிலேயும் வேறு படித்தவர்கள் இல்லை. ஏதோ கொஞ்சம் பணத்தைச் செலவுசெய்து அந்த விதானையார் உத்தியோகத்தை மட்டும் எடுத்துக் கொடுத்துவிட்டால் அவனுக்த உத்தியோகமுமாய் விட்டது. நம் பிள்ளையும் வீட்டோடு இருந்ததாய் விட்டது" என்றார் சண்முகம்.

கந்தையாவிற்கு இது நியாயமாகவே தோன்றிற்று. அதற்கும் மேலாகத் 'தனக்கு மூக்கறுபட்டாலும் சத்துராதிக்குச் சகுனப் பிழையாக இருக்க வேண்டும்' என்ற வைராக்கியம் மேலோங்கி நின்றது. எனவே "சரி யோசித்துப் பார்க்கிறேன்" என்றார்.

"யோசிப்பதென்ன? இதைவிட வேறு நல்வழி இருப்பதாக நான் எண்ணவில்லை. அம்பலவாண பிள்ளையின் கொழுப்பை அடக்க இதை விட்டால் வேறு வழியே இல்லை" என்றார் சண்முகம்.

"சரி, பிறகு எப்போ வருவீர்கள்?' என்று கேட்டுக்கொண்டே எழுந்தார் கந்தையா.

"பின்னேரம் வருகிறேன்" என்று சிரித்துக் கொண்டே சண்முகம் வெளியேறுகையில், இந்தச் சம்பாஷணைகளையெல்லாம் வீட்டுக்குள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்த செல்வராஜன் தன் மனத்துள் இப்படியா சங்கதி என்று கருவிக்கொண்டான்.

★
★★

## 10

## கனவின் நனவு

வீட்டிலே சண்முகத்திற்கும் தன் தந்தையாருக்கும் நடைபெற்ற சம்பாஷணைகளில் ஒன்றுமே கனகத்திற்குத் தெரியாது. ஏனென்றால் அந்தச் சம்பாஷணைகள் நடந்துகொண்டிருக்கையில் கனகம் கிணற்றடியில் இருந்தாள்.

நேற்று ரோசத்தோடு வெளியேறிய தந்தையின் பின்னால் கனகமும் மற்றவர்களும் அம்பலவாணர் வீட்டைவிட்டு வெளியேறித் தங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது அர்த்தராத்திரியாகி விட்டது. அந்த அர்த்தராத்திரியிலும் கந்தையா அவர்கள் சட்டியிற் காய்ந்துகொண்டிருக்கும் எண்ணெயைப் போலச் சிலுசிலுத்து வெந்து கொண்டிருக்கையில் கனகமும் அவள் தாயாரும் அமைதியாக நித்திரைக்குப் போனார்கள். ஆனால் கன்னங்கரிய இருளில் வெறியாட்டம் போடும் பேய்க் கூட்டம் போலக் கனகத்தின் மனதிலே இறந்து போன, இறந்து கொண்டிருந்த, எண்ணங்கள் ஆடிக் கொண்டிருக்கையில் அவளுக்கு நித்திரை வருமா?

'ஐயோ! அத்தான் தான் வெருகலுக்கு வர மாட்டேன் என்று சொன்னாரே. அப்படிச் சொல்லி விட்டுப் போனவர் ஏன் திரும்பவும் வந்தார்? வந்தவருக்கு ஏன் இந்த அபாயம் நேரிட வேண்டும்?



தெய்வமே எங்கள் உறவைத் துண்டிக்கவேண்டும் என்பது போலல்லவா அவருக்கு இடைவழியில், விபத்து நேர்ந்திருக்கிறது?' என்றெண்ணியபோது கனகத்திற்குப் பயமாக இருந்தது. இருண்ட அறைக்குள்ளே தனிமையின் கொலுவில் அந்தப் பயங்கர எண்ணம் மனதிற் தோன்றியபோது கனகத்தின் மூளை அதற்குமேற் சிந்திப்பதையோ எண்ணிப்பார்ப்பதையோ செய்யும் சக்தியை இழந்துபோய் மலை முகட்டில் ஏறி ஏறிப் போனவன் திடீரென்று ஒரு மலைக்கணவாய்க்கு வந்ததும் செயலற்று நிற்பதுபோல நின்றுவிட்டது. கைக்கோலைப் பறிகொடுத்த குருட்டுப் பிச்சைக்காரனைப்போல அவள் எண்ணங்கள் செயலற்று நிற்கையில், அவள் சடலத்திற்கு உறக்கமும் விழிப்பும், சலனமும், நிர்ச்சலனமும் எல்லாம் ஒன்று போலவே இநந்தன. இப்படி அவள் எத்தனை நேரம் இருந்திருப்பாளோ தெரியாது. ஒரு கனாக்கண்டது மட்டும் அவளுக்குத் தெரியும் அவள் கண்ட அந்தக் கனவு......

தங்கள் தோட்டத்திலே நடப்பட்டிருந்த இராசவள்ளிக் கிழங்குக் கொடிகள் முளைவிட்டு நன்றாக வளர்ந்து கொழுகொம்பைச் சுற்றிப் பிடித்துக் கொண்டு அழகாக நின்றன. ஆனால் திடீரென்று மாமனார் வந்து தன் தந்தையுடன் சண்டையிட்டுத் தான் கொடுத்த கொழுகொம்புகள் எல்லாவற்றையுமே பிடுங்கிக்கொண்டு செல்கிறார். இராசவள்ளிக் கொடிகள் நிலத்தில் வீழ்ந்து சோர்ந்து போய்க் கிடக்கின்றன.

கனகம் விழித்துக்கொண்டபோது விடிந்து போயிருந்தது. 'பிராய்ட் தொடக்கம் சாகப் போகும்

பாட்டிவரை கனவின் தத்துவங்களைப்பற்றிக் கதை கதையாகச் சொல்கிறார்கள். ஆனால் கனகத்திற்குத் தான் கண்ட கனவின் பொருள் என்ன என்பதே தெரியவில்லை. இராட்சதன்போலத் தன் மாமனார் வந்து நாட்டப்பட்டிருந்த கதியாற் கம்புகளைப் பிடுங்கிக்கொண்டு போன படம் மட்டும் அவள் மனதில் நன்றாகப் பதிந்திருந்தது.

எனவே எழுந்திருந்ததும் அவள் இராசவள்ளிக் கொடிகளைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று எண்ணினாள். சிந்தனையினாலும் மனோ வேதனையினாலும் உடல் சோர்ந்து போயிருந்தது. இரவு தூக்கமில்லாததினாற் கண் இமைகள் கல்லாய்க் கனத்து அழுத்தின. ஆனாலும் கிணற்றடியிலே மென்சிவப்பாய்த் தளிர்விட்டுக், கொழுகொம்பை இறுகப் பற்றிக்கொண்டு பூரிப்போடு நிற்கும் கிழங்குக்கொடிகளைப் பார்த்தபோது அவளுக்குத் தன் கனவையிட்டுச் சிரிக்கத்தான் வேண்டும் போல இருந்தது. ஆனால் அவள் சிரிக்க முடியுமா?

எதிலுமே பற்றற்றவளாகத் தன் முன் இருந்த எல்லாப் பொருள்களிலும் இலட்சியமற்ற ஒரு பார்வையைச் செலுத்திக்கொண்டு உயர்ந்திருந்த கிணற்றுக் கட்டிற் சாய்ந்தவாறே வாளாவிருந்தாள் கனகம். அவள் இலட்சியமற்ற பார்வையில் வேலியோரத்தேயிருந்த வற்றாளைக் கொடிகள் தோன்றின. 'இந்த வற்றாளைக் கொடிகள் இராசவள்ளியைப் போலல்ல. கொழுகொம்பின் துணையின்றித் தரையிலேயே படர்ந்து விடுகின்றன' என்று அவள் எண்ணுகையில் அவளுக்குக் காண்டேகருக்குப் போலப் புதிய தத்துவம் ஒன்று தெளிவாயிற்று.



'எந்தப் பெண்ணும் வளர்ந்த பிறகு வற்றாளைக் கொடியைப் போலத் தான் பிறந்த நிலத்திலேயே படர முடியாது. வள்ளிக் கொடியைப்போலப் பிறந்த நிலத்தைவிட்டு வேறொரு கொழுகொம்பிற்தான் படர வேண்டும்?'

ஆம். கனகமும் இந்த வள்ளிக்கொடி போன்றவள்தான். அவளின் வாழ்வு இனிமேலும் தன் பிறந்த வீட்டிலே படர முடியாது ஏதாவது ஒரு கொழுகொம்பிலேதான் படரவேண்டும். ஏற்கனவே ஒரு கொம்பை அவள் தந்தை தாயர், மாமனார் எல்லாருமே அந்தக் கொடியருகில் நட்டுவைத்தார்கள். இன்றைக்கு எல்லாருமே அந்தக் கொடி படர்ந்த கொம்பை வெளியே பிடுங்கிக்கொண்டால் அந்தக் கொடி வாடி வதங்கி மடிவதைத் தவிர வேறு வழி?

கனகம் இப்படியே சிந்தித்துக் கொண்டிருக்கையில், தன் வீட்டிலே நடராஜனும் இதைப் போலத்தான் என்னவோ எல்லாம் எண்ணிக்கொண்டிருந்தான். 'என்னதான் நேர்ந்திருந்தாலும் தன் தந்தையார் மாமனாரை வீட்டை விட்டு வெளியேறச் சொல்லியிருக்கக்கூடாது என்பதுதான் அவன் எண்ணம். அவனுக்குத் தன் தந்தையின் மேல் எரிச்சலாக இருந்தது. அவரைக் கடிந்து கொள்ள அவன் எண்ணினான். ஆனால் எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றி எல்லாவற்றையும் நிர்மூலமாக்கிவிட அவன் விரும்பவில்லை. இந்தக் கொதிப்பு காலப்போக்கில் ஆறிவிடும் என்றே அவன் நினைத்தான். அப்படித்தான் இவர்கள் சண்டை பிடித்தாலும் பிடித்துக்கொண்டேயிருக்கட்டுமே. கனகம் என்னை விட்டு எங்கே போகப் போகிறாள்? என்ற நம்பிக்கையுணர்ச்சி நடராஜன் மனதில் மிஞ்சியிருந்தது.

ஆகவே நாம் எதையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் இன்றைக்கே கொழும்புக்குப் போய்விட்டால் அதன்பிறகு நடப்பதைப் பார்ப்போம் என்றெண்ணிக் கொண்டான் நடராஜன். ஆனால் போகுமுன் கனகத்திடம் ஒரு வார்த்தையாவது சொல்லிவிட்டுப் போக வேண்டாமா?

கிராமத்திலே எந்த வீட்டுக்குப் போகவேண்டுமானாலும் தெருவாயிலாற்தான் போகவேண்டும் என்ற நியதி கிடையாது. ஒட்டும் உறவுமாய்ப் பல குடும்பங்கள் ஒன்றாகக் கூடியிருக்கும் சமுதாயத்தில் ஒவ்வொருவர்க்கென்றும் தனித்தனிக் காணிகள் இருப்பினும் அந்தக் காணிகளுக்கு அதிகமாகப் பொதுவேலி இராது. எனவே குறுக்கு வழியால் இரண்டொரு வளவைக் கடந்தால் கிராமத்தில் எந்த வீட்டுக்கும் போய்வரலாம். இப்படி ஒருவர் காணிக்கூடாகவும், முற்றத்திலுமாக நடந்து செல்வதற்கு எந்தத் தடையுமே இராது.

நடராஜனும் இதைத்தான் எண்ணினான். தன் சிறிய தந்தையார் காணிக்கூடாகச் சென்றால் கனகம், தன் வீட்டுக் கிணற்றடிப்பக்கம் வரமாட்டாளா? அவளிடம் 'போய்வருகிறேன்' என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வரலாம் என்றெண்ணிக் கொண்டே நடராஜன் நடந்தான். கூம்பிய இதழ்கள் விரிவது போலக் காலை மலர்ந்து கொண்டிருக்கையில் உள்ளே வெறுப்பும் வேதனையும் துளைத்துக் கொண்டிருக்கும் அவன் மனதின் பிரலாபம் சோம்பிய அவன் உடலிலேயும் பிரதிபலிக்கையில், சுள்ளென்றடிக்கும் காலை வெய்யிலில் நடப்பது அவனுக்கு இதமாக இருந்தது.



யோசித்துக்கொண்டே நடந்து வந்த நடராஜன் கிணற்றங்கரைப் பக்கமாக வந்தபோதுதான் கனகமும் கிணற்றுக்கட்டிற் சாய்ந்தவாறே எதையோ அர்த்தமற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். உள்ளத்திற் குமுறும் வேதனைகளின் உள்ளொளி, காலைச் சூரியனின் ஒளியிற் சலவைக் கற் பூவைப்போல மினுங்கும் அவள் அழகான முகத்திற் பிரதிபலிக்கையில் அம்முகத்தைப் பார்க்கவே நடராஜனுக்கு வேதனையாக இருந்தது. வேலிப் புறமாக நெருங்கிச் சென்றவன் "கனகம்" என்று மெதுவாகக் கூப்பிட்டான்.

கனகம் நிமிர்ந்து பார்த்தாள். ஓங்கி வளர்ந்திருந்த வேலி ஆமணக்குகளின் மேலாக நடராஜனின் முகம் தெரிந்தது அவனைக் கண்டதும் கனகத்தின் உதடுகள் சிரிக்க வேண்டும் என்று விரும்பின. கண்கள் கண்ணீரைக் கொட்ட வேண்டும் என்று துடித்தன. ஏதேதோவெல்லாம் அவனிடம் பேசவேண்டும் என்று விரும்பினாள். ஆனாற் தொண்டைக்குள் பாரமான இரும்புத் துண்டொன்று ஊமத்தங்காயைப்போல உருள்வது போலிருந்தது. அவள் உதடுகள் படபடவென்று துடிக்கையில் கலங்கிய கண்கள் கண்ணீரைக் கொட்டியேவிட்டன.

"கனகம் பேசமாட்டியா?" என்றான் நடராஜன்.

"ஏன்! நீங்கள் இங்கே வரமாட்டீர்களா?"

"எனக்கு நேரமில்லை. நான் இப்போதே கொழும்புக்குப் போகிறேன். சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்" என்றான் நடராஜன்.

இனிமேல் நீங்களும் இங்கு வரமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியுமே" என்றாள் கனகம். அதைச் சொன்னவள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு அழுதாள்.

"அப்படி நினைத்தாற் திரும்பத் திரும்ப ஏன் இங்கு வருகின்றேன்?" என்றான் நடராஜன்.

"வந்துவிட்டீர்களே. அப்படியானால் வந்த காரியம் முடிந்துவிட்டது, இனிப் போகலாமே" என்றாள் கனகம். ஆம் இந்த நம்பிக்கை என்றொரு சுமைதாங்கி இருக்கிறதே, அதனாற்தான் உலகமே நடக்கிறது. மனிதனுக்கு ஏதாவதொன்றில் — அது தெய்வமாக இருக்கலாம், விதியாகவும் இருக்கலாம், அவன் மனிதனாகவே இருக்கமுடியாது. சகலத்தையுமே இழந்து நிர்க்கதியாக நிற்கிறோம் என்ற மனநிலையிலும் கனகத்திற்கு இன்னும் நம்பிக்கை இருந்தது. போகச் சொல்லித் துரத்தினாற்கூட நடராஜன் போகமாட்டான் என்பது அவள் நம்பிக்கை. இந்த நம்பிக்கையிற் கனகம் தன் பேச்சு முடிந்ததும் நடராஜனையே, வளர்த்த நாய் முகத்தைப் பார்ப்பது போலப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏன், என் தந்தையார் சொன்னதற்கு நீ இப்போது பழிவாங்குகிறாயா?" என்று கேட்டுக் கொண்டே சிரித்தான் நடராஜன்.

கனகமும் சிரித்தாள். சிரிக்கவேண்டும் என்பதற்காகச் சிரித்தாள். காலைச் சூரியனின் மஞ்சட் கிரணங்கள் கட்டாந் தரையிலும் பசுமையான பயிர்



களின் மீதும், தூரத்தே பால் குடித்துக் கொண்டிருந்த பசுக்கன்றின் மீதும் சுள்ளென்று எறிக்கையில் அந்தச் சூழலே சிரித்தது.

நடராஜன் வேலி ஆமணக்குகளுக்கூடாகப் புகுந்து கிணற்றடிக்கு வந்தான். கிணற்றுக் கட்டிலே சார்ந்து கொண்டிருந்த கனகம் அவன் தன் முன்னால் வந்தபோது நிமிர்ந்து நின்றாள். அவள் கைகளைப் பிடித்துக்கொண்டே "கோபமா கனகம்!" என்றான்.

கனகம் ஒன்றுமே பேசவில்லை. அவளுக்குக் கூச்சமாக இருந்தது. கனகம் படித்தவளாக இருக்கலாம். ஆனாலும் அவள் கிராமத்துப் பெண். நடராஜன் அவள் உறவுமுறையான அத்தானாயிருந்தாற்கூட உடலோடு ஒட்டிய எத்தகைய சிறிய தொடர்பும் அவர்களுக்குள் ஏற்பட்[illegible]க்க அந்தக் கிராமியப் பண்பில் இடமே இல்லை. ஆ[illegible]ல் இன்று நடராஜன் திடீரென்று அவளைத் தொட்டபோது அவளுக்கு நடுக்கமே எடுத்துவிட்டது. ஆனாலும் தன்மேல் வந்து மோதும் கடல் அலைகளை விருப்பத்தோடு ஏற்றும் பின் உதறித் தள்ளியும் கலங்காமலும் கரையாமலும் நிற்கும் கடற்கரைபோல அவளும் அப்படியே நின்றாள். நடராஜன் மிருதுவான அந்தக் கையைக் கொஞ்சிக் கொண்டே "நான் போய்வரட்டுமா?" என்றான்.

அவள் பேசவில்லை.

"நீ ஏன் கவலைப்படுகிறாய்? காலம் எல்லாவற்றையுமே சரிப்படுத்திவிடும்" என்றான் நடராஜன் மறுபடியும்.

“நீங்கள்மட்டும் என்றைக்கும் என் பக்கம் இருந்தால் எல்லாமே சரிதான்”

அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அங்கே யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. அந்த ஓசை கேட்கையில் இருவரும் தங்கள் வீட்டிலேயே திருடர்களாக இருக்கும் உணர்வோடு மிரண்டனர். அவர்கள் எதிரே கனகத்தின் தந்தையார் இருவரையும் எரித்துவிடுபவரைப் போலப் பார்த்துக்கொண்டு நின்றார்.

அப்படியே பார்த்துக் கொண்டிருந்தவர், சிறிது தணிந்ததும் “தம்பி! உன் அப்பா இத்தனை கோபமாயிருக்கையில் நீ ஏன் இங்கு வந்தாய்? என்றார்.

நடராஜன் பேசாமல் நின்றான்.

“சரி; இனிமேல் நீ இங்கு வரவே வேண்டாம்?” என்ற கந்தையா, அந்தச் சொற்களின் கொடுமையைத் தாமே தாங்க முடியாதவராக அவ்விடத்தை விட்டு நடந்தார்.

நடராஜனின் எண் சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகியது போல இருந்தது. மாமனாரின் வார்த்தைகள் அவன் உள்ளத்தைத் தைக்கையில் அவன் “சரி: இனிமேல் நான் வர மாட்டேன்” என்று விட்டே வெளியேறினான்.

கனகம் “அப்பா!” என்று பென்னம் பெருஞ் சத்தமாக அழுது கொண்டே தன் தந்தையைப் பின் தொடர்ந்தாள்.

# 11

## பாசம்

உள்ளமும் உடலும் ஒருங்கே குன்றிப்போய் விட்ட நடராஜன் சுள்ளென்றெறிக்கும் காலை வெய்யில் முதுகைத் தீய்த்துக் கொண்டிருக்கையிற் சித்தன் போக்குச் சிவன் போக்காக நடந்துகொண்டிருந்தான். தனது தந்தையாரும், மாமனாரும் நாட்களாக ஆளுக்காள் மனத்தாங்கலாக இருக்கும்போது, அதைக்கண்டால் நடராஜனுக்கு இருவர்மேலும் அநுதாபமாகத்தானிருக்கும். இந்தச் சிறிய விஷயத்தை இவ்வளவு தூரம் தூக்கிப் பிடித்துக்கொண்டு மன வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே என்று அவனுக்கு வருத்தமாயும் இருக்கும். அவர்களை வெறும் மடையர்கள் என்றுகூட அவன் நினைத்ததுண்டு. ஆனால் அதேபோன்ற ஒரு சிறிய விஷயத்தால் தன் மனம் இத்தனை சஞ்சலப்பட நேரிடும் என்று அவன் எதிர்பார்த்திருக்க முடியாது. ஏனென்றால் மனித உள்ளம் விசித்திரமானது. தாயுமானவர் பாடியதைப்போல அதற்குச் சும்மாவிருக்கின்ற திறமை கிடையாது. தன் மாமனார் சொல்லிய அந்த வார்த்தைகளையே திருப்பித் திருப்பி எண்ணிக் கொண்டிருந்தது அவன் மனம்! ஆம், எந்த விஷயமாயினும் அது மானமோ அவமானமோ தனக்கு நேரிடும் போதுதான் அதன் பலாபலன்களை ஒருவனால் நன்கு உணர முடிகிறது.

அவன் மாமனார் அவனிடம் இத்தனைகாலமும் அன்பாகத்தான் இருந்தார். அத்துடன் மரியாதையாகவும் இருந்தார். அப்படியிருந்த அவரே, இன்று அவனை 'இங்கே வரவேண்டாம்' என்று சொல்லியதை அவன் எண்ணிப்பார்க்கையில் அவமானத்தினால் அவன் உள்ளம் சுக்குநூறாக வெடித்துவிடும்போல் இருந்தது. முன்னங்கால்களுக்குள்ளே தலையைப் புதைத்துக்கொண்டு நடக்கும் தெருநாயைப்போல அவன்நடக்கையில், நாயைத் துரத்துவதைப்போல தானும் துரத்தப்பட்டு விட்டேனே என்று அவன் எண்ணமிடுகையில், இன்பக்கனவுகளின் உச்சியிலே பூரித்திருந்த அவன் இதயம் இப்போது அவனுள்ளே மௌனமாகக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தது. ஆனால் நல்லகாலமாகத் தான் துரத்தப்பட்டது வேறு எவருக்குமே தெரியாது என்று அவன் எண்ணுகையில் அந்த எண்ணமே அந்தகார இருளில் தோன்றும் மின்னற் கீற்றைப்போல அவனுக்கு ஓர் ஆறுதலாக இருந்தது. அந்த விஷயம் மூன்றாம் பேருக்குத் தெரிந்திருந்தால் அவன் தற்கொலை செய்யத் துணிந்துவிடுவான்போல இருந்தது, அவன் மனநிலை!

ஆனால் இந்தச் சம்பவத்தை வேறு எவருக்குமே தெரியாமல் மூடி வைக்கவேண்டும் என்று அவன் திட்ட மிட்டுக்கொண்டே நடக்கையில், பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்ட இனிமையான திராட்சை ரசம், போதையைக் கொடுக்கும் மதுவாக மாறுவதைப்போல, அவன் சோகமான, வெறுப்பான எண்ணங்கள் பயங்கரமாய்ப் பழிவாங்கியே தீர வேண்டும் என்ற வஞ்சினமாய் விஸ்வரூபம் எடுத்தன.



அவமானம், வெறுப்பு, பழிவாங்கும் எண்ணம் ஆகிய பல்வேறு உணர்ச்சிகளும் சேர்ந்து அவன் மனம் குழம்பிக் கொண்டிருக்கையிலும், அம் மனத்தின் எங்கோ ஒரு மூலையில் கனகத்தின் எண்ணம் தோன்றத்தான் செய்தது. இதற்கு முன்னெல்லாம் கனகம், நடராஜன் மனதில் பாரதியார் மங்கியதோர் நிலவினிலே கனவிற் கண்ட பதினாறு வயது இள மங்கையாக, இன்ப நினைவுகளாக, ஆனந்தக் கனவாக, அழகு வடிவாகத்தான் தோன்றுவாள். ஆனால் இப்போது அவன் மனத்திலே கனகம் ஒரு சோக சித்திரமாகத் தான் தோன்றினாள். அணையவிட்ட நெருப்புத் தணல்போல அவள் நிறமே சாம்பர் பூத்து வெளிறிப் போயிருந்தது. கட்டாந்தரையிலே பசுந் தழையைத் தேடியலையும் வெள்ளாட்டின் கண்கள்போல அவள் கண்களும் கலங்கி வட்டமாய் வெளிறிப்போயிருந்தன. அந்தச் சோக சித்திரத்தைப் பார்க்கையில் அந்த வெறுப்பான எண்ணங்களிடையேயும் அவன் மனம் கனகத்துக்காக இரங்கியது. அந்த இரக்கத்தில் நடராஜன் நடையே தளர்ந்தது. அவன் மெதுவாக — மிகவும் மெதுவாக — நடந்துகொண்டிருக்கையில் 'அத்தான்! என்மீதா பழிவாங்கப் போகிறீர்கள்?' என்று கனகம் கேட்டது அவன் காதுகளில் விழுந்தது. நடராஜன் மேலே நடப்பதை விட்டு அப்படியே கல்லாலடித்த சிலைபோல அசையாமல் நின்று பின்னாற் திரும்பிப் பார்த்தான்.

வீட்டிலே கனகத்தின் தந்தை கந்தையாவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். ஆம், அவர் தன் மைத்துனன் மேலிருந்த கோபத்தில் எப்படியோ நடராஜனை, 'நீ இங்கு வரவேண்டாம்' என்று

சொல்லியே விட்டார். ஆனால் அதைச் சொல்கிற போது நடராஜன் முகத்தைப் பார்க்கவே அவருக்குத் திராணியில்லை. அதைச் சொன்னது தான் தாமதம், தன் தோளிற் கிடந்த துண்டினால் நீரையுகுக்கும் தன் கண்களையே துடைத்துக்கொண்டு ஓட்டமாகவே வீட்டுக்குள் வந்தவர், மனமிடிந்து போய்க் கதிரைக்குட் சரிந்துவிட்டார். மனிதரிற் சிலர் இருக்கிறார்கள், மேலே பாறையாய் வைரித்து உள்ளே அனற்குழம்பாய் உருகிக்கொண்டிருக்கும் பூமித் தாயைப்போல அவர்கள் மனத்திலே இரக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். போலிக் கௌரவமும் வரட்டு உணர்ச்சியும் அவர்கள் வெளித் தோற்றத்தைக் கடுமையாக்கி விடுகின்றன. கந்தையாவும் இப்படியான மனிதர்களில் ஒருவர் தான்.

மனமிடிந்து போய்க்கிடந்த அவரினுள்ளே அவர் வாலிபப் பருவத்து எண்ணங்கள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக ஓடி நெளிகையில் அவருக்கு வாய்விட்டு அழவேண்டும்போல இருந்தது.

அப்போது மழைக்காலம். அவர் தங்கை பிரவச வேதனையில் இருக்கிறாள். இருட்டிலே அரிக்கன் லாந்தரைக் கையில் எடுத்துக் கொண்டு கந்தையா மருத்துவிச்சியைக் கூப்பிட ஓடுகிறார். ஓடும்போது தெருவிலே கிளம்பியிருந்த கல் பெருவிரலிற் தாக்க அதிலிருந்து இரத்தம் கசிகிறது. அதையும் பொருட்படுத்தாமற் பறந்து சென்றவர் மருத்துவிச்சியை அழைத்து வந்ததும், உடனே திரும்பி என்னென்னவோ கடைச் சரக்கு எல்லாம் வாங்க ஓடுகிறார்.



வெளி விறாந்தையில் என்ன ஆகுமோ என்று ஏங்கிக் கொண்டிருக்கையில் அறைக்குள்ளே குழந்தை குவா. குவா என்று வீரிட்டலறுகிறது. ‘ஆண்பிள்ளை, ஆண்பிள்ளை’ என்று மகிழ்ச்சி மிகுதியில் அந்த வீடே அலறுகிறது. அர்த்த இராத்திரியில் எல்லாரும் கந்தையாவிடம் ‘உனக்கு மருமகன் பிறந்திருக்கிறான்’ என்று புன் சிரிப்போடு சொல்லுகையில் அவருக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி! எத்தனை பெருமிதம்!

கைக்குழந்தையாயிருக்கும்போது நடராஜன் செக்கச் செவேரென்று அழகாக இருப்பான். அவனைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பதே கந்தையாவுக்கு முழுநேர வேலையாக இருக்கும். அதுவும் அவனைப் பிறந்த மேனியோடேயே வைத்துக்கொண்டால்...... அத்தனை அழகானவன் தான் நடராஜன்.

கந்தையாவிற்குக் கலியாணமானபோது நடராஜனுக்கு மூன்று வயதுதானிருக்கும். அவனையொத்த பிள்ளைகள் எல்லாருமே முகூர்த்த நேரத்தில் நித்திரையாய் விட்டார்கள். ஆனால் நடராஜன் மட்டும் முகூர்த்த நேரத்திற்கூடத் தன் மாமனாரின் பக்கத்தில் மணையிற்தானிருந்தான். தாலி கட்டும் வேளையில் அவனை, அவன் தாய் பொன்னம்மா வலிந்து தூக்கிக்கொண்டு போன போது அவன் அழுத அழுகை...

அடுத்த வருடம் அவனுக்கு அவராகவே வித்தியாரம்பம் பண்ணி வைத்தார். கம்பனின் ‘வெள்ளைக் கலையுடுத்து’ என்ற வெண்பாவை ஒரு தடவை சொல்

லிக் கொடுத்துவிட்டு அன்று ஊர் முழுவதற்குமே ஒரு விருந்து நடத்தினர் கந்தையா.

அதன் பிறகுதான் என்ன? எப்போதாவது அவன் தந்தையார் அவனைச் சிறிது கடிந்துகொண்டாலும் அவன் மாமனர் வீடே கதி என்று படுத்துக் கிடந்து விடுவான். அதன்பிறகு தன்தோளில் ஏற்றிக் கொண்டுதான் அவன் வீட்டுக்குப் போகவேண்டும்.

காலப் புழுதியில் மக்கி மடிந்துவிட்ட சம்பவங்கள் எல்லாம் எண்ணப் புழுதியைத் தட்டிவிட்டுக் கொண்டு பளிங்காறு போலத் தெளிவாக ஓடிக் கொண்டு வருகையில் கந்தையா, தன் மைத்துனனின் அகம்பாவத்தை வெறுத்தார். தன்முன்னல் அழுதுகொண்டு நிற்கும் தன் மகள் கனகத்தை வெறுத்தார். "ஏனப்பா! நீங்கள் அப்படிச் சொன்னீர்கள்?" என்று ஆத்திரமாகவும் பயத்தோடும் பதட்டத்தோடும் கேட்டுக் கொண்டுநிற்கும் தன் மகளை வெறுத்தார். இச்சம்பவங்களை எல்லாம் கண்டும் காணுதவளைப் போன்று அடுக்களைக்குள் அமைதியாக இருக்கும் தன் மனைவியை வெறுத்தார். நான் ஏன் நடராஜனிடம் இப்படிச் சொன்னேன் என்றெண்ணியபோது தன்னையே வெறுத்தார். அவரே அவரை வெறுக்கையில் அவரால் வெறுக்கப்படாதது ஒன்றுமே இல்லாமல் இருந்தது.

உலகையே வெறுத்துக் கொண்டிருந்த அவர், இன்னமும் தன்முன்னல் கனகம் அழுதுகொண்டே நின்றபோது, "எல்லாம் உன்னுற்தான் வந்தது; போ உள்ளே" என்று கனகத்தின்மேற் சீறினர். மேலும்



நின்றல் அனர்த்தந்தான் என்று அவள் எண்ணிக் கொண்டே அறைக்குட் சென்று தலையணைகட்குள் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்!

அப்போதுதான் உயர்திரு சண்முகம் அவர்களும் மெதுவாகச் செருமிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்து தன் தெத்துப் பற்கள் வெளியே துலாம்பரமாகத் தெரியும் படியாகச் சிரித்தார். அவர் சிரிப்பதைக் கண்ட கந்தையா, "நீர் எங்கே வந்தீர்?" என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

"ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரிக்க முயன்றுர் சண்முகம்.

"உங்களைப் போன்றவர்கள் இருக்கும்வரை இந்த ஊரே சமாதானமாயிராது. உங்களுக்கு இங்கே ஒரு அலுவலுமில்லை; போய்விடும்" என்று சண்முகத்தின்மேல் எரிந்து விழுந்தான் செல்லன்.

சண்முகம் நல்ல புத்திசாலி. தருணமறிந்து விலகிவிட வேண்டும் என்பது அவருக்கு அனுபவ ஞானத்திற் தெரியும். எனவே "சரி தம்பி" என்று சிரித்துக்கொண்டே அவ்விடத்தை விட்டுப் போகையில், மனத்துக்குள்ளே "இந்தப் பயலுக்குச் சரியான பாடம் படிப்பிக்காவிட்டால் நான் சண்முகமல்ல" என்று சொல்லிக்கொண்டார்!

தான் சொல்ல வேண்டியதைச் செல்லன் சொல்லிவிட்டான் என்றெண்ணினுரோ, அல்லது அவரால்

ஒன்றும் பேசவே முடியவில்லையோ, என்னவோ கந்தையா பிடித்து வைத்த சிலைபோல அப்படியேதான் இருந்தார்.

செல்வராஜனுக்கு உடனே சென்று நடராஜனைப் பார்க்கவேண்டும்மென்று தோன்றிற்று மேலும் தன் தந்தையின் கலங்கிய கண்களைப் பார்த்துக் கொண்டு நிற்கவும் அவனால் முடியவில்லை. அப்படியே நிற்பதால் ஏதும் பயன் வரும் என்றும் அவனுக்கு நம்பிக்கையில்லை. எனவே அவன் திடீரென்று தெருவிலிறங்கி நடந்தான்.

நடராஜனின் வீட்டை நோக்கி வேகமாக வந்தபோது தெருவில் நடராஜன் கொழும்புக்குப் புறப்பட்டுப் போய்விட்டதாகக் கேள்விப்பட்டான்.

வேஷ்டியைச் சண்டிக்கட்டுக் கட்டிக்கொண்டு ஓட்டம் ஓட்டமாகத் துறைமுகத்துக்கு வந்து பார்த்தபோது நடராஜன் திருகோணமலைக்குப் புறப்பட்டுப் போய்விட்டது தெரியவந்தது. செல்லன் என்ன செய்வது என்று அறியாமல் யோசித்துக்கொண்டு நின்றான்.

★

# 12

## நீத்தல்

தெருவிலிறங்கி நடந்த சண்முகராசாவின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. கந்தையா கவலைப்பட்டுக்கொண்டிருந்தது ஏன்? செல்லன் தன்மேல் எரிந்து விழுந்தானே; அது ஏன்? தன்னை வீட்டை விட்டுத் துரத்தினனே; அது ஏன்? அதற்குப் பின்னர் செல்லன் எதற்கோ அவசர அவசரமாக முகத்துவாரப் பக்கமாக ஓடுகிறானே; அது ஏன்? என்றெல்லாம் அவர் மண்டைக்குள்ளே பல 'ஏன்?'கள் குத்திட்டுக் கொண்டு நின்றன.

ஏதோ ஒரு அசாதாரணமான குழப்பம் கந்தையா வீட்டில் ஏற்பட்டிருக்கிறது என்பது அவருக்குத் திட்டமாகத் தெரிந்தது. இதற்கு அம்பலவாணருக்கும் அவருக்கும் ஏற்பட்ட இலெக்ஷன் பூசல்தான் காரணமாயிருக்கலாம் என்பது வெட்ட வெளிச்சம். ஆனால் இதற்கும் நடராஜனுக்கும் ஏதாவது நேரடியான சம்பந்தமிருக்குமா? அகிலேச பிள்ளையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்து கனகத்துக்கும் சுந்தரத்திற்கும் முடிச்சுப்போட்டு வைப்பதற்கு இந்தப் பூசல் அநுகூலமாகவிருக்குமா? என்பதை அறியவேண்டும் என்ற ஆவலில் அவர் முதலிற் செல்லன் எங்கே போகிறான் என்று பார்ப்பதற்குத் தான் எண்ணினார்.

ஆகவே பொலிஸ் நாயைப்போல மோப்பம் பிடித்துக்கொண்டு அவரும் முகத்துவாரத்திற்கு வந்தார்.

செல்வராஜன், 'நடராஜன் போய்விட்டானே என்று சிலையாகி நின்றானல்லவா? ஆனால் சிறிது நேரத்தில் அவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டான். 'நடராஜா திருகோணமலையிற்தானே நிற்பான். இரவு எட்டுமணிக்குத்தானே கொழும்புக்குப் புகையிரதம் இருக்கிறது. அதற்குமுதல் அவன் எவ்வழியிலும் கொழும்புக்குப் போக முடியாது. ஆகவே திருகோணமலைக்குப் போனால் அவனைச் சந்திக்கலாம், என்றெண்ணிக்கொண்டான்.

தான் உடுத்திருக்கும் உடை, வைத்திருக்கும் பணம் எதைப்பற்றியுமே அவன் கவலைப்படவில்லை. நடராஜனைச் சந்திக்கவேண்டும் என்கிற ஏகாக்கிர சிந்தையனாய்ச் செல்லன் திருகோணமலைக்குப் புறப்பட்ட அடுத்த மோட்டார் படகில் ஏறிக்கொண்டான்.

சண்முகராஜா செல்லனை இயந்திரப்படகிலே கண்டபோது நடராஜன் திருகோணமலைக்கு ஏற்கனவே போய்விட்டான் என்பதை உடனே தீர்மானித்துக்கொண்டிருந்தார் அத்தோடு அபாரக் கற்பனைகளைச் செய்யும் அவர் மூளையில் நடராஜனுக்கும் கந்தையா குடும்பத்தினருக்கும் ஏதோ வாக்குவாதம், பிணக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று பட்டது.



இயந்திரப்படகும் மாரித்தவளையைப்போல 'நீம் நீம்' என்று இரண்டு மூன்று தடவை அலறிவிட்டுப் புறப்பட்டது. தன் அடுத்த திட்டத்தை மனதில் எழுதிக்கொண்டே சண்முகராசாவும் திரும்பி நேராக அம்பலவாணரின் வீட்டுக்கு நடந்தார்.

காலை எழுந்து, மாட்டிற் பால் கறந்து, தொழுவத்தைச் சுத்தமாக்கிக் கிணற்றடியிலிருந்த பயிர்களுக்கு எல்லாம் தண்ணீரிறைத்துவிட்டு அதன்பின் தன் தலையிலும் தண்ணீரை ஊற்றி நெற்றியிலே துலாம்பரமாகத் திருநீறு சாத்திக்கொண்டு வந்திருந்த அம்பலவாணர் விறுந்தையிலே சாவகாசமாக உட்கார்ந்துகொண்டிருந்தார்.

பொதுவாக அவருக்குச் சண்முகராசாவை — ஏன் எந்த இராசாவையுமே — பிடிக்காது. ஆனால் சண்முகம் இலேசில் விடுபவரா? யாருக்கும் தன்னைப் பிடிக்க வைத்துக் கொள்வதிற்தான் அவர் அசகாய சூரர் ஆயிற்றே!

மேலும் அம்பலவாணர் தன் வயல் வேலைகளுக்காகச் சில எருமைக் கடாக்கள் வாங்க இருக்கிறார் என்ற விஷயம் சண்முகத்திற்குத் தெரிந்திருந்தது. எனவே அழையா விருந்தினராக அம்பலவாணர் வீட்டிற் கால்வைத்த சண்முகம் தம்பலகாமத்து அருணாசலம் தன் எருமைகளை விற்கப் போகிறாராம்'' என்ற பேச்சைத் தொடங்கினார்.

"அப்படியா? எனக்கும் சில தேவையாகத்தானிருக்கிறது" என்றார் அம்பலவாணர்.

சண்முகம் தன் பேச்சைச் சுருக்கமாக முடிப்பதற்காக "அருணாசலம் இன்றைக்கு இங்கே வருகிறார். என்னிடம் ஏற்கனவே இவ்விஷயமாகச் சொல்லியிருந்தார். அவர் வந்ததும் நான் தங்களிடம் கூட்டிக்கொண்டு வருகிறேனே" என்றார். இதற்கு. அம்பலவாணர் பதில் சொல்லுமுன்னே "தம்பி வீவில் வந்து நின்றாற்போல இருந்ததே! எங்கே ஆளைக் காணோம்" என்று கேட்டார்.

சண்முகம் இதைக்கேட்டதும் அவர் மனைவி, "நடராஜனைக் காணவில்லையே! அவன் பெட்டி புத்தகங்கள் கூட இல்லையே!" என்று கேட்டுக்கொண்டே அறைக்குள்ளிருந்து வந்ததும் சரியாகவிருந்தது.

"காலையில் நின்றானே" என்றார் அம்பலவாணர்.

சரியான சந்தர்ப்பம் வந்துவிட்டதைத் தெரிந்துகொண்ட சண்முகம் "எப்படியும் மீசை முளைத்த ஆண்பிள்ளையல்லவா? அவனுக்கும் ரோசமிருக்கத்தான் செய்யும்" என்று சொல்லிவைத்து அம்பலவாணரைப் பார்த்தார்.

"நீர் என்னகாணும் சொல்கிறீர்?" என்று ஆத்திரத்தோடு கேட்டார், அம்பலவாணர். ஆம், அம்பலவாணர் சிவபக்தர்; அவர் பூசையறையிலே 'காலைத்தூக்கி நின்றாடும் தெய்வம்' சகல ஆசார அனுட்டானங்களோடும் இருக்கிறது. அந்த ஆடிய பாதனைச் சதா சேவிக்கும் அம்பலவாணரும் கோபம் வந்த நேரத்தில் எல்லாம் தன் இஷ்ட தெய்வத்தைப் போல ருத்திரமூர்த்தியாக மாறிவிடுவார்.



ஆனால் அம்பலவாணர் கோபம் சண்முகத்தை என்ன செய்ய முடியும்? அவர் கோபம் கந்தையாவை எரிக்கட்டும், நடராஜனை நீறாக்கட்டும். அதனால் சண்முகத்துக்கு இலாபந்தானே. புயற்காற்றுக்கு மடிந்து கொடுத்து நிற்கும் தருப்பையைப்போல எவர் கோபத்திற்கும் தன் வெற்றிலைக் காவி படிந்த பல்லைக்காட்டிச் சிரிக்கும் சண்முகம், அம்பலவாணர் கோபத்தைக் கண்டும் எப்போதும்போலவே சிரித்துக்கொண்டு, "நான் என்ன சொல்ல இருக்கிறது; ஊர்முழுக்கத்தான் சொல்லுகிறது. தங்கள் மைத்துனர் கந்தையா, நடராஜனைப் 'போடா வெளியே' என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டாராம். அந்த அவமானம் பொறுக்கமாட்டாமற்தான் அவன் எவரிடமுஞ் சொல்லாமற் கொழும்புக்குப் போய் விட்டானும். என்னதான் இருந்தாலும் அவன் தங்கள் மகனல்லவா?" என்றார் சண்முகம்.

"என்ன? அப்படியா?" என்று உறுமினார் அம்பலவாணர். அப்போதுதான் குளித்துவிட்டு வந்திருந்த அவர் உடல், கணப்புச் சட்டியைப்போலச் சூடேறித் தகித்தது. உதடுகள் துடித்தன. கண்கள் சிவந்துவிட்டன. தடாலென்று கதிரையில் இருந்து எழுந்துகொண்டே, "ஏன், உனக்கு ஒன்றுந் தெரியாதா?" என்று தன் மனைவியின்மேற் பாய்ந்தார்.

தன் கடமையைச் சரிவரச் செய்த திருப்தியோடு மேலும் தான் அங்கே இருக்கவேண்டியதில்லை என்று தீர்மானித்தவராய்ச் சண்முகம் எவருக்கும் சொல்லிக் கொள்ளாமல் மெதுவாக அவ்விடத்தை விட்டு நழுவினார்.

‘தன் மகன் எங்கெங்கே போனானோ’ என்று ஏங்கியவாறே தன் கணவனின் கேள்விக்கு விடை சொல்லத் தெரியாமல் தவித்து நின்றாள் பொன்னம்மா. ‘என்னதான் இருந்தாலும் தன் அண்ணன், நடராஜனை இப்படி அவமானப்படுத்தியிருக்கலாமா?’ என்று அவள் மனம் அவளையே கேட்டுக் கொண்டிருந்தது. எல்லாவற்றிற்கு முன்னால், ‘தன் மகன் எங்கே போய்விட்டான்?’ என்று தேடிப்பார்க்க விரும்பியது அவள் தாயுள்ளம். ஆனால் இதை அம்பலவாணரிடம் சொல்ல அவளால் முடியுமா?

ஒன்றுக்கும் ஆற்றாத அம்பலவாணர், “பயலுக்கு இதுதான் வேண்டும்; நன்றாக அனுபவிக்கவேண்டும்” என்றார் மெதுவாக.

அவர் கோபம் தணிந்ததைக் கண்ட பொன்னம்மா “அவன் எங்கே போயிருக்கிறான் என்று பார்க்க வேண்டாமா?” என்றாள் மெதுவாக.

“வேணுமென்றால் போய்ப்பார்; உன் அண்ணனையும் கூட்டிக்கொண்டு போய்ப்பார்; இனி அவன் எனக்கு மகனுமல்ல; நான் அவனுக்கு அப்பாவுமல்ல. அவன் எங்காவது தொலையட்டும்” என்றார் அம்பலவாணர். சற்றுத் தணிந்திருந்த அவர் ஆத்திரம் திரும்பவும் தன் பழைய வேகத்தில் வந்தபோது அவரைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது.

இங்கே இப்படியிருக்கையில், திருகோணமலையிலே நடராஜனைத் தேடிக்கொண்டிருந்தான் செல்வராஜன். நடராஜன் எங்கெங்கெல்லாம் போயிருப்



பான் என்று எண்ணினானோ அங்கெல்லாம் தேடினான் ஆனால் நடராஜனைக் காணவில்லை. செல்லனுக்குப் பயமாயிருந்தது! ‘இதன் விளைவு ஊரிலே என்னவாக இருக்கும்’ என்றெண்ணியபோது அவன் உடல் முழுவதுமே நடுக்கமெடுத்தது. எனினும், நெருப்பாய்த் தகிக்கும் திருகோணமலைத் தார் ரோட்டுக்களிலெல்லாம் அலைந்து அவன் நடராஜனைத் தேடிக்கொண்டுதானிருந்தான்.

கடைசியாய்க் கொழும்புக்குத் திருகோணமலையிலிருந்து சென்ற புடைவைக்கடை வான் ஒன்றிலே நடராஜன் போய்விட்டான் என்று அறிந்தபோது அவனுக்குச் சிறிது ஆறுதலாக இருந்தது. அவனைச் சந்தித்துச் சமாதானப்படுத்த முடியவில்லையே என்று அவனுக்குத் துக்கமாகவும் இருந்தது. ‘இனி என்ன செய்வது?’ என்ற கேள்வி அவன் மனத்தைக் குழப்பியது.

# 13

## தீர்மானம்

கொழும்பை நோக்கி 'வான்' போய்க்கொண்டிருந்தது. காற்றைக் கிழித்துக்கொண்டு செல்லும் சிட்டு குருவியைப்போற் பறந்துகொண்டிருக்கையில், உள்ளே குளிர்ந்த காற்று முகத்திலடித்துக் கொண்டிருந்தது ஆனால் நடராஜனின் உள்ளம் எரிமலையாய்க் கனன்றுகொண்டிருக்கையில், உடலில்மோதும் குளிர்காற்றினால் என்ன பயன்?

இந்த வான் பிரயாணம் இருக்கிறதே; இது புகையிரதப் பிரயாணத்தைவிட எத்தனையோ சௌகரியமானது. திருகோணமலைக் கடைக்காரர்கள் சிலர் வசதிக்காகவும் நேரச் சுருக்கத்திற்காகவும் இந்தப் பயணத்தைச் செய்கிறார்கள் இதிற் பிரயாணம் செய்யும் எல்லாருமே நடராஜனுக்கு நன்கு தெரிந்தவர்கள்தாம் நினைத்த இடத்தில் வானை நிறுத்திச் சிரமபரிகாரம் செய்துகொண்டும், வானுக்குள் குதூகலமாகப் பேசிக்கொண்டும் அவர்கள் எல்லாரும் பிரயாணம் பண்ணுகிறார்கள். ஆனாற் கலகலப்பாக இருக்கும் அவர்களோடு ஒட்டி உறவாட நடராஜனால் முடியவில்லை. பிரயாணிகள் அவனைப் பலதடவை துளைத்துக்கேட்டுக் கடைசியாய் அவர்களும் அலுத்துப் போய்விட்டார்கள். செழுமையான காட்டிலே இலையுதிர்த்துக் காய்ந்து நிற்கும் பட்டமரம்போல நடராஜன் அவர்களிடையே காணப்பட்டான். வான்



ஓடிக்கொண்டேயிருந்தது. நடராஜனுக்கு மகாவலி கங்கை பாயும் தன் கிராமத்தைப்பற்றி எப்பொழுதுமே மனதில் ஒரு பெருமை. அதைவிட முத்தமிழ் வித்தகரான விபுலானந்த அடிகளார் மீது ஓர் அபாரமான பக்தி. அவன் கல்லூரியில் மாணவனாக இருக்கையில் அவரைப்பற்றி அதிகமாக அறியும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்திருந்தது. அப்போது அவரது பாட்டுக்களை விரும்பிப் படித்திருக்கிறான் அவரின் நீரரமகளிர் என்ற பாடலிலே

**மாவலியின் பேரால் வழங்கு மணிநதியும்**
**காவும் பொழிலும் கழிமுகமும் புள்ளணிந்த**
**ஏரியும் மல்கி இரத்தினத் துவிபமென**
**ஆரியர் போற்றும் அணிசால் இலங்கை**

என்ற அடிகளைப் படிக்கும்போதல்லாம், அடிகளார் பொதுவாக இலங்கையைப் பற்றியல்ல, மகாவலி நதி நீர்பாய்ச்சும் செழிப்பான தனது கிராமமான மூதூரைத்தான் சிறப்பாகப் பாடியிருக்கிறார் என்று எண்ணிக்கொள்வான். ஏன், அதற்காகக் கல்லூரி நண்பர்களோடு அடித்துப் பேசுவான். மகாவலி கங்கை மூதூரிலேதானே பாய்ந்து அவ்வூரைச் செழுமைப் படுத்தகிறது என்று பெருமையோடு பேசுவான். தேசியமே ஒரு மாயை என்று சொல்லிச் சர்வதேசியம் பேசும் இந்தக்காலத்தில், நடராஜனைப் பொறுத்தவரை அவன் தேசியம் பேசியது கிடையாது. 'கிராமியம்' தான் பேசுவான். அத்தனை பற்று அவன் கிராமத்தின்மீது.

இந்தப்பற்றுக்கு என்ன காரணமோ அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால்

கனகம் மூதூரிலேதான் இருக்கிறாள் என்பது, ஆழக் கடலில் முத்தைப்போல அவன் மனதிலே அவனுக்கே தெரியாமலிருந்த ஒரு காரணமாகும்.

ஆகவே, அவன் படிப்புக் காரணமாகத் தன் கிராமத்தை விட்டுப் போக நேரிடும் போதெல்லாம் சொல்லொணாத வேதனையை அனுபவிப்பான். தீவாந்தரசிட்சைக்கு அனுப்பப்படும் கைதியைப் போலத் தான் ஊரை விட்டுப் போகும் போது அவன் மனநிலை இருக்கும். ஆனால், அந்தகார இருளிலே தோன்றும் மின்னல்போல, இன்னும் மூன்று மாதங்களில், தொண்ணூறு நாட்களில் வீட்டுக்கு வரலாம் என்ற நினைவு அவன் மனதுக்கு ஆறுதலாக இருக்கும். திரும்பிவரப் போகிறோம் என்ற பற்றுக் கோட்டிலே தான் அவன் தன் பிரிவின் துயரைச் சகித்துக் கொள்வான்.

ஆனால், இம்முறை அப்படி ஒரு நம்பிக்கையுமே மனதில் இல்லை. ஏன்? இனிமேல் மூதூரிலே அடியெடுத்தே வைப்பதில்லை என்று தீர்மானித்துக் கொண்டான். ஊரைப்பற்றிய செழுமையான எண்ணங்களையும், கனகத்தைப்பற்றிய இனிமையான நினைவுகளையும் படரவிடாததினால் அவன் மனக்கொடி வேரைக் கிண்டிக் கொதிநீர் விடப்பட்டதைப் போலக் கருகிப்போய்க் கிடந்தது. அந்தக்கொடியில் ஏற்கனவே இருந்த இலைகளும் முகைகளும் கருகத் தொடங்கி விட்டன. புதிதாகத் தளிர்விட அதனால் முடியாது.

'தன் அழகான கிராமத்தைக் காணமுடியாது; அந்தப் புண்ணிய பூமியில் இனிமேல் மிதிக்கமுடியாது'



என்றெல்லாம் நடராஜன் நினைத்தபோது, கருகிக் கொண்டிருக்கும் அவன் மனக் கொடியிலிருந்து, காய்ந்த இலைகள் கீழே பொட்டுப் பொட்டென்று விழுவதைப்போல அவன் உணர்வுகள் சோர்ந்து சோர்ந்து விழுந்தன. அவன் தலையை நிமிர்த்த முடியவில்லை. கால்களை ஆட்ட முடியவில்லை. முகத்திற் சிரிப்பை அழைக்க இயலவில்லை.

ஆனால் ஊரையே பாலைவனமாக வெறுத்துவிட வேண்டிய அளவுக்கு என்ன நேர்ந்துவிட்டது. 'தம்பி! நீர் இங்கு வருவது நல்லதல்ல' என்று சாதாரணமாகத்தான் அவன் மாமனார் அவனிடம் சொன்னார். இந்த நேரத்தில் அவர் இப்படிச் சொன்னது நல்லதுதான் என்ற முடிவுக்கு மூளையைப் பிரயோகித்திருந்தால் அவன் வந்திருக்கலாம். அதுவும் வேண்டாம். 'மாமா கெட்டார்' என்று அலட்சியமாக எண்ணிக் கொண்டு உலுத்தத்தனமாகவும் இருந்துவிட்டிருக்கலாம். ஆனால் நடராஜனின் மனம் கற்பனைக் கொடிகளை மிக மிக அதிகமாகவே படரவிட்டது. மகாகவி மில்டன் சொல்லியிருப்பது போல இந்த மனம் தன் கற்பனையிற் 'சொர்க்கத்தை நரகமாகவும் நரகத்தைச் சொர்க்கமாகவும் மாற்றிவிடும்.' மனித வாழ்க்கையை அவன் உள்ளமும் உடலும் மட்டுமல்ல, மனோதர்மம் என்ற கற்பனையும் சேர்ந்துதான் தீர்மானிக்கின்றன. ஏன்? கற்பனைதான் மனிதனின் தரத்தையும் குணத்தையும் உருவாக்குகின்றது. இந்தக் கற்பனை ஓரோர்வேளை சூழவிருக்கும் சொர்க்கத்தையே நரகமாக்கி விடுவதனாலேதான், சிறந்த கற்பனையாளர்கள் பலர் உலகில் வாழ முடியாதவர்களாக, வாழத் தெரியாதவர்களாக, இருக்கிறார்கள். தன் அதீதமான

கற்பனையினுல் நடராஜனும் வாழத் தெரியாதவனுக, வாழ முடியாதவனுக, ஆகிவிட்டானு?

ஒரு மணியளவில் வான் குருநாகலை அடைந்தது. சாரதி வானை நிறுத்த உள்ளேயிருந்தவர்கள் எல்லாரும் ஒரு கடைக்குள்ளே மதிய போசனத்துக்காகப் புகுந்தனர். நடராஜனும் அவர்களுக்குத் தொந்தரவாக இருக்கக் கூடாது என்பதற்காக, அவர்களும் தனக்குத் தொந்தரவு தந்ததற்காக, அங்கே புகுந்து ஏதோ சாப்பிட்டான்.

மறுபடியும் புறப்பட்ட போது நடராஜனின் மனம் தன் திடீர்ப் புறப்பாடு ஊரிலேயே என்ன விளைவுகளை உண்டாக்கியிருக்கும் என்று எண்ணமிட்டது. கனகம் கலங்குவாள் என்று அவன் மனம் சொல்லிற்று. மாமனுர் துக்கப்படலாம் என்று எண்ணினுன். அப்படி நினைத்தவன், துக்கப்படுபவர் ஏன் என்னை முகத்திலடித்தது போலப் 'போ' என்று சொல்ல வேண்டும் என்று தன்னையே கேட்டான். அந்தக் கேள்வியின் விடையே பரிணும வாதத்தில் வளர்ந்த ஜீவராசி போலப் படிப்படியாய் வளர்ந்து உருவமற்ற வெறுப்பாய் அவன் மனதை நிறைத்துக்கொண்டு நின்றது. கடைசியாகத் தன் தாயாரைப்பற்றி எண்ணினுன்.

வெறுப்புப் புகைபடிந்து இருண்டுகிடந்த அவன் மனம் தான் குடியிருந்த கோயிலை எண்ணிப்பார்த்த போது சிறிது இலேசாயிற்று. பாவம்! அவள் தனக்காக அழுவாள். அதுவும் தன் தந்தை யாருக்குப் பயந்து மௌனமாக அழுவாள். மகனைக்



காணவில்லையே என்ற ஏக்கம் அவள் மனதை ஈரச் சேலையை முறுக்கிப் பிழிவது போலப் பிழிந்து கொண்டிருக்கையில், அவள் கண்கள் நீரைக் கொட்டும். ஏக்கத்தில் அவளுக்குக் கசம் பிடித்தாலும் பிடித்துவிடலாம். ஊணையும் உறக்கத்தையும் துறந்து அவள் தன் நினைவாகவே அழுதுகொண்டிருந்தால்......

நடராஜனுக்குப் பயமாக இருந்தது. புகையிற் சிக்குண்ட கண்கள் கண்ணீர் வடிப்பதுபோல, அவன் கண்கள் கண்ணீர்வடித்தன. சகப் பிராயாணிகளுக்குத் தெரியாமற் கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். மனதில் மீண்டும் கனகம் தோன்றினுள்.

அவள் உடலே வெளிறிப்போயிருந்தது. அழுதழுது கண்கள் கலங்கிப்போய் முகம் வீங்கியிருந்தது. அவள் நடராஜனின் காலைக் கட்டிக்கொண்டு கேட்டாள், 'அத்தான்; எவரெவரோ செய்த குற்றத்திற்காக என்னையா வதைக்கிறீர்கள்?' என்று.

நடராஜன் தன் காலை உதறிக்கொண்டு கோபமாய்ச் செல்கிறுன், 'போ; போ; உன் அப்பனைப் போலத்தானே நீயும் இருப்பாய். விடு என் காலை.'

கனகம் தேம்பித்தேம்பி அழுதுகொண்டே, தன் மாமியாரின் — நடராஜனின் தாயாரின் — மடியில் வீழ்ந்து அன்று வெருகலுக்குப்போய் இடையிற் திரும்பி வீட்டுக்கு வந்தபோது, தன் தகப்பனுர் மாமனுரைக் கடிந்தபோது அழுததைப்போல விம்மிப் பொருமி அழுகிறுள். தாயார் நடராஜனின் முகத்தைப் பரிதாபகரமாகப் பார்க்கிறுள். அவள் பார்வையில் ,நீ என் மகன்தான். அதைப்போலக் கனகமும் என்

மகள் தான் நீங்களிருவரும் என் இருகண்களைப் போலத்தான்' என்ற பேசாத பேச்சுத் தேங்கிக் கிடக்கிறது.

இல்பொருளாகிய மாயையிலிருந்து இந்தப் பிரபஞ்சத்தையே சிருட்டித்த கடவுளைப்போல நடராஜனும், தன்மனக் கண்களில் இந்தக் காட்சியைத் தனக்குத்தானே சிருட்டித்துக் கொண்டபொழுது அவன்மனம், கனகத்துக்காக ஏங்கியது; இரங்கியது; அழுதது; விம்பியது; பொருமிற்று. அவன் தாயருக்காகவும் கண்ணீர் வடித்தது, கலங்கியது, கதறிற்று

இந்த நிலையில் நடராஜன் தனக்குள்ளே ஒரு தீர்மானத்துக்கு வந்தான். கொழும்புக்குப் போய்ச் சேர்ந்ததும், தான் சுகமாக வந்து சேர்ந்ததாகவும், தன்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாம் என்றும் தாயாருக்குக் கடிதம் எழுதவேண்டுமென்பது ஒன்று.

இரண்டாவது என்ன தான் கஷ்டம் வந்தாலும் கனகத்தைக் கைவிடுவதில்லை. ஆனால் அதே நேரத்தில் தன் மாமனார் வீட்டில் அடியெடுத்தே வைப்பதில்லை

இதற்குள் வான் கொழும்பையடைந்து விட்டது. நடராஜன் தன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு இறங்கினான் "தன் தந்தையாருக்கு என்ன செய்வது? தன் தலை போகிறகாரியமாக இருந்தாற்கூடக் கனகத்திற்கும் தனக்கும் கல்யாணம் ஆவதை அவர் அனுமதிக்க மாட்டாரே"! என்றெண்ணியபோது நடராஜனின் தலை மீண்டும் சுற்றியது. மனங்குன்றிப் போய் அந்த விடுதியின் விருந்தையிலிருந்த கதிரைக்குள்ளேயே ஒடுங்கிவிட்ட நடராஜனுக்குத் தந்திச் சேவகன் தந்தி ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தான்.

# 14

## அபசகுணம்

செல்வராஜன் திருகோணமலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தபோது ஐந்துமணிக்குமேலாகி விட்டது. உள்ளமும் உடலும் சோர்ந்துபோய் வந்தவன், வீட்டினுள்ளே அடியெடுத்து வைத்தபோது வீட்டிலே ஓர் அசாதாரணமான அமைதி நிலவியிருப்பதைக் கண்டான்.

சாதாரணமாகக் கிராமத்து வீடுகள் இந்த நேரந்தான் கலகலப்பாக இருக்கும். காலையில் எழுந்தால் மூன்றுமணிவரையிற் கிராமப் பெண்களுக்குத் தோட்டத்திலும் அடுக்களையிலுமாக ஒரே வேலையாக இருக்கும். இந்த வேலைகளினால் அலுப்படைந்தவர்கள் உச்சிவெய்யிலிலும் சில்லென்று குளிர்ந்து கொண்டிருக்கும் சீமெந்துத் தரையிலே, முந்தானையை விரித்துக் கொடுங்கையிற் தலையை வைத்துக் கொக்கைப்போல ஒரு சிறு தூக்கம் தூங்கி எழுந்துவிட்டார்களானால், அதன்பின் முகத்தை அலம்பி வெற்றிலையைச் சுவைத்தபடியே விளக்கேற்றும் வரையிலும் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

செல்வம் வீட்டிற் புகுந்தபோது இந்தச் சுவாரஸ்யமான பேச்சைக் கேட்க முடியவில்லை. இயல்பாகவே சிவந்த உதடுகளைத் தாம்பூலத்தால் மேலும் செம்பவளமாக்கிக்கொண்டு இலட்சுமீகரமாகத் தோன்றும் எந்த முகத்தையும் காணவில்லை.

கனகம் என்றைக்கும் தன் வீட்டையும் பொருள்களையும் ஒழுங்காகவே வைத்திருப்பாள். பொருள்கள் எல்லாம் அதனதன் இடத்தில் வைக்கப்பட்டு, அந்த ஒழுங்கு முறையினால் அந்த வீடே ஒரு கலையழகோடுதான் இருக்கும். ஆனால் இன்றைக்கு, முன் விறாந்தையில் இருந்த கதிரைகள் மேசைகள் எல்லாமே முதல் நாள் இராத்திரிப் படுக்கைக்குப் போகும் போது என்ன நிலையில் இருந்தனவோ அந்த நிலையில் ஒழுங்கற்றுக் கிடந்தன. காலையிலிருந்து கூட்டப் படாததுபோல நிலமெல்லாம் தூசும் துரும்புமாகக் கிடந்தன. மேலே சுவரிலிருந்த நடராஜர் படத்துக்குக் கூட அன்றைக்குப் பூ வைக்கப்பட்டிருக்கவில்லை. ஆடிய பாதனின் காலடியிற் கிடந்து நசுங்கும் குழந்தையைப் போல நேற்று வைத்த பூக்கள் படத்தின் காலடியிலே நசுங்கிக் கிடந்தன.

செல்லன் ஒரு கணம் யோசித்தான். எல்லாம் நடராஜன் போனதன் விளைவாகத்தான் இருக்கும் என்று அவன் மனம் சொல்லிற்று. வீட்டிலுள்ளார் இருக்கும் கலவரமான நிலையை மேலும் கொந்தளிக்கப் பண்ணாமல் ‘தான் நடராஜனைத் திருகோணமலையிற் சந்தித்து அவனைச் சமாதானமாகக் கொழும்புக்கு அனுப்பி வைத்ததாகப் பொய் சொல்ல வேண்டும்’ என்று அவன் தீர்மானித்துக் கொண்டே விறாந்தை மூலையில் கதவு நிலையில், கயிற்றில் தொங்கும் மாவிலைகளைப் போல் காய்ந்து சுருங்கிப் போய்ப் படுத்திருந்த தன் தாயாரை ‘அம்மா!’ என்று எழுப்பினான்.

தன் அண்ணனின் குரலைக் கேட்ட கனகம் அறைக்குள்ளிருந்து வெளியேவந்தாள். ஆடிக் காற்றிலடிபட்டு மெலிந்த இதரை வாழைக்குலையைப் போல



அவள் களையிழந்து தோன்றினாள். அவள் முகத்திலே ஒரு வாட்டம். கை கால்களிலே ஒரு சோர்வு. ஆனால் வெளிறிப் போயிருந்த அவள் நீண்ட கண்களில் மட்டும் ‘அண்ணன் என்ன சொல்லப் போகிறார்’ என்பதையறியும் ஆவல் தேங்கி நின்றது. ‘அண்ணன் சொல்லுவது நல்லதாக இருக்க வேண்டும்’ என்று கனகம் மௌனமாகப் பிரார்த்தித்தாளோ என்னவோ; தன் கண்களில், ஏன், சர்வாங்கமுமே பொங்கியெழும் ஆவலை வார்த்தைகளாக்கிக் கேட்கக் கனகத்தினால் முடியவில்லை. அவளைப் பார்க்கையிற் செல்வத்திற்கு அழவேண்டும் போல இருந்தது.

இதற்குள் அவன் தாயார் திடீர் என்று எழுந்து கண்ணைக் கசக்கிக்கொண்டே “இப்போதான் வருகிறாயா?”

“ஆம், அம்மா! அப்பா எங்கே?”

“இவ்வளவுநேரமும் பைத்தியம் பிடித்தவரைப் போல இங்கேதான் இருந்தார். நானும் இப்போதான் கண்ணயர்ந்தேன். ஏன்? அவர் இங்கே இல்லையா?” என்றாள்.

“காணவில்லையே” என்றான் செல்லன்.

கனகத்திற்கு ஆத்திரமாக இருந்தது. வந்த அண்ணனிடம் அம்மா “நடராஜாவைக் காணவில்லையா? என்று கேட்காமல் ஏதேதோ எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறாளே. அண்ணனும் நடராஜனைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் அப்பாவைப்பற்றிக் கேட்கிறாரே” என்று அவளுக்கு எரிச்சலாகவும் இருந்

தது. அவளாற் பொறுக்க முடியாமற் போகவே 'அண்ணா நடராஜனைக் கண்டீர்களா?' என்று கேட்க விரும்பினாள் கனகம். ஆனால் அதற்கும் அவளுக்கு நாணமாயிருந்தது. ஆகவே அவள் கணத்தை வருடங்களாக்கித் தவித்தாள்.

“தம்பி நடராஜாவைக் கண்டாயா?” என்று தாயார் கேட்டபோது கனகத்தின் தவிப்பு அடங்கியது. அண்ணா என்ன சொல்லப் போகிறார் என்பதை அறியும் ஆவலோடு சிலை போல நிற்கையில், “ஆம் அம்மா! திருகோணமலையில் அவனைக் கண்டேன். இப்போது சமாதானமாகத்தான் கொழும்புக்குப் போகிறான்” என்றான்.

தாயார் நீண்ட பெருமூச்சு விட்டாள். மணித்தியாலங்களாகச் சுவாசத்தையே தடைப் படுத்திக் கொண்டு உள்ளத்தை நிறைத்து நின்ற பாறாங்கல் ஒன்று அப்படியே காற்றாக மாறி வெளிவந்ததைப் போல இருந்தது. மனத்தை இலேசாக்கிக்கொண்டதும் மறுபடியும் கேட்டாள்: “ஏன், நீ இன்றைக்குத் திருகோணமலையில் நின்று அவனை ரெயிலில் ஏற்றி விட்டு வந்திருக்கலாமே!”

செல்லத்துக்கு இந்தக் கேள்வி திகைப்பைக் கொடுத்தது. ஏனென்றால் அவன் ஒரு பொய் சொல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தானே தவிர, சொல்லிய அந்தப் பொய்யையே உண்மையாக்க மேலும் எத்தனை பொய் சொல்ல வேண்டும் என்று அவன் திட்டப்படுத்தவில்லை! என்றாலும் அந்தத் திகைப்பைச் சமாளித்துக்கொண்டு சொன்னான்:



“நின்று அனுப்பிவிட்டு வந்திருக்கலாந்தான். ஆனால் என்னிடம் ஒரு சாரம்கூட இல்லை. உடுத்த உடுப்போடு போன நான்தானே; அதனாற்தான் வந்துவிட்டேன்.”

அவன் சொல்லியது சரியென்றே தாய்க்குப் பட்டது. ஆனாற் கனகத்திற்கோ சந்தேகமாகத்தானிருந்தது. 'ஓடிப் பறந்து திருகோணமலைக்குப் போனவர் ஏது ரெயில் புறப்படும்வரை நின்று வராமல் திரும்பி வந்துவிட்டார்?' என்று தானே தன்னைக் கேட்டுக் கொண்டாள். பற்றிப் படரும் கொடி, கிட்ட இருப்பது பச்சை மரமா பட்ட மரமா என்று எண்ணிப் பார்ப்பதில்லை. அதனாற் படராமலும் இருக்க முடியாது. மனமும் இப்படித்தான். அதனால் எதையாவது எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. தாயுமானவர் பாடியிருப்பது போல அதற்குச் 'சும்மா இருக்கின்ற திறன்' இணையவே கிடையாது. கனகத்தின் மனக் கொடிகளும் 'சும்மா இருக்க முடியாமல்' படருகையில், சில நாட்களாகத் தன்னுள்ளத்துள்ளே ஊன்றி நாட்டம் பெற்றிருந்த சந்தேகம் என்னும் கொழுகொம்பின்மேற்தான் படர்ந்தது. அதைத் தடுக்க அவளாலேயே முடியவில்லை.

கனகம் யோசித்தபடி நிற்கையில் செல்லன் வீட்டுக்குள்ளாக நடந்து பின்புறமாகப் போனான். திறந்துகிடந்த அடுக்களையைப் பார்த்தபோது அவனுக்குப் பகீர் என்றது. அங்கே நெருப்பே மூட்டப் படவில்லைப்போல இருந்தது. நடராஜனின் போக்குத் தன் குடும்பத்தில் எவ்விதமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்று அப்போதுதான் அவனாற் பூர

ணமாக உணரமுடிந்தது. ஆம், நடராஜன் போனதோடு அவன்வீட்டின் கலகலப்பும் போய்விட்டது. மகிழ்ச்சி போய்விட்டது. குடும்பத்தினர் எல்லார் உள்ளத்திலும் இருந்த பெருமிதம் போய்விட்டது. அதுமட்டுமா? 'பசிவந்தாற் பத்தும் பறக்கும்' என்று பாடியவரைத் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்தித்து அவ்வீட்டிற் பசியே பறந்து போய்விட்டது!

அப்படியானால், இழவுவிழுந்த வீட்டைப் போலச் சூன்யமாகக் கிடந்த அந்த வீட்டின் எல்லா இன்பத்துக்கும் நடராஜன்தான் காரணமா? கனகம் கலங்கினால் அதற்குக் காதல் என்று காரணம் சொல்லலாம். ஆனால் அந்த வீட்டின் ஒவ்வொரு மனிதனும் மனிஷியும் நீரின்றி வாடிக் கிடக்கும் பயிர்கள் போலத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருப்பது ஏன் என்பது அவனுக்கு விளங்கவில்லை. ஏன்? தானே நடராஜனுக்காக இத்தனை கவலைப்படுவது அவனுக்குப் புதிராகவே இருந்தது.

அப்போது அவன் தகப்பனார் அங்கே வந்தார். அவரின் நடையிலே மிடுக்கு இல்லை. முகத்திலே களையில்லை. செல்லனைக் கண்டதும் கேட்டார் "நடராஜன் எங்கே?" என்று.

அவர் குரலிற்தான் எத்தனை சோகம். 'டேய்' என்றால் இரண்டு மைலுக்குக் கேட்கும் தன் தகப்பனாரா இப்படித் தாழ்ந்த குரலிற் கேட்கிறார்? 'எல்லாரும் நடராஜனைப் பற்றிக் கவலைப்படுகிறார்களே. நாம் எல்லாரிடமும் அவனைக் காணாமலே கண்டதாகப் பொய் சொன்னோமே. இதனால் என்ன ஆகுமோ' என்று எண்ணினான் செல்லன். எல்லாருடைய கவலையையும், எல்லாருடைய பயத்தையும் கண்ட



போது அவன் உள்ளத்தையும் பயம் பிடித்து ஆட்டத் தொடங்கிற்று. ஆனாலும் அப்பாவிடமும் எப்படியோ அம்மாவிடம் சொன்ன பொய்யைத்தான் சொன்னான். கேட்டுக்கொண்டே தந்தை ஏதும் பேசாமலே உள்ளே சென்றுவிட்டார்.

செல்வராஜன் சவர்காரத்தை எடுத்துக் கொண்டு சிந்தித்தபடியே கிணற்றடிக்குச் சென்றான். அண்ணனிடம் தனிமையாகப் பேசவேண்டும் என்று விரும்பிய கனகமும் குடத்தை எடுத்துக்கொண்டு அவன் பின்னால் சென்றாள்.

அவள் வைத்த குடத்திலே தண்ணீரை நிரப்பினான் செல்லன். கையைப் பிசைந்து கொண்டு நின்ற கனகம் அவனிடம் கேட்டாள்: "உண்மையாகவே அவரைக் கண்டீர்களா? அண்ணா" ஆசை வெட்கமறியாது என்று சொல்கிறார்கள். பயங்கூட வெட்கமறியாதுதான். நடராஜன் என்ன ஆனானோ எங்கே போனானோ என்ற பயத்திற்தான் கனகமும் தன் அண்ணனிடம் இப்படிக் கேட்டாள்.

"உண்மையாகத்தான் பார்த்தேன். நாளைக்குப் போய்ச் சேர்ந்ததும் அவன் எனக்குக் கடிதம் எழுதுவான்" என்றான் செல்லன்.

அதற்குமேல் ஒன்றுங் கேட்காமல் கனகம் திரும்பி வரும்போது யோசனையிற் தள்ளாடிக்கொண்டிருந்த கால்கள் ஒன்றை ஒன்று இடறின. அவள் இடுப்பிலிருந்த குடம் பொத்தென்று கீழே விழுந்து உடைந்து முற்றமெங்கும் வெள்ளக்காடாகியது.

சப்தத்தைக் கேட்ட கந்தையா வெளியில் வந்து கனகத்தின் நிலையைக் கண்டதும் 'இதேதடா அபசகுனம்' என்று பயந்தார். அவர் மனது நிலைகொள்ளவில்லை.

## 15

## தெளிவுரை

பிட்டுக்கு மண் சுமந்த பெம்மானின் முதுகிலே பட்ட அடி, சர்வஜீவராசிகளின் மீதும் விழுந்தது. நடராஜனின் மனதைத் துளைத்த சொல்லம்பும் கந்தையாவின் வீட்டில், எல்லார் மனத்தையும் உடலையும் கூட, வெள்ளெருக்கஞ் சடைமுடியானைத் துளைத்துத் தடவிய இராமபாணம்போல வதைத்துக் கொண்டிருக்கையில் நடராஜன் கொழும்பிலே தன் விடுதியிற் பைத்தியம் பிடித்தவனைப்போல இருந்தான்.

சாயந்தரம் ஆறுமணியாகியபோது அவன் நண்பன் தியாகராஜா, கொழும்பை ஒருவளையம் வளைத்துவிட்டு வந்தான். நடராஜனைக் கண்டபோது அவன் 'ஹல்லோ' என்று சத்தம்போட்டு "ஏன் திடுதிப்பென வந்துவிட்டாய்?" என்றான்.

"சும்மா வந்துவிட்டேன்," என்றான் நடராஜன். தன் உருவைக் கரந்து எவர்க்குந் தெரியாமல் இருக்கும் இறைவனை 'ஆபத்பாந்தவன்' என்பார்கள் அடியார்கள். இந்தச் 'சும்மா' என்ற சொல்லையும், ஆதி சிவன் தமிழைப் பெற்று அகத்தியனாரிடம் கொடுக்கையில் அச் சொல்லிற்குத் தன் தேவாரத்தையும் சேர்த்தே கொடுத்துவிட்டான் போலும். இல்லாவிடின் இக்கட்டான நேரங்களில் இந்தச்



'சும்மா' என்றசொல் தமிழனுக்குக் கைகொடுத்து உதவமுடியுமா? தியாகுவின் கேள்விக்கு நேரடியாகவிடையளிக்க இயலாதபோது நடராஜனுக்கும் இந்தச் 'சும்மா' என்றசொல் ஆபத்பாந்தவனாக உதவிற்று.

தியாகுவும் சிரித்துக்கொண்டே "சும்மா, தான் சொல்லேன், திங்கட்கிழமைதானே வருவேன் என்று எழுதியிருந்தாய். அதற்குள் ஏன் வந்துவிட்டாய்! தேர்தலில் தோல்வியடைந்ததாலா?"

"தேர்தற்காகவா நான்போனேன்!" என்று திருப்பிக் கேட்டான் நடராஜன்.

"கனகத்துக்காகத்தான் நீ போனாய் என்பது எனக்குத் தெரியும். அதுதான் கேட்கிறேன். ஏன் இன்றைக்கே திரும்பி வந்துவிட்டாய்? கனகம் துரத்திவிட்டாளா?" என்று கேட்டுக்கொண்டே சிரித்தான் தியாகு.

ஆம், தியாகு சிரிக்கப்பிறந்தவன்; சிரிப்பதுதான் அவன் தொழில். 'மெடிக்கல்' கல்லூரிப் பிரவேசப் பரீட்சையில் மூன்றுந்தடவையும் தோல்வியடைந்தபோது அவன் தகப்பனார் 'நாயே, பேயே' என்று அவனைப் பேசினார். அப்போது அவன் சிரித்தான். அடுத்த வருடம் வைத்தியக் கல்லூரியிற் புகுந்தவன் மூன்று வருடங்களுக்குப் போனநிலையிலேயே அசையாமலிருந்ததைக் கண்டு அவன்தந்தையார் இப்படி உருப்படாத பிள்ளையைப் பெற்றதற்காகத் தன்னைத் தானே நொந்துகொண்டபோதும் அவன் சிரித்தான். கடைசியாய் 'டாக்டர் ஆகத்தான் வரமாட்டாய்;

ஒரு அப்போதிக்கரியாகவாவது ஆகித் தொலை' என்று அவனை ஆசீர்வதித்தபோதும் சிரித்தான். நடராஜன் ஏதோ சோகமாக இருக்கிறான் என்று அவன் முகத்தைப் பார்த்து அறிந்திருந்தாலும், இப்போதும் தியாகு சிரித்தான்.

நடராஜனுக்கு அவன் சிரிப்பதைப் பார்த்ததும் எரிச்சலாக இருந்தது. "என்னைத் தொந்தரவு செய்யாமற் போடாப்பா" என்று சலித்துக்கொண்டான்.

"ஏன் வந்தாய்? என்பதைச் சொல்லிவிடேன். நானும் தொந்தரவு செய்யமாட்டேன்" என்றான் தியாகு.

"பிறகு சொல்கிறேன்; இப்போ என்னைக் கரைச்சல் பண்ணாதே" என்றான் நடராஜன்.

"ஏன் இப்ப சொன்னால் என்ன?" என்று கொண்டே தியாகு கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு அவன் பக்கத்தில் அமர்ந்துகொண்டான்.

தியாகுவின் குணம் நடராஜனுக்குத் தெரியாதா? இனி விஷயத்தையறியாமல் அவன் விடப்போகிறதில்லை என்றெண்ணிய நடராஜன், தான் ஏன் முன்னாடியே வந்துவிட்டேன் என்பதற்கு நேரான விடையை, தன் மாமனார் தன்னை அவர்வீட்டிற்கு வரவேண்டாம் என்று சொன்னதைமட்டும் சொன்னான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் தியாகு அலட்சியமாகக் கேட்டான். "வரவேண்டாம் என்று



சொன்னார். வரமாட்டேன் என்று நீயும் வந்துவிட்டாய்? அதற்காக ஏன் இப்படிப் பைத்தியம் பிடித்தவனைப்போல இருக்கவேண்டும்?"

"அப்போது கனகம்?' சோர்ந்து கிடந்த நடராஜன் கதிரையிற் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டே ஆவலுடன் கேட்டான். தியாகு ஏதாவது நல்லவழி சொல்வான் என்ற நம்பிக்கை அவனுக்கு.

தியாகு மறுபடியும் சிரித்துக்கொண்டே "கனகமா? அவள் கூடப் போய்விட்டால் உனக்கென்ன நட்டம்? கிடைத்தவரை இலாபந்தான் என்றெண்ணிக்கொள். விட்டுத்தள்ளு கழுதையை" என்றான்.

தியாகு கூறிய சுருக்குவழி நடராஜனுக்கு ஏமாற்றத்தைத்தான் கொடுத்தது. அவன் சுபாவமே தனக்குத் தெரிந்திருந்தும் தியாகுவிடம் ஏன் இப்படிக் கேட்டோம் என்றிருந்தது அவனுக்கு. அவன் மௌனமாகவேயிருந்தான்.

தியாகுவுக்கு மேசையின் மேலேயிருந்த தந்தி அப்போது கண்ணிற் படவே அதை எடுத்துப் படித்தான். 'திருகோணமலைக்கு வந்தும் சந்திக்க முடியவில்லை. விரிவான கடிதம் தொடர்கிறது' என்று செல்வராஜன் அடித்த தந்தி அது. அதைப்படித்ததும் தியாகு நடராஜனைப் பார்த்து 'மச்சான் தந்திகூட அடித்திருக்கிறானே' என்றான்.

நடராஜன் அப்போதும் மௌனமாகத்தான் இருந்தான். உள்ளுக்குள்ளே யுகாந்தகால அக்கினி போலப் பெரு நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருக்

கையில் அதன் செந்நாக்குகள் தழுவிக் கருகிய மலர் போல் அவன் முகம் இருண்டு கிடந்தது.

தியாகுவுக்கு அவன்மேற் பரிவுண்டாயிற்று. எப்படியும் அவனைச் சமாதானப்படுத்த வேண்டும் என்று மனதில் எண்ணிக்கொண்டே, "மச்சான் நடந்தது நடந்து விட்டது. அதை எண்ணித் துக்கப்படுவதில் அர்த்தமில்லை. நடக்கப்போகிறதைப் பிரமாதப் படுத்தி எண்ணிக் கலங்குவதிலும் கருத்து இல்லை. அலுத்துக் கொள்ளாமல் வா! இன்றைக்கு ஆனந்தாக் கல்லூரிக் கார்ணிவலுக்குப் போவோம்" என்றான்.

"நான் வரவில்லை; என்னைக் கூப்பிடாதே" என்று எரிந்து விழுந்தான் நடராஜன்.

தியாகு அப்படியே கொஞ்சநேரம் இருந்துவிட்டுத் தன்பாட்டிற்குப் பாடினான்.

**"இந்நாள் இனிய நாளானால்**
**இறந்த நாளுக் கிரங்குவதேன்**
**பின்னாள் எண்ணிக் கலங்குவதேன்**
**பெண்ணே கிண்ணம் நிறையம்மா"**

பாட்டைப் பாடி முடிந்ததும் தியாகு நடராஜனை ஓரக் கண்ணாற் பார்த்தான். தான் பாடிய உமார்கையாமின் கவிதை நடராஜன் முகத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாமலிருந்தது, அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனாலும் நம்பிக்கையை இழக்காமல் மறுபடியும் நடராஜனின் கைகளைப் பிடித்துக் கொண்டே "மாமனார் தானே அப்படிச் சொன்னார்.



அதற்தாகக் கனகத்தைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? அவள் இருந்தமாதிரித்தானே இருக்கிறாள்?" என்று கேட்டான்.

"அவள் அப்படித்தான் இருக்கிறாள். ஆனால் நான் அவள் வீட்டில் இனி அடி எடுத்துவைக்கமாட்டேன்" என்றான் நடராஜன்.

"உன்னை யார் இப்போது அங்கு போகச் சொல்கிறார்கள். ஆனந்தாக் கல்லூரிக் காணிவலுக்குத் தானே வரச் சொல்கிறேன். அது உன் மாமாவின் காணி இல்லையே" என்றான் தியாகு.

நடராஜனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அந்தச் சிரிப்பு உதய சூரியனைக் கண்டு மலரும் தாமரையின் செழுமையான சிரிப்பல்ல. மின்சார விளக்குகளின் ஒளியிலே மின்னும் கடதாசிப் பூவின் காய்ந்த சிரிப்புத்தான். ஆனாலும் தியாகுவுக்கு இது ஒரு வெற்றி தானே.

ஆனால் அதற்குள் நடராஜன் "நான் வரவில்லை; எனக்கு அலுப்பாயிருக்கிறது. நாளைக்குப் போகலாமே" என்றபோது தியாகுவுக்கு ஏமாற்றமாக இருந்தது. எந்த விஷயத்திலுமே ஆழ்ந்த சிரத்தை எடுத்தறியாத அவனுக்கு அலுத்துப்போயும் விட்டது. நீரை விலக்கிப் பாலைமட்டும் பருகும் அன்னத்தைப் போல, வாழ்வின் துன்பத்தை மறந்து, இன்பமொன்றையே அனுபவிக்கத் தெரியாத நடராஜனைப் போன்ற பிரகிருதிகளைப் பார்த்துச் சிரி சிரி என்று சிரிக்க எண்ணினான். ஆனாலும் தன் நண்பனுக்காக

அந்தச் சிரிப்பையும் அன்றிரவு அவனுக்கு இருந்த மற்றைய திட்டங்களையும் கைவிடத் தீர்மானித்துக் கொண்டான்.

நடராஜனை வலுவில் இழுத்துக்கொண்டுபோய் இருவரும் சாப்பிட்ட பிறகு படுக்கையில் வீழ்ந்தனர். சில நிமிடங்களில் தியாகு விட்ட குறட்டை நிசப்தமான அந்த இரவைக் காலத்துண்டங்களாக அறுக்கத் தொடங்கியது.

நடராஜன் "கனகம் எப்போதும்போலத்தானே இருக்கிறாள்" என்று தியாகு சொன்னதை நினைத்துக் கொண்டே படுத்தவன் நித்திரையாகிப் போய்விட்டான்.

அப்போது "நடராஜன் இங்கேதான் இருக்கிறானா?" என்று கேட்டுக்கொண்டே அவன் மாமனார் கந்தையா வந்தார்.

# 16

## கடமை

நடராஜன் காலையிற் கண் விழித்தபோது அன்றிரவு கண்ட கனவுதான் நினைவுக்கு வந்தது. அவன் மாமனார் வந்து "வா ஊருக்குப் போவோம்" என்று அழாக் குறையாகக் கூப்பிட்டதை எண்ணியபோது அவனுக்கு ஆத்திரந்தான் வந்தது.

மனத்துள்ளே இருக்கும் கதையைக் கோவைப் படுத்தி எழுத்துரூபமாகக் கொண்டுவர முனையும் கதாசிரியனின் 'பிரசவ வேதனையோடு' அவன் கஷ்டப் பட்டுக்கொண்டு இருந்தான்.

வெளியே மருதானைப் புகைவண்டி நிலையத்திலிருந்து வந்த புகையிரதங்களின் கூவென்ற சப்தம் டிராம் வண்டிகளின் கணகணப்போடு கலந்து வந்து காதைப் பிளந்தது. அடுத்த அறையில் இருப்பவன் யாரென்று அறியாத பட்டணத்து நாகரீகத்தில், நடராஜனைப்பற்றிக் கவலைப்பட எவருமே இருக்கவில்லை, தியாகுவும் இன்னமும் தூங்கிக்கொண்டிருந்தான்.

யன்னலுக்கூடாகத் தெருவைப் பார்க்கையில் ஆண்களும் பெண்களும் அவசர அவசரமாகப் போய் வந்து கொண்டிருந்தார்கள். இந்தப் பட்டினமே இப்படித்தான் எதிலும் ஓர் அவசரம்; வேகம். மனித நாகரீகத்தின் அளவுகோல் வேகந்தானே!

ஆனால் நடராஜன் மனம்மட்டிலும் மந்தமாகத்தான் இருந்தது. மேலே என்ன செய்வது என்பது அவனுக்குத் தெரியவில்லை. அறுபது எழுபதுபேர் அடைந்து கிடக்கும் அந்த விடுதியில் அவன் ஒரு அசாதாரணமான தனிமையில் நொந்துகொண்டிருந்தான்.

எட்டு மணியாகக்கூட ஆகிவிட்டது அப்போதுதான் தியாகு எழுந்தான். சோம்பர் முறித்துக் கொண்டே "இன்று வகுப்புக்குப் போகிறதில்லையா?" என்றான்.

"இன்றைக்குப் போகும் உத்தேசம் இல்லை எனக்கு. அலுப்பாக இருக்கிறது. சிறிது வேலையும் இருக்கிறது" என்றான் நடராஜன்.

"அப்படியா சற்று இரு, வருகிறேன்" என்று சொண்டே தியாகு பற்பசையைத் தேய்த்தவாறு வெளியிற்போனான்.

நடராஜன் இந்தத் தனிமையைப் பயன் படுத்திக்கொண்டு தன் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதினான். தான் சுகமாகக் கொழும்புவந்து சேர்ந்ததாகவும், சொல்லிக்கொள்ளாமற் புறப்பட்டுவந்ததைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கும் படியும் அந்தக்கடிதத்தில் எழுதினான் அந்தக் கடிதம் எழுதியபோது அவன் மனம் இலேசாகியதுபோல இருந்தது. ஆனால் அவன் மனம் உண்மையில் இலேசாகத்தான் ஆகிவிட்டதா? தாயார்மட்டும் கவலைப்படாமலிருந்தால் அவனுக்கு எந்தக் கவலையுமே இல்லை என்ற நிலைக்கு அவன் வந்து விட்டானா?



பாலைவனத்து வியாபாரிகள் ஒட்டகத்தின் மீது பொதிகளைச் சுமத்துவார்களாம். பாரம் பொறுக்க மாட்டாமல் ஒட்டகம் படுத்துக் கொள்ளுமாம். உடனே வியாபாரிகள்; ஏதாவது ஒரு சிறிய பொருளை அதன் முதுகிலிருந்து ஒட்டகத்தின் கண்ணுக்குத் தெரியும்படியாக எடுத்து விடுவார்களாம். தன் முதுகிலே பாரமே கிடையாது என்று எண்ணிக் கொண்டு ஒட்டகம் நடக்குமாம். அந்த ஒட்டகங்களில் ஒன்றைப் போலத்தான் தாயாருக்குக் கடிதம் எழுதிய உடனே தன் மனப்பாரம் குறைந்ததாகக் கற்பித்துக் கொண்டு, நடராஜனும் குளிக்கும் அறைப்பக்கமாக நடந்தான். மூட்டை தூக்கிப் பழக்கமானவன் தன் மேற் சுமையே இல்லை என்றவாறு கை வீசிக்கொண்டு நடப்பதுபோல மனத்தின் பாரத்தை இரண்டு மூன்று நாட்களாகச் சுமந்து பழகியபோது அவனுக்கு அதன் அழுத்தம் தெரியவில்லைப்போலும்!

குளித்துவிட்டுத் திரும்பியபோது அவன் கண்கள் எரிந்தன ஆனால் ஒரு உற்சாகம் உடலிலே ஏறிற்று. தன் உடைகளை அணிந்து தாயாருக்கு எழுதிய கடிதத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

புறப்பட்டவன் முன்னே தபாற்காரன்தான் நின்றான். விடுதி விலாசத்திற்கு வந்திருந்த எல்லாக் கடிதங்களையும் நடராஜனிடமே கொடுத்தான் தபாற்காரன்.

நடராஜன் கடிதங்களின் விலாசத்தைப் பார்வையிட்டான்; அவனுக்கு இரண்டு கடிதங்கள் வந்திருந்தன.

மற்றக் கடிதங்களை எல்லாம், வழக்கமாகக் கடிதங்களை வைக்கும் மேசையின்மேல் பரப்பி வைத்துவிட்டுத் தன்னுடைய இரண்டு கடிதங்களையும்

எடுத்துக்கொண்டு உறையைப் பார்த்தான். ஒன்று தன் தகப்பனாரின் கடிதம் என்று திட்டமாகத் தெரிந்தது. மற்றக் கடிதம் திருகோணமலையிலிருந்து அனுப்பப்பட்டிருந்தது. யார் அனுப்பினார்கள் என்று திட்டமாகத் தெரியவில்லை. அந்தக் கடிதத்தைப்பற்றி ஏதும் சிந்திக்காமலே தன் தகப்பனாரின் கடிதத்தைப் பரபரப்போடு பிரித்துப் படிக்கத் தொடங்கினான்.

அவன் தந்தையார் எழுதியிருந்தார்;

**அன்புள்ள தம்பி!**

இங்கு நடந்த எல்லா விஷயங்களும் அறிந்தேன். என் மனம் வேகின்றது. நீ என்மகன், தவமிருந்து நான் பெற்ற பிள்ளை. உன் மனம் நோவது என் உயிரே போவது போலத்தான்.

'மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று மிதியாமை கோடிபெறும்' என்பது ஆன்றோர் வாக்கு. இனிமேல் ஆகுதல் உன் மானத்தையும், உன் உயிருக்கு உயிரான தந்தையின் மானத்தையும் காப்பாற்றிக் கொள்வாய் என்று நம்புகிறேன்.

இத்தோடு உன் மாமன் வீட்டு எல்லாப் பந்த பாசங்களையும் அறுத்துக்கொண்டாற்றான் நீ என் மகன். உன் அப்பா மரணப்படுக்கையிலிருந்து கொண்டு கெஞ்சிக் கேட்கும் ஒரு வரமாக இதை நீ எண்ணிக் கொள்.

எனக்கு அதிகமாக எழுதத் தெரியாது. நீ ஏன் சொல்லாமல் ஓடிவந்துவிட்டாய்? இத்தோடு காசு நூறு ரூபாய் அனுப்பிவைக்கிறேன். பெற்றுக்கொண்டு எனக்குப் பதில் எழுது.

உனக்கு நல்ல புத்தியையும் திட சித்தத்தையும் நடராஜப் பெருமான் அருள்வாராக.

இப்படிக்கு
உன் தந்தை
**அம்பலவாணர்**



கடிதத்தைப் படித்தபோது நடராஜனுக்கு அழுகையே வந்துவிட்டது. அவன் உடம்பு சிலிர்த்து உரோமங்கள் குத்திட்டு நின்றன. நரம்புக் குழாய்களிலே பனிக்கட்டி உருகி ஓடுவதுபோன்ற ஓர் உணர்ச்சி. அவனால் இருக்கமுடியவில்லை; எழுந்து நிற்கவும் முடியவில்லை; ஓடவும் முடியவில்லை.

அவனுக்குத் தன் தந்தையாரின்மீது ஓர் அபாரமான மதிப்பு. எவருக்கும் தலைவணங்காத அவர் மனத்திண்மையும், கேட்டவர்களை மிரளப்பண்ணும் அவர் வெண்கலத் தொனியும், நெறிபிறழாத அவர் வாழ்வும் நடராஜன் மனதில் தந்தையாரை இலட்சிய புருஷனாகவே பதிய வைத்திருந்தன. அவர் எதற்காவது கலங்கியதை நடராஜன் தன் சீவியத்தில் இதுவரை காணவில்லை. யாரிடமும் எதற்காவது இரந்ததையும் அவன் காணவில்லை. அத்தகைய தன் தந்தை, தன்னிடம் பிச்சைகேட்பதுபோல எதையோ கேட்டிருப்பதை எண்ணியபோது அவன் சப்தநாடிகளுமே ஒடுங்கிவிட்டன!

சற்றுநேரம் அப்படியே இருந்தவன், திரும்பவும் தன் தந்தையாரின் கடிதத்தை எடுத்துப் படித்தான். தன் தந்தையாரின் வெண்கலக் குரல், கீறல் விழுந்த வெண்கலம் போல அலறியது; அவன் மனதைத் தொட்டது. என்றைக்குமே கலங்கி அறியாத அவர் தீட்சண்யமான கண்கள் கலங்க, தன் தந்தையர் தன் காலைக்கட்டிப் பிடித்துக்கொண்டு, "மகனே! என் மானத்தைக் காப்பாற்றடா" என்று கதறி அழுவதைப்போல இருந்தது. தந்தையாரின் கலக்கத்துக்குத் தான் காரணமாக இருந்தேனே என்றெண்

ணியபோது அவன் கண்கள் மறுபடியும் கண்ணீருகுத்தன. 'அப்பா! நானுங்களை இனிமேலும் கலங்கப்பண்ணமாட்டேன்' என்று அவன் அந்தராத்மா முறையிட்டது.

மறுபடியும் கடிதத்தைப் படித்தான். தன் அப்பாவா இத்தனை குறைவாக எழுதியிருக்கிறார் என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவரின் ஆண்மையைத் தான் கொன்றுவிட்டதாக எண்ணினான். மனஉறுதியைக் குலைத்துவிட்டதாக எண்ணினான். தன்னால் அவர் மனிதத் தன்மைக்கே இழுக்கு வந்து விட்டது என எண்ணினான்.

உடனே நடராஜன் தன் தந்தையாருக்குக் கடிதம் எழுதத் தொடங்கினான்.

அன்புள்ள தந்தைக்கு!

தங்கள் கடிதமும் காசும் கிடைத்தன. தங்கள் மனதைத் துன்பப்படுத்தியதற்காக வருந்துகிறேன். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். ஆனால் இனிமேலும் தங்கள் மனம் என்றும் கலங்காது. ஆம்; என்னைப் பெற்றுவளர்த்த தங்கள்மீதாணை. இனி எந்தக் காரணத்துக்காகவும் நான் மாமனார் வீட்டில் அடியெடுத்து வைக்கமாட்டேன்

எழுதிக்கொண்டிருந்த நடராஜன் மறுபடியும் சிந்தித்தான். அப்பா இதைத்தானா தன்னிடமிருந்து எதிர்பார்க்கிறார்? எல்லாப் பந்த பாசங்களையும் விட்டு விடும்படியல்லவா கேட்கிறார். தான் கனகத்தைக் கூட விட்டுவிடத்தான் வேண்டுமா?



இப்படி எண்ணியபோது அவனால் மேலே கடிதத்தைத் தொடர முடியவில்லை. தந்தைக்காகப் பெற்ற தாயையே கொன்றுவிட்ட பரசுராமனைப் போல, அவனும் கனகத்தைக் கொல்லாமற் கொல்ல வேண்டுமா? என்ற கேள்வி அவன் இதயத்தை அடைத்துக்கொண்டு நின்றது. 'அத்தான்! யாருடையதோ குற்றத்திற்காக நானா தண்டிக்கப்படுவது?' என்று கனகம் கேட்டது அவன் நினைவில் அந்தகார இருளிற் பளிச்சிடும் மின்னலைப்போல நெளிந்தது. 'கனகம் சரியாகத்தானே இருக்கிறாள்' என்று தியாகு கேட்டது அவன் காதுகளில் ஒலித்தது.

நடராஜன் அடுத்த கடிதத்தின் ஞாபகம் வந்தவனாக, அதை விரித்துப் படித்தான். அவன் மனம் குமுறியது. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. உடனே கடதாசி ஒன்றை எடுத்துக் கிறு கிறு என்று எழுதத் தொடங்கினான்.

## 17

## ஏமாற்றம்

நடராஜனின் கடிதத்தைப் படித்த அம்பலவாணர் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தார். தான் தேர்தலில் அடைந்த அவமானம் அப்படியே தன்னை விட்டுக் கழன்றதுபோல இருந்தது அவருக்கு. தன் மகன், 'தந்தை மகற் காற்று முதவியை'ச் செய்து விட்டான் என்று பெருமிதமடைந்தார். கடதாசி விளையாட்டிலே 'துரும்பு' வைத்திருந்தவன் கடதாசியை ஓங்கியடித்து, எதிரிகளின் மூல பலத்தை அடித்துப் பறிப்பதுபோலத் தன் மைத்துனன் தனக்குச் செய்த 'துரோகத்திற்கு'த் தன் 'மைந்தன்' என்ற 'துரும்பை'ப் பிரயோகித்துக் கந்தையாவின் கொட்டத்தை அடக்கி விட்டதாக எண்ணினார். 'என்ன இருந்தாலும் நடராஜன் என் மகன்; புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்று தனக்குத் தானே பெருத்த சத்தமாகச் சொல்லிக்கொள்கையில் அவர் மனைவி "நடராஜன் கடிதம் எழுதியிருக்கிறானா?" என்று கேட்டாள்.

"ஏன், எழுதமாட்டான் என்றா எண்ணினாய்? அவன் என் மகனல்லவா?" என்றார் அம்பலவாணர்.

"யார் இல்லை என்று சொல்லியது?" என்றாள். பொன்னம்மா.

"இல்லை, நீ அவன் உன் அண்ணனின் மருமகன் என்றுதானே சொல்வாய்?" என்றார் அம்பலவாணர்.



"உங்களுக்குள் என்னதான் பகை இருந்தாலும் அவன் அண்ணனுக்கு மருமகன்தானே" என்றாள் பொன்னம்மா.

"அடடே, இன்னமும் இப்படித்தானா எண்ணிக் கொண்டிருக்கிறாய்" என்று குறும்புத்தனமான சிரிப்போடு சொன்ன அம்பலவாணர், பின்னர் தன் வெண்கலக் குரலில் உரத்துச் சொன்னார்: "இந்தா, அந்த எண்ணத்தை மட்டும் விட்டிடு. நான் இருக்கும் வரை அந்த எண்ணமே உனக்கு இருக்கக்கூடாது. உன் அண்ணனுக்கும் இதைத் திட்டமாகச் சொல்லிவிடு".

பொன்னம்மா எப்போதும் போல அவர் கோபத்தைக் கண்டதும் அடங்கி விட்டாள். இப்போதைக்கு 'நடராஜன் கொழும்பிலே சுகமாக இருக்கிறான்' என்றது மட்டுமே அவளுக்குத் தேவையாயிருந்தது. அந்த நற்செய்தி கிடைத்துவிட்ட பிறகு, மூன்று நாட்களாக மௌனமாக விம்மிக்கொண்டிருந்த அந்தத் தாயுள்ளம் வேறெதையுமே எண்ணிப்பார்க்க விரும்பவில்லை. தன் வேலைகளைக் கவனிக்கப் புறப்பட்டாள்.

அம்பலவாணர் தன் மகனின் கடிதத்தை மறுமுறையும் திருப்பிப் படித்தார். "என்னைப் பெற்று வளர்த்த தங்கள் மீதாணை; இனி எந்தக் காரணத்துக்காகவும் நான் மாமனார் வீட்டில் அடி எடுத்து வைக்க மாட்டேன்" என்ற வரிகள் அவர் மனதில் இன்பத் தேனாகப் பெருகிப் பாய்ந்தன. அந்த இன்பப் போதையின் கிறுக்கத்தில் கனகத்தைப்பற்றியோ, அல்லது தன் கல்யாணத்தைப்பற்றியோ எதையுமே எழுதாததையிட்டு அவர் மனம் எண்ணிப்பார்க்க முடியாததாக விருந்தது.

ஆனந்தத்தில் அம்பலவாணர் இப்படித் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கையில், கந்தையாவின் வீட்டார், விசேடமாகச் செல்வராஜன், நடராஜன் கடிதத்தைக் கணத்துக்குக் கணம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

நடராஜனைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு வந்ததாக வீட்டிலே பொய்யும் சொல்லி விட்டான். நடராஜன் தான் எழுதிய கடிதத்திற்கு என்ன பதில் எழுதப் போகிறானோ என்பதை அறிவதில் அவனுக்கு ஒரு பயங்கலந்த ஆர்வம் இருந்தது. மேலும் நடராஜன் ஆத்திரத்தில் ஏதும் 'ஏறு மாறாக' எழுதினாற்கூட அதையும் இம்முறை மறைத்து வைத்துவிட வேண்டும் என்று எண்ணினான். ஏனென்றால் கனகத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்குப் பரிதாபகரமாக இருந்தது!

கனகத்தைப் பொறுத்தவரையில் நடராஜன் போனபின் அவளுக்கு எல்லாமே சூன்யமாக இருந்தது. அவள் கன்னிகாஸ்திரி மடப் பாடசாலையிற் படித்ததினால் பைபிளிற் சிறிது பரிச்சயமிருந்தது. கடவுள் உலகத்தைச் சூன்யத்திலிருந்து படைத்ததாக அந்த வேதம் கூறுகிறது. இன்று அப்படிப் படைக்கப்பட்ட உலகம் தான் சூன்யமாகி விட்டதோ அல்லது ஒன்றுமில்லாமைதான் அவளுடைய உலகமாகிவிட்டதோ? அந்த வெறுமையில் உருவமற்ற அவள் சிந்தனைகள், அத்வைதமாகக் கலந்து, அவள் சிந்தனையை வென்று விட்ட சடமாய்ப் போனாள். ஊணில்லை; உறக்கமில்லை. சரீரத்தின் எல்லா உபாதைகளையுமே வென்றுவிட்ட யோகியாய், மனித மந்தையிலிருந்து தனியனாய் விட்ட



சித்தனாக அவள் மாறியிருந்தாள். கிணற்றுக்கட்டில் குந்தினாள் என்றால் ஒரு அசைவா? ஆட்டமா? அவள் கண்கள் எதைத் தேடின? மேற்கே செம்பஞ்சுக் குழம்பாகிக் கிடக்கும் வானத்திலே தன் கடைசிக் கிரணங்களை வீசியவாறு மறைந்துகொண்டிருக்கும் சூரியனையா? அல்லது அந்தக் கிணற்றடியிலே நின்று 'விர்' என்று மறைந்து போய்விட்ட நடராஜனையா? மறைந்துகொண்டிருக்கும் சூரியன் 'அடி பேதைப் பெண்ணே இப்போது மறைகிறேன் ஆனால் எனக்காகக் காத்துக்கொண்டிரு; கட்டாயமாக நாளைக் காலையில் வந்து விடுவேன்' என்று சிரித்துக்கொண்டே சொல்வதை அவள் காதுகள் கேட்கவில்லையா? பாவம்! அவள் அத்தானே எதிரில் வந்து நின்று அப்படிச் சொன்னாலும் அவள் காதுகளுக்குக் கேட்டிருக்குமா? என்னவோ சூரியன் இருக்கிறான் என்ற பகல், அவன் மறைந்துவிட்டான் என்ற இரவு, இவைகள்கூட அவளுக்குத் தெரிந்திருந்ததா? 'சுற்றும் பாழ்வெளியாய்த், தோற்றமில்லாச் சூனியத்தில் பற்றிப் படரும் அவள் பகற் கனவு, மனக்கொடிகள்கூட அடியோடு கருகி விட்டனவா?

நேற்றிரவு இப்படியிருக்கையிலேதான் "கனகம், இன்னமும் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று அம்மா கேட்டாள். கனகத்திற்கு அவள் கேட்டது காதில் விழவில்லை.

அம்மா அவள் தோளைப் பிடித்துக் குலுக்கிக் 'கனகம்' என்றாள்.

தன் நிலையை உணர்ந்த கனகம் "அம்மாவின் கைகளிற் புதைந்துகொண்டு விம்மினாள். ஆம்;

மதுரையை எரித்த கண்ணகிக்குக் கோயில் கட்டி விழாவெடுக்கும் தனிச் சிறப்புப்படைத்த இந்தக் கிழக் கரை இலங்கையிற்கூட இன்னமும் கல்யாண வய தடைந்ததும் பெண் அழுதுதான் ஆகவேண்டியிருக் கிறது. ஒருத்தி தனக்குச் சீதனம் இல்லாததற்காக அழுவாள். இன்னெருத்தி தான் அழகாயில்லையே என்பதற்காக அழுவாள். வேருெருத்தி தான் அழகி யாகப் பிறந்ததற்காக அழுவாள். வேருெருத்தி தன் பெண்மைக்குக் கயவர்களால் மாசு கற்பிக்கப்பட் டதை நினைத்து அழுவாள். ஆனுல் கனகம் இவை களில் எதற்காக அழுதாள்? ஒன்றிற்குமில்லாவிட் டால் கல்யாணம் என்ருல் பெண்கள் அழுதுதான் ஆகவேண்டும் என்பதுதான் விதியா? இந்த விதியை மாற்ற எவராலுமே முடியாதா?

அழுதழுது உருகிப்போன கனகம் அன்று காலை யில் எழுந்த போது அவள் மனத்தில் 'இன்றைக்கு அத்தான் கடிதம் எழுதுவார்' என்ற ஒரு நம்பிக்கை பிறந்தது. மழைபோலப் பெருகிய கண்ணீர் வெள்ளத் தின் ஈரத்திலே இந்த நம்பிக்கை வித்து முளை விட்ட தற்குக் கனகத்தின் உள்ளத்தின் அடித் தளத்திலே 'அத்தான் என்னைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்பட மாட்டாரா?' என்ற அவள் எண்ணந்தான் காரணம்.

அதனுல் என்ன? எதுவாயிருந்தாலும் இருக்கட் டும். மனிதன் மனிதனுக வாழ்வதற்கு இப்படி ஏதாவது ஒரு நம்பிக்கைதான் பற்றுக்கோடு. அந்த நம்பிக்கை தெய்வமாகவும் இருக்கலாம்; அல்லது தெய்வத்தின் சாயலான மனிதனுகவும் இருக்கலாம். ஆனுல் இப்படி ஏதாவது ஒரு நம்பிக்கைமட்டும் இல்லாமலிருந்தால்,



உலகில் நடக்கும் அக்கிரமங்களையும் கொடுமைகளையும் கண்டு சிந்திக்கத் தெரிந்த எவனுலும் தற்கொலை செய்து கொள்ளாமல் இருக்க முடியாது!

கனகம் இப்படி நம்பிக்கொண்டிருக்கும் போது, செல்வம், நடராஜனின் கடிதத்தை அது வீட்டுக்கு வர முன்னமே தான் இரகசியமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தபாற் கந்தோர்ப் பக்க மாகப் போனுன். அந்தக் கடிதத்தில் ஏதும் 'சுபமாக' இருந்தால் அதை வீட்டிலுள்ளவர்களுக்குக் காட்டு வது; அல்லது கடிதத்தையே மறைத்து நடராஜன் கடிதமே அனுப்பவில்லை என்று சொல்லிவிடுவது என் றெண்ணிக்கொண்டான்.

அவன் எதிர்பார்த்தபடி நடராஜன் கடிதம் அவனுக்குக் கிடைத்தது. செல்வம் பரபரப்போடு அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தான். பத்தி பத்தியாக எழுதும் நடராஜன் ஓரிரண்டு வரிகள் தான் எழுதியிருந்ததைக் கண்டபோதே அவனுக்குத் திகிலாயிருந்தது.

அந்தக் கடிதத்தில் நடராஜன் எழுதியிருந்தான்: "உமது கடிதம் கிடைத்தது. அங்கிருந்து எந்த உப சாரத்தையும் நான் எதிர்பார்க்கவில்லை. கனகத்தைப் பற்றி நீரோ உமது தந்தையோ இனி எந்தவிதமான கடிதமும் எனக்கு எழுதவேண்டாம்."

கடிதத்தைப் படித்த செல்வராஜன் பலியாடு போல முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

அவனைக் கண்டதும் கனகம் கேட்டாள் "தபாற் காரன் வந்திற்ருனு அண்ணு!"

"எனக்குத் தெரியாதே" என்று சிரமப்பட்டுத் தன் உணர்ச்சிகளை மறைத்துச் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

கனகம், தாகூரின் குழந்தைத் தபாற்காரன் என்ற பாடலில் வரும் தாயைப் போலக் கடிதத்துக்காகக் காத்துக்கொண்டு யன்னலோரமாகத் தெருவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனுல் அந்தக் கல் நெஞ்சனுன தபாற்காரன், கவியரசர் தாகூரின் தபாற் காரனைப்போலவே நடராஜன் கடிதங்களை மட்டும் தான் படிப்பதற்குப் போலும் எடுத்துக்கொண்டு கனகத்தின் வீட்டைத் தாண்டிச் சென்ருன். கன கத்தின் முகத்தைச் சோகம் கப்பிக்கொள்ள வைகறை யின் தண்மையில் வெண்பனி தோய்ந்து இள நகை காட்டி நிற்கும் மல்லிகையைப்போன்ற அவள் எழில் முகம் இருண்டு கறுத்தது. தாகூரின் பெண்ணுக் காவது "அம்மா, அப்பா கடிதம் எழுதாவிட்டால் என்ன? எனக்கு எழுதத் தெரியும். நான் கடிதம் எழுதி அப்பாவைப்போலத் தபாற்காரனிடம் கொடுக் காமல் நானே உன்னிடம் கொண்டுவந்து தருகிறேன்" என்று தன் மழலை மொழியால் அவள் முகத்தை மலரச் செய்ய ஒரு குழந்தையாவது இருந்தது. ஆனுற் கனகத்தைத் தேற்றுவார் யார்?

நடராஜன் கடிதம் இல்லாததைக் கண்டு அந்த வீடே மறுபடியும் துக்கத்திலாழ்ந்தது. மாலையான போது, நடராஜன் அம்பலவாணருக்குக் கடிதம் எழுதி



யிருந்த செய்தி உருமாறித் திரிந்து அந்த வீட்டுக்கும் வந்து சேர்ந்தது. "நடராஜனுக்கும் கனகத்திற்கும் மேற்கொண்டும் எந்தத் தொடர்புக்குமே இடமில்லை" என்றவாறு அந்தச் செய்தி கனகத்தின் காதுகளில் விழுந்தபோது கனகம் துடித்தாள். வீட்டுக்குள்ளே யிருந்துகொள்ளமுடியாமல் கிணற்றடிப் பக்கமாக வந்தவள் கிணற்றுக் கட்டிற் சாய்ந்துகொண்டிருந்த செல்வராஜனிடம் "அண்ணு! அவர் உண்மையாகக் கடிதமே எழுதவில்லையா?" என்ருள்.

செல்வனுக்கு என்ன தோன்றிற்ருே சட்டைப் பையில் மறைத்து வைத்திருந்த அந்தக் கடிதத்தை அவளிடம் நீட்டினுன். அதைப் படித்த கனகம் "ஐயோ!" என்று பென்னம் பெருஞ் சப்தமாக அல றிய அலறல் அந்தச் சுற்றுப்புறத்தையே திடுக்கிட வைத்தது.

வீட்டுக்குள்ளிருந்தவர்கள் எல்லோரும் விழுந் தடித்துக்கொண்டு கிணற்றடிக்கு ஓடினுர்கள்.

# 18

## காதல் உள்ளம்

நாட்கள் சில சென்றன. காலம் மனத் துக்கத்தையும் ஆத்திரத்தையும் ஆற்றிவிடும் என்று சொல்வார்கள். ஆனால் காதல் நினைவுகள் மட்டும் சங்கிலிப் பின்னல்போலத் தொடர்ந்து கற்ப காலத்துக்கு, யுக யுகாந்திரமாய் நிற்குமாம் ஏன்? பாரதியாரின் சின்னக் குயிலி, தன் முற்பிறப்புக் கதைகளைச் சொல்லவில்லையா? கடல் கொண்ட கபாடபுரத்து அணங்கு, எத்தனையோ காலத்திற்குப் பிறகும் புதுமைப்பித்தனின் காதலை நினைவைத் தெளிந்து வைத்திருக்கவில்லையா? இவையெல்லாம் கற்பனை எனினும், மனித மனத்தின் இயல்புகள்தாம்!

வாழ்வைச் சுகிப்பதையே கலையாகக் கொண்ட தியாகு ஓரளவிற்கு நடராஜனின் துக்கத்தை ஆற்றித்தான் விட்டான்! ஆனால் கனகத்தைப் பற்றிய எண்ணங்களை மாற்றிவிட அவனால் முடியவேயில்லை.

கனகம் ஒருத்தியோடுதான் நடராஜனுக்கு நட்பு. மானசீகமான அன்பு இருந்தது. தியாகுவை எடுத்துக்கொண்டால் அவன்கூட எத்தனையோ பெண்களோடு நட்பாகத்தான் இருந்தான். வகுப்பு முடிந்து வெளிக்கிளம்பியதுமே அவன் யாராவது ஒருபெண்ணோடு விக்ரோறியாப் பூந்தோட்டத்திலோ, குதிரைப் பந்தய மைதானத்திலோ சுற்றுவான். அந்தப் பெண்ணோடு கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவான். அவர்



களைப் பார்த்தால் அறியாதவர்கள் எவருமே 'ஆ! என்ன ஒற்றுமையான தம்பதிகள்' என்றுதான் சொல்லவேண்டியிருக்கும்படி அத்தனை அன்னியோன்னியமாகத்தான் இருப்பார்கள். அவன் அவர்களுடன் திரிந்துவிட்டு வீட்டுக்கு வரும்போது அதிகமாகப் பன்னிரண்டு மணிக்கு மேலாகியிருக்கும். வந்ததும் எந்தக் கவலையுமே இல்லாதவனாக நித்திரையில் ஆழ்ந்து விடுகிறான். ஆனால் அவர்களில் எந்தப் பெண்ணுக்காகவாவது தியாகு இரக்கப்பட்டிருக்கிறானா?

நாம் எல்லோருமே தியாகுவுக்கு எந்தப் பெண்ணின்மேலேயும் காதல் இல்லை என்று திட்டமாகச் சொல்லிவிடலாம். எந்தப் பெண்ணுக்காகவும் தியாகு இரக்கப்பட்டதில்லை; கவலைப்பட்டது கிடையாது.

ஆனால் ஆயிரம் சங்குகட்கிடையே முழங்கும் பாஞ்சசன்னியச் சங்குபோல, நடராஜனின் வெறுப்பும், பழிவாங்கும் வஞ்சமும், தந்தையின் மானத்தைக் காப்பாற்றவேண்டிய கடமையும் ஆகிய பல்வேறு உணர்ச்சிகளிடையே 'கனகம் இதற்கெல்லாம் என்ன செய்வாள்?' என்ற இரக்கவுணர்ச்சி தலை தூக்குகிறதே. அது என்ன? கொழும்பு அவசரத்திற் தன்னை மறந்தும், கேளிக்கைகளிற் திளைத்தும் வந்தவன், மோனமாம் தனிமையில், நிசியின் அந்தகார இருளிற் கனகத்துக்காகக் கண்ணீர் வடிக்கிறானே, அது ஏன்? வாழ்க்கையின் பலதிறப்பட்டவர்கள் ஒருங்கே குழுமியிருக்கும் அந்த விடுதியில், கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்ட குழந்தையைப்போலத் தனிமையிலே தவிக்கிறானே, அது ஏன்?

'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்று தேவாரம் சொல்லுகிறது. காதல் கொண்டாற் கசிந்து கண்ணீர் மல்கித்தானு ஆகவேண்டும்? அப்படியானுல் இரக்க சிந்தைக்குத்தான் காதல் என்று பெயரா?

'எப்படியானுலும் இருக்கட்டும் இந்தக் காதல் விவகாரம். அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை' என்பது பாரதி வாக்கு. இரக்கசிந்தை யில்லாதவனிடம் காதல் இல்லை. இரக்கமற்றவன் காதலிக்கத் தகுதியற்றவன் என்று நாமும் வரையறுத்துச் சொல்லிவிடலாம்.

தந்தைக்குக் கடிதம் எழுதியபின்னர் நடராஜனுக்கு மனதில் ஒரு திருப்தி இருந்தது. ஆனுல் கிழக்கிலே இருநூறுமைல் தூரத்துக்கு அப்பால் ஒரு பெண் தனக்காகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பாள் என்ற எண்ணம் அவன் மனத்தைத் துளைக்கையில், நடராஜன் அமைதியை இழந்துவிட்டான். அப்பாவுக்கு எழுதிய கடிதத்தில் 'தான் மாமா வீட்டில் இனிமேற் காலடி எடுத்து வைக்க மாட்டேன்' என்றுதான் எழுதினுன். ஆனுல் அதிலே 'கனகத்தை நான் மறந்துவிட்டேன்' என்று அவன் எழுதவில்லை. எழுத அவனுல் முடிந்திராது. ஆனுல் அவளை மட்டும் மறக்காமல் இருந்தால் தான் தகப்பனுருக்குப் பிள்ளையாக வாழ முடியுமா? வாழத்தான் தன் தந்தையார் விடுவாரா? என்று எண்ணுகையில் நடராஜனின் தலையே விறைத்துவிடும்!

பின்னர் செல்லனுக்குத் தான் எழுதிய கடிதம் நினைவுக்கு வரும். பாவம்! செல்லன் 'கனகம் உன்னைப் பற்றிக் கவலையாக இருக்கிருள்' என்றுதான் செல்லராஜன் எழுதியிருந்தான். ஆனுல் அதற்கு நடராஜன் எழுதிய பதில் என்ன? 'கனகத்தைப்பற்றி நீரோ உம் தந்தையோ என்னிடம் ஏதுமே பேசக் கூடாது;' சரியான பதில்தானே. அப்போது கனகத்தைப்பற்றிக் கனகமே என்னிடம் பேசலாம் என்ற அவன் எண்ணம் அங்கே எழுதாக் கிளவியாகக் கிடக்கிறதே. ஆனுல் இந்தக் கடிதம் அங்கே என்ன விளைவுகளை யுண்டாக்கி விட்டதோ?



கடலுக்கு ஓய்விராது. காதலுள்ளத்து அலைகளுக்கும் முடிவேயிராது. அதிலும் ஏதாவது சூருவளி காதலுள்ளத்திலே கிளம்பிவிட்டால்......

அமைதியை இழந்த நடராஜன் தன் புலனைப் படிப்பிலே திருப்ப முயன்ருன். ஆனுல் விரித்து வைக்கப்பட்டிருந்த 'மெற்றீரியா மெடிக்கா'விலே கனகந்தான் தோன்றினுள்.

தியாகராஜன் அவனைச் சமாதானப்படுத்தத் தன்னுலானவரை முயன்ருன். பேய்பிடித்தவனுக்கு, இன்னெரு பேயைவிட்டு முதற்பேயைத் துரத்துவது போல, பெண்ணுக்காக ஏங்கும் நடராஜனை, இன்னெரு பெண்ணைக் கொண்டே சாந்தப் படுத்தலாம் என்ற சுருக்க வழியைக்கூடக் கையாண்டு பார்த்தான்; பலிக்கவேயில்லை.

ஒருநாள் நடராஜன் தியாகுவின் தொளைச்சல் பொறுக்க மாட்டாமற் படம் பார்க்கச் சென்றிருந்தான்.

இருளிலே வெள்ளித்திரையிற் படம் ஓடத் தொடங்கிற்று. இளமைதொட்டுப் பழகிய காதலர்கள் பிரிக்கப்படுகிருர்கள் திரையிலே. காதலன் தனிமை யிலிருந்துகொண்டு அமரகவி பாரதியாரின் பாட லொன்றைப் பாடுகிறன்:

**கன்னி வயதிலுன்னைக் கண்டதில்லையோ - கன்னம்**
**கன்றிச் சிவக்கமுத்த மிட்டதில்லையோ**
**அன்னிய மாகநம்முள் எண்ணுவதில்லை - இரண்**
**டாவியுமோன் ருகும்எனக் கொண்டதில்லையோ**

நடராஜனுக்கு அழுகையே வந்துவிட்டது. அதற் குமேல் அவனுற் படத்தைப் பார்க்கவே முடிய வில்லை திடீரென்று எழுந்து வந்தவன் நேராகத்தன் விடுதிக்கு வந்து படுக்கையிற் பொத்தென்று சாய்ந் தான்.

அவனைப் பின்தொடர்ந்து வந்த தியாகு "ஏன் எழுந்து வந்துவிட்டாய்?" என்று கேட்டான்.

"எனக்கு அந்தப் படம் பிடிக்கவில்லை."

"ஏன் நன்ருகத்தானே இருக்கிறது. அதுவும் கலாதேவி கற்பகம் நடிக்கும் படமல்லவா?"

"யார் நடித்தாலும் நடிக்கட்டும்; என்னைத் தொந் தரவு செய்யாதே" என்ருன் நடராஜன்.

தியாகுவுக்கும் அவன்போக்கு அலுத்துவிட்டது. இப்படியும் ஒரு பைத்தியம் இருக்க முடியுமா என்று தான் அவனுக்குப் பட்டது. எனவே வெறுப்போடு கேட்டான்: "நீ என்னதான் நினைத்துக்கொண்டிருக் கிருய் நடராஜா?"



"இனி என்னத்தை நினைக்கிறது. நான் இனி எவருக்குமே தொந்தரவாக இருக்கிறதில்லை என்று தான்" என்ருன் நடராஜன்.

"அப்படியென்ருல்?"

"இனி உலகிலேயே இருப்பதில்லை என்றுதான்."

தியாகு சிரித்தான். ஏளனமாகச் சிரித்துக் கொண்டே "மடையா! இத்தனை தூரத்துக்கு வந்து விட்டாயா? உலகத்துக்கே வெறுக்கும் அளவுக்கு உனக்கு என்னதான் நடந்துவிட்டது" என்ருன் தியாகு.

நடராஜன் எதையோ எண்ணிக்கொண்டு "இப் போது மணி என்ன?" என்ருன்.

"ஏழேகால்; ஏன்?" என்ருன்.

"நான் இப்போதே ஊருக்குப் போகப் போகி றேன். திருகோணமலை வண்டி எட்டுமணிக்குத் தானே?"

"சரி தாராளமாகப் போ. வேண்டுமானுல் நானும் வருகிறேன்" என்ருன் தியாகு.

நடராஜன் எழுந்திருந்து சில உடுப்புகளைப் பார் சலாகச் சுற்றி எடுத்துக்கொண்டு கோட்டைப் புகை யிரத நிலையத்தை நோக்கிப் புறப்பட்டான்.

---

# 19

## வழி

கிணற்றடியில் மூர்ச்சையாகிவிட்ட கனகத்தைக் கைத் தூக்காகத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குள் கொண்டுவந்தார்கள். ஏன் அந்தக் கடிதத்தை அவளிடம் காட்டினேன் என்றிருந்தது செல்வராஜனுக்கு.

கனகம் போட்ட கூச்சலிலும் சந்தடியிலும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் எல்லோருமே அங்கு வந்து விட்டார்கள்; வந்தவர்கள் அரை குறையாக விஷயத்தை விளங்கிக்கொண்டு அநுதாப வார்த்தைகள் பேசுகையில் அந்த வார்த்தைகள் கந்தையாவின் காதில் ஈயத்தைக் காய்ச்சி வார்ப்பதுபோல இருந்தன. துன்பத்தின் கடைசிக் கோட்டிலே நின்றவர் மனம் திடீரென்று கொதித்தபோது அவர் மறுபடியும் தன் சுயரூபத்தைக் காட்டினார். அம்பலவாணருக்கோ நடராஜனுக்கோ அவர் எதிலே இளக்கமானவர்?

கனகம் மூர்ச்சை தெளிந்துவிட்டாள். அப்போது நன்றாக இருண்டுவிட்டது. இருளிலே தனிமையில் நடந்து நடந்து, கந்தையா மேலே நடக்க வேண்டியதற்குத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தார்.

சூட்டோடு சூடாகக் கனகத்தை யாருக்காவது கல்யாணஞ்செய்து வைத்தாற்றான் தன் மைத்துனர்



கொட்டத்தை அடக்கலாம் என்று அவர் நினைவுகள் ஓடின.

திடீரென்று அறைக்குள்ளே வந்தவர் புத்தகத்தை விரித்தபடியே சிந்தித்துக்கொண்டிருந்த செல்லனிடம் "ஏண்டா அவன் என்ன எழுதியிருந்தான்?" என்றார். அவர் கேள்வியை எதிரொலித்து அந்த அறைச்சுவர்கள் அலறின.

"ஒன்றும் எழுதவில்லையே அப்பா!" என்றான் செல்லன்.

"ஏண்டா பொய் சொல்லுகிறாய்? உனக்கென்னடா அவனுக்கு அவ்வளவு பயம்?"

"ஏனப்பா நான் பயப்படவேண்டும்?" என்றான் செல்லன். ஏதாவது விடை சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற இக்கட்டில் அவன் வாய் இப்படி உளறிற்று.

"பிறகு ஏன் அவனுக்குப் பின்னால் வால் பிடித்துக்கொண்டு போனாய்?"

செல்லன் அதற்கு விடை சொல்லாமல் நின்றான். அப்பாவின் பேச்சுக்கு என்னதான் பயந்தாலும், தன்னால் கனகத்துக்கும் நடராஜனுக்கும் உள்ள சம்பந்தம் எவ்விதமாயினும் அறுந்து விடக்கூடாது என்ற வைராக்கியம் அவன் மனதிலேயிருந்தது.

மௌனமாக நின்ற செல்லனிடம் "நீ எப்போ பாடசாலைக்குப் போகிறது?" என்றார்.

"அடுத்த வாரம் போகவேண்டும் அப்பா" என்றான் செல்லன்.

"சரிதான் அதற்குள்ளாக இதற்கெல்லாம் ஒரு முடிவு காணவேண்டும்; கனகத்துக்குக் கலியாணம் நடத்தவேண்டும்" என்றார்.

"அப்பா" என்றான் செல்லன்.

"என்னடா அது?" என்று அதட்டினார் கந்தையா.

"அப்பா! உங்கள் கோபம் எத்தனை காலத்துக்குத்தான் இப்படி இருக்கப் போகின்றது? கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்கள் அப்பா!" என்றான் செல்லன்.

"அட உன்னிடந்தான் யோசனை கேட்கவேண்டுமாக்கும் நான்; போடா போ! அந்தப் பயல் மட்டும் தன் அப்பாவுக்காக இத்தனை குதி குதிக்கையில் நீ என்னடா, இடையிலே யோசிக்கச் சொல்கிறானும் யோசிக்க..." என்று ஏளனமாகப் பேசினார் கந்தையா.

"அப்பா! அந்தப் படுபாவி சண்முகம் உங்கள் மனத்தை நன்றாகக் கெடுத்துவிட்டானப்பா! உங்கள் தனிப்பட்ட குரோதங்களுக்குக் கனகத்தின் உணர்ச்சிகளைப் பலியிடுவது தகாது" என்றான் செல்லன்.

வளர்த்த கடா மார்பிற் பாய்ந்த கதையாக, அருமையாக வளர்த்த, அந்தப் 'பெருதபிள்ளை' நடராஜன் அவரைத் தாக்குகையில், தான் பெற்ற பிள்ளைகூட அவனுக்காகப் பரிந்து பேசுவதைப் பார்க்கையில் கந்தையாவுக்குப் பொங்கியெழுந்த கோபத்தை அடக்கிக்கொள்ள முடியவில்லை. பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டே "போடா போ" உன்னிடம் கேட்டுக்கொண்டுதானா நான் எல்லாக் காரியங்களையும் நடத்துகிறது. செய்யவேண்டியது எனக்குத் தெரியும். பேசாமல் வாயைப் பொத்திக் கொண்டு பாடசாலைக்கு ஒருவாரம் லீவு எழுதிக் கேட்டுக்கொள்" என்று சொல்லிக்கொண்டேபோக முயன்றார் கந்தையா.



ஆனால் இயந்திரத் துப்பாக்கிக்கு முன்னே ராம நாமபஜனையுடன் தன் மார்பைத் திறந்து காட்டிக் கொண்டு நிற்கும் உள்ளொளியும், தன் நம்பிக்கையும் படைத்த இலட்சியவாதியான சத்தியாக்கிரகியைப் போலச் செல்லன் அவர் கோபத்துக்கும் மிரட்டலுக்கும் பயப்படாமல் "அப்பா நீங்கள் செய்ய இருக்கும் காரியம் தகாது. ஒருக்காலும் அது நடக்கக் கூடாது நடக்கவும் நான் விடமாட்டேன்" என்றான்.

"நீ என்னடா செய்துவிடுவாய்?" என்று முழங்கினார் கந்தையா.

"அப்பா நான் கோழையல்ல. தீமையை எதிர்த்து நிற்க எனக்குத் தைரியம் உண்டு" என்றான் செல்லன். அவனுக்குத்தான் எத்தனை துணிவு! கிணற்றடியிலே நிற்கும் கமுகுபோல நீண்டுமெலிந்த அந்தச் சிறிய உடலுக்குள்ளா இத்தனை மனத்திண்மை அடங்கிக் கிடக்கிறது? தன் மைந்தனின் மனவுறுதியைக்கண்டு தந்தைக்கே ஆச்சரியமாக இருந்தது.

தந்தைக்கும் மகனுக்கும் நடந்த இந்தச் சம்பாஷணைகளை அடுத்த அறைக்குள்ளேயிருந்து கனகம்

கேட்டுக்கொண்டு இருந்தாள். அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கிரௌஞ்ச மிதுனத்தில் அன்றிற் பறவையைக் கொன்ற கிராதகனுன வேடனைப்போலத் தன்னையும் பிரிவுத் துயருள்ளாக்க எண்ணும் தந்தை யாரிடம் சூடாக இரண்டு வார்த்தைகள் சொல்ல வேண்டும் என்று அவள் துடித்தாள்.

வெளியே சோகமே உருவெடுத்தாற்போன்று வந்த கனகம் தன் தந்தையாரின் "நீ எங்கே வந்தாய்?" என்ற குரலைக் கேட்டதும் திடுக்கிட்டாள்.

"அவள் வரத்தான் வேண்டும். அவள் எதிர் காலத்தைப்பற்றி நாம் பேசுவதையெல்லாம் அவளும் கேட்கத்தான் வேண்டும்" என்று ஆத்திரத்தோடு சொன்னுன் செல்லன்.

அண்ணன் தனக்கு ஆதரவாகப் பேசுவதைக் கேட்ட கனகத்திற்குத் தெம்பு வந்தது "அப்பா நீங்கள்..." என்று ஏதோ சொல்லவாயெடுத்தாள்.

கந்தையா குறுக்கிட்டு "ஏன்? இரண்டுபேரும் சேர்ந்து திட்டமிட்டுத்தான் எல்லாம் நடத்துகிறீர் களா?" என்ருர்.

"எந்தத் திட்டம் போடுவதற்கும் இப்போ அவசரம் ஒன்றும் ஏற்படவில்லையே அப்பா. நீங்கள் ஆத்திரப்படுகிறீர்கள்" என்ருன் செல்லன்.

"ஏனடா அவசரம் ஏற்படவில்லை. உன் மாமா கொதிக்கிற கொதிப்பு உனக்கென்னடா தெரியும்? என்னுல் வெளியிலே தலையைக்காட்ட முடியவில்லை."



என்ருர் கந்தையா. அவர் உணர்ச்சி தட்டைப்பீங் கானிலே ஊற்றப்பட்ட சுடுகூழைப்போல ஆறிக் கொண்டு வந்தது.

"நமக்கென்னப்பா அவமானம் வந்துவிட்டது? அவர் தராவிட்டால் நடராஜனை வைத்துக்கொள் ளட்டுமே. அதனுல் நமக்கு என்ன குறைந்துவிடப் போகிறது? நாம் என்ன அவர் வீட்டிலேயா மண்டி யிடப்போகிருேம்? இத்தனை ஆடுமேய்கிற இடத்திலா ஒருகுட்டி மேய இடமிராது? அதற்காகக் கனகத் தைப் பாழுங் கிணற்றிலா தள்ளவேண்டும்?" என்ருன் செல்லன். அப்பாவின் மனமாற்றத்தை விளங்கிக் கொண்டு இளகின இரும்பிலே மேலும் மேலும் அடிக்கும் கொல்லனைப்போலப் பாட்டிமார் பாணியிற் பேசிய பேச்சுக்கள், தந்தையாரின் நெட்டிருப்புப் பாறையாகிய மனத்துள்ளே பசுமரத்து வேர்கள் போலத் துளைத்துச் சென்றன. கோட்டிலே வாய்ச் சாலமான நியாயதுரந்தரரை ஏற்படுத்திவிட்டு அவர் வாதத்திலே தன்னை மறந்து நிற்கும் வழக்காளியைப் போலக் கனகம் அண்ணனின் பேச்சுக்களைக் கேட் டுக்கொண்டு நின்ருள்.

மகனின் வாதத்திற்கு எதிர்நிற்க மாட்டாத கந்தையா "ஆனுல் என்ன தான் இருந்தாலும் இனி நான் அவனிடம் மாப்பிள்ளை கேட்கப் போகமாட்டேன். அதைமட்டும் இருவரும் மனதில் வைத்துக்கொள் ளுங்கள்" என்று ஆற்ருமையாற் கதறினுர்.

"நீங்கள் போகவேண்டாம் அப்பா. ஆனுல் அதற்காக அந்த உதவாக்கரைச் சுந்தரத்திற்கும்

நமக்கும் உறவு வேண்டாம். அதைத்தான் நானும் சொல்கிறேன்" என்ருன் செல்லன்.

"அப்போது, ஒருவரும் சாப்பிடுகிறதில்லையா?" என்று கேட்டுக்கொண்டே கனகத்தின் தாயார் அங்கு வந்தாள்.

"எனக்கு பசிக்கவில்லையம்மா" என்ருள் கனகம்.

"நீ போய்ச் சோற்றைப் போடு" என்ருர் கந்தையா. அவருக்குப் பசி வயிற்றைக் கிள்ளிக்கொண்டு தானிருந்தது.

'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பது பாட்டு. ஆனுற் கந்தையாவிற்குப் பத்தும் பறந்தது பசியினுல் அல்ல. ஆனுல் பசியடங்கிச் சுயமான போது பறந்துவிட்ட எல்லாமே அவருக்குத் திரும்பி வந்ததோ என்னவோ!

கனகமும், செல்லனும் அவரை நன்ருகக் கனிய வைத்துத் தங்கள் வழிக்கு கொண்டுவந்து விட்டார்கள். அந்த வழி கல்லும் முள்ளுமற்ற இராஜ பாட்டையாகத்தான் இருந்தது. ஆனுலும் அந்தப் பாதை எங்கே முடியப்போகிறது? தார் ரோட்டு வழ வழவென்று அழகாக இருந்தாலும் அதன் இரு கரையும் என்றைக்குமே சந்திக்காது அப்படியேதான் போய்க்கொண்டிருக்கும். அந்த ரோட்டின் ஒரு கரையில் கனகமும் மறுகரையில் நடராஜனும் நின்ருல்...? ஆனுல் நடராஜன்தான் கண்ணுக்குத் தெரியாமல் முன்னே வெகுதூரம் போய்விட்டானே? 'நாம் நிற்கும் கரைப்பக்கமாகவே நடந்துபோவமே' என்று கனகமும் நடராஜனும் தீர்மானித்தனர்.

---

# 20

## ஆவேசம்

நடராஜன் மூதூருக்குப் போவதெனப் புறப் பட்டவனல்லவா? தன் விடுதியிலிருந்து புறப்பட்ட வன், மருதானை 'எல்பின்ஸ்ரன் தியேட்டர்'ச் சந்தி யிலே ட்ராமுக்காகக் காத்துக்கொண்டு நின்ருன்.

தியாகுவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கிளித் தட்டு மறிக்கையில் எதிர்க்கட்சிக்காரனைக் கோட் டைத் தாண்டவிடாது மறிப்பவன், தன் எதிரி நடந்தால் தானும் நடப்பான்; அவன் தரித்தால் இவனும் நிற்பானல்லவா? அப்படிக் கிளித்தட்டு விளையாடுபவனைப்போலத் தியாகுவும், நடராஜன் நடந்தபோது நடந்து, அவன் தரித்தபோது தரித்து நின்ருன்.

நடராஜனை மூதூருக்குப் போக விடக்கூடாது என்று கொழும்பு ட்ராம்வண்டி நினைத்திருக்க வேண்டும்! அரைமணித்தியாலமாகியும் வண்டி ஒன் றுமே வரவில்லை. ட்ராம் வண்டிக்காகக் காத்துக் கொண்டுநின்ற நடராஜன் மனத்திலே மறுபடியும் பள்ளத்துட் தேங்கிய மழைத்தண்ணீருக்குள்ளே குறுக்கும் மறுக்கும் ஓடித்திரியும் வாற்பேத்தைகள் போலப் பல வினுக்கள் ஓடிக்கொண்டிருந்தன. 'மூதா ருக்குப்போய் என்ன செய்வது? யாரைச் சந்திப்பது? அப்பாவுக்கு என்ன சொல்வது? உலைவாயால் மூட முடியாத ஊர் வாய்க்குத்தான் என்ன சொல்வது?'

மழைக் காளான்போன்று திடுதிப்பென்று எழுந்த கேள்விகளுக்கு விடைகள்தாம் அவனுக்குத் தெரியவில்லை. ஆராய்வுணர்வோடு குழந்தை கேட்கும் ஆயிரம் கேள்விகளுக்கு விடை தெரியாத தாய், குழந்தையைக் கோபிப்பது போன்று அவனுக்குள் எழுந்த அத்தனை கேள்விகளுக்கும் அவனுக்கு விடை தெரியாதபோது அத்தனை கேள்விகளையும் கேட்க இருக்கும் தன் ஊரையே வெறுத்தான். கோப்பிக்கொட்டை வறுத்த சட்டியிலே மிஞ்சியிருக்கும் சூட்டைப்போல, நினைவுகள் உருண்ட அவன் மனதிலே வெறுப்புத்தான் மிஞ்சியிருந்தது!

நடராஜன் தன் கையிலிருந்த மணிக்கூட்டைப் பார்த்தான். எட்டு மணிக்கு மேலாகி விட்டது. நடராஜன் வந்த திக்கிற் திரும்பிக்கொண்டே "வா போவோம்" என்றான்.

"எங்கே?" என்றான் தியாகு. இதுவரையும் வாய்விட்டுச் சிரித்துப்பழகிய தியாகுவுக்கு, வந்த சிரிப்பை அடக்கிக் குறுநகையாக முகத்திற் படரவிட்டபோது அவனுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

"விடுதிக்குத்தான் போவோம்" என்றான் நடராஜன்.

"ஏன் ஊருக்குப் போகவில்லையா?" என்றான் தியாகு. அவனால் இன்னமும் சிரிப்பையடக்கிக் கொள்ள முடியாமற் போகவே வாய்விட்டே சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கோபத்தோடு கேட்டான்.



"இல்லை. நீ ஊருக்குப் புறப்பட்ட கெதியும் திரும்பிய வேகமும்... நினைத்தால் யாருக்குத்தான் சிரிப்பு வராது?" என்றான் தியாகு.

"ஊரா? சை! அந்த ஊரில் இனிமேல் அடியெடுத்துவைக்கிறதே இல்லை" என்ற நடராஜன் மேலே வேகமாக நடந்தான்.

நடராஜன் என்ன? கல்வியிற் பெரிய கம்பன் கூடத் தன்னை நன்கு மதிக்காத கொங்கு நாட்டை 'நீரெலாஞ் சேற்றின் நாற்றம் நிலமெலாம் கல்லும் முள்ளும்' என்று இகழ்ந்துரைத்து, 'அந்நாட்டைக் கனவிலும் நினைக்கொணாது' என்று வெறுத்து ஒதுக்கிவிடவில்லையா? தன் மாமனாரோ தன்னைச் சரியாக மதிக்கவில்லை என்று நடராஜன் எண்ணியபோது அந்த ஊரே அவனை இனி மதியாது என நடராஜன் எண்ணினான். இந்த எண்ணம் அவனைப் பிறந்த நாட்டையே வெறுக்கச் செய்துவிட்டால், அதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

நேரே விடுதியை அடைந்ததும், நடராஜனிடம் தியாகு கேட்டான் "இனி என்னதான் செய்யப் போகிறாய்?" என்று.

"முதலில் எனக்கு ஒருவேலை தேடவேண்டும்?" என்றான் நடராஜன்.

"வேலையா? மூன்று மாதத்திற் பரீட்சை முடிந்துவிட்டால் வேலை தானாகவே வந்துவிடுமே. அதற்குள் என்ன தேடுவது?" என்றான் தியாகு.

"அதுவரையும் பொறுத்திருக்க முடியாது?" என்றான் நடராஜன்.

"எதற்காக!"

"எதற்காகவா? அப்பாவின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு கனகத்தைக் கலியாணம்செய்துகொள்ளலாம் என்பது இனிமேற் கனவுகூடக் காண முடியாத விஷயம்" என்றான் நடராஜன். அவன் வார்த்தைகளை முடிக்க முன்னமே தியாகு இடைமறித்துச் சொன்னான் "அவர் சம்மதத்தைப் பெற முடியாமலே இருக்கலாம். அப்படியிருந்தாலும் படிப்பை முடித்துக்கொண்டு அவர் இஷ்டத்தை மீறிக் கனகத்தைக் கலியாணம் முடித்துக் கொள்வதுதானே. அதற்கு இப்போது என்ன அவசரம்."

"அவசரந்தான். இந்தச் சூட்டோடு சூட்டாகக் கல்யாணத்தை முடித்து, நாங்களிருவரும் இந்தப் பரந்த உலகின் எங்காவது ஒரு மூலையில் இன்பமாக வாழ்வதன் மூலம் இந்த நாசகாரக் கும்பல்களுக்குச் சரியான பாடம்படிப்பிக்க வேண்டும்" என்றான் நடராஜன்.

தியாகு சிரித்துக்கொண்டே சொன்னான் "என்னப்பா பெரிய 'ஹீரோ' மாதிரி உணர்ச்சிகரமாக வெளுத்து வாங்குகிறாயே; யாரப்பா அந்த நாசகாரக் கும்பல்?"

"எல்லோருந்தான். உலகமே நாசகாரக் கும்பல் வாழுமிடந்தான். ஏது! என் தந்தையார், மாமா எல்லோருமேதான். இளம் உள்ளங்களின் உணர்ச்சிகளைத் தங்கள் அரசியற் சூதிற் பகடைக் காயாக உருட்டி விளையாடும் எல்லோருமே நாசகாரக் கும்பல்தான்" என்றான் நடராஜன். உணர்ச்சி மிகுதியில் அவன் உடல் முறுக்கேறி நிமிர்கையில், இரத்தம்



போலாகிவிட்ட முகத்தின் மேலே முன்னெற்றியில் விழுந்தகேசங்கள் அலங்கோலமாகப் புரள்கையில் அவனைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது.

"நாசகாரக் கும்பல்களுக்குப் பாடம் படிப்பிக்க வேண்டுமானாற் படிப்பி. ஆனால் அதற்கும் படிப்பை இடையிலே குழப்பிக் கொள்வதற்கும் என்னப்பா சம்பந்தம்?"

"படிப்பாவது மண்ணாங்கட்டியாவது? சுவாமி விவேகானந்தர் சொன்னதுபோல மனிதனைக் கோழையாக ஆக்கிக்கொண்டிருக்கும் இந்தப் படிப்பு ஏது? இந்தப் புத்தகங்களையும் பட்டதாரிகளையும் மூழ்கடிக்கக் கூடிய நீர் இந்துசமுத்திரத்திலே இல்லாமலா போய்விட்டது? எனக்கு இந்தப் படிப்பேவேண்டாம். சுதந்திரமாக இருக்கவேண்டும்?" என்றான் நடராஜன்.

தியாகு அமைதியாகச் சொன்னான்: "நடராஜா உனக்கு என்னமோ புத்திபேதலித்துத்தான் விட்டது 'கனகத்தோடு உலகத்தின் ஏதாவது மூலையில் இன்பமாக வாழப்போகிறேன்' என்கிறாய் இதற்கு உன் தகப்பனார் சம்மதம் பெற்றுக்கொள்ளவும் உன்னால் முடியாது? உன் மாமனார் விருப்பத்தையாவது பெற முடியுமா? நன்றாக யோசித்துப்பார்."

"அவருடைய சம்மதத்தை யார்கேட்டார்கள்? எனக்கும் கனகத்துக்குந்தான் இனி எந்தத் தொடர்பும். அதனாற்தான் சொல்கிறேன். நான் அவளைக் கூட்டிக்கொண்டுவந்து தனியாக வாழவேண்டும்

அதற்குத்தான் முதலில் நான் ஒரு வேலை தேட வேண்டும்."

"உன் இஷ்டத்திற்குக் கனகம் சம்மதிக்கா விட்டால்......?"

"ஏன் சம்மதிக்கமாட்டாள்?"

"அட, சம்மதிக்கமாட்டாள் என்று வைத்துக் கொள்வோம்; அப்போது என்ன செய்வாய்?"

இருளின் அமைதியிலே கிறீச்சென்று சப்தமிட்டுக் கொண்டிருக்கும் சுவர்க்கோழியின் இரைச்சல் திடீரென்று நின்றுவிட்டதைப்போல, ஆவேசமாகப் பேசிக் கொண்டுவந்த நடராஜன் அப்படியே வாயடைத்துப் போய் நின்றுவிட்டான். தியாகு மேலே தொடர்ந்தான். "எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்: பெண்கள் அதுவும் தமிழ்நாட்டுக் கிராமத்துப் பெண்கள் வீட்டை விட்டுத் திடீரென்று கிளம்ப அவ்வளவு இலகுவாக இணங்கிவிட மாட்டார்கள். காலங்காலமாகக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாலும் பிறந்த வீட்டை விட்டுப் புறப்பட அவர்களுக்கு அதிகமாக மனமிராது. கல்யாணவிஷயத்தில் ஆண்களுக்கு இருக்கும் ஆத்திரமும் அறிவீனமும் அவர்களுக்கு இல்லை. எதற்கும் நான் சொல்வதைக் கேள். முதலில் அவள் தனிமையாக உன்னோடு வருவாளா? என்பதை அறிந்துகொண்டு மற்றவைகளை யோசி. வேலை வேண்டும் என்றால் மிகவும் இலேசாக அதைச் செய்துதர என்னால் முடியும்"



"முதலில் உன் கடமையைச் செய். அவள் வருகிறாளா இல்லையா என்பதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றான் நடராஜன். ஆனாலும் தியாகு சொல்லியதுபோல 'அவள் இணங்காவிட்டால்......' என்றெண்ணியபோது அவன் தலை சுற்றியது.

'வராவிட்டாற் பிறகு...' நடராஜன் உறுமினான். மனத்துட் கறுவிக்கொண்டான்.

---

## 21

## ஆடுகொடி

கனகம் கல்முனைக்கு வந்துவிட்டாள். அவள் படித்துக்கொண்டிருக்கையில் வகுப்பிலே என்றைக்குமே முதன் மாணவியாகத்தான் இருந்தாள். கிராமத்துப் பாடசாலையிற் படிக்கையில் தனக்கு இரண்டு வருடங்கள் மூத்தவளான செல்லலை ஆறும் வகுப்பிற் பிடித்துவிட்டாள். அடுத்த வருடம் அவள் ஆங்கிலப் படிப்பிற்காகக் கல்முனைக்கு அனுப்பப்பட்டாள். அங்கே அவள் 'கிறுகிறு' என்று படித்து ஐந்து வருடங்களுக்குள்ளாக ஆங்கிலத்திலும் எஸ். எஸ். சி. சித்தியடைந்து விட்டாள்.

வகுப்பில் அவள் காட்டிய திறமையும், இயல்பாகவே அவளுக்கேற்பட்டிருந்த அடக்கமும் அந்தக் கன்னியர்மடத் தலைவியைக் கவர்ந்தன. சர்வத்தையுமே துறந்து, எங்கோ ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு நாட்டிலிருந்து வந்த அவளுக்குக் கனகத்தின்மேல் ஒரு அன்பு, பாசம் ஏற்படலாயிற்று. இந்தப் பாசம் கனகத்தையும் தன்னைப்போல ஒரு உத்தமத் துறவியாக ஆக்கிவிட்டாலோ என்று அந்தக் கன்னியின் மனத்திலே ஓர் ஆசையை உண்டாக்கியது.

இதனாற்றான் கனகம் பரீட்சையிற் சித்தியடைந்ததும் அந்தப் பாடசாலையிலேயே ஓர் ஆசிரியையாக இருக்கும்படி அவள் கனகத்தை வேண்டினாள். கன



கத்துக்கு ஓரளவு அது விருப்பமாக இருப்பினும் கந்தையா தன் மகள் ஓர் ஆசிரியையாக இருக்க வேண்டும் என்பதை விரும்பவில்லை. அதற்குமேலே படிப்பதையும் அவர் விரும்பவில்லை கனகத்தை வீட்டோடு வைத்துக்கொண்டு 'அப்போதிக்கரி' யாக உருவாகிக் கொண்டிருக்கும் நடராஜனுக்காகக் காத்துக்கொண்டிருந்தார். ஆனால் அதற்குள்தான் எத்தனை காரியங்கள் நடந்துவிட்டன!

இப்படியிருக்கும்போதும் கனகத்துக்கு அந்த மடத்துத் தலைவி கடிதம் எழுதிக்கொண்டே இருந்தாள். சென்ற வாரங்கூட அவளிடமிருந்து கடிதம் வந்தது! ஆனாற் கனகம் அந்தக் கடிதத்தையிட்டு எந்தச் சிரத்தையும் எடுக்கவில்லை.

ஆனால் மனிதன் என்றைக்கும் தன் தாயை நினைத்துக்கொண்டிருக்கிறானா? கடவுளைத்தான் நினைத்துக்கொண்டிருக்கிறானா? ஆனால் ஆபத்து வந்ததும் தன்னையறியாமலே 'அம்மா' என்று அலறுகிறான். 'கடவுளே' என்று கதறுகிறான். ஆம்; 'படைக்கப்பட்ட சிருட்டிகளில் மனிதன் ஒப்புயர்வற்றவன்' என்பது வேதாந்திகளும் விற்பன்னர்களும் ஒருமித்துச் சொல்லும் வாக்கியம். ஆனால் மனிதன் மரத்தைவிட மட்டமானவன் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஏனென்றால் மரத்திற்குக் கூடச் சுயமாகத் தனித்து நிற்கும் திராணி இருக்கிறது. ஆனால் இந்த மனிதனால் தனித்து நிமிர்ந்து நிற்க எந்தக்காலத்திற்தான் முடிந்தது? ஏதாவதொன்றைச் சார்ந்துதான் அவன் நிற்கமுடிகிறது. விதி, கொள்கை, இலட்சியம், நண்பன் என்பன

வென்று எத்தனையோ, மனிதன் தான் சார்ந்து கொண்டிருப்பதற்காகச் சிருட்டித்துக் கொண்ட தூண்கள்தாம்.

கனகத்துக்கும் துக்கம் மேலிட்டபொழுது அவள் அந்தத் துறவியின் கடிதத்தை நினைத்தாள். இந்தத் துன்பத்திலிருந்து மனம் விரும்பாத ஒருவனோடு தன் வாழ்வு முழுவதுமே இணைத்து வைக்கப்பட்டுவிடுமோ என்ற கலவரத்தில் முதலில் அங்கேயிருந்து தப்பிவிடவே எண்ணினாள்.

செல்லனும் பக்கபலமாக இருக்கவே, தன் தந்தையின் நெகிழ்ந்த மனத்தை மேலும் இளகப் பண்ணி இங்கே வந்து விட்டாள். இப்போது ‘ஆசிரமத்தொழில்’ என்று தான் சிருட்டித்த ஒரு புனிதமான இலட்சியத் தூணிலே சார்ந்து நிற்க முயன்றாள்.

கல்முனைவரையும் அவளைக் கொண்டுவந்த செல்லன் அவளைத் தைரியமாக இருக்கும்படி தேறுதல் சொல்லிவிட்டு மட்டக்களப்பிற்குத் தன் பாடசாலைக்குப் போய்விட்டான்.

கனகம் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பாடசாலைச் சூழலிற் பழகியவள். கலகலப்பாக இருக்கும் மாணவர்கள் மத்தியில் தன் கவலையை மறக்க முயன்றாள் கனகம். ஆனாற் தாமரையிலைத் தண்ணீர்போல அவளால் அந்தச் சூழலில் ஒட்ட முடியவில்லை.

எந்த நினைவுகளை அவள் மறந்துவிட எண்ணினாளோ, அதே எண்ணங்களும் நினைவுகளும், இறைத்த



கிணற்றிலே குபீர் குபீரென்று கிளம்பும் ஊற்றுக்களைப்போல அவள் உள்ளத்திற் கிளம்பிக் கொண்டிருந்தன. அந்நினைவுகளை அவளாற் தடுக்க முடியவில்லை; மறைக்க முடியவில்லை. முடிபாக நூற்றுக் கணக்கான மாணவிகளும், பல ஆசிரியைகளும் இருக்கும் அந்தச் சூழலிலே அவள் தனிமையாகவே ஆகிவிட்டாள். ரிஷிகளும் முனிபுங்கவர்களும் தனிமையை விரும்பிக் காட்டிற்குச் சென்றார்கள். என்பும், தசையும், உள்ளமும் உணர்ச்சியும் சேர்ந்த மாந்தர் நடுவில், விசுவாமித்திரர் திரிசங்கு சுவர்க்கத்தைச் சிருட்டித்தது போல அவர்களாற் தனிமையைச் சிருட்டித்துக்கொள்ள எந்தக் காலத்துமே முடியவில்லை. ஆனால் கனகத்துக்குத் தனக்குத்தானே ஒரு தனிமையைச் சிருட்டித்துக் கொள்ளமுடிந்தது. எப்படி? ஆதலினாற் ‘காதல் செய்வீர் உலகத்தீரே’ என்று பாடிய கவிஞனும், காதல் தனிமையைச் சிருட்டிக்கும் என்று ஏன் எழுதவில்லை?

கல்முனை அழகான சிறிய பட்டினந்தான்; மன எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பாட்டாகவே சொல்லிவிடும் மட்டக்களப்புத் தென்பகுதிக் கவியுள்ளம் படைத்த மக்களின் முக்கிய பட்டினமல்லவா? அது அழகாயில்லாமல் வேறு எப்படியிருக்கும்?

கனகத்துக்கும் இப்போதுதான் மாணவியாயிருந்த காலத்தைப் பார்க்கிலும் அதிக சுதந்திரம் இருந்தது. ஆனாற் தேசிய சுதந்திரம் கிடைத்தும் பொருளாதார சுதந்திரம் பெறாத புதுநாட்டைப் போல அவளால் அந்தச் சுதந்திரத்தைப் போற்றிப் பேண முடியவில்லை. தன்னைத்தானே அடிமையாக்

கிக்கொண்டு தன் அறையிலேயே அடைந்து கிடந்தாள். மாணவியாக இருக்கையில் அடைக்கலாங் குருவியைப்போல இலேசாக அடைப்புக்களைப் பிய்த்துக்கொண்டு பறக்கவேண்டும் என்று விரும்பிய அவள்மனம், இன்று பாறையாகக் கனத்துத் தன்னைத் தானே அமுக்கிக்கொண்டு அடைந்து கிடக்க எண்ணிற்று.

அறைக்குள் அடைந்து கிடந்துகொண்டே நடராஜனைப்பற்றி எண்ணுவாள். அவள் சிந்தனை கழுதையைப்போலப் பின்னங்காலாற்றான் உதைக்கும். இறந்துபோன, இறந்துகொண்டிருக்கும் காலங்களின் மேற் படரும் அவள் பிரதியுற்பத்திக் கற்பனை அவளுக்குக் கலக்கத்தைத்தான் கொடுத்தது. அவள் இளவயதின் இனிமையான எண்ணங்களிற் பிரிவு என்ற ஏக்கம் இருளாய்ப் படிந்தது. அந்த இருளில் அவள் உள்ளத்தின் உள்ளொளி மடியவே அந்த அந்தகாரம் சூழ உள்ளம் உலகத்தையே இருளச் செய்தது.

இருளில் ஓடிப் படர்ந்த அவள் எண்ணக் கொடிகள். 'நடராஜன் போயே விட்டான்' என்ற இடத்தில் மேலே படர முடியாமல் அந்தரத்தில் நின்றுவிடும். வெளிச்சத்தை நோக்கித்தான் கொடி படரமுடியும். மனித எண்ணங்களும் இன்பத்தை நோக்கித்தான் படரமுடியும். ஆனால் எல்லோருமே இருண்டு கிடந்தபோது... மட்டக்களப்பு எழுத்தறியாக் கவிஞன் அவள் எண்ணங்களை எவ்வளவு அழகாகப் பாடி வைத்துவிட்டான்! அன்று இருட்டிக் கொண்டிருக்கையில் அடுத்த அறையில் இருந்த ரேடி



யோவில் கிராம நிகழ்ச்சியின்போது அந்தப் பாட்டுத்தான் ஒலி பரப்பப்பட்டது. கனகம் அந்தப் பாட்டை உற்றுக் கேட்டாள்.

**"ஆடு கொடியானேன்**
**அந்தரத்திற் காயானேன்**
**வாடும் பயிரானேன் – மச்சான்**
**வண்ணமுகம் காணாமல்"**

கனகத்திற்கு அந்தப் பாட்டைக் கேட்க எரிச்சலாக இருந்தது. அந்தப் பாட்டை இரசித்துக் கேட்டுக்கொண்டிருக்கும் ஆசிரியை கமலாவை வாய் ஓயாமற் திட்டவேண்டும் என்றிருந்தது. தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு நடராஜனை எண்ணிப்பார்த்தாள். அவனுக்குக் கடிதம் எழுதுவோமா என்று யோசித்தாள். உடனே கடதாசியை எடுத்து வைத்துக்கொண்டு எழுதத் தொடங்கினாள். கடதாசியிற் கண்ணீர்த் துளிகள் விழுந்து நனைத்தன.

ஒரு வரியைத் தொடங்கிய கனகம், அதற்குமேல் எதையுமே எழுதத் தோன்றாதவளாக அப்படியே இருந்தாள். 'நான் அவருக்கு என்ன செய்தேன்? போனவர் எனக்கு ஒரு கடிதம் ஏன் எழுதக்கூடாது. நான்மட்டும் ஏன் எழுதவேண்டும்?' என்ற வெறுப்புணர்ச்சி அவள் உள்ளத்தில் ஓடிப் படர்கையில் அவள் அந்தக் கடதாசியை எடுத்துக் கிழித்து எறிந்து விட்டுப் படுக்கையிற் பொத்தென்று சாய்ந்தாள்.

அப்போது அடுத்த அறைக்குள் இருந்த கமலா கேட்டாள்: "கனகம் கடற்கரைக்குப் போவோம் வருகிறாயா.?" கனகம் எதையுமே எண்ணாமல் "போவோம்" என்றாள்.

கனகமும் கமலாவும் வெளியே போகையில் விளக்குகள் ஏற்றப்பட்டு விட்டன. நெடுந்தூரம் நீண்டுகிடந்த வீதியின் வழியாக இருவரும் கடற் கரையை அடைந்தபோது எதிரே வங்காளக் கடலிற் கனகத்தின் நெஞ்சின் அலைகளைப்போல அலையாடிக் கொண்டிருந்தது. வெண் மணல் பரந்து கிடக்கும் அந்த அழகான கடற்கரையிலே தனிமையில் மணலில் இருந்து கொண்ட இருவரும் எதையெதையோ பேசிக்கொண்டனர். இடையிற் கமலாகேட்டாள்:

"முன்பெல்லாம் உன்னைத் தேடிவருவாரே நடராஜன். அவர் இப்போது என்ன செய்கிறார்?"

கல் விழுந்த குட்டையாய்க் கலங்கிய கனகம் கடலைப் பார்த்தபடியே சொன்னாள்: "இப்போது அப்போதிக்கரிக்குப் படிக்கிறார்."

"எப்போது வெளிவருவார்?"

"மார்கழி மாதம் வருவார்" என்றாள் கனகம்.

"அவர் வந்ததும் நீ போய்விடுவாய்?" என்று கொண்டே சிரித்தாள் கமலா.

கனகத்திற்கு வேதனையாக இருந்தது. "கமலா எனக்குத் தலையிடிக்கிறது; வா போவோம்" என்றே எழுந்தாள்.

விடுதிக்கு வந்ததும் கனகம் நடராஜனுக்குக் கடிதம் எழுதினாள்.

---

# 22

## வடவாக்கினி

கடுங் கானகத்திடையே நெல்லி இலையுதிர்ந்து ஏன் நிற்கிறது? என்று கேட்ட கம்பன் 'வெல்லா வழக்கை விலைகூறி வீழ்ந்திட்ட வல்லாளன் சுற்றம் போல் மாண்டு' என்று தானே விடையுமிறுத்துக் கொண்டான். தேர்தலில் தோற்றுப்போய்க் கம்பனின் நெல்லி மரத்தைப்போல நின்ற அம்பலவாணர் தன் ஆத்திரத்தை எல்லாம் தன் மைத்துனன் மேற்றான் காட்டத் தொடங்கினர்.

ஆனாலும் கந்தையா என்ன கத்தரித்தோட்டத்து வெருளியா? வேண்டிய இடத்தில் நட்டு தலையிற் கரும்புள்ளி செம்புள்ளி குத்திவிட, அம்பலவாணரால் முடியுமா? கந்தையாவைப் பழிவாங்க ஒரே ஒருவழி தன் மகனை அவர் மகளுக்குக் கொடாதிருப்பதுதான். இந்த எண்ணத்திற்தான் அம்பலவாணர் மகனுக்கு ஏற்கனவே ஒரு கடிதம் எழுதினர். அதற்கு மகன் எழுதிய பதில் அவர் மனதுக்கு ஒரு சாந்தியைக் கொடுத்தது.

ஆனல் திடுதிப்பென்று கனகம் ஊரைவிட்டுப் போனதையறிந்தபோது அவர் மனம் 'ஒருவேளை கனகம் கொழும்புக்குத்தான் போகிறாளா?' என்று எண்ணிற்று.

தனக்குள்ளே. என்னதான் வைராக்கியமிருந்தாலும் அம்பலவாணர் தன் மகன் மனப்போக்கை விளங்காதவரல்ல. நடராஜனுக்கும் கனகத்துக்கும் எத்தனை நெருங்கிய உறவு இருக்கிறது என்பதை அவர் நன்றாக அறிவார். இலகுவாக நடராஜனின் மனத்தைத் திருப்ப முடியாதென்பதும் அவருக்குத் தெரியும். இந்த நிலையிற் கந்தையாவே தன் மகனை வீட்டை விட்டுப் போகச்சொன்னது அவருக்கு ஓரளவிற்குத் திருப்தியாகத்தான் இருந்தது. ஆனால் இந்த நிலையிற் கனகமும் நடராஜனும் திரும்பச் சந்தித்தால்......

முன்பின் அறிந்திராத ஒரு மேனகைக்கு, மகாரிஷி விசுவாமித்திரர் மனத்தைப் பறிகொடுக்கவில்லையா? கனகம் மறுபடியும் நடராஜனைச் சந்தித்தால் அவன்மனம் மீண்டும் அவளை நாடும் என்று திட்டமாக நம்பினார் அம்பலவாணர். இப்படி நம்பியதினால் கனகம் எங்கே போயிருக்கிறாள் என்பதைத் திட்டமாக அறிய விரும்பினார் அம்பலவாணர்.

ஆனால் அவர் மனைவியோ இதற்குள் கனகம் எங்கே போய்விட்டாள் என்பதைத் திட்டமாக அறிந்தே வைத்திருந்தாள். இத்தனை காலமாக அவள் வெளியூருக்குப் போவதாக இருந்தாய், தன்னிடம் சொல்லிவிட்டுத்தான் போவாள். ஆனால் இப்போது கனகம் சொல்லாமலே—சொல்ல முடியாமலே—போய்விட்டாளே என்பதற்காக அவள் மனம் வேதனையுற்றது. இந்த வேதனையிற் பொன்னம்மா தன் மருமகள் எங்கே போய்விட்டாள் என்பதை அவசர அவசரமாக விசாரித்து அறிந்து வைத்திருந்தாள்.



ஒருநாள் அம்பலவாணர் அகாரணமாகத் தன் மைத்துனனை அவர் குடும்பத்தினர் எல்லாரையுமே நிந்தித்தபோது பொன்னம்மா அழுதுகொண்டே சொன்னாள்: "கனகம்தான் உங்க கண்முன்னால் இருக்கப்படாது என்று போய்விட்டாளே. இன்னமும் ஏன் அவளைக் கரிந்து கொட்டுகிறீர்கள்?"

அம்பலவாணரும் விட்டுக் கொடுக்காமற் சொன்னார்: "ஆடிப் பறந்து மாப்பிள்ளை பிடிக்கக் கொழும்புக்கே போய்விட்டாளாக்கும்?"

பொன்னம்மாவும் சிறிது கோபமாகவே சொன்னாள்: "அவள் கல்முனைக்குத்தான் போயிருக்கிறாள்; உங்க மகனிட்ட பிச்சைக்குப் போகவில்லை." இதைச் சொன்னதும் பொன்னம்மா தன் கணவனின் முன்னால் நிற்கமனமில்லாமல் அப்பாற் போய்விட்டாள்.

அம்பலவாணரின் மூளை தீவிரமாக வேலைசெய்தது. கல்முனையில் இருந்துகொண்டு கனகம் தன் மகனுக்குக் கடிதம் எழுதுவாள். தன் மகனும் எழுதுவான் ஏன்? தனக்குத் தெரியாமற் கல்முனைக்குப் போய் அவளைச் சந்தித்தாலும் சந்திப்பான். மார்கழிமாதம் பரீட்சை முடிந்ததும் தனக்குத் தெரியாமல் அவளை 'விவாகப் பதிவு' பண்ணினாலும் பண்ணிவிடுவான்.

இதை எண்ணிய அம்பலவாணரின் உடல் முழுவதுமே கொதித்தது. உதடுகள் துடித்தன. அவர் உணர்ச்சிகள் அடங்கியபோதுதான் 'கொழும்புக்குச் சென்று நடராஜனைக்கண்டு பேச வேண்டும்' என்று எண்ணினார்.

ஆனல் அவரால் போகக்கூடியதாக இருக்கவில்லை. முன்மாரி வயலுக்கு உழவு தொடங்க வேண்டியிருந்தது. எவரையுமே நம்பாமல் எல்லா வேலைகளையும் தானே கண்காணித்துச் செய்யும் அம்பலவாணர் அந்த வேலைகளை எல்லாம் விட்டுக் கொழும்புக்குப் போக முடியுமா? ஆகவே அம்பலவாணர் மறுபடியும் தன் மகனுக்குக் கடிதம் எழுதினர்.

நடராஜனின் மன உளைச்சல் சிறிது தணிந்திருந்தது. வழக்கம்போல அவன் தன் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தான். ஆனற் தண்ணென்றிருக்கும் சமுத்திரத்தினடியிலே உள்ள உலகையே சுட்டுப்பொசுக்கவல்ல வடவாக்கினிபோல அவன் மனத்துள்ளும் கனகத்தைப்பற்றிய எண்ணம் இருந்தது. 'எப்படியும் கனகத்தைக் கல்யாணம் செய்துகொள்வது. காரியம் மிஞ்சி வந்தால் தன் படிப்பையே விட்டெறிந்து விட்டு ஓர் உத்தியோகத்தைத் தேடிக்கொண்டு கனகத்தையும் கூட்டிக்கொண்டு வந்து கண் காணுத இடத்தில் வாழ்வது' என்று அவன் தீர்மானித்திருந்தான்.

இந்த நிலையில் கனகத்துக்குக் கடிதம் எழுத வேண்டும் என அவன் விரும்பியதுண்டு. உடனே தன் மாமனுரைப்பற்றிய எண்ணம் அவனுக்கு வரும். 'தன் கடிதம் அவர் வீட்டுக்கா போவது?' என்ற எண்ணம் அவன் மனத்தை உறுத்துகையில், அவன் கனகத்துக்குக் கடிதம் எழுதவேண்டும் என்ற எண்ணத்தையே விட்டுவிட்டான்.



செல்லனுக்காவது எழுதலாம் என்று எண்ணுவான் முதலிற் தான் செல்லனுக்கு எழுதிய கடிதம் அவன் நினைவுக்கு வரும். இனிமேல் எந்த முகத்தைக் கொண்டு அவனுக்குக் கடிதம் எழுதுவது? என்ற கேள்வி அவனுள்ளே விடையிறுக்க முடியாததாகக் குத்திட்டு நிற்கும். 'ஏன் செல்லனுக்கு அப்படி எழுதினேன்' என்று தன்னைத்தானே நொந்துகொள்வான். ஆனல் தன் மன உளைச்சலைச் செல்லனுக்குத் தெரிவிக்கமட்டும் அவன் விரும்பவில்லை. பாம்பின் குட்டி பாம்பல்லவா நடராஜன்!

இந்த நிலையில் இருக்கையிலேதான் தந்தையின் கடிதம் வந்தது. கனகம் கல்முனைக்குப் போய்விட்டாள் என்றும் எக்காரணத்திற்காகவும் நடராஜன் அவளைச் சந்திக்கக்கூடாதென்றும், மார்கழி மாதம் பரீட்சை முடிந்ததும் அவனுக்கு ஊரிலே யாரையாவது கல்யாணம் செய்துவைக்க இருக்கிருர் என்றும் அம்பலவாணர் அதிலே எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தைக் கையில் வைத்தபடியே நடராஜன் யோசிக்கத் தொடங்கினுன்.

புரட்டாசி மாதப் பிற்பகுதியிலே வாடைக்காற்று ஆரம்பமாகும். காலையில் மெதுவாக அசையும் சோழகக் காற்று மதியம் திரும்பியதும் அசைவற்று நிற்க, வடக்கே வானத்திற் படிந்து கிடக்கும் மப்பிலிருந்து திடீரென்று வாடைக்காற்றுச் சீறியடித்து மழையையும் புயலையும் கொண்டுவரும். இந்தக் காற்றில் அமைதியாகக் கிடந்த வங்காளக்குடா, ஆயிரம் ஆயிரம் கருநாகங்களாகப் படம் விரித்துச்

சீறியடிக்கும் அலைகளை எழுப்பிக்கொண்டு ஊரையே அழிக்க முனைந்ததுபோற் குமுறும். அமைதியாகக் கிடந்த நடராஜன் மனதிலும் வடக்கேயிருந்துவந்த அந்தக் கடிதம் ஆயிரமாயிரம் எண்ண அலைகளைக் கிளப்புகையில் அந்த மனத்தின் குமுறுதல் பயங்கர மானதாகவேயிருந்தது.

தந்தையிடமிருந்து இந்தக் கடிதத்தை நடராஜன் எதிர்பார்த்துத்தான் இருந்தான். என்றாலும் அவன் மனது கொந்தளித்ததைத் தடுக்க அவனால் முடிய வில்லை. அந்தக் கொந்தளிப்பின் உச்சநிலையில் அவன் மனக் கடலில் அடங்கிப் போயிருந்த வடவாக்கினி தன் செந்நாக்குகளை நீட்டிற்று.

'அப்பா கனகத்தைத்தான் அடைய விரும்பமாட் டார்; விடமாட்டார் என்பது சர்வ நிச்சயம். அதற் காகக் கனகத்தைத் தான் விட்டுவிடத்தான் வேண் டுமா? அவள் இப்போது கல்முனைக்கு வந்துவிட்டாள். எனவே அவளைத் தனியே என்கூடக் கூட்டிவரலாம். முதலில் உத்தியோகம்......'

நடராஜன் இப்படி எண்ணிக்கொண்டிருக்கையில் தியாகு சிரித்துக்கொண்டே அங்கு வந்தான். நட ராஜனைக் கண்டதும் "என்ன ஒருமாதிரி இருக்கிறாய்; அப்பா கடிதம் எழுதியிருக்கிறாரா?" என்றான்.

நடராஜன் பேசாமலே இருந்தான். "எனக்குத் தெரியுமே" அப்பாதான் கடிதம் எழுதியிருக்கிறார். கனகம் கடிதம் எழுதியிருந்தால் இப்படியா இருப் பாய்?" என்றுவிட்டு மறுபடியும் சிரித்தான்.



நடராஜன் அவனை முறைத்துப் பார்த்தான்.

"ஏனப்பா இப்படிப் பார்க்கிறாய்? கனகத்தின் கடிதத்தை நான் பத்திரமாகத்தான் வைத்திருக் கிறேன்" என்றுவிட்டு மேலும் சிரித்தான்.

"என்ன கேலியா? பண்ணுகிறாய்?" என்று இரைந்தான் நடராஜன்.

"சை கேலியா? உனக்கு முன் வந்து கடிதத் தைப் பார்த்த நான், கனகத்தின் கடிதத்தை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டேன். அதற்கு இவ்வளவு கோபமா? இந்தா கடிதம்" என்றுகொண்டே கடிதத்தைக் கொடுத்தான்.

நடராஜன் அந்தக் கடிதத்தைப் பரபரப்பாகப் பிரித்து வாசிக்கத் தொடங்கினான். அதை வாசித்து முடிந்ததும், தியாகு இன்னொரு கடிதத்தையும் நீட் டினான். நடராஜன் அதையும் வாசித்தான்.

போர்க்களத்தில் இந்திரஜித்து வீழ்ந்தபோது 'கம்ப மதத்துக் களியானை காவற் சனகன் பெற் றெடுத்த, கொம்பும் என்பாற் குறுகிற்றென்று' இராமன் திருப்தியடைந்தானும்.

இரண்டு கடிதங்களையும் வாசித்தபோது அந்த இராமனைப் போலவே நடராஜனும் கனகம் தனக்குக் கிடைத்துவிட்டாள் என்று திருப்தியடைந்தான்.

---

# 23

## கயிற்றரவு

கலை கலைக்காக என்கிறார்கள் ஒருசிலர். வேறு சிலர் கலை பிரசாரத்திற்காக என்கிறார்கள். கலையின் நோக்கம் எதுவாயிருந்தாலும் கலைஞன் தன் சிருட்டியை, தான் எழுதியதை மற்றவர்கள் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும் என்று மறைமுகமாக வேனும் விரும்புகிறான். இந்தக் கலைஞனை விட்டாற், கடிதம் எழுதும் எவனும், தன் கருத்தை வாசிப்பவன் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று முழுக்க முழுக்க எண்ணுகிறான். கடிதம் எழுதுவது ஒரு கலை என்றால் அந்தக் கலை முழுக்கப் பிரசாரத்திற்காகவே என்பதிற் கொஞ்சமும் சந்தேகப்பட வேண்டியதில்லை!

கனகத்தின் கடிதம் ஒரு கலா சிருஷ்டியாகவும் இருக்கலாம். 'இதய சம்பூரணத்திலிருந்துதான் வாய் பேசுகிறது' என்று பைபிள் சொல்கிறது. கனகத்தின் வாய் என்ன? கையும்கூட அவள் மனத்திற் தோன்றிய எண்ணங்களையும் அனுபவிக்கும் வேதனைகளைத்தான் அந்தக் கடிதத்தில் எழுதியது. மேலும் கனகம் தன்மேல் நடராஜன் இரக்கப்பட வேண்டும் என்று எண்ணியதால் 'பிரசார நோக்கில்' தன் வேதனைகளைச் சிறிது மேலதிகமாகவே ஒரு கலைஞனின் கற்பனையோடுதான் எழுதியிருந்தாள்.

அந்தக் கடிதத்தை வாசித்தபோது நடராஜனின் மனம் இளகிற்று. அவன் மனம் அவனுள்ளே கன



கத்துக்காக அழுதது. இந்த இரக்கவுணர்ச்சி இருக்கிறதே அதைமட்டும் தட்டி எழுப்பிவிட்டால் அதைத் தணியச் செய்வது மிக மிகக் கஷ்டமானதுதான். மேலும் மனிதனின் உள்ளத்தை இந்த வுணர்ச்சியைப்போல நவரசங்களில் எதுவுமே தொடுவதில்லை. அந்த வுணர்ச்சி மனித மனத்தைவிட்டுக் கெதியில் மறைவதுமில்லை. இராமனைப் பிரிந்த சீதையின் சோகமும், மைந்தனைப் பறிகொடுத்துக் கதறும் சந்திரமதியின் அழுகையும் யுகாந்த காலம்வரை மனித இதயங்களில் மறையாமல் இருந்து கொண்டுதான் இருக்கும்!

தன்பொருட்டு அசோகவனத்துச் சீதையாக ஆகிவிட்ட கனகத்தை எண்ணியபோது அவன் உள்ளம் அனல்மேல் மெழுகாக உருகியது. நைந்து நொந்த அவன் உள்ளத்தின் உருக்கம் நயனத்தின் வழியே ஓடிற்று. நடராஜன் திடீரென்று கண்களைத் துடைத்துக்கொண்டு மறுமுறையும் அந்தக் கடிதத்தை வாசித்தான். 'நவில்தொறும் நூனயம்' என்று பண்டிதர்கள் சொல்வார்கள். காதற் கடிதங்களும் அப்படித்தான் இருக்குமோ என்னவோ? ஆனாற் கனகத்தின் கடிதம் நடராஜனுக்கு அப்படித்தான் இருந்தது.

நடராஜனின் போக்கை எதிரேயிருந்து கவனித்துக் கொண்டிருந்த தியாகுவுக்குக்கூட அவனில் அனுதாபமாக இருந்தது. சிரிப்பைத்தவிர வேறெதையுமே அறியாத தியாகு மறுமுறையும் கடிதத்தை வாசித்து முடித்த நடராஜனிடம் கேட்டான்: "என்ன எழுதி

யிருக்கிருள்?'' தியாகுவின் குரல்தான் எத்தனை வலியற்றிருந்தது!

நடராஜன் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்ஞன்: "என்னத்தை எழுதுவாள்? முதலில் நான் அந்த வேலைக்கு 'அப்ளிகேசன்' எழுத வேண்டும்."

"வேலை விஷயம் இருக்கட்டும். நீதான் அந்தக் கடிதத்தை வாசித்துப் பார்த்தாயே. என் நண்பன் அவன். இன்றைக்குக்கூட நீ விரும்பினுல், அந்தத் தோட்டத்து 'டிஸ்பென்சரிக்கு' வேலையாகப் போகலாம். ஆனுல் அதற்கு என்ன அவசரம். உன் தந்தையாரைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்க வேண்டாமா?'' என்ருன் தியாகு.

புத்தி சொல்ல முற்பட்டால் தியாகுமட்டும் என்ன, மனிதன் எவனுமே பெரிய அநுபவசாலியைப் போலவும் 'அப்பழுக் கற்றவன்' போலவுந்தான் பேசத் தொடங்குகிருன். தன் தந்தையைப்பற்றி ஒருநாளுமே கவலைப்படாத தியாகுகூட, நடராஜனுக்கு அவன் தந்தையைப்பற்றிப் பிரமாதமாகப் புத்தி சொல்கிருன். ஆம், போதனை செய்ய யாராலேதான் முடியாது?

ஆனுல் அவன் போதனையை ஏற்கும் நிலையில் நடராஜன் இல்லை. மேலும் தந்தையாரைப்பற்றிய பேச்சே அவனுக்கு ஆத்திரத்தைத்தான் கொடுத்தது. அன்று வந்த தந்தையின் கடிதம், அவன் இதயத்துக் காதலுணர்ச்சிகளை வேரோடு பிடுங்கி எறிய முயற்சிக்கும் பிசாசுபோல அவனுக்குத் தோன்றியபோது,



அந்தப் பிசாசைத் தன் முழு இதயத்தோடும் அவன் வெறுத்தான்: பகைத்தான். அந்தவெறுப்போடு அவன் வாய் பேசிற்று "எதைப்பற்றியுமே இனி யோசிக்க இடமில்லை. வேலை கிடைத்ததும் கனகத்தை அழைத்துக்கொண்டு வருவதுதான் எனது முடிவு."

தியாகு சொன்ஞன்: "நீங்கள் எல்லோருமே நெருங்கிய உறவினர்கள். இப்போதில்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் சமாதானமாகத்தான் போவீர்கள், அதுவரைக்கும்......

நடராஜன் அவனை இடைமறித்து ஆத்திரத்தோடு சொன்ஞன்: "சமாதானம், என்னைப்பற்றிய வரையில், என்றைக்குமே என் மாமஞரோடு சமாதானம் என்ற பேச்சேயில்லை. அப்பா சம்மதித்தாற்கூடச் சமாதானமாக எனக்கும் கனகத்திற்கும் கல்யாணம் நடக்காது. ஆனுல் எனக்கும் கனகத்திற்கும் கல்யாணம் நடந்துதான் ஆகவேண்டும். அதற்கு அப்பாவின் சம்மதமும் ஒருநாளும் கிடைக்கப்போவதில்லை."

"இதென்னடா விதண்டாவாதமாக இருக்கிறது? கனகத்தைத்தான் கல்யாணம் செய்வதென்ருல் உன் தந்தையாரைப் பகைத்துக்கொண்டு படிப்பை முடித்துக்கொண்டு செய்கிறதுதானே'' என்ருன் தியாகராஜன்.

"அதன்வரையும் கனகத்தை அவள் தந்தையார் விட்டுவைப்பாரென்று நான் எண்ணவில்லை. இந்தா, இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்" என்று நீட்டினுன் நடராஜன்.

தியாகு அதை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டே "எனக்கென்ன? எப்படியாவது செய். நான் என் நண்பனுக்கு இப்போது கடிதம் எழுதுகிறேன்; அடுத்த மாதம் முதற் திகதியிலிருந்தே நீ வேலைக்குப் போகலாம்" என்முன் தியாகு.

"சரி" என்ற நடராஜன் குனிந்து கிறு கிறு என்று எழுதத் தொடங்கினுன். தியாகு கேட்டான் "என்ன எழுதுகிருய்?" என்று.

"அப்பாவிற்குக் கடிதம் எழுதுகிறேன்" என்முன் நடராஜன்.

"அப்பாவுக்கா?" என்று ஆச்சரியத்தோடே கேட்டான் தியாகு.

"ஆம், அப்பாவுக்குத்தான் எழுதுகிறேன்."

"என்ன எழுதியிருக்கிருய்?" என்று கேட்டான் தியாகு.

"என்ன எழுதுவது? நான் கட்டாயமாகக் கனகத்தைத்தான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்" என்று சொன்னுன் நடராஜன்.

"உனக்கென்ன பைத்தியமா? அதை ஏன் அவருக்கு எழுதுகிருய்? அவர் உன்னைச் சும்மா விடுவாரா?" என்முன் தியாகு.

"சும்மா விடாமல் என்ன செய்யப்போகிருர்? மனத்தில் உள்ளதைச் சொல்வதற்கு ஏன் பயப்பட வேண்டும்? நான் என்ன களவெடுத்தேனு? பொய் சொல்கிறேனு? ஒளிப்பு மறைப்பு ஏன்?" என்முன் நடராஜன்.



"அட, நல்ல புத்திசாலிதான். எல்லாவற்றையுமே தலைகீழாக்கிவிடுவாய்போல இருக்கிறதே. இந்தக் கடிதத்தைக் கண்டால் நாளைக்கே உன் தகப்பனுர் இங்குவந்தாலும் வருவார்" என்முன் தியாகு.

"வரட்டுமே, அதற்காக அவருக்குப் பொய் சொல்ல வேண்டுமா? அல்லது அவரை ஏமாற்ற வேண்டுமா? வந்துவிட்டார் என்ருல் நான் கொண்ட கொள்கைதான் மாறப் போகிறதா?" என்முன் நடராஜன்.

தியாகு சடாரென்று முன்னுற் கிடந்த கடிதத்தை எடுத்துக் கிழித்தெறிந்துகொண்டே "இப்போது ஒன்றுமே எழுதவேண்டாம்; எழுதவேண்டுமென்ருல் ஆறுதலாக நாளைக்கு எழுது. இப்போது வெளியே போய்விட்டு வருவோம் வா" என்றவாறே நடராஜனின் கையைப் பிடித்து இழுத்தான்.

நடராஜனும் எழுந்துகொண்டே தியாகுவின் பின்னுல் நடந்தான். அப்போது மாலை ஆறுமணிக்கு மேலாகியிருந்தது. கண்ணைப் பறிக்கும் மின்சார விளக்குகளின் ஒளிவெள்ளத்தில், தெருவின் இரு கரையிலும் சனக்கூட்டம் ஆற்றுவெள்ளம்போல வளைந்து சுளித்துச் சென்றது. பட்டினம் என்ருல் ஒரே தேர் திருவிழாவா? இத்தனை சனக்கூட்டம் எங்கிருந்து வந்தது? புற்றை வெட்டிச் சரித்தால் எறும்புகள் கலைந்து ஓடுமே, அதேபோலத்தான் சனங்களும் கலைந்து வழிந்து கொண்டிருக்கையில் தியாகு அக்கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு

நடந்தான். அவன் பின்னால் நடராஜன், ஆற்று வெள்ளத்தில் எங்கே போகிறோம் என்ற பிரக்ஞையே யின்றி மிதந்து செல்லும் பழுத்த இலையைப்போல மிதந்து சென்றான். அவன் உள்ளம் இலேசாக இருந்தது; அது பறந்தது.

தேயிலைத் தோட்டத்தில் அவன் 'டாக்குத்தர் ஐயா' ஆகி விட்டான். அவனுக்கு ஒரு சிறியவீடு கிடைத்தது. பனிப்புகார் படர்ந்த மலையுச்சியிலே தனிமையாக இருக்கும் அந்த வீட்டிலே கனகமும் அவனும் வாழ்கிறார்கள். அந்த வாழ்வில் எத்தனை இன்பம்......

அவன் மன எண்ணங்களுக்குப் பின்னணியாகக் கடைத்தெரு ரேடியோக்கள் எல்லாமே பாடுகின்றன:

பாட்டுக் கலந்திடவே — எனக்கொரு
பத்தினிப் பெண் வேண்டும் — எங்கள்
கூட்டுக் களியினிலே – கவிதைகள்
கொண்டு தர வேண்டும்.

இன்ப நினைவுகளில் மிதந்த நடராஜன், தியாகு வின் பின்னால் நடந்து இருவரும் 'கால்பேஸ்' மைதானத்துக்கு வந்துவிட்டனர். அப்போது அவர்கள் பக்கத்தில் புத்தம் புதிய கார் ஒன்று திடீரென்று வந்து நின்றது.

நடராஜன் பயந்துபோய் அந்தக் காருக்குள் உற்று நோக்கினான்.

---

# 24

## கவலை

அஞ்சினவனுக்கு ஆகாயமெல்லாம் பேய் என் பார்கள். தன் பக்கத்திற் கார் வந்து சடுதியாக நின்றபோது நடராஜன் பயந்தே போய்விட்டான். அவன் மனதில் ஓடிய இன்ப நினைவுகளும் அந்தக் கார் நின்றதைப் போலவே 'டக்' கென்று நின்று விட்டன.

காருக்குள்ளிருந்தவர் தியாகராஜாவை விழித்து "ஹலோ ராஜா! உங்களுக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தேனே" என்றார்.

"இன்றுதான் கடிதம் கிடைத்தது; ஆள்கூடக் கிடைத்துவிட்டது. இதோ இவர்தான் மிஸ்டர் நடராஜா. அடுத்த மாதமே உங்கள் தோட்டத்திற்கு வருவார்" என்றான் நடராஜனையும் வந்தவருக்கு அறிமுகம் செய்து வைத்து "இவர்தான் மிஸ்டர் ஜயவர்த்தன ஹற்றனில் இவருக்குப் பெரிய தேயிலைத் தோட்டம் இருக்கிறது. அந்தத் தோட்டத்து ஆஸ்பத்திரிக்குத்தான் தங்களை வேலைக்கு வரும்படி கேட்கிறார்." என்றான்.

நடராஜனுக்குப் பயம் தெளிந்தது; தான் தேடிய உத்தியோகம் தன் காலடியிலேயே சரண்புகுவதை நினைக்கையில் ஆனந்த மிகுதியால் அவன் வாயடைத்துப் போய்விட்டது. மேலும் தான் உத்தி

யோகம் பார்க்கச் செல்லும் 'தோட்டத்துரை' தன்னைப் போலவே ஓர் இளைஞனாக இருந்தது அவனுக்குப் பரமதிருப்தியாக இருந்தது. அந்தநிறைவு உணர்ச்சியில் ஜயவர்த்தனவின் கையைக் குலுக்கிக் கொண்டான்.

ஜயவர்த்தன அவனிடம் தன் தோட்டத்து விலாசத்தைக் கொடுத்து அடுத்தமாதம் முதலாந்திகதி வேலையை ஒப்புக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டு போய்விட்டார்.

வீட்டுக்கு வந்த நடராஜன் படுக்கையிற் புரண்டு கொண்டே மறுபடியும் கனகத்தின் கடிதத்தைப் படித்தான். அந்தக் கடிதம் ஒரு பைபிள்வாக்கியத்தோடு முடிந்திருந்தது 'அழுகிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள் ஆறுதலடைவார்கள். உங்களுக்காக நான் அழுதுகொண்டுதானிருக்கிறேன். எனக்கும் ஆறுதல் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது' என்று கனகம் அந்தக் கடிதத்தை முடித்திருந்தாள். படித்து முடித்த நடராஜன் படுக்கையிலிருந்துகொண்டே கனகத்துக்குக் கடிதம் எழுதினான். ஏதோவெல்லாம் எழுதிவிட்டு 'நீ இனி அழத் தேவையில்லை கெதியில் நான் அங்கு வருவேன். அப்போது உன் அழுகை தீர்ந்துவிடும்' என்று கடிதத்தை முடித்தான், உண்மைதானே! கனகத்துக்கு மட்டுமா ஆறுதல் கிடைத்துவிடும். நடராஜனின் தீர்மானத்தில் அல்லலாடும் அவன் மனதிற்குக்கூட அல்லவா ஆறுதல் கிடைத்துவிட்டது. கடலில் அலைகள் என்றைக்குமே ஓய்வதில்லை. ஆகவே கரையிற் குந்திக்கொண்டு அலை அடங்கட்டும் குளிப்போம் என்றிருப்பதில் ஏதாவது



அர்த்தமிருக்கிறதா? துணிந்து அலைகடலில் இறங்கிக் குளிப்பவன்தான் தன்கருமத்தை முடித்து ஆறுதலடைகிறான். அலைகடல்போலக் குமுறிக்கொண்டிருக்கும் இன்றைய உலகிலும் அப்படித்தான் செயலாற்ற வேண்டும். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு மட்டுமல்ல; துணிந்தோர் மாட்டும் உள்ளது. நடராஜனும் தன் படிப்பு, தந்தையார், குடும்பம், ஊர் எல்லாவற்றையுமே விட்டெறிந்துவிட்டுச் செயலாற்றத் துணிந்தபோது அவனுக்கு ஆறுதலாகவே இருந்தது.

ஆனால் இந்த நிலையிலும் அவனுக்குத் தந்தையாரின் எண்ணம் வந்தது. 'தான் ஏற்கனவே எண்ணியதுபோலத் தந்தையாருக்குத் தான் கனகத்தைக் கைவிட முடியாது என்று வெட்டொன்று துண்டு இரண்டாக எழுதிவிடுவோமா' என்று யோசித்தான். மறுகணம் தியாகு சொன்னதுபோல 'ஏன் எழுத வேண்டும்? முதலிற் கருமத்தை எவருக்கும் தெரியாமலே முடிப்போம். அதன்பிறகு நடப்பது நடக்கட்டும்' என்று எண்ணினான்.

நடராஜன் நேர்மையானவன்தான். ஒளிப்பு மறைப்பு என்பது அவனிடம் கிடையாது. நெஞ்சாரப் பொய் சொல்லி அவனுக்குப் பழக்கமில்லை. ஆனால் இன்றைக்குத் தன் தந்தையாரை ஏமாற்ற, தன் உள்ளத்தை மறைக்க எண்ணமிட்டான்; அந்த எண்ணம் அவன் மனத்தைச் சூறைக்காற்றிலடிபடும் துரும்பாக அலைக்கழித்தது. இதுவரையிருந்த அமைதி போயேவிட்டது. அந்தக் குழப்பத்திலே நித்திராதேவி அவனை அணைத்துக்கொண்டாள்.

கடிதத்தை எழுதிய அம்பலவாணர் ஒவ்வொரு நாளும் தன் மகனுடைய கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். வயலிலே உழவுக்குப் போகிறவர் மாலையிற் திரும்பி வந்ததும் மகனின் கடிதத்துக்காக அந்த வீடு முழுவதையுமே அரித்துப் பார்ப்பார். கடிதம் வரவில்லை என்று அறிந்ததும் அவர் முகத்திற் பெரிய ஏமாற்றம் படர்ந்துவிடும்.

கடிதம் அனுப்பி ஐந்து நாட்களாகிவிட்டன. அப்போதும் கடிதம் வராதபோது அவருக்குச் சந்தேகம் வலுத்துவிட்டது.

கனகத்தைத் தேடிக்கொண்டு கல்முனைக்குத்தான் போய்விட்டானோ? தன் சுயமரியாதை, கௌரவம் எல்லாவற்றையுமே தாங்கிக்கொண்டு தூண்போல நிற்கும் தன் ஒரே ஒரு மகன் தன்னைக் கைவிட்டு விட்டானா என்றெல்லாம் எண்ணங்கள் ஓடுகையில் அவரால் அந்தத் துன்பத்தைத் தாங்க முடியவில்லை. காரியம் மிஞ்சிப்போகுமுன்னர் அதைத் தன் கைக்குள் அடக்கிவிடவேண்டும் என்று அம்பலவாணர் தீர்மானித்துக்கொண்டார். வெள்ளம் வரமுன்னர் அணைகட்டவேண்டாமா?

கொழும்புக்குப் போகலாம் என்று எண்ணினார் அம்பலவாணர். ஆனால் வயலில் உழவு நடந்துகொண்டிருந்தது. அம்பலவாணருக்கு மகாத்மா காந்தியைப் போல இயந்திரங்களில் நம்பிக்கையில்லை. அரசாங்கம் வாடகைக்கு விடும் இயந்திரக் கலப்பையினால் இரண்டு மூன்று நாட்களில் வயலைக் கிண்டித்தள்ளி விடலாம். ஆனாற் சென்ற வருடம் இயந்திரக் கலப்பையால்



உழுததினால் அவர் வயலே பாழாகிவிட்டது என்று எண்ணிக்கொண்டிருந்தார் அம்பலவாணர். அவர் தெய்வமாகப் பூசித்துவரும் எருத்து மாடுகள் வயலில் மிதிக்காவிட்டால், சீதேவி அங்கு வருவாளா? மாடு பூட்டி ஏருழுவதானால் பதினைந்து நாட்களுக்கு மேலாவது பிடிக்கும். அந்த நாட்களில் வயற் சொந்தக்காரன் இருக்காவிட்டால் வேலை ஓடாது; உழவும் நன்றாயிராது.

ஆனால் தான் மட்டும் இந்த நேரம் மகனைப்பற்றிப் பாராமுகமாக இருந்துவிட்டால்.........பிறகு உலகில் அவர் தலை நிமிர்ந்து வாழ முடியுமா? கந்தையா அவர் தலையில் ஏறி மிதிக்கமாட்டானா? அம்பலவாணருக்கு ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை.

அடுத்த அடுத்த நாட்களிலும் கடிதம் வரவில்லை. அவருக்குத் தன் அருமை மகன்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கடலிலிருந்து இழுத்த வெறும் தூண்டில்போல் அவர் கடிதம் எந்தப் பிரயோசனத்தையும் தராதது அவருக்குப் பொறுக்க முடியாத ஏமாற்றமாக இருந்தது. தன் மகனா தனக்கு இப்படிச் செய்கிறான்? என்று அவரையே அவர் கேட்கும்போது அவர் நெஞ்சு வெடித்து விடும்போல் இருந்தது.

புனுகு பூனையைப்போலப் புறுபுறுத்துக் கொண்டு திரியும் அம்பலவாணரை அவர் மனைவி கேட்டாள். “ஏன் இரண்டு மூன்று நாட்களாக ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்’ என்று.

"எல்லாம் நீ பெத்தாயே அந்த மகனாற்றான்" என்று எரிந்து விழுந்தார் அம்பலவாணர்.

"ஏன் அவனுக்கென்ன?" என்று பதட்டத்துடன் கேட்டாள் பொன்னம்மா.

"அவனுக் கென்னவா? அவனும் உன் மகன் தானே. அடி ஆமணக்கென்றால் நுனி என்ன நொச்சியாகவா இருக்கும். இன்றைக்கே போய்ப் பயலின் செவியைப்பிடித்து இழுத்து வந்து என்ன செய்கிறேன் பார்?" என்றார் அம்பலவாணர்.

பொன்னம்மா ஒன்றும் அறியாமற் தவித்தாள். அம்பலவாணர் அன்றைக்கே கொழும்புக்குப் புறப் பட்டார்.

கல்முனைக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண் டிருந்த நடராஜன் முன்னால் திடுதிப்பென்று தந்தை யார் வந்து நின்றதைக் கண்டபோது சப்த நாடிகளும் ஒடுங்கிப்போகத் திகைத்து நின்றான்.

அவன் தந்தையார் "எங்கே புறப்பட்டுக் கொண் டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

எங்கிருந்தோ அப்போதுதான் வந்து அறைக்குள் காலடி எடுத்து வைத்த தியாகு, "ஏன் புறப்படவில் லையா?" என்று கேட்டவன், அங்கே தந்தையும் மக னும் நிற்பதைக் கண்டு விறைத்துப்போய் நின்றான்.

---

# 25

## துளி விஷம்

அம்பலவாணரைத் திடுகூறாகக் கண்ட தியாகு மெதுவாக அவ்விடத்தை விட்டு நழுவி விட்டான். தந்தைக்கும் மகனுக்கும் துவந்த யுத்தம் ஒன்று நடக்கப்போகிறது என்று தீர்மானித்தான். அந்த யுத்தத்தைத் தான் அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவுடன் அடுத்த அறையிற் போயிருந்து கொண்டான்.

நடராஜனுக்கும் அப்பாவைக் கண்டபோது ஆச் சரியமாக இருந்தது. தன்னைக் குழப்பத்தான் அவர் வந்திருப்பார் என்று எண்ணியபோது அவனுக்கு ஆத் திரமாகவும் இருந்தது. ஆனாற் தியாகு அவனிடம் படித்துப் படித்துச் சொல்லியிருந்தான் 'என்ன தான் செய்தாலும் எதற்கும் ஆத்திரப்படக் கூடாது. செய்வது மற்றவர்களுக்கும் தெரியக்கூடாது' என்று நடராஜன் இலட்சியவாதியாகத்தான் இருப்பினும் மகாத்மா காந்தியல்ல. இலட்சியம் மட்டுமல்ல, அதை அடையும் வழிகூடப் புனிதமாயிருக்க வேண் டும் என்ற நல்லெண்ணம் இப்போது அவனிடம் இல்லை. வெற்றிதான் குறிக்கோள்.

அம்பலவாணரும் மூதூரிலிருந்து புறப்படும் போது ஆத்திரமாகத்தான் வந்தார். ஆனால் ஆத்தி ரம் என்ன நித்தியத்துவம் பெற்றுவிட்ட உணர்ச்

சியா? தமிழ் வாரப்பத்திரிகைகள் சிலவற்றில் வெளியாகும் சிறு கதைகளைப்போல ஆத்திரவுணர்ச்சிக்கு ஒரு வாரங்கூட—ஏன் ஒருநாட்கூட—ஆயுள் இல்லை. இரவு முழுக்க ரயிலிலே யோசித்து யோசித்துக் கொண்டே அம்பலவாணர் ‘மகனைப் பயமுறுத்தியோ வெருட்டியோ ஒன்றும் செய்யக்கூடாது சாதுர்யமாகப் பேசித்தான் அவன் மனதைத் திருப்ப வேண்டும்’ என்று எண்ணிக்கொண்டு வந்தார் எனவே, தந்தையும் மகனும் தங்கள் சுயரூபத்தை மறைத்து, இருவருக்குமிடையில் ஒரு பொய்ம்மையை இழையோடவிட்டு நின்றனர்.

நடராஜன் தந்தையாரைக் கேட்டான்: “எப்போது வந்தீர்கள்?” என்று.

சாதாரணமாக இருந்தால் ‘இப்பதான் வந்தேன் என்று தெரியவில்லையா? எப்போது வந்தீர்களாமே. இது ஒரு கேள்வியா?’ என்றுதான் அம்பலவாணர் கேட்டிருப்பார். ஆனால் இன்றைக்கு அப்படிச் சொல்ல அவரால் முடியுமா? “இன்றைக்குத்தான் வந்தேன். கொஞ்சம் வேலையிருக்கிறது. அதுதான் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்” என்றார் அம்பலவாணர்.

“கடிதம் எழுதியிருக்கலாமே, நான் ரயிலடியிற் காத்திருப்பேனே” என்றான் நடராஜன்.

“எழுதி என்ன பிரயோசனம்? நீ என்ன பதிலா எழுதப்போகிறாய்?” என்று பெருமூச்சு விட்டார் அம்பலவாணர். தன் அப்பாவா இப்படிப் பேசுகிறார்



என்பதை நடராஜனால் நம்பமுடியவில்லை. அவர் ‘காரியமாகத்தான்’ வந்திருக்கிறார் என்று நடராஜனுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. எனவே, வைரத்தை வைரத்தாலே வெட்ட முயன்றவனாக அவனும் விட்டுக்கொடுக்காமலே பேசத் தொடங்கினான். “ஊரில் எல்லாருஞ் சுகமா?” என்று ஆரம்பித்தான்.

“யார் எல்லாரும்? நான் இருக்கிறேன். உன் அம்மா இருக்கிறா. வேறு நமக்கு யார் இருக்கிறார்கள். நானும் அம்மாவும் சுகமாகத்தான் இருக்கிறோம்” என்றார் அம்பலவாணர். பிறகும் நடராஜன் பேசத் தொடங்கு முன்னமே அவர் சொன்னார்: “மற்றெல்லாரின் சுகத்தைப்பற்றியுந்தான் உனக்குக் கடிதம் வந்திருக்குமே” என்றார்.

அப்பா எதைச் சொல்கிறார் என்று நடராஜனுக்கு நன்றாக விளங்கியது. அவன் சொன்னான்: “வேறு யாருமே எனக்குக் கடிதம் எழுதவில்லை. தேவையுமில்லை” என்று.

“யாரும் ஏன் எழுதப் போகிறார்கள். உனது மாமனார் கூடக் கனகத்தை, சுந்தரத்துக்குக் கல்யாணஞ் செய்து விடுவது என்று தீர்மானித்து விட்டார். அந்தக் கனகம் கூட என்ன? அவள்கூட அதற்குச் சம்மதித்து விட்டாளாமே. அவள் கல்முனைக்குப் போனாளாம். அவள் போன அடுத்த நாளே அந்தச் சுந்தரமும் போய் விட்டானாம்” என்றார் அம்பலவாணர். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றியது போல அம்பலவாணர் பேசினாலும் அந்த ஊசி நடராஜன் மனதில் சுருக்கென்றுதான் தைத்தது.

'ஏனப்பா பொய் சொல்லுகிறீர்கள்? சுற்றி வளைத்துப் பேசாமற் கனகத்தை இனிக் கனவிலும் நினையாதே; நான் அதற்கு உன்னை விடமாட்டேன் என்று நேரடியாகவே சொல்லுங்களேன்' என்று சொல்லத் தோன்றியது நடராஜனுக்கு. ஆனால் தன் உணர்ச்சிகளைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டான். ஆனாலும் அவன் பேச எண்ணியவைகள் அவனுள்ளேயே திரிந்து வெளியில் வந்தன. "யாரோ உங்களுக்குக் கதை கட்டியிருக்கிறார்கள் அப்பா."

"நீ அப்படித்தான் சொல்வாய் என்பது எனக்குத் தெரியுமே. உன்மனம் வெள்ளையானதுதான். ஆனால் எல்லார் மனமும் அப்படியா இருக்கும். நான் சொல்வதை நம்பாவிட்டாலும் ஊரில் வந்து உன் கண்ணாரக் கண்டபின்பாவது நம்பத்தானே வேண்டும்" என்றார் அம்பலவாணர்.

"நான் எங்கே இனி ஊருக்கு வரப்போகிறேன்" என்று சொன்ன நடராஜன் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

"ஏன் ஊருக்கு வராமல் என்ன? அவள் போய் விட்டால் உனக்கு வேறு பெண்ணா கிடைக்காது. அந்தக் கலியாணம் நடக்க முதலே நான் உனக்கு ஏற்ற இடத்திலே வேறு கலியாணத்தை நடத்தி வைக்கா விட்டால் நான் அம்பலவாணன் இல்லை" என்று உணர்ச்சியுடன் பேசினார் அம்பலவாணர். அவர் இழுத்து மூடியிருந்த பொய்ம்மைத்திரை அவரை அறியாமலே கழன்று விட்டது.



தந்தையின் சுய ரூபத்தைக் கண்ட நடராஜனுக்கும் ஆத்திரம் பிய்த்துக்கொண்டு வந்தது. அந்த ஆத்திரத்தில் "அப்பா எனக்கு இப்போது கலியாணமே வேண்டியதில்லை. பரீட்சை முடிந்து உத்தியோகம் வரட்டும். அதற்குள் என்ன அவசரம்?" என்றான்.

"எனக்குத்தான் என்ன அவசரம்? ஆனால் 'செய்தவனுக்குச் செய்வது செத்த பிறகல்ல' அதற்குத்தான் சொன்னேன்" என்ற அம்பலவாணர் அதற்குமேற் பேசவிரும்பாதவர்போல, "நான் குளித்து விட்டு வருகிறேன்; வெளியிற் போய் வரலாம் வா" என்றுவிட்டு எழுந்தார்.

நடராஜனின் உள்ளம் 'அப்பா சொன்னதில் உண்மை ஏதும் இருக்குமா?' என்று சிந்தித்தது. ஓடும் மோட்டாரில் நிலையின்றி ஊசலாடும் மீற்றர் முள்ளைப்போல அவன் மனம் தவித்த போது அம்பலவாணர் குளித்துவிட்டு வந்தார்.

வெளியே கிளம்பிய இருவரும் கொழும்பு முழுவதும் அலைந்தார்கள். மியூசியம், மிருகக் காட்சிச் சாலை, துறைமுகம் என்று எதையெல்லாம் பார்க்க வேண்டுமோ அதையெல்லாம் பார்த்தார்கள். தன் மகன்மீது என்றைக்குமில்லாத பரிவு காட்டினார் அம்பலவாணர்.

சாயந்திரமானதும் நடராஜன் தன் தகப்பனாரிடம் கேட்டான்: "அப்பா என்னத்திற்காக இத்தனை அவசரமாகக் கொழும்புக்கு வந்தீர்கள்?" என்று.

"அவசரம் ஒன்றும் இல்லை. வீட்டுச்சாமான்கள் கொஞ்சம் வாங்க வேண்டும். ஊரிலே தச்சனிடம் காசைக் கொடுத்துவிட்டு அவன் வீட்டுக்கு நாட்கணக் காக அலைய யாரால் முடியும்? அத்தோடு கொழும் பில் நீயிருக்கும்போதே சாமான்களை வாங்கிவிட வேண் டும் என்று எண்ணினேன்' என்றார் அம்பலவாணர்.

'அப்படியென்ன பொருள்கள் இப்போது வாங்க வேண்டும்? வீட்டிலே ஒன்றும் இல்லையா?" என்றான் நடராஜன்.

"எல்லாந்தான் வாங்க வேண்டும். அதுவும் மார் கழி முடிந்து தை பிறந்து விட்டால் உனக்குக் கலி யாணமும் வந்துவிடும். அதற்கு இப்போதே வாங்கி விட்டாற் போகிறது" என்றார் அம்பலவாணர்.

"எனக்கிப்போது கலியாணமே வேண்டாம் என் கிறேனே" என்றான் நடராஜன்.

அம்பலவாணர் புன்னகை புரிந்தார். அந்தப் புன்னகை இதயத்தின் நிறைவிற் தழும்பிய சிரிப்பு அல்ல. சந்தேகப்படும் கணவனைத் தன் வழிக்குத் திருப்ப முயலும் சோரம்போன மனைவியின் புன்ன கைதான் அது அந்தப்புன்னகையோடு சொன்னார்: "உன் அம்மாவை எனக்குக் கலியாணம் பேசும் போது நான் கூடத்தான் உன்னைப்போல் எனக்கு இப்போது கலியாணம் வேண்டாம் என்று சொன் னேன்" என்றார் அம்பலவாணர்.

நடராஜனுக்கு உண்மை விளங்கிற்று. பரீட்சை முடிந்து வீட்டுக்குப் போனால் அப்பா தனக்குக் கலி யாணத்தை முடித்து வைத்துவிட்டுத்தான் அடுத்த வேலை பார்ப்பார் என்று அவனுக்குத் திட்டமாகத் தெரிந்துவிட்டது. அத்தோடு கனகத்தையும் சுந்த ரத்தையும் பற்றி அவர் சொன்ன கதை அவன் மன தைக் குழப்பியது. தன் தந்தையார் ஒற்றைக்காலில் நிற்பது போலவே மாமனாரும் நின்று கனகத்தைச் சுந்தரத்துக்கோ அல்லது வேறு யாருக்கோ கலியா ணம் முடித்து வைத்து விட்டால்........



அம்பலவாணர் மரத்தளபாடங்களிற் சில வாங்கி அவற்றை ரயிலில் அனுப்பி விட்டு அன்றைக்கே தானும் போய்விட்டார். ஆனால் கனகத்தைப்பற்றி அவர் சொன்ன கதை ஒரு குடம் தேனைக் கெடுக்க ஒரு துளி விஷம் போதுமே. நடராஜனின் இன்ப நினைவுகள் எல்லாமே கசந்து வேப்பங்காயாய்—நஞ் சாய் மாறிக்கொண்டிருந்தன. அந்தத் துளி விஷம் அவன் வாழ்க்கை முழுவதையுமே கைப்பாக்கி விடுமா?

# 26

## காதல்மடப்பிடியோடு

அம்பலவாணர் போனதும் தலைமறைவாகவிருந்த தியாகு நடராஜனிடம் வந்தான். வந்ததும் ஒன்றுமே தெரியாதவன் போல "அப்பா போய்விட்டாரா?" என்று கேட்டான்.

"அவர் போய்விட்டாரே" என்று பதிலிறுத்தான் நடராஜன்.

"ஏன் வந்தாராம்?"

"ஏன் வந்தார் என்பதுதான் எனக்கும் சரியாகத் தெரியவில்லை. இரண்டு மூன்று மரச்சாமான்கள் வாங்கினார். அதற்காக வேலை மினக்கெட்டுக் கொழும்புக்கு வந்திருக்க வேண்டியதில்லை. கனகத்தின் விஷயமாக என்னைக் கட்டுப்படுத்த வந்தவராகவும் தோன்றவில்லை. என்னோடு மிக மிகத்தான் தாராளமாகவும் கதைத்தார்" என்றான் நடராஜன்.

தியாகு சிரித்தான். சிரித்துக்கொண்டே கேட்டான் "புலி பதுங்குவது எதற்காகத் தெரியுமா?"

நடராஜன் பதில் சொல்லத் தோன்றாமல் தியாகுவையே வெறித்துப் பார்த்துக்கொண்டு இருந்தான். தியாகு அவனிடம் மறுபடியும் கேட்டான்: "என்ன விழிக்கிறாய்? புலி பதுங்குவது எதற்காக என்று கூடத் தெரியாதா?"



"பாய்வதற்குத்தான்" என்றான் நடராஜன்.

"ஆம், பாய்வதற்குத் தான். உன் தந்தையார் பெரிய ஆள், அவர் பேசிய எல்லாவற்றையும் நான் ஒட்டுக் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். கனகத்துக்கும் சுந்தரத்துக்கும் கலியாணம் நடக்கப்போகிறது என்ற மகா உண்மையைச் சொல்வதற்குத்தான் அவர் இவ்வளவு தூரம் வந்திருக்கிறார். இதிலிருந்தே நான் மற்றவைகளை ஊகித்துக்கொண்டேன். இதை ஒரு கடிதத்தில் எழுத முடியாமலா இத்தனை தூரம் வந்திருக்கிறார் என்பதை யோசித்தாயா?" என்றான் தியாகு.

"ஒருவேளை அப்பா சொல்வதிற்கூட உண்மையிருக்கலாம். கனகம் எனக்கு எழுதிய கடிதத்திற்கூடத் தன் தகப்பனார் சுந்தரத்தைத் தனக்குக் கலியாணஞ் செய்ய முயற்சிப்பதாக எழுதியிருக்கிறாள்" என்றான் நடராஜன்.

"சரிதான் உன்மனத்தை யறிந்துதான் அப்பாவும் உன்னிடம் பேசியிருக்கிறார். அப்போது விடுதலை கிடைத்ததும் நேராக வீட்டுக்குப்போ. இப்போதே கனகத்தையும் மறந்துவிடு. அப்பா உனக்கு அழகான பெண்ணைப் பார்த்து ஆயிரங்காலப் பயிராக வளர அருமையாகக் கலியாணம் முடித்தும் வைப்பார். நானும் என் இஷ்டமித்திரரோடு வந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கிறேன்" என்று சொல்லிச் சிரித்தான்.

தியாகு என்னதான் ஆகாதவனாக இருந்தாலும், அம்பலவாணரைச் சரியாக எடை போட்டுவிட்டான். மேலும் உருத் தெரியாத கனகத்தின் மேலே இனந் தெரியாத இரக்கம் ஒன்று அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அரக்கியாக இருந்த திரிசடைக்குச் சீதையின் மேல் அநுதாபம் பிறக்கவில்லையா? இந்த இரக்கத்தில், நடராஜனின் மனதைக் குழப்பித் தன்வழிக்கு ஈர்த்துக்கொள்ளத் தந்திரமாக வந்த அம்பலவாணரிடம் அவனுக்கு ஒரு எரிச்சல் வந்தது. எப்படியும் அவர் திட்டத்தைத் தகர்க்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டான்.

சிரித்துக்கொண்டேயிருந்த தியாகுவிடம் நடராஜன் சொன்னான்: "அப்பாவை அப்படித்தான் எண்ணினாய். அது என்ன நடக்கத்தான் போகிறதா?" என்றான்.

"ஏன் நடக்காது? உங்கள் பக்கத்தில் எல்லாரும் மந்திர தந்திரங்களிற் கெட்டிக்காரராமே! ஓட்டாததை ஓட்டவைத்து விடுவார்களாம். ஒட்டியிருப்பதைப் பிரித்தும் விடுவார்களாமே" என்றான் தியாகு.

"அது எங்களூரிலல்ல. மட்டக்களப்பிற்றான் அப்படிச் செய்து விடுவார்களாம். ஆனால் அதை நீ நம்புகிறாயா?" என்றான் நடராஜன்.

"நம்பாமல் என்ன? என் அண்ணன் சிவகுருவைப்பற்றிச் சொல்லியிருக்கிறேனே. எனக்கும் அவனுக்கும் எவ்வளவோ வித்தியாசம். அப்பாவுக்கு



அவன் அருமையான பிள்ளை. மட்டக்களப்புக்கு உத்தியோகம் பார்க்கப் போனான். அங்கேயே கலியாணம் முடித்துக்கொண்டான். அதன்பிறகு வீட்டுப்பக்கமே திரும்பவில்லை. மந்திரம் என்றுதான் எல்லாருஞ் சொல்லுகிறார்கள்" என்றான் தியாகு.

நடராஜன் சிரித்துக்கொண்டே சொன்னான். "மந்திரமும் இல்லை மாயமும் இல்லை. 'சிந்துநதியின்மிசை நிலவினிலே சேரநன்னாட்டிளம் பெண்களுடனே' என்று பாரதி பாடினானல்லவா? ஏன்? சேரநாட்டுப் பெண்கள் அழகிகள். அதனாற்தான் பாரதியும் அவர்களைப் பாடினான். கண்ணகி வணக்கம், மாந்திரீகம், பெண்வீட்டிற்கே ஆண் போய்ச் சீவிக்கும் கலியாண முறை முதலான பழக்கங்களினால் மட்டக்களப்பு மக்களும் சேரநாட்டிலிருந்து வந்தவர் என்றே கருதப்படுகிறார்கள். அவ்வூர்ப் பெண்களும் அழகிகள். மேலும் விருந்தோம்பும் பண்பிலே மட்டக்களப்புத் தமிழனை வேறு எந்தத் தமிழனுமே மிஞ்ச முடியாது. இந்த உபசரணையிலும் பெண்களின் அழகிலும் போனவன் மயங்கித் திரும்பியே வருவதில்லை. இதைத்தான் எல்லாரும் மந்திரம் என்கிறார்கள்."

நடராஜனைத் தியாகு ஒப்புக்கொண்டானோ என்னவோ. ஆனாற் பேச்சு வேறு திக்கிற் போவதை அவன் விரும்பவில்லை. அவன் மறுபடியும் விஷயத்திற்குத் திரும்பவே விரும்பினான். கதையளப்பதும் அவனுக்குப் பிடித்தமில்லாமலிருந்தது. எனவே உணர்ச்சியோடு பேசினான். "உன்னிஷ்டப்படி

என்ன வேண்டுமானாலுஞ் செய். ஆனால் இனிமேல் ஊருக்குப் போனாலோ, அதன் பிறகு கனகம் உனக்கில்லை என்று எண்ணிக்கொள். அவ்வளவு தான் என்னாற் சொல்ல முடியும்" என்றான்.

நடராஜன் சிறிது யோசித்தான் அவனால் எந்தத் தீர்மானத்திற்குமே வரமுடியாமலிருந்தது. சிறிது நேரங் கழிந்தபின் சொன்னான்: "அப்பாவுக்குத் தெரியாமல் ஏதும் செய்துவிட்டால், அதைப் பொறுமல் அப்பாவுக்குப் பைத்தியமே பிடித்துவிட்டால் ...... ஒரு வேளையிற் தற்கொலையே செய்துவிட்டால் ......"

தியாகு பலமாகச் சிரித்தான் சிரித்துக் கொண்டே சொன்னான்: "நீ ஒரு முட்டாள் எல்லாத் தகப்பன்மாரும் தம் பிள்ளைகளை விரட்டியடிக்கிறார்கள். நீ எண்ணுவது மட்டும் சரியாக இருந்தால் என் தந்தை எனக்காக இதற்குள் ஆகக் குறைந்தது பத்துத் தடவையாவது தற்கொலை செய்திருக்கவேண்டும். ஒன்றையும் யோசிக்காமல் முதலில் நினைப்பதைச் செய். முதலில் அப்பா ஆத்திரப்படுவார். ஒரு வருடத்துக்குள் சமாதானமாகியும் விடுவார்" என்றான்.

நடராஜனும் உணர்ச்சியோடு சொன்னான்: "சரி, அப்படியே செய்கிறேன்; நாளைக்கே கல்முனைக்குப் போகிறேன். ஆனால் அப்பாவுக்குத் தெரியாமல் இதைச் செய்துவிட்டுப் பிறகு நான் அவரின் முகத்திலேயே விழிக்கமாட்டேன" அவன் இதைப் பேசி முடித்தபோது தன்னைப் பெற்று வளர்த்துப் பேராக்கிய தன் தந்தைக்காக அவன் கண்கள் அவனை



யறியாமலே கலங்கின. ஆனால் அந்தக் கலக்கம் தியாகுவுக்கு எந்த உணர்ச்சியையும் கொடுக்கவில்லை. உபயோகமற்று அவன் கண்கள் கலங்குகின்றன என்று தியாகு எண்ணிக்கொண்டான்.

விடிந்தது; கொழும்பு நகரம் சுறுசுறுப்பாயிற்று. அந்தச் சுறுசுறுப்பு உச்சத்தை யடைந்தபோது மறுபடியும் இருட்டிற்று. நடராஜன் ரயிலில் ஏறிக் கொண்டு கல்முனைக்குப் புறப்பட்டான்.

விடியற் காலையில் மட்டக்களப்பில் இறங்கிய நடராஜன், அங்கே மாப்பிள்ளையாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டே கல்முனைக்குப் பஸ் ஏறினன். காலைச் சூரியனின் கதிர்கள் மட்டக்களப்பு வாவியிற் பிரதிபலித்து மினுங்குகையில் நடராஜன் மனமும் எதிர்கால இன்ப வாழ்வு பற்றிய வர்ண விசித்திரங்களோடு அலையாடிக்கொண்டிருந்தது. கல்லடிப் பாலத்தைப் பஸ் கடந்து அப்பால் அவனை அரியாசனத்தில் அரசரோடு சரியாசனம் வைத்த தாயாகிய சிவானந்த வித்தியாலயத்தைத் தாண்டுகையில், மட்டக்களப்பு மறுமலர்ச்சி இலக்கியத்தின் பிதா மகனை சுவாமி விபுலாநந்தரின் சமாதியடியில் அவன் சிரந் தாழ்ந்தது.

கல்முனையை அடைந்ததும் நேரே கன்னிகாஸ்திரி மடத்துக்குப் போனான். காலைச் சூரியனின் மஞ்சட் கிரணங்கள் அவன் முதுகிலே சுள்ளென்றடித்தன.

வெளிக் கேற்றைத் தாண்டி நடந்தவன் நேரே பழக்கப்பட்ட பாதையில் விருந்தினர் தங்கும் அறைக்குப் போனான். அங்கே சுந்தரம் ஒரு கதிரையில் இருந்தான். கனகம் சற்றுத் தள்ளித் தலையைக் குனிந்து கொண்டு நின்றாள்.

---

# 27

## இருள் சூழ்ந்தது

ஊரிலே வேலையற்றிருந்த சுந்தரத்திற்குத் தந்தையின் உபத்திரவம் பொறுக்க முடியாது போய் விட்டன். குடும்பத்திலே நிமிர்ந்த பிள்ளை; அதுவும் நொடித்துப்போன குடும்பத்தைக் கைதூக்கி விட வேண்டிய நிலையிலுள்ளவன், ஒன்றுக்கும் உதவாதவனாகத் தெருநீளம் அலைந்துகொண்டு திரிந்தால் எந்தத் தந்தைக்குத்தான் மனம் பொறுக்கும்? அவர் மகன் தன்னுடைய மடிப்புக் கலையாத உடுப்பிற்கே உழைத்தான் என்றிருந்தாற்கூட அகிலேசபிள்ளை மனவருத்தமில்லாமல் இருப்பார். இங்நிலையிற் சண்முகம் மூலமாக கந்தையா வீட்டிற் சம்பந்தஞ் செய்யச் செய்த முயற்சியும் தோல்வியடையவே, அகிலேச பிள்ளையவர்களுக்குத் தன் மகனைக் காண்பதே எரிச்சலாக இருந்தது

தந்தையின் அங்கலாய்ப்பையும் எரிச்சலையும் பொறுக்க முடியாத சுந்தரம் வீட்டைவிட்டே கிளம்பி விட்டான். கிளம்பியவன் கல்லோயாத் திட்டத்தில் வேலை தேடிவரும் கும்பலோடு கும்பலாக நேரே கல்முனைக்குத்தான் வந்தான்.

கல்முனைக்கு வந்தவனுக்குக் கனகத்தைப்பற்றிய எண்ணம் உண்டாயிற்று. கனகத்திற்கும் அவனுக்கும் எந்தத் தொடர்புமே இல்லைத்தான். அவளைக்



கண்டாலே கத்தி சுத்திக் கொடியைக் கண்ட பணமூட்டையைப் போலக் கனகம் முகத்தைத் திருப்பிக் கொள்வதையும் அவன் கண்டுதான் இருக்கிறான். ஆனாலும் அவன் கனகத்தைச் சந்திக்க விரும்பினான். உண்மைதானே, மக்கள் மழலைச்சொற் கேளாதவர் குழலினிது யாழினிது என்பார்களாம் என்று கூறுகிறது தமிழ் வேதம். வயதடைந்த சம்சாரிகளுக்கு இதுபொருந்தலாம். ஆனால் வசந்தகாலக் குருத்துக்கள் போல மனதிலே இன்ப நினைவுகள் எழும் வயதிலுள்ள எந்த வாலிபனும் ஓர் இளம்பெண்ணின் குரலைத்தான் குழலைவிட யாழைப் பார்க்கிலும் அதிகம் விழைகிறான் அவள் அவனை விரும்பாமற் கடிந்து பேசுவதுகூட இன்பத் தேனாகத்தான் அவன்காதிற் பாய்கிறது.

சுந்தரமும், கனகம் தன்னைக் கடிந்தாற்கூட அதை இரசிக்கவே விரும்பினான். பாடசாலைக்குப் போனவன் கனகத்தை விசாரித்தான். யாரோ தன்னைத் தேடுவதாகத் தெரிந்த கனகம் தன் அண்ணனாக இருக்கலாம், ஏன் நடராஜனாகவே இருக்கலாம் என்றெண்ணிக்கொண்டு ஓடிவந்தாள். ஆனால் உபசரிப்பு அறையிலே சுந்தரத்தைக் கண்டபோது...... நெற்றிக் கண்ணால் எரித்துவிட அவள் என்ன தில்லை நடராஜனா?

வந்தவனை முகத்திலடித்தாற்போலப் 'போ' என்று சொல்லவும் முடியவில்லை. மேலும் அப்படித்தான் துரத்திவிட்டுப் போனாலும் அவள் சக ஆசிரியைகள் "வந்தவன் யார்? ஏன் பேசாமல் வந்து

விட்டாய்?" என்று தொளைத்துக் கேட்கும் ஆயிரம் கேள்விகளுக்கு விடையளிக்கத்தான் அவளால் முடியுமா?

எனவே, ஒன்றும் பேசாமற் தலையைக் குனிந்து நின்றாள். இந்த நேரத்திற்தான் நடராஜனும் அங்கே வந்தான். சுந்தரத்தை அங்கே கண்டபோது வானத்திலிருந்து ஆயிரம் நட்சத்திரங்கள் ஒரே நேரத்தில் இடம் பெயர்ந்து அங்கும் இங்கும் ஓடுவதைப்போல அவன் மனத்துள்ளும் எண்ணங்கள் கனவேகத்தில் ஓடின. அப்பா சொன்னதெல்லாம் சரியா? கனகத்தின் பின்னாலேயே சுந்தரமும் கல்முனைக்கு வந்துவிட்டானா? கனகம் கூட அவனை விரும்புகிறாளா? அவன் முன்னால் எத்தனை நாணத்தோடு தலையைக் குனிந்து கொண்டு நிற்கிறாள்?

நடராஜனைக் கண்ட சுந்தரமும் திகைத்துப் போனான். ஆனாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் "எப்போ வந்தாய் நடராஜா?" என்று கேட்டான்.

"இப்போதான்" என்று அலட்சியமாக நடராஜன் இறுத்த விடையினால் ஆடிக்காற்றிலே சரசரத்து உதிரும் ஆலஞ் சருகுபோலக் கனகத்தின் உள்ளமும் வரண்டு சருகாகிச் சுழன்றது.

"நானும் நேற்றுத்தான் வந்தேன். கனகத்தின் தந்தையார் இந்தப் பார்சலைக் கனகத்திடம் கொடுக்கும்படி என்னிடம் தந்தார். சரி நான் வருகிறேன்" என்றுவிட்டுக் கையில் வைத்திருந்த பொட்டலத்தை மேசையின் மேலே வைத்துவிட்டுச் சுந்தரம் போய் விட்டான்.



கனகத்தின் தலை சுழன்றது. என்ன பேசுவது! எப்படிப் பேசுவது? என்று அவளுக்குத் தெரியவில்லை. நெருப்புப் பிடித்து எரியும் வைக்கோர் போரைப்போல அவள் உள்ளம் எரிகையில், அந்தப் பெரு நெருப்பில் அவள் உள்ளம் சாம்பர் கூட இல்லாதபடி சூன்யமாகி விடும்போல இருந்தது. 'இந்தச் சுந்தரம் ஏன் வந்தான்?' என்று எண்ணிப் பார்த்தபோது, மோட்சத்தின் பலகணிகள் வழியாகப் பாதாளத்துக்குப் பிடித்துத் தள்ளப்பட்ட மனிதனைப்போல அவளும் எங்கோ கீழே கீழே அதல பாதாளத்திற்குப் போய்க்கொண்டிருப்பதைப் போலத் தோன்றிற்று.

மனத்துள்ளே ஓடி நெளிந்த ஆயிரமாயிரம் வினாக்களும் அடங்கி மனம் புறம்பான பாத்திரத்துள் ஊற்றப்பட்ட கொதிநீரைப்போல அடங்கியபின் நடராஜன் கேட்டான்: "ஏன் பேசாமல் நிற்கிறாய்?"

கனகத்திற்கு உயிர் வந்தது. ஆனால் வேறோர் உலகத்தையே சிரிட்டித்து இடையிலே நிறுத்தப்பட்ட திரிசங்குவைப்போலத்தான் அவள் நிலையிருந்தது. இன்னமும் பயமும் கலக்கமும் தெளியவில்லை. ஆனாலும் அவள் பேசவேண்டியே இருந்தது. அவள் சொன்னாள்: "நீங்களும்தானே பேசாமலிருந்தீர்கள்? இப்போது தான் வருகிறீர்களா?"

"ஆமாம், இப்போதுதான் வருகிறேன். பின்னேரம் போகப் போகிறேன்"

"இப்போதுதான் வந்தேன் என்கிறீர்கள்; பின்னேரம் போகவேண்டும் என்கிறீர்கள். அவ்வளவு அவ

சரமாக ஏன் வந்தீர்கள்?'' என்று நெளிந்தாள் கனகம். அவளுக்குக் கலக்கம் தெளிந்துவிட்டது.

“அவசரம்தான்; எனக்கு மட்டுமல்ல உனக்கும் தான். பின்னேரம் புறப்படுவதற்குத் தயாராக இரு” என்றான் நடராஜன்.

கனகம் ஆச்சரியத்தோடு கேட்டாள் “எங்கோ” என்று.

“எங்கேயா? எங்கே வஞ்சனையும் பொறாமையும் இல்லையோ, எங்கே மனிதன் தன் உணர்ச்சிகளுக்குத் தன்னையே திருப்திப்படுத்திக்கொண்டு வாழலாமோ, எங்கே பயமும் அச்சமும் இல்லையோ, எங்கே அழுகையும் பற்கடிப்பும் இல்லையோ, எங்கே மனிதன் மனிதனாக வாழமுடியுமோ, அங்கேதான் இருவரும் போகவேண்டும்” என்று கீதாஞ்சலி பாடிய தாகூரைப்போல நடராஜன் உணர்ச்சியுடன் சொன்னான்.

பயத்தை வெளிக்காட்டாமல் மறைக்கும் ஒளியற்ற புன்னகையோடு கனகம் கேட்டாள் “எங்கே என்று எனக்கு விளங்கவில்லையே!”

“எங்கானால் என்ன? உனக்காக ஒரு வேலையைத் தேடிக்கொண்டேன். வாழ வழிசெய்துகொண்டேன்.”

“அப்போது உங்கள் படிப்பு——?”

“படித்தது போதும். முதலில் மனிதன் மனிதனாக வாழவேண்டும்”



“ஏன் இப்படிப் புத்தியில்லாதவர் மாதிரிப் பேசுகிறீர்கள்? அடுத்த மாதம் உங்கள் படிப்பு முடிந்துவிடும். அதற்குள் என்ன அவசரம்?” என்றாள் கனகம்.

“அவசரம்தான், நான் இப்போது பாடசாலைக்கே போவதில்லை. நீ வந்தேயாகவேண்டும்” என்றான்.

கனகத்திற்குத் திகிலாக இருந்தது. நடராஜன் கொந்தளிப்பான நிலைக்கு உடனடியாக விமோசனத்தைத் தேடினான். ஆனால் கனகமோ பெண்மைக்கே உரிய இயல்பான அமைதியுடன், கொந்தளிப்புக்குப் பின்னர்வரும் அமைதியான வாழ்க்கையைத்தான் விரும்பினாள் மேலும் தனக்கு நடராஜன் கிடைக்காவிட்டாற்கூட அவளாற் பொறுத்துக்கொள்ள முடிந்திருக்கும்; ஆனால் தனக்காக தன்னால் அவன் படிப்புப் பாழாகி, அவன் எதிர்காலமே இருண்டு விடுவதை அவளாற் பொறுக்க முடியவில்லை. எனவே அவள் சொன்னாள், “உங்கள் படிப்பு முடியட்டுமே. அப்போது வருகிறேன்”

“இப்போது வரமாட்டாயா?” என்று உரத்துக் கேட்டான் நடராஜன்.

“யார் அப்படிச் சொன்னது? உங்கள்——”

“அந்தக் கதை ஒன்றும் தேவையில்லை. நீ வருகிறாயா மாட்டாயா? அதற்குமட்டுமே பதில்சொல்.”

கனகம் எதையோ எண்ணிச் [illegible]தபடியே “வராவிட்டால்——?” என்றாள்.

"வராவிட்டாலா? நீ வரத்தான் மாட்டாய் என்பது எனக்குத் தெரியுமே. வராமலே இரு. நான் போகிறேன். உனக்கும் சுந்தரத்திற்கும் சுயம்வரம் நடக்கும் போது எனக்கெழுது" என்றுவிட்டுத் திரும்பிக் கொண்டு விறு விறு என்று நடந்தான்.

கனகம் அறைவாசல் வரை அலறிக்கொண்டு ஓடினாள். ஆனால் அதற்குள் நடராஜன் வெளிக் 'கேற்றையே' தாண்டிப் போய்க்கொண்டிருந்தான். அவள் முன்னால் அமரர் புதுமைப்பித்தன் பாடியதைப்போல 'செல்லும் வழியிருட்டுச் செல்லுமிட மிருட்டுச் சிந்தை தனிலுந் தனியிருட்டாகவே' இருந்தது. ஆம் உலகமே இருண்டுவிட்டது.

---

# 28

## திசை தப்பியது

'அழுகிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள் ஆறுதலடைவார்கள்' என்ற பைபிள் வாக்கியம் கனகத்திற்கு வாய்ப்பாடமானதொன்று. நடராஜனுக்கு எழுதிய கடிதத்திற்கூட அவள் இதைப் பிரயோகித்து இருக்கிறாள். வித்தகர்கள் இந்த வாக்கியத்திற்கு வேதாந்தமாகப் பொருள் விருத்துரைக்கலாம்; ஆனாற் சாதாரணமான மனித மூளைக்கும் இந்த வாக்கியத்தின் பொருள் எவ்வளவு பொருத்தமானதாக இருக்கிறது. ஆம் அழுகிறவர்கள் பாக்கியவான்கள். துக்கம் வந்தால் மனிதன் அழத்தான் வேண்டும்; கதறியழ வேண்டும். கண்கள் கடைசிச் சொட்டு நீரையும் வெளியேற்றும் வரை அழுகையில், இதயத்தின் பாரம் குறைகின்றது. உடலும் சோர்வடைகின்றது. உள்ளத்தின் இலகுவிலும் உடற் சோர்விலும் துக்கம் அடங்கி ஆறுதல் கிடைக்கிறது.

கனகமும் கதறியழுதால் அவள் ஓரளவாவது ஆறுதலடைந்திருக்க முடியும். ஆனால் அவள் இருந்த சூழ்நிலையில் அவளால் அழமுடியுமா?

நடராஜன் பாடசாலையை விட்டு வெளியேறிய சிறிது நேரத்தில், பாடசாலை மணி 'கிணு, கிணு' என்று அடித்தது. ஓய்விற்காக மாணவிகளும், ஆசிரியைகளும் அங்குமிங்குமாக நடந்தார்கள். அமைதியாக

இருந்த அந்தச் சூழ்நிலையிலே கலகலப்பும் சிரிப்பும் கும்மாளமும் வெடித்துக் கிளம்பி, உலகமே சிரிப்பும் கும்மாளமும் நிறைந்ததுதான் என்பதை நிரூபிப்பன போலத் தோன்றிற்று.

தான் இருந்த பக்கமாகக் கமலா வந்ததைக் கண்டதும், கனகம் தன் கண்களைத் துடைத்துக்கொண்டாள். உள்ளே பொங்கிக் குமுறும் சோகத்தைச் சிரமப்பட்டு அடக்கையில் காற்றின் அமுக்கம் தாங்க முடியாது வெடிக்கும் பலூனைப்போல அவள் சடலமே வெடித்துத் துகள் துகளாகி விடும்போல இருந்தது.

கமலா வந்ததும் கேட்டாள்: "நடராஜா தானே வந்தார்" என்று.

சரிதான் இனிமேல் எத்தனை கேள்விகள் கேட்க எண்ணி யிருக்கிறாளோ! கனகத்துக்குச் சுருக்கமாகப் பதில் சொல்லி எப்படியும் அவளை விட்டுக் கழன்று போய்விட வேண்டும் என்றே தோன்றிற்று. ஆனால் "ஆம் அவர்தான்" என்று அவள் சொல்லுகையில் உதடுகள் அழவேண்டும் என்று துடித்தன.

"இப்போது ஏன் வந்தார்" என்றாள் கமலா.

ஆம், நடராஜன் இப்போது ஏன் வந்தார்? இதயத்தில் செடியாக வளர்ந்திருந்த ஆசை என்ற பயிரைப் பிய்த்துப் பிடுங்கி, அதை இரத்தங் கசிந்துகொண்டேயிருக்கும்படி செய்யவா? அதைக்கூட அவளால் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் அவன் போகையிற் கடைசியாகச் சொல்லிவிட்டுப்போன வார்த்தைகள்—



சுந்தரத்தையும் தன்னையும்பற்றி அவர் எண்ணியிருந்த எண்ணம்—'இப்படி யெண்ணியா அவர் தன்னை விட்டுப் பிரிந்து போக வேண்டும்' என்று எண்ணியபோது எதிரேயிருந்த சுவரிலே தலையை மோதிக்கொண்டு சாக வேண்டும் என்று தோன்றிற்று. இதற்குள் கமலா, "என்னடி பேசாமல் நிற்கிறாய். என்னைப் பார்க்காமல் இருக்க முடியாது என்று சொல்வதுதானே" என்று சொல்லிச் சிரித்தாள் சிரித்துக்கொண்டே மறுபடியும் கேட்டாள்: "நடராஜாவுக்குச் சோதனை முடிந்து விட்டதாமா!"

'சோதனை! அவர்தான் எல்லாரையும் சோதிக்கிறாரே. கடவுளே இப்படி ஒரு சோதனையை ஏன் அனுப்பினாய்?' என்று கனகம் எண்ணியபோதே நடராஜனின் படிப்புக் குழம்பியதை நினைக்கையில் அவளுக்கு மயக்கமாக இருந்தது இதற்குள் பாடசாலை மணி 'கிணு கிணு' என்று ஒலிக்கவே கமலா வகுப்பிற்குப் போனாள். அவளைத் தொடர்ந்து கனகமும் சென்றாள். நல்ல வேளை! இந்தமட்டிலாவது மணியடித்ததே. ஆனாலும் பாடசாலை விட்டபின்பு என்னத்தைச் சொல்வது?

வகுப்புக்குச் சென்ற கனகத்தை இரண்டாம்வகுப்புக் குழந்தைகள் கலகலத்து வரவேற்றார்கள். கனகம் அந்த வகுப்பிற்குப் பாட்டுச் சொல்லிக்கொடுக்க மட்டுந்தான் வருகிறாள். பாடுவதிற்றான் குழந்தைகளுக்கு எத்தனை ஆசை!

பிள்ளைகளின் குதூகலத்தையும் சிரிப்பையுங் கண்ட கனகம் தானும் சிரிக்க முயன்றாள். ஆனால் பட்டமரம் தளிர்விடுவதுண்டா? பந்தருக்கு நாட்டி

யிருக்கும் பட்ட மரத்திலே கடதாசிப் பூக்களைக் கட்டி வைத்தால் அது செடியாகி விடுமா? சிரிக்க முயன்ற அந்த முயற்சியும் பந்தற் கப்பிற் கடதாசிப் பூ கட்டிய மாதிரித்தான் இருந்தது.

எப்படியோ கனகம், பிள்ளைகளை அர்த்த சந்திர வடிவமாக வளைத்து நிறுத்தி, நேற்றுவிட்ட இடத்திலிருந்து மகா கவி பாரதியாரின் பாடலைச் சொல்லிக் கொடுத்தாள்.

துன்பம் நெருங்கி வந்தபோதும்—நீ
சோர்ந்து விடலாகாது பாப்பா
அன்பு மிகுந்ததெய்வம் உண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.

பாரதியார் இந்தப்பாட்டை பாப்பாக்களுக்காகவா பாடினார்? அவர்களுக்குத் துன்பம் என்ற ஒன்று உண்டா? மோட்ச இராட்சியமே அவர்களைப்போன்றவருடையதுதானே. பாரதிக்கு இது தெரியாமலா இருந்தது? அவர் கனகத்தைப்போன்ற பெரிய பாப்பாக்ளுக்குத்தான் இதைப்பாடியிருக்க வேண்டும்!

திரும்பத் திரும்ப அந்த அடிகளைப் பாடுகையில் கனகத்துக்கு ஓர் ஆறுதலுண்டாயிற்று. ஆனால் அந்தத் துன்பம் மறக்கக்கூடிய துன்பமா?

'திறந்த வீட்டில் அழையாமலே புகுந்துகொள்ளும் தெரு நாயைப்போல நடராஜா போய்விட்டார்; இனி வரமாட்டார்' என்ற நினைவு அவள் மனத்துட் புகுகையில், வானமண்டலத்தின் தத்துவங்கள் அசைக்கப்



பட்டு அண்டகோளங்கள் இடம்பெயர்ந்து வெடித்து யுகாந்த கால அக்கினியே அவள் மனத்துள் இரைச்சலோடு எரிவதைப்போல இருந்தது அவள் தலை சுற்றியது. நிற்கமுடியாமற் கீழே விழவேண்டும்போல இருந்தது.

கனகம் லீவு கேட்டு ஒரு துண்டு எழுதித் தலைமை ஆசிரியைக்கு அனுப்பிவிட்டுத் தன் அறைக்குட் போய்க் கட்டிலிற் தொப்பென்று சாய்ந்தாள். மடை திறந்த வெள்ளப் பிரவாகமாய், இத்தனை நேரமும் தடுத்து வைக்கப்பட்டிருந்த அழுகை பீறிட்டுக் கொண்டு பாய்ந்தது.

அழுது ஓய்ந்த கனகம் மறுபடியும் நடராஜனைத் தான் நினைத்துப் பார்த்தாள். 'அவர் கூப்பிட்டபோதே நான் வருகிறேன் என்று சொல்லியிருந்தால்'—மார்கழி மாதத்துக் கன்னங் கனிந்த இருளில் பளிச்சென்று மின்னும் மின்னலைப்போல அந்த நினைவே அவளுக்கு ஒரு சுகத்தைக் கொடுத்தது. ஆனால் மின்னலின் பிரகாசம் எத்தனை நேரத்திற்கு இருக்கும்? மறுபடியும் இருட்டுத்தான். அருமையாகக் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கைநழுவ விட்டதன் பேதைமைக்கு நொந்துகொண்டாள்.

நேற்று என்ற முடிவும் நாளை என்ற பிறப்பும் இல்லாத நித்திய நரகம்போல முடிவற்ற தன் துன்ப நினைவுகளில் மீளமுடியாத கனகம் கலங்கிக்கொண்டிருக்கையில் நடராஜா பஸ்ஸில் ஏறிக்கொண்டு மட்டக்களப்புக்குப் போய்க்கொண்டிருந்தான். அப்பா கொட்டிய விஷம் தியாகுவின் மந்திரத்திற் கட்டுண்டு இதுவரை கடிவாயிற்தான் இருந்தது. இப்போது அந்த விஷம் தடையை மீறிக்கொண்டு உடலெங்குமே பரந்து சிரசைத் தாக்குகையில் அவன் கொஞ்சங் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருந்தான்; தெருவிலே குப்

பைக்கடதாசியை மேய்ந்து திரியும் பஞ்சத்திலடிபட்ட மாட்டின் கண்களைப்போல. அவன் கண்கள் பெருத்துக் கலங்குகையில் அவைகளில் ஒரு சோகம் ததும்பி நின்றது. அவைகள் பார்க்கும் சக்தியையே இழந்துவிட்டனவா? கார்கால மழையிற் செழித்து நின்ற காட்டுப் பற்றைகளும், தூரத்தே பசுமை போர்த்தியிருந்த வயல்களும், தண்ணென்றிருந்த வாவியும், செழுமையாய்க் கொழுமையாய்க் கொம்பைச் சுற்றிக் கொண்டிருக்கும் வெற்றிலைக் கொடிகளும் சூழ்ந்த அந்தப் பிரதேசத்தில் வண்டி போய்க்கொண்டிருக்கையில் அவனுக்கு மட்டும் எங்கேயோ கானல் தெரியும் பாலைவனத்துக்கூடாகப் போவது போலத் தோன்றிற்று.

மட்டக்களப்புக்கு வண்டி வந்தபோது, அதை விட்டிறங்கும் நடராஜனுக்கு எங்கே போவது? என்று தெரியவில்லை. மறுபடியும் கொழும்புக்குப் போவதா? கொழும்புக்குப் போனுற் தியாகுவிற்கு என்ன சொல்வது? 'அவள் வரமாட்டேன் என்றுவிட்டாள்' என்று நா கூசாமல் எப்படித்தான் சொல்வது?

யோசித்தபடியே உச்சிவெயிலில் புளியந்தீவுப் பாலத்தின் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்முன். கீழே நீலவானத்தைப் பிரதிபலித்துத் தெளிந்து நிற்கும் மட்டக்களப்பு வாவி 'நான் பாடும் மீன்களை மட்டுமல்ல. வாழத்தகுதியற்ற வாழ வேண்டாத எத்தனையோ காதலர்களையும் என்னுள்ளே வைத்திருக்கிறேன்' என்று சொல்வதைப்போல மெதுவாகத் தன் சிற்றலைகளைக் கரையில் மோதி நுரைக்க வைத்தது. இரும்புக்கம்பிகளைப் பிடித்தவாறு எதையோ தீர்மானித்த நடராஜன் முன்னுல் சற்றுத்தூரத்தில் செல்வராஜன் காணப்பட்டான். ஆம் செல்லன் அவனை நோக்கித்தான் வந்துகொண்டிருக்கிறுன்.

---

## 29

### கரவு

செல்வராஜனைக் கண்ட நடராஜன் தடாரென்று ஒரு கடைக்குள் புகுந்து தன்னை மறைத்துக்கொண்டான். செல்லனின் முகத்தில் விழிக்க அவனுக்குப் பயமாகவும் இருக்கலாம். வெட்கமாகவும் இருக்கலாம். அல்லது பழிவாங்கும் வஞ்சகமாகவும் இருக்கலாம். எப்படியிருப்பினும் நடராஜன் தன் மைத்துனனின் கண்களிற் தெரிபடவே விரும்பவில்லை.

ஆனுலும் நடராஜன் தீக்கோழியல்ல. மணலுக்குட் தன் தலையைப் புதைத்துக்கொண்டால் உலகத்தின் கண்களே குருடாகிவிடும் என்று அவன் நினைக்கவில்லை. எங்கே செல்லன் தன்னைக் கண்டுவிடுவானே என்ற பயத்திற் செல்லன் வந்த திக்கையே, பாடசாலைக்கு ஒளித்த சிறுவன் ஆசிரியர் வந்துவிடுவாரோ என்று பதட்டத்தோடு பார்க்கிறதுபோலப், பார்த்துக்கொண்டு இருந்தான். அவன் பார்வையில் எதிரே வந்துகொண்டிருந்த செல்லன் சந்தியைத் தாண்டி அடுத்த தெருவிற் போய்விட்டது தெரிந்தது. நடராஜன் பெருமூச்சு ஒன்றை நீளமாக விட்டான். கண்டம் ஒன்று கழிந்ததுபோல இருந்தது அவனுக்கு. ஆனல் அதற்குள் யாரோ அவன் தோளைத் தட்டியவாறே "ஹலோ, எப்படி வந்தாய்?" என்று கேட்டான்.

நடராஜன் திரும்பிப் பார்த்தான். ஒரு 'அரை இடம்' திரும்பிய அந்த நொடிக்குள் செல்லன்தான்

வந்துவிட்டானே என்று அவன் மனம் எண்ணிவிட்டது. ஆனால் அங்கு நின்றவன் செல்லனல்ல. நடராஜனின் கல்லூரி நண்பன் ஒருவன். அவன் பெயர்கூட இப்போது நடராஜனுக்கு ஞாபகமில்லை. ஆனாலும் நடராஜன் சிரித்துக்கொண்டே "காலையிலேதான் வந்தேன்" என்றான்.

"பாடசாலைக்கு வரவில்லையா? இன்றைக்குக் கல்லூரிக் கட்டிட நிதிக்காக நாடகம் ஒன்று நடத்துகிறோம் அதற்கு ரிக்கற் விற்கத்தான் வந்தோம். செல்லன் கூட வந்தான். என்னோடு இங்கேதான் நின்றான். அவனைக் காணவில்லையா?' என்று மூச்சுவிடாமற் கேட்டான் கணேசன்.

"பார்த்தேனே; அவன் அவசரமாகப் போகிறான். நான் பிறகு பாடசாலைப் பக்கம் வருகிறேனே" என்று நெஞ்சறியப் பொய் சொன்னான் நடராஜன்.

கணேசனும் அவசர அவசரமாக, நடராஜனிடம் ஒரு முதலாம் வகுப்பு ரிக்கற்றைக் கொடுத்துவிட்டு அவ்விடத்தைவிட்டு வெளியேறினான்.

அவன் வெளியேறியதுமே நடராஜன் தான் இனி மட்டக்களப்பிலேயே நிற்கக்கூடாது என்று தீர்மானித்துக்கொண்டான். ஆனால் எங்கேபோவது? கொழும்புக்குப் போகவும் அவன் விரும்பவில்லை. நேரடியாக ஹற்றனுக்குப் போய் உத்தியோகத்தைக் கையேற்கலாம் என்றாலோ இன்னமும் முதலாந் திகதிக்கு ஆறு நாட்கள் இருந்தன. அதற்கு முன்னே அங்கே போவது கௌரவக் குறைவாகப்பட்டது. ஆனாலும் 'காதற்ற



ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே' என்று யாரோ பரதேசி சொன்னதைக் கேட்டுக் கட்டிய மனைவியையும், கடலிற் கலங்களையும், காவிரிப்பூம் பட்டினத்தையுமே விட்டுச் சென்ற திருவெண்காடரைப் போல அவனும் நடந்தான். அவன் பின்னாற் கனகமே வரமாட்டேன் என்று விட்டாள். இனி இந்த உலகத்தில் அவன் பின்னால் வர என்னதான் இருக்கிறது. ஆகவே கஞ்சாப் போதையில் கால் போன திக்கில் நடக்கும் பைராகியைப்போல நடந்தான். அப்போது உச்சி வெயிலாக இருந்தது. மந்தமற்ற ஆகாய வெளியை நீண்டு ஒடுங்கிக் கிடந்த மட்டக்களப்பு வாவி பிரதிபலிக்கையில், அந்த வாவி அவனைப்போலவே பற்றற்றதாய்த் தோன்றிற்று. ஆனால் அதன் தெளிவுக்கும் இவன் குழம்பிய மனதுக்குந்தான் எத்தனை வேறுபாடு. அவன் நடந்தான்.

அவன் பின்னால் மட்டக்களப்புப் பட்டினம் கொஞ்சம் கொஞ்சமாகக் கழிந்துகொண்டிருந்தது. விருந்தினரை இன்முகங் காட்டி வருக வருக என்று அழைக்கும் பண்புவாய்ந்த அந்த நகரம் அவனைப் 'போ வெளியே' என்று துரத்துவதுபோல இருந்தது. நடந்துகொண்டே வந்தவன் ஊருக்கு ஒதுக்குப் புறமாக இருந்த வதுளை பஸ் ஸ்தானத்திற்கு வந்தபோது அங்கே பஸ் ஒன்று புறப்பட ஆயத்தமாக நின்றது. முன் பின் யோசிக்காமல் அந்த வண்டியில் ஏறிக்கொண்டான். அவனுக்கென்ன? சட்டை கழற்றிய பாம்பைப்போல ஊரையே துறந்துவிட்டான். மேலும் அவன் சட்டைப் பையிலே தகப்பனார் கொழும்புக்கு வந்திருந்தபோது கொடுத்துவிட்டுப்போன இருநூறு

ரூபாய் இருக்கிறது. ஐந்தாறு நாட்களுக்கு அவன் வதுளையில் இருந்தாலென்ன? வங்காளத்துக்குப் போனுலென்ன? பஸ் வண்டி புறப்பட்டது.

இதற்குள் கணேசன் மூலமாக நடராஜனின் வருகையை அறிந்த செல்வராஜன், தன் வேலைகளை எல்லாம் மறந்து, நடராஜனைத் தேட ஆரம்பித்தான். ஆனுற் குறிப்பாக எந்த இடமென்று தேடுவது? ஆனுற் கணேசன் நடராஜன் சாயந்தரம் பாடசாலைக்கு நிச்சயமாக வருவான் என்று அவனுக்கு நம்பிக்கையூட்டினுன்.

அன்று பாடசாலையே அமர்க்களப்பட்டது நாடகத்தை அரங்கேற்றும் பணியில் மற்றெல்லாவற்றையுமே மறந்து தடபுடலாக இருந்த மாணவர்களுக்கு மத்தியிற் செல்லனுல் மனமொன்றி எந்த வேலையிலும் ஈடுபட முடியவில்லை. மேற்கில் மட்டக்களப்பு வாவியின் அப்பால் படுவான் கரையில் விழுந்து கொண்டிருந்த ரசவாத வித்தைக்காரனுன சூரியன், பாடசாலைச் சுற்றுப்புறத்திற் சடைத்துத் தரையோடு கவிந்து கிடக்கும் முந்திரிகை மரங்களையும் காற்றிலசைந்தாடிய அம் மரத்துக் கொம்புகளால் நன்ருகக் கூட்டிச் செருக்கப்பெற்று வெள்ளென்றிருக்கும் மணல்வெளியையும் பொன்மயமாக்கிக் கொண்டிருக்கையில், அந்தச் சாயங்கால மயக்கத்திற் செல்லனின் மனம் நடராஜனுக்காகத் தவித்துக் கொண்டிருந்தது. அவன் கண்கள் தெருவாயிலையே பார்த்துக்கொண்டிருந்தன.

ஆனுல் அந்தச் செக்கரில் மட்டுமல்ல, செக்கர் இருண்ட கருமையிற்கூட நடராஜன் வரவேயில்லை.



செல்லன் பெருமூச்சு விட்டபடியே "நாடகம் முடிந்தால் நாளைக்குப் பாடசாலைக்கு விடுமுறை கிடைக்கும். நடராஜன் சிலவேளை கனகத்திடம் கல்முனைக்குப் போயிருப்பான். அங்கே போய்ப் பார்த்துக் கொள்ளலாம்" என்று எண்ணிக்கொண்டான்.

பொழுது விடிந்ததும் செல்லன் கல்முனைக்குப் போனுன். இரண்டு நாட்களாக அழுதழுது மேலும் அழமுடியாமையினுல் அடங்கிப்போயிருந்த கனகத்திற்கு அண்ணனைக் கண்டதும் குருமண்ணைப் பீறிக் கொண்டு கிளம்பும் நீரூற்றைப்போல அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அண்ணனைக் கட்டியணைத்து அழவேண்டும் என்று அவள் விரும்பினுள். ஆனுற் சோகத்திற்குக்கூட எல்லையிருக்கின்றது போலும்! கனகத்தின் சோகமும் எல்லைக்கோட்டைத் தாண்டி விட்டபோது அவள் உணர்ச்சியற்று மரத்துப்போய் விட்டாள். மேலும் தன் அண்ணன் முன்னுல் அழுது அவனையும் கலங்கப்பண்ண அவள் விரும்பவில்லை. எனவே வடவாக்கினியைத் தன்னுள்ளே அடக்கி வைத்துக்கொண்டு மேலே தண்ணென்றிருக்கும் சமுத்திரம்போலத் தன் துக்கத்தையும் அங்கலாய்ப்பையும் தன்னுள்ளே அடக்கி வைத்துக் கொண்டு அண்ணனை வரவேற்றுள்.

சிறிதுநேரம் தன் தங்கையையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த செல்லன் "நடராஜன் வந்தானு?" என்று கேட்டான்.

"ஆம்" என்று சாதாரணமாகச் சொன்ன கனகம், பிறகும் அவன் தன் அண்ணனிடம் ஏதும்

சொல்லிவிட்டுப் போயிருப்பானே என்ற பயங்கலந்த ஆவலில் "உங்களிடம் வரவில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லையே" என்று வரட்சியாகச் சொன்னான் செல்லன்.

பயந்தெளிந்த கனகம் "அவருக்கு மட்டக் களப்பில் வேலையிருக்கிறதாம். அத்தோடு நேற்றே ரெயிலுக்குப் போகவேண்டும் என்று சொன்னார். லீவும் இல்லையாம் போய்விட்டார் போலும்" என்று அடுக்கினாள்.

"அப்போது அவனுக்குக் கோபம் எல்லாம் என் மேற்தானாக்கும்" என்று கேட்டு மெல்லச் சிரித்தான் செல்லன். அண்ணனின் சிரிப்புக் கூரான கத்தியாய்க் கனகத்தின் இதயத்தை வெட்டுகையில், அந்த வேதனையை வெளிக்காட்ட முடியாதபடி உள்ளுக்குள்ளேயே அனுபவிக்கையிற் கனகம் குற்றுயிராகக் கிடக்கும் விலங்குபோல முனகினாள்.

அவள் முனகலின் அர்த்தத்தை உணர்ந்து கொள்ளாத செல்லன் எனக்குச் சோதனை முடிந்ததும் வீட்டுக்குப் போகலாம். உனக்கெப்போது விடுதலை" என்று கேட்டான்.

"விடுதலையைப்பற்றி என்ன? இந்த விடுதலைக்கு நான் ஊருக்கே வரவில்லை; நீங்கள் போங்கள்" என்றாள் கனகம்.



"நடராஜன் ஊருக்கு வரமாட்டானா?"

"அப்படித்தான் நினைக்கிறேன்" என்றாள் கனகம்.

'அதற்காகத்தான் நீயும் வரமாட்டாயாக்கும்' என்று கேட்க நினைத்தான் செல்லன். ஆனால் தங்கையிடமா அப்படிக் கேட்பது என்ற எண்ணம் அவனைக் கேட்க விடவில்லை. "பரீட்சை முடிந்தால் நடராஜன் கொழும்பில் என்ன செய்யப் போகிறானாம்?" என்றுதான் கேட்டான்.

"உத்தியோகம் கிடைக்குமட்டும் கொழும்பிலேதான் நிற்பாராக்கும்" என்றாள் கனகம்.

"அப்படியா? அப்படியானால் பரீட்சை முடிந்ததும் நான் கொழும்புக்குப் போய் அவனைப் பார்க்கிறேன்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு வந்தான். தெருவிலிறங்கி நடக்கையில் சுந்தரம் அவன் கண்களிற் தோன்றினான்.

---

# 30

## பொருப்பகம் சேர்ந்த காக்கை

'உண்மையான துன்பம் என்பது துன்பத்தைத் தரக்கூடிய அனுபவங்களிலோ நிகழ்ச்சிகளிலோ செயல்களிலோ இல்லை. அவற்றை உணர்ச்சி பூர்வமாக எண்ணிப் பார்ப்பதிற்றான் இருக்கிறது'. என்று சிக்மன்ட் ப்ராய்ட் கண்ட முடிவுதான் எத்தனை உண்மையானது! மாமனார் தன்னை வெளியே போ என்று விரட்டியபோது, கனகம் நான் உங்களுடன் வரமாட்டேன் என்று சொல்லியபோதுகூட நடராஜன் அவ்வளவு கலக்கமடையவில்லை. ஏதோ ஓர்வித வெறியுணர்ச்சி அவனை ஆட்டிக்கொண்டு அலைக்கழித்தது என்பது உண்மைதான். ஆனால் அதே நிகழ்ச்சிகளைத் திரும்பவும் மனதில் எண்ணிப் பார்த்தபோதுதான் அவனுக்குத் தாங்கமாட்டாத துக்கமாக இருந்தது. இனிமேற் காணமாட்டோம் என்ற கசப்பான நம்பிக்கையின் முடிபான தாயை எண்ணிக் கலங்குவதா? அல்லது கனகத்தை எண்ணிக் கலங்குவதா? அல்லது திசைதெரியாத கடலிலே தனிமையிற் தவிக்கும் தோணி போன்ற தன்னையே அவன் எண்ணிக் கலங்குவதா? எதற்காகக் கலங்குவது?

காதல் இனிமையான மென்மையான உணர்வுதான். ஆனாற் கம்பிக்கயிற்றிலே நடப்பது போன்ற அசுரசாதனையோடு அந்த உணர்ச்சியுடன் பழகிக்



கொண்டால் எல்லாம் இன்பமயந்தான், கொஞ்சம் கால் தடுக்கினாற்கூட அதலபாதாளத்தில் விழவேண்டியதே. ஒருகுடந் தேனிற் துளி விஷம் போல அந்த இன்ப உணர்விற் சிறுகுறை ஏற்பட்டாலும் அந்த உணர்வு முழுமையுமே கொடூரமானதாகக், குரூரமாக மாறிவிடவேண்டுமா? அப்பா! காதல் மிருகத்தனமான உணர்ச்சிதான்.

வதுளையிலே, 'உயர்தர' விடுதியொன்றிற் தங்கிய நடராஜன் மூன்று நாட்களாக மிருகத்தனமாகவே நடந்தான். குடி குடி என்று குடித்தான். தானே தன்னை மறந்த 'யோகநிலையில்' இருந்தவனுக்கு முதலாம் திகதியும் வெறுமையாகிவிட்ட பணப்பையும் விழிப்பைக் கொடுத்தன. ஆகவே அதற்கு மேலும் வதுளையிற் தங்கியிருக்க முடியாததினால் நடராஜன் ஹற்றனுக்குப் போனான்.

அங்கு போன நடராஜனைத் தோட்ட முதலாளி ஆநந்தமாகவே வரவேற்றார். நடராஜன் வேலையை ஒப்புக்கொண்டான்.

இலங்கைத் தேயிலைத் தோட்டங்கள் இருக்கிறதே, அவை புதுமைப்பித்தனின் பொன்கரம் மாதிரித்தான். அந்தப்பகுதியிற் சிலகாலம் வசிக்க நேர்ந்தால் எந்தக் கல்நெஞ்சனும் அங்கு மக்கள் வாழும், வாழத்துடித்துக் கொண்டிருக்கும் நிலையைக்கண்டு இரத்தக் கண்ணீர் வடிக்காமலிருக்க முடியாது!

நடராஜனைப் பொறுத்த வரையில் புதுமைப்பித்தன் தொடக்கம் இந்தக்காலத்துக்குக் குருத்து

எழுத்தாளர்கள் வரை தமிழ் வளர்த்த, வளர்க்கின்ற எல்லாருமே தென்பாண்டி நாடான திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்தவர்கள்தான் என்ற ஒரு அபிப்பிராயம் அவன் மனதில் பதிந்துபோயிருந்தது. ஆனால் ஹற்றனுக்கு வந்தபோது அந்த பாண்டி நாட்டுத் தமிழர் தமிழை மட்டுமல்ல, சேய்நாடான இலங்கையின் பொருளாதாரம் என்ற முதுகெலும்பையே வளர்த்தவர்களும் அவர்கள்தான் என்பதை தெரிந்து கொண்டான்; ஆம் தேயிலைத் தோட்டத்துக் கூலிகளில் மிகப் பெரும்பான்மையினர் திருநெல்வேலித் தமிழர்களே! தனக்கு மிகநெருங்கிய மக்களையிட்டுத்தான் பாரதியும் 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற பாட்டைப் பாடிப் பிரலாபிக்கிறான் போலும்!

ஆம்; அவர்கள் என்ன? மனிதர்களா? மிருகங்களா? பத்தடிச் சதுர அறைக்குள்ளே ஒரு பெரிய குடும்பமே வாழ்கிறது. உப்புப்பொரிந்து விழும் மண் சுவர், தண்ணீர் கசியும் தளம் புகையடித்துக் கிடக்கும் கூரை இந்தப் 'பொன்னகரத்துள்ளே' இரவு முழுக்க அடைந்து கிடக்கும் மனிதக்கூடுகள் அதிகாலையில் வெளியேறி வேலைக்குப் போகின்றன. பாலன் தொடக்கம் விருத்தாப்பியர் வரையில் எல்லார்க்கும் வேலை. பனியால் நனைந்து, மழையாற் கொடுகி அந்த மலைமேடுகளிற் பிள்ளைகள் 'பில்லு' வெட்டுகிறார்கள். ஆண்கள் பயளையிடுகிறார்கள். பெண்கள் கொழுந்து எடுக்கிறார்கள். இனி உழைக்கச்சக்தியில்லை என்றவரைக்கும் உழைப்பு: அதன் பிறகு அவனுக்குத் தொழில் இல்லை. அதுமட்டுமா



அவனுக்கு குடியிருக்க வீடில்லை. பிறகு இல்லிடமற்றவனுக்கு நல்லிடமேயில்லை! தேயிலைச்செடிக்குப் பயளையாகித் தான் பிறந்ததின் பயனைக் கடைசி வரைக்கும் இந்த ஸ்ரீலங்காவிற்குச் சமர்ப்பணம் செய்து மாண்டுவிடுகிறான்.

சிந்திக்கத் தெரிந்த நடராஜனுக்கு இந்த மக்களின் வாழ்க்கை மனத்தை இளக்கிற்று. இதனால் மலைநாட்டிலே சோனாவாரியாகக் காத்திராப் பிரகாரமாகக் கொட்டும் மழையோ, வான் முகடுகளைத் தொட்டுக்கொண்டு கம்பீரமாக எழுந்து நிற்கும் மலைத்தொடர்களோ, அந்த நெடுங்குடுமி மலைத்தொடர்களின் மீது புகையாய்ப் பரந்து படிந்திருக்கும் பனிப்புகாரோ, வெள்ளியை உருக்கிக் கவிழ்த்துவிட்டதுபோல ஓடிக்கொண்டிருக்கும் மலையருவிகளின் சுகமோ, கண்ணைத்த தொலைவரை பரந்து கிடக்கும் பசுமையின் குழுமையோ ஒன்றுமே தெரியவில்லை. தனக்கென்று கொடுக்கப்பட்டிருந்த அழகான பங்களாவின் தனிமையில் நீண்ட இரவுகளின் பயங்கரத்தில் அவன் அந்த மக்களைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான். ஆம்; கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்ட குழந்தையைப் போல பழக்கவழக்கம் பாஷை எல்லாமே வேறுபட்ட சூழ்நிலையில், தன்னைப்போலவே அனாதையாக வந்துவிட்ட தமிழர்கள் இந்தத் தாழ்வான நிலையில் வாழ்வதை எண்ணிப் பார்க்காமலிருக்கத் தமிழன் எவனுக்கும் மனம் வர முடியுமா? இலங்கை இந்தியச் சிக்கல் தமிழனைப் பொறுத்த வரையில் ஓர் இனச்சிக்கல் என்று கூடச் சொல்லிவிடலாம். தேயிலைத் தோட்டத்து மக்கள்

எல்லாரும் வட இந்தியர்களாக இருப்பின் தமிழன் அவர்களை இப்போதே இலங்கையை விட்டுப் போங்கள் என்று விரட்டிவிடுவானோ என்னவோ! எப்படியிருப்பினும் நடராஜனால் அந்த மக்கள்மேல் விஷேட அனுதாபங்கொள்ளாமலிருக்க முடியவில்லை.

மேலும் தள்ளாடும் மனத்தை ஒரு நிலைப்படுத்திச் சாந்தியடையவும் அவன் அந்த மக்களுக்குத் தொண்டு செய்ய முற்பட்டான். தொண்டோ? தோட்டத்து ஆஸ்பத்திரியில் குயினையினின் தண்ணீரும், இருமல் கலவையும் தான் இருந்தது. இதை வைத்துக்கொண்டு அவன் என்னதான் செய்வது? ஆனாலும் சேவா உணர்ச்சியுடன் அவன் செய்த வைத்தியம் அங்குள்ளோர் பலர்க்குப் பெருத்த ஆறுதலாக இருந்தது. சொந்தப் பணத்தையே செலவழித்துப் புதுப்புது மருந்துகளை எடுத்தான். ஆயிரம் பேரைக்கொன்றால் அரைப்பரிகாரியாமே. நடராஜனும் தைரியத்துடன் தன் தொழிலை நடத்தினான். அவனுக்கு வெற்றிகிட்டியது. தோட்டத்தில் மட்டுமல்ல அக்கம் பக்கத்துக் கிராமங்களிலும் அவன் புகழ் பரவியது.

என்றாலும் அவன் கூடியவரை தன்னை மறைத்து வைத்துக்கொள்ளவே முயன்றான். ஊரிலிருந்து யாரும் தன்னைத் தேடிவந்து விடுவார்களோ என்ற பயம் அவனை அரித்துக்கொண்டேயிருந்தது. இந்தப் பயத்தினால் தோட்டத்துக்குள்ளேயே தன் தொழிலை நிறுத்திக்கொண்டு அந்தக் கூலிகளுக்குச் சிக்கனத்தின் அவசியத்தைப்பற்றியும் ஓர் கிராமமாக அவர்கள்



சேர்ந்து வாழவேண்டிய தேவையைப் பற்றியும் பிரசாரம் பண்ணுவதே அவன் வேலையாகிவிட்டது. இந்த வாழ்வு அவனுக்கு விருப்பமாகவும் இருந்தது.

ஆனாலும் கனகத்தை அவனால் மறக்க முடியவில்லை. தண்டியலங்காரர் சொன்னது போலப் பொருப்பகஞ் சேர்ந்த பொல்லாக் கருங்காக்கை பொன்னிறமாகலாம். பொன்னிறமானாலும் காக்கை காக்கை தானே, நடராஜனும் மலைநாட்டுத் தமிழர் பிரச்சினைகளிலீடுபட்டு ஒரு தொண்டனாக மாறியிருக்கலாம். ஆனால் அவன் கனகத்தின் காதலனான நடராஜன் அல்லாமல் வேறு எதுவும் ஆகிவிடலாமா?

பகல் முழுக்க ஏன் முன்னிரவுகளிலும் அவன் அவளை மறந்திருக்கலாம் ஆனால் கும்மென்றிருட்டிக் கிடக்கும் வைகறையிற் சில்லென்றடிக்கும் வாடைக் குளிரில் நித்திரையும் இல்லாமல், அதே நேரத்தில் விழித்திருக்கவும் முடியாமற் கட்டிலிலே கண்ணை மூடியும் திறந்தும் வைத்துக்கொண்டு அவஸ்தைப்படுகையில் அவனால் தமிழ்நாட்டின் ஒரு மூலையில் தனக்காகக் கலங்கிக்கொண்டிருக்கும் கனகத்தைப் பற்றி அவனால் எண்ணாமலிருக்க முடியவில்லை; அந்த எண்ணத்தை அவனால் நிறுத்த முடியவில்லை; துரத்த இயலவில்லை.

அன்றைக்கும் அப்படித்தான் நடராஜன் படுத்துக்கொண்டிருந்தான். கதவு தட்டுப்படும் சப்தம் கேட்டது. யாரது? என்று கேட்டுக்கொண்டே

எழுந்தான். கதவைத் திறந்தபோது காற்றேடு பெய்த மழை வீட்டுக்குள்ளே சலார் சலார் என்று நீரை இறைத்தது. கையிலே லாந்தரை வைத்துக் கொண்டு ராமசாமி நின்றான்.

“என்னது இந்நேரத்தில்?” “ரொம்பக் கடுமை யான வருத்தம் வரணும் நீங்க”

வழக்கமாகவே நடராஜன் இப்படிச் சந்தர்ப்பங் களில் அடுத்த கேள்வி கேட்பதில்லை. அவசர அவ சரமாகக் கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு கொட் டும் மழையில் நடந்தான். இரண்டு மைல் தூரம் மலைப்பாதையில் நடந்து ஊரையடைந்து வீட்டுக் குள் காலடி எடுத்து வைத்தபோது......

நடராஜனுக்குத் தன் கண்களையே நம்ப முடிய வில்லை. கனகம் அங்கே எப்படி வந்தாள்? எப்போ வந்தாள்?

நடராஜன் சிலையாகி நின்றான்.

# 31

## குந்தகம்

சிலையாக நின்ற நடராஜனை “வாருங்கள் இப் படி” என்ற மென்குரல் உணர்ச்சியைக் கொடுத்தது.

இப்படி ஒரு மென்குரலைக் கேட்டு நடராஜ னுக்கு அதிக காலமாகிவிட்டிருந்தது. அப்படி ஒரு மென்குரல் கேட்காதபடியினுற்றனே அவன் வாழ்க்கை இப்படிக் கரடு முரடான பாதையிற் கூடச் சென்றுகொண்டிருக்கிறது. கர்ம யோகியான நேருஜி கூடப் பெண்களின் இனிமையான குரலைக் கேட்க முடியாதது சிறையில் மிகப் பெரிய துன்ப மாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, அந்த இனிமையான குரலினுல் உயி ரேறிய நடராஜன் மெதுவாக வீட்டினுள்ளே நடந்து கொண்டிருந்தான்.

அவன் முன்னுல் நடந்து கொண்டிருந்த கனகத் திற்கும் அந்தப் பெண்ணிற்குந்தான் எவ்வளவு ஒற்றுமை! அதுவும் பின்னுற் பார்க்கையில் இருவ ரும் ஒரே அச்சில் வார்த்தது போலத்தான் இருந்தது. ஒடிந்து விழுவது போன்றிருந்த அதே இடை; அந்த இடை நீண்டு முதுகைத் தழுவிக்கொண்டிருந்த ஒற் றைச் சடைப்பின்னல்......

நடராஜன் கனகத்தைப் பிரிந்து வந்ததன்பின் எந்தப் பெண்ணையுமே இத்தனை சிரத்தையோடு கவ

னிக்கவில்லை. ஆனால் இவள் ஆடி அசைந்து மென்னடை நடக்கையில் அந்த நடையை நடராஜனாற் பார்க்காமலிருக்க முடியவில்லை.

முன்னே சென்ற அந்தப் பெண் அறைக்குட் சென்றதும் திரும்பினாள். கர்ம யோகியைப்போல அந்த அறையின் கும்மிருட்டைத் துரத்தும் புனித சோபையோடு ஆடாமல் அசையாமல் எரிந்துகொண்டிருக்கும் மேசை விளக்கின் தெளிவற்ற ஒளியில், அவள் முகம் அந்திச் சூரியனின் செவ்வொளியைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் சலவைக் கல்லான பூவைப்போல விகசித்தது. தண்டினடியிலே தலை கீழாகத் தொங்கும் தாமரை யிதழைப்போன்ற முகம். கூரான நாடி, நெருங்கி நிரைத்திருந்த அவள் பல் வரிசையிற் கடைவாய்க்குள் ஒன்றுமட்டும், இன்னொன்றின்மேல் ஏறிக்கொண்டு நின்றது, அவளின் முகத்துக்கு அழகையே கொடுத்தது. வலது கன்னத்திற் பேனையிலிருந்து சிந்திய துளிமைபோல இருந்த மச்சம் அவளுக்குக் 'கண்ணூறு' படாமற் சிருஷ்டி கர்த்தாவே வைத்த குறைபோலத் தோன்றிற்று.

வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் நடராஜன். அவள் தலையைக் குனிந்தவாறே "இதோ அம்மா" என்றாள்.

எதிரே கட்டிலிற் பழஞ் சீலையைப்போலத் துவண்டு கிடந்தாள் அவள் தாய். கன்னங்கள் காய்ந்த ரொட்டியைப்போல ஒட்டி வெளுத்துக் கிடந்தன. தலையின் முன்பக்கம் அப்படியே நரைத்துக்



குப்பையின்மேற் சாம்பரை விசிறி எறிந்ததுபோலக் கிடந்தது. அவள் கொர், கொர் என்றிழுத்த இழுப்பு அந்தச் சூழலின் செயலற்ற மௌனத்திற்குப் பகைப் புலமாக நின்றது.

நடராஜன் கதிரையை இழுத்துப் போட்டு இருந்து கொண்டே அந்தக் கிழவியைப் பரிசோதிக்கத் தொடங்கினான். அந்தப் பெண் அவன் முன்னாற் சிலைபோல் நிற்கலானாள் சுவருக்கு மேலே அமைதியாக எரியும் தேங்காய் எண்ணெய் அகல் விளக்கின் ஒளியில் தன் ஐந்து காயங்களிலும் குருதி பெருகச் சிலுவையிலே தொங்கிக்கொண்டிருந்த கிறீஸ்து நாதரின் படம் தலையைக் குனிந்து அவர்கள் எல்லாரையுமே பார்த்துக்கொண்டிருந்தது.

தன் பரிசோதனைகளை முடித்த நடராஜன், பலியாடுபோலத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்ற பெண்ணிடம் கேட்டான். "இப்போது எத்தனை நாளாகிறது?" என்று.

"இரண்டு நாட்களே ஆகின்றன. ஆனால் இந்த மாதிரி அம்மாவுக்கு அடிக்கடி குளிர் அதிகமாயிருக்கும் போதெல்லாம் வரும்" என்றாள் அவள்.

"எத்தனை காலமாக இருக்கிறது?" என்றான் நடராஜன்.

"ஐந்து வருடங்களுக்கு மேலாக" என்றாள். அவள்.

தண்ணீர் வெந்நீராக இருந்தாலும் நெருப்பை அவிக்கும். தொழில் முறையில் இயந்திரம் மாதிரி

அவளோடு பேசுவதிலும் நடராஜனுக்கு ஏதோ ஒரு திருப்தி இருக்கவே இருந்தது. சரி, என்னால் முடிந்த வரையும் முயன்று பார்க்கிறேன். அதிகமாகக் குணப்படுத்த முடியும் என்றுதான் எண்ணுகிறேன்" என்றே தன் கைப்பைக்குள் இருந்து ஏதோ மருந்தை எடுத்துக் கொடுத்து விட்டுத் துண்டிலே 'டாக்குத்தர் பாணியில்' ஒருவருமே வாசிக்க முடியாத ஏதோ ஒரு மருந்தை எழுதினான், நடராஜன்.

வெளியே விருப்பமற்ற புருஷனை வரித்துக் கொண்ட புதுமணப் பெண்ணைப்போல வானமும் அழுது தீர்த்துக்கொண்டேயிருந்தது பல்லைக் கிட்ட வைக்கும் அந்தக் குளிரிலே, கீழெல்லாம் தெப்பமாக நனைந்துவிட்ட காற்சட்டையோடு நடராஜன் ஏதோ வெல்லாம் எண்ணிக் கொடுகிக்கொண்டிருந்தான். இயல்பாக இரக்க சுபாவமுள்ள அவன் உள்ளம் தனக்கு முன்னாற் கொடிபோன்று நடந்து சென்ற பெண்ணை நினைத்து இரங்கியது.

இதற்குள் அந்தப் பெண் கையிலே ஆவி பறக்கும் கோப்பையோடு அவன் எதிரில் மீண்டும் வந்து கோப்பிக் கோப்பையை நீட்டினாள். நிர்மானுஷ்யமான காட்டில் விடப்பட்ட இலக்கிய இரசிகனுக்குத் திடீரென்று கம்பராமாயணம் கிடைத்தால் எப்படி யிருக்கும்? மலைநாட்டின் வெடுவெடுக்கும் குளிரில், அதுவும் அர்த்த இராத்திரியில் இந்தக் கோப்பி கிடைத்தபோது நடராஜன் அருக்கர்மல் அதனை வாங்கி இரசித்துக் குடித்துக்கொண்டிருந்தான்.

அவன் குடித்துக்கொண்டிருக்கையில் அந்தப் பெண் கேட்டாள்: "அம்மாவுக்கு………"



அந்தப் பேச்சை அவள் தொடங்க முன்னமே அதிலிருந்த ஏக்கத்தின் கனத்தை நடராஜன் உணர்ந்து கொண்டே "பயப்படும்படியாக ஒன்றுமில்லை" என்றான். ஆனாலும் இத்தனை காலமாக எத்தனையோ தெய்வங்கள் ஆற்றாத அப்பெண்ணின் கவலையை நடராஜனின் ஒரு வாக்கியம் ஆற்றிவிடப் போகிறது! மங்கிய விளக்கின் தெளிவற்ற ஒளியில் அவள் ஒரு சோக சித்திரமாகவே தோன்றினாள்.

நடராஜன் எதையோ மறந்தவன்போல "இவ்வளவு நேரமாகப் பேசுகிறோம்; தங்கள் பெயர், ஊர் ………"என்றிழுத்தான்.

நான் யாழ்ப்பாணம். நீங்களும் யாழ்ப்பாணந்தானே" என்று அவசரமாகக் கேட்டாள் அந்தப் பெண்.

"இல்லை, நான் திருகோணமலை" என்றான் நடராஜன்.

"அதிக நாட்களாக இங்கே இருக்கிறீர்களா?"

"மூன்று வருடங்களாக" என்றாள் அந்தப்பெண்.

வெளியே சோனாவாரியாகப் பெய்த மழை ஓய்ந்து விட்டது. நடராஜன் கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தான். மணி இரண்டு.

அவன் குறிப்பறிந்த அவள் "போகப்போகிறீர்களா?" என்றாள்.

"மழையும் ஓய்ந்துவிட்டது. போகத்தான் வேண்டும். இராமசாமியிடம் மருந்து கொடுத்து அனுப்பு

கிறேன். எழுதித்தந்திருக்கும் ஊசியை நாளைக்காலையில் வந்து அடிக்கிறேன்" என்று கொண்டே எழுந்தான்.

அவள் விரல் இடுக்குகளில் ஏதோ ஒன்றை வைத்துக் கொண்டே அவனிடம் கையை நீட்டினாள்.

அது பணமாகத்தானிருக்கும் என்பதை அனுமானித்த நடராஜன் "வேண்டாம், வேண்டாம்" என்று அவளைத் தடுத்துக்கொண்டே எழுந்து நடந்து வந்தான்.

அவனைத் தொடர்ந்த அந்தப்பெண் "நாளைக்கு எந்நேரம் வருவீர்கள்?" என்றாள்.

"ஆஸ்பத்திரிக்குப் போக முதல் ஏழரைக்கெல்லாம் வருகிறேன்" என்றவன் "தங்கள் பெயர்?" என்றிழுத்தான்.

"பிலோமினா" என்றாள் அவள்.

"சரி நான் வருகிறேன்" என்றுகொண்டே நடராஜன் வெளியேறினான். அரிக்கன் லாந்தரைப் பிடித்துக்கொண்டு முன்னால் நடந்த இராமசாமி "பாவம்! அந்த வாத்திப் பெண்ணு ரொம்ப நல்லவ. அவ அம்மாவுக்கு ஒரே பாயும் படுக்கையுந்தான்" என்றான்.

"அவள் வாத்தியாரா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் நடராஜன்.

"ஆஞ்சாமி, டவுனில்தான் படிப்பிக்கிறா" என்றான் இராமசாமி.

"அவ்வீட்டில் வேறு யாரும் இல்லையா?"

"மூணு நாலு வருஷமா அந்தப் பொண்ணுந் தாயுந்தான் அந்த வீட்டிலே இருக்கிறாங்க. லீவுக்குக்கூட ஊருக்குப் போறதில்லை" என்று இரக்கப் பட்டான் இராமசாமி.



இதற்குள் தோட்டத்துக்கு வந்துவிடவே, நடராஜன் மருந்தைக் கலந்து இராமசாமியிடம் கொடுத்து "நாளைக்கு வருகிறேன் என்று சொல்" என்றான்.

இராமசாமி போனதும் படுக்கையில் விழுந்த நடராஜன், பிலோமினாவை எண்ணிப் பார்த்தான். அழகான இளம் பெண் தன் நோயாளித் தாயாரோடு ஏன் இத்தனை தூரம் வந்திருக்கிறாள்? அந்த இருசாண் வயிறுக்குச் சோறு கொடுக்க அவர்கள் குடும்பத்தில் ஒருவருமே இல்லையா? முற்றிலும் புதிதான சூழலில், எவர் ஆதரவும் இல்லாமல் அவர்கள் எப்படித்தான் வாழ்கிறார்களோ...அவள் தாயாருக்கு ...ஆண்டவனே! நடராஜனுக்குத் தெரிந்த வைத்திய சாஸ்திரத்தில் அவள் வியாதிக்கு மருந்தில்லை. என்றே தோன்றிற்று. அப்படியாயினும் அப்பெண்ணின் கதி? நடராஜனுக்கு நித்திரை வரவில்லை. ஆம், நடராஜனைப் போன்ற மனம் படைத்தவன் வைத்திய சாஸ்திரத்திற்கே தகுதியற்றவன்! பிறர் துன்பத்தைத் தன் மனதிலே அனுபவித்து வருந்தித் தன் வாழ்வையே உருக்குலைத்துக் கொள்ளும் கலைஞனாக வேண்டியவன் ஏன்தான் இந்தத் தொழிலைப் படித்தானோ?

பிலோமினாவின் நினைவோடு, கனகத்தின் எண்ணம் தொடர்ந்து வந்தது. பிலோமினாவைப்போலத் தான் கனகமும்......ஆம், வாழ்க்கையில் ஒதுக்கப் பட்ட பெண்களுக்கெல்லாம் வாத்தியார் வேலைதான் கதி என்று எண்ணிக்கொண்டே நித்திரையாகி விட்டவன் எழுந்து பார்த்தபோது ஏழுமணிக்கு மேலாகி இருந்தது. அவன் எழுந்திருப்பதற்குள்ளாக வேலைக்காரன் வந்து "உங்களுக்குப் 'போன்' வந்திருக்கிறதாம்" என்றான்.

அவசரமாகத் தோட்டத்துரையின் வீட்டுக்குச் சென்று போனைக் கையில் எடுத்துக் கேட்கையில் எங்கிருந்தோ தியாகராசன் பேசலானான்.

# 32

## முடிவும் தொடர்பும்

நாட்கள் கடந்துவிட்டன. அம்பலவாணரின் கொதிப்பு நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்தது. தூண்டுகோல் இல்லாவிட்டால் நெய்விளக்கும் நன்றாக எரியாது. எரிச்சலுக்கும் கொதிப்பிற்கும் கூட எதிரிலே எதிரிகள் இல்லாவிட்டால் அவைகளும் நன்றாக எரிவதில்லை. ஆனாலும் இருளின் அமைதியிலே முணுக்கென்று எரியும் படுக்கையறை விளக்குப்போல அவர் உள்ளம் இலேசாக எரிந்துகொண்டுதான் இருந்தது.

இதற்குள், மார்கழிமாதம் சோதனை முடிந்து செல்வராஜன் ஊருக்கு வந்துவிட்டான். அவன் வருவதற்குச் சிலநாட்களுக்கு முன்பாகச் சுந்தரம் கல்லோயாப் பள்ளத்தாக்கில் எப்படியோ எல்லாமோ அலைந்து விட்டு ஊருக்கு வந்துவிட்டான்.

சுந்தரம் ஊருக்கு வந்ததும் வராததுமாக நடராஜனைப்பற்றிய செய்திகள் ஆகாயத்திலே திட்டுத் திட்டாய்க் கிடந்துருளும் மேகக்கூட்டம், குழந்தையின் கற்பனைக்குத் தக்கதாய் விதவித ரூபத்தை அடைவதுபோலப் பேசுபவரின் வாய்ச்சாலத்திற்குத் தக்கதாய் விசித்திர விசித்திரமான செய்திகளாகப் பரிணமித்தன.



இந்தச் செய்திகள் அம்பலவாணரின் காதுகளில் அடிபட்டபோது அவருள் மெதுவாக எரிந்து கொண்டிருந்த பொறாமைத் தீ மறுபடியும் அவர் அறிவு, பாசம் முதலான எல்லாப் பண்புகளையுமே சுட்டெரித்துவிட்டுக் கொழுந்துவிட்டெரிந்தது. மூன்று மாதங்களாக மகனுக்கும் அவருக்கும் எந்தத் தொடர்புமே இருக்கவில்லை. அதற்குள் அவன் கல்முனையிற் கனகத்தோடு காணப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டபோது அவர் மகன் எட்டாம் எட்வேட் அரசரைப்போல அரசுகட்டிலையே துறந்து அந்தக் கனகத்தின் பின்னால் ஓடிவிடுவானோ என்று எண்ணுகையில், அந்த எண்ணத்தின் பாரத்தைத் தாங்கமாட்டாது அவர் உள்ளம் உடல் எல்லாமே சுண்டிற்று.

ஆனாலும் நடராஜன் தன் படிப்பை முடித்துக்கொண்டு உத்தியோகம் ஒன்றைத் தேடிக்கொள்ளுமுன் எதையுந் துணிந்து செய்யமாட்டான் என்று தோன்றிற்று அவருக்கு. மனிதமனம் விசித்திரமானதுதான். பெற்ற தாயையே யமனிடம் பறிகொடுத்துக் கதறிக்கொண்டு இருக்கும் வேளையிற்கூட அந்த விசித்திர உள்ளம் தன் தாய் உயிரோடு நடமாடுவதை நினைத்துப் பார்க்கிறது. ஏன்? பாடையில் நீட்டி நிமிர்ந்து விறைத்துக் கிடக்கும் உயிரற்ற கட்டை, திடீர் என்று உயிர் பெற்று எழுந்து வருவதைப்போலக் கற்பித்துக் கொள்கிறது. இப்படி நடக்க முடியாத சம்பவங்களையே மிக எளிதாகக் கற்பித்துக்கொள்ளும் மனித மனம், நடப்பதை எண்ணிப்பார்க்கத் தயங்குமா? தமிழன் வாழ்வே, உத்தி

யோகத்தை நோக்கிக் கல்வி கற்பது; உத்தியோகங் கிடைத்ததும் பொன் காய்த்த மரமாக வரும் பெண்ணை மணந்து கொள்வது; அதுவும் முடிந்தால் தன் உத்தியோகத்துக்கு ஊரோடு ஒருமாற்றம் எடுத்துக்கொள்வது என்ற சக்கர வட்டத்துள்ளேயே உழன்றுகொண்டிருக்கையில், அம்பலவாணர் தன் மகன் உத்தியோகத்தைத் தேடாமற் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டான் என்று எண்ணிக்கொண்டதிற் தவறு என்ன?

இந்த நினைவில் ஆறுதலடைந்திருந்த அம்பலவாணர் மார்கழி மாதம் பிறந்ததும் தன் மகன் வந்துவிடுவான் என்று எதிர் பார்த்துக்கொண்டு இருந்தார். பரீட்சைத் திகதி முடிந்ததும் அவன் வராமலிருப்பதைக் கண்ட அவர் மனத்தில் மறுபடியும் சந்தேகம் கவிந்தது.

இதற்குள் செல்லனும் மூதூருக்கு வந்துவிட்டான். அவன் வந்ததும் சுயம்பிரகாசமான சூரியனிலிருந்து நேரிடையாகவே வந்த ஒளியைப்போலக் கலப்பற்ற உண்மைகள் நேரிடையாகவே வந்தன.

நடராஜன் கல்முனைக்கு வந்தது, கனகத்தைத் தன்னோடு வரும்படி அழைத்தது, கனகம் மறுத்தது, அவன் திரும்பிப் போனது எல்லாமே அம்பலவாணர் காதுகளில் விழுந்தன.

இவ்வளவுநாளும் தன் மகன் தனக்குத் துரோகம் பண்ணிவிட்டுக் கனகத்தின் பின்னால் ஓடி விடுவானோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த அம்பலவாணருக்கு இந்தச் செய்தி காதில் விழுந்தபோது



அவருக்குள்ளே அவியா நெருப்பாகக் கொழுந்து விட்டெரித்துக் கொண்டிருந்த ஆண்மை, சுயமரியாதை என்ற உணர்ச்சிகள் திடீரென்று அணைக்கப்பட்டு விட்டனபோல இருந்தன. பெரு நெருப்பிற் சட சடவென்று எரிந்து பொசுங்கும் பிரப்பங் காட்டைப் போல அவர் உள்ளுணர்ச்சிகள் எல்லாம் வெந்தன; கருகி விழுந்தன தன் மானம் என்ற கொடியைத் தழுவிப் படரவிட்டுக் கொண்டிருந்த தன் மகன் என்ற ஒரே கொழு கொம்பும் தன்னைவிட்டுத் தூரமாக, வெகுதூரமாகப் போய்விட்டான்; வைரித்து நிமிர்ந்து நிற்க வேண்டிய கொழுகொம்பே தன் எதிரிகளிடம் மண்டியிட்டு விழுந்தான் என்று அவர் எண்ணுகையில் அவர் உலகிலே நான் ஏன் பிறந்தேன் என்று எண்ணினார். அளவற்ற மனோ உறுதியை அடக்கி வைத்துக் கொண்டிருந்த அவரின் பரந்த மார்பு அவமானந் தாங்கமாட்டாமற் சுருங்கிப்போய், அந்தச்சுருங்கிய நெஞ்சுக்குள்ளே அடங்கிக்போய்க் கிடந்த உணர்ச்சிகள் பீறிக் கொண்டு வெளிக் கிளம்புகையில், அவ்வுணர்ச்சிகளின் தீவிரத்தை அந்த வீடு தாங்கமுடியவில்லை. ஆயிர மாயிரமாண்டுகளுக்கு ஒருமுறை பிறக்கும் மகாகவியைப்போல, மனத்துள்ளே வெம்பிச் சாம்பி மௌனியாகி விட்டிருந்த அம்பலவாணர் கடைசியாகத் தன் வாயைத்திறந்து, "இனி எனக்கு அவன் மகனல்ல" என்று அறுதியிட்டுச் சொன்ன போது, பொன்னம்மா அவர் பேச்சின் கோரத்தைத் தாங்க முடியாது வெலவெலத்துப் போனாள்.

அம்பலவாணருக்குத் தன் புத்திரனை விடத் தன் மானம் பெரிதாக இருக்கலாம் எனக்கு அவன் மகனேயில்லை என்று சொல்லிவிட்டு அம்பலவாணர்

இருக்கலாம். ஆனால் பொன்னம்மா அப்படிச்சொல்லி விட்டு இருக்கலாமா? அவளுக்கு இந்தப் பரந்த உலகிலே உள்ள ஒரே ஒரு சொத்து நடராஜன் தான். அந்தச் சம்பத்தே தன்னை விட்டுப் போனதை அவளால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. பெற்றபாசம் அவள் நொய்தான மனத்தை, ஈரச் சேலையை முறுக்கிப் பிழிவதுபோல் பிழிகையில், அந்த மனோவேதனையின் எல்லைக் கோட்டிலே நின்ற அவள், காலங் காலமாக இந்தக் கன்னித் தமிழ்நாடு கட்டிக் காத்து வளர்த்துவரும் 'கண்கண்ட தெய்வமான கணவனுக்கு அடங்குதல்' என்ற பண்பாட்டின் இலக்கிய உருவான அந்தத்தாய், தன் பண்பாட்டில் இருந்து நழுவிவிடக்கூட மனதாயிருந்தாள். தன் கணவனிடம் கேட்டாள்: "எல்லாப் பாசமுமே இத்துடன் அற்றுவிட்டதா? முதலிற்போய்ப் பிள்ளையைப் பார்த்துவிட்டு வாருங்கள். அதன் பிறகு உங்கள் விருப்பம்போல என்னவாகுதல் செய்யுங்கள்" என்று.

இதனைக்கேட்டதும் அம்பலவாணர் குண்டு பட்டுக் குற்றுயிராகக் கிடக்கும் கிழட்டுப் புலியைப் போலப் பாய்ந்தார் "வேணுமானால் உன் மகனைப் போய் நீ பார், போ. உன் அண்ணனையுங் கூட்டிக் கொண்டு போ" என்று அம்பலவாணர் இரைந்த போது அந்த இரைச்சல் பொன்னம்மாவின் தாயுள்ளத்திற்குத் தூபமிட்டதே தவிர, அந்தப் பெரும் இரைச்சலில் அவள் தாபம் அடங்கிப் போகவில்லை. அவள் வேகத்தோடு பேசினாள்; "உங்களுக்கு எல்லாமே முடிந்து விட்டதென்றால் எனக்கும் அவன் மகன் இல்லாமற் போய்விடவில்லை. நான் போகத்தான்



போகிறேன். நீங்கள் போகவில்லை என்றால் நான் யாரோடாவது போகத்தான் வேண்டும்."

"போ, இப்போதே போ. இந்த வீட்டிலே ஒருவருமே இருக்க வேண்டாம். எல்லாருமே போய்த் தொலையுங்கள்" என்று பொன்னம்மாவின் கழுத்தைப்பிடித்துத் தள்ளினார் அம்பலவாணர். அந்தத் தள்ளலில் புத்திரபாசத்தினால் ஈடாடிப் போயிருந்த பொன்னம்மாவின் பெண்மைப் பண்பு மீண்டும் தன்னிலையை அடைந்தது. என்னதான் இருந்தாலும் தன்கணவர் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான் இருக்கும் என்பது அவளுக்கு தெரியும். வீட்டுக்குள்ளே நடக்கும் அலங்கோலத்தை வெளியிற் காட்ட அவள் விரும்பவில்லை. இந்த நிலையிற் தானும் ஏட்டிக்குப் போட்டியாக நின்றால் தன்கணவர் என்னென்ன செய்வாரோ என்று அவள் பயந்தாள்.

அம்பலவாணர் வீட்டில் இப்படி அல்லோலகல்லோலமாக இருக்கையிற் கந்தையா தன் மகளுக்காக ஏங்கினார். தான் பெறாத பிள்ளையான நடராஜனை நினைந்து தவித்தார். ஏன், பட்டையுரித்த மரம்போல நாளுக்கு நாள் வாடிக் கொண்டேவரும் பெருமரமான தன் அத்தானை நினைந்து கூட அவர் உருகினார்.

செல்லன் வந்து நடந்தவைகளைத் தெரிவித்த போது, அவருக்கு நடராஜன் போக்கைக் கண்டு அநுதாபப்படுவதா, ஆத்திரப்படுவதா என்பது அவருக்குத் தெரியவில்லை. நடராஜனே ஊருக்கு வராததை எண்ணியபோது, கனகம் விடுதலைக்கு வராமலிருப்பது கூட அவருக்குத் துக்கமாகத் தென்

படவில்லை. ஆனால் என்ன செய்வதென்பதுதான் அவருக்குப் புலப்படவில்லை சாட்டையில்லாப் பம்பரமாக அவர் தறிகெட்டு நிற்கையில், ஒருநாள் செல்லன் பத்திரிகையைக் கொண்டுவந்து "நடராஜா பாஸ்! நடராஜா பாஸ்!!" என்று தன்னை மறந்து கத்தினான்.

செல்லனின் தலை கால் தெரியாத உற்சாகத்தைக் கண்டு, கந்தையாவுக்கு அழுகையே வந்துவிடும் போல இருந்தது. பத்திரிகையைக் கீழே போட்ட செல்லன் தன் தந்தையாரின் முகத்தைப் பார்க்கையில், அந்த முகத்திற் கப்பியிருந்த சோகத்தை மதிக்கையில் செல்லன் தன்செயலின் அர்த்தமற்ற நிலையையுணர்ந்து வெட்கிப்போய் நின்றான்.

தந்தையும் மகனும் சிலைகளைப்போல எதிரெதிரே செயலற்று நிற்கையில், அந்த அமைதியிலிருந்த பயங்கரம் அவர்களுள்ளத்தை உலுப்பிற்று கந்தையா கரகரத்த குரலில் மெதுவாகக் கேட்டார்: "நீ கொழும்புக்குப் போய் அவனைப் பார்த்துவிட்டு வருகிறாயா?"

செல்லன் தலையை அசைத்தான் அவனால் பதில் சொல்ல முடியவில்லை அன்று பின்னேரமே செல்லன் கொழும்புக்குப் பயணமாகி விட்டான்.

கொழும்புக்கு வந்த செல்லன் தியாகுவைச் சந்தித்து நடராஜனைப்பற்றிய செய்திகளை விசாரித்தான். அவனுக்கு நடராஜன் மலைநாட்டில் வேலையாக இருக்கிறான் என்ற செய்தி தெரியவந்தது.

# 33

## பரிவு

பேசுந் தந்திமூலம் தியாகராஜன் பேசியபோது நடராஜனுக்குத் திகைப்பாக இருந்தது மேலும் தியாகு, செல்வராஜன் உன்னைத் தேடித் திரிகிறான் என்று வெடிகுண்டைத் தூக்கிப் போட்டபோது, நடராஜனின் திகைப்பு மேலும் அதிகமாயிற்று.

இலங்கை ஒரு சிறிய தீவு. உலகை ஈரடிகளால் அளந்த வாமனனைப்போல, யாரும் இரண்டு நாட்களில் இலங்கை முழுவதையும் சுற்றி அளந்து விடலாம். இந்த நாட்டிலே, பாலைவனத் தீக்கோழியைப் போலத் தன் கண்களைத் தரைக்குள்ளே மறைத்துக் கொண்டால் உலகமே குருடாகி விட்டது என்ற எண்ணத்தோடு மலைநாட்டிற்கு ஒளித்து ஓடி வந்திருக்கும் தன் அறிவீனத்தை நினைத்துக் கொண்டான் நடராஜன். செல்லன் இங்கேயே தன்னைத் தேடி வந்துவிட்டால் என்ன செய்வது? மேலும் எங்கே தன்னை மறைத்துக் கொள்வது? என்ற சிந்தனைகளில் ஈடுபட்டிருந்த நடராஜனுக்கு, "நான் பதினொரு மணியளவில் உன்னைச் சந்திக்க வருகிறேன்" என்று சொன்னதுகூடத் தெளிவாகக் கேட்கவில்லை.

அந்தக் கலவரத்தோடு வீட்டுக்கு வந்த நடராஜன் தோட்ட ஆஸ்பத்திரி திறப்பதற்கு முன்னாகவே பிலோமினாவின் தாயைப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்ற எண்ணத்தோடு அவள் வீட்டிற்குப் போனான்.

நோயாளியைப் பரிசோதித்தபோது அவள் தேக நிலையில் எந்தவிதமான மாற்றத்தையும் காணவில்லை. ஆனால் பிலோமினாவின் நடவடிக்கைகளிலே தான் மாற்றம் காணப்பட்டது. தேற்றுச் சோகமே உருவானவள் போன்று காணப்பட்ட அவள் முகத்திலே ஒரு தெளிவு இருந்தது. வீட்டுக்கு வரும் நடராஜனை நன்றாக உபசரிக்க வேண்டும் என்று அவள் நினைத்துச் செய்ததுபோல, அந்தச் சிறிய வீடு ஒழுங்காகவும் அழகாகவும் ஆக்கி வைக்கப்பட்டு இருந்தது. வியாதிக்காரத் தாயாரோடு நெடுகிலும் பழகி அவள் மனம் மரத்துப்போய்விட்டதோ, அல்லது அவள் தன் தாயின் வியாதியை நடராஜன் குணப்படுத்தி விடுவான் என்று திட்டமாக நம்பினாளோ, அல்லது உற்றார் உறவினர் எவருமே இல்லாத அந்த இடத்திலே தனக்கு ஒரு துணை கிடைத்துவிட்டது என்று எண்ணினாளோ பிலோமினா குதூகலமாகவே இருந்தாள்.

அவள் குதூகலத்தைப் பார்க்கையில் நடராஜனுக்கு மன நிறைவாகவே இருந்தது. தன் சிகிச்சைகள் அவள் தாயாருக்குச் சுகத்தைக் கொடுக்காவிட்டாலும் பிலோமினாவிற்காவது நம்பிக்கையைக் கொடுக்கட்டும் என்று அவன் எண்ணிக்கொண்டான்.

அவள் தாயைப் பரிசோதித்து மருந்து கொடுத்ததும், பிலோமினா நடராஜனுக்குக் கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள். அதைக் குடித்துக் கொண்டே நடராஜன் கேட்டான். "இராத்திரி எப்படி இருந்தது? சுகமாகத்தூங்கினார்களா?"



"ஆம்" என்று தலையை அசைத்தாள் பிலோமினா. ஆனால் அந்த அசைப்பு எதனைக் குறிக்கிறது என்பது நடராஜனுக்குத் திட்டமாகத் தெரியவில்லை. ஆனாலும் தான் போய் மருந்து கொடுத்து அனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்படுவதற்கு ஆயத்தமாகத் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

"போகப்போகிறீர்களா?" என்றாள் பிலோமினா.

"எனக்கு நேரமாகி விட்டது"

"பின்னர் எப்போது வருவீர்கள்?"

"நாளைக்கு!"

"நாளைக்கா?" என்று திடுக்கிட்டாள் பிலோமினா! அவள் குரலிற் தொனித்த பயமும் திகைப்பும், நடராஜனை அப்படியே பிரமிக்க வைத்தன. நடராஜன் அவளைக் குறிப்பாகப் பார்க்கையில் அவள் கண்கள் கலங்கிப் போயிருந்தன அழுகையே வந்துவிட்டது போல இருந்தது அவளுக்கு. அம்மன் கோயிலிற் கட்டப்பட்ட பலியாடுபோலத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு பரிதாபகரமாக நின்றாள் அவள்.

தலைக்கு மேலே சுவரிலே 'இவ்வுலகின் கஷ்டங்களையும் துன்பங்களையும் நான் தான் தாங்கிக்கொண்டிருக்கிறேன். துன்பப்படுகிறவர்களே என்னிடம் வாருங்கள்' என்று அழைப்பதுபோலக் கையைத் தூக்கிப் பிடித்தவாறு மக்களை நேசிக்கும் அன்பினாற் பற்றி எரியும் தன் இருதயத்தைத் திறந்து காட்டியபடி கிறிஸ்து நாதரின் படம் ஒன்று இருந்தது. நடராஜன் பிலோமினாவின் பரிதாபகரமான முகத்தைப் பார்க்க முடியாதவனாய்த் தன் முகத்தை நிமிர்த்தியபோது

மேலேயுள்ள படத்தையும் பார்த்தான். பின் அதையே அப்படத்தையே பார்த்துக் கொண்டு நின்றான்.

"மத்தியானம் வர முடியாதா?" என்று பிலோமினா கேட்டாள்.

"நான் வரத் தேவையில்லை என்று நினைத்தேன். வேண்டுமானால் வருகிறேன். ஏன் தங்களுக்கும் பயமாயிருக்கிறதா?" என்று அடுக்கடுக்காகக் கேட்டான் நடராஜன்.

"அப்படி ஒன்றுமில்லை. ஆனால் அம்மாவின் நிலையில் நீங்கள் அடிக்கடி இங்கு வருவது நல்லதல்லவா?" என்றாள் பிலோமினா. கலங்கிக்கொண்டிருந்த அவள் கண்கள் ஓர் அன்னியரிடம் தங்கள் கலக்கத்தைக் காட்டுவதா என்றெண்ணிப் போலும் கணத்தில் தெளிந்து தம் இயல்பான பிரபையோடு மறுபடியும் நடராஜனைப் பார்க்கையில், அக் கண்களிலே அடைமழைக்குப் பின்னர் தோன்றும் வான வில்லின் வர்ணங்கள் தெரிந்தன.

ஆனால் அந்தக் கண்களையே பார்த்துக் கொண்டிருந்த நடராஜனுக்கு அதன் வர்ண விசித்திரங்களல்ல நீர் மட்டத்துக்குக் கீழே சுழித்துச் செல்லும் நீரோட்டத்தைப் போன்ற துன்பச் சூழல்தான் தெரிந்தது. பாவம்! பிலோமினா பயப்படுகிறாள் என்பது அவனுக்குத் திட்டமாகத் தெரிந்தது. எனவே அவளுக்கு ஆறுதலாக இருக்க வேண்டும் என்பதற்காக "மத்தியானம் எனக்கு வேலையிருக்கிறது; ஆனாலும் நான் வர முயற்சிக்கிறேன்" என்றான்.



ஆனால் அந்த வாக்கியங்கள் பிலோமினாவைத் திருப்திப்படுத்தியதோ என்னவோ? ஆனால் நடராஜனைத் திருப்திப்படுத்தவில்லை. எனவே அவ்வசனம் முடிந்ததும் முடியாததுமாகக் கேட்டான். "தனியாகத்தான் இருக்கிறீர்களா?"

"ஆம்" என்றாள் பிலோமினா. இப்படித் தன்னிடம் யார் கேட்கப் போகிறார்கள், எப்போது பதிலிறுப்போம் என்று காலங்காலமாக அங்கலாய்த்துக் கொண்டிருந்தவள் போலப் பிலோமினா "ஆம்" என்றாள்

சட்டியிலே ஈயக் குழம்பாய் உருகிக் கொண்டிருக்கும் நடராஜனின் மனது இந்தப் பதிலினால் இடம் கிடைத்துப் பொத்துக் கொண்டு ஓடத் தொடங்கியதைப் போல ஆயிற்று. அவன் மனம் அவனையறியாமலே அவனுக்குள்ளேயே "ஐயோ பாவம்!" என்று இரங்கிற்று.

"ஊரிலே எல்லாரும் இருக்கிறார்களாக்கும்" என்றான் நடராஜன். அவன் பேச்சிலே ஊரிலே எல்லாரும் இருக்கவேண்டும் என்ற அங்கலாய்ப்புத் தொனித்தது.

"ஊரிலே எவருமே இல்லை" என்ற பிலோமினா பெருமூச்சு விட்டுக்கொண்டே "அதெல்லாம் பெரிய கதை" என்றாள்.

அதைத் தொடர்ந்து நடராஜன் நேரம் போனதையும் பொருட்படுத்தாமல் அவள் கதையைக் கேட்டான். பிலோமினா சிங்கப்பூரிற் பிறந்தவள். கொழுத்த

சம்பளம் வாங்கிய அவள் தந்தையார் குடிகாரர். ஆகவே அங்கிருந்தும் அவராற் பணம் சம்பாதிக்க முடியவில்லை. இதற்குள் இரண்டாவது யுத்தம் வரவே பிலோமினாவும் அவள் தாயாரும் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டனர். அவள் தந்தையைப் பற்றி இப்போதெல்லாம் ஒன்றுமே தெரியாது. தாயாரின் முயற்சியினால் பிலோமினா கஷ்டப்பட்டுப் படித்து ஆசிரியையாகியிருக்கிறாள். பிறந்த ஊர் யாழ்ப்பாணம் எனினும் நீண்ட நாளைய சிங்கப்பூர் வாசத்தால் ஊரிலே வீடோவளவோ கிடையாது. ஏழையாகிவிட்டதால் இனசனமும் இல்லாமற் போய்விட்டது.

இந்தக் கதையைக் கேட்ட நடராஜன் எதையோ யோசித்தபடியே "அம்மாவைவிட வேறு துணையே இல்லாத நீங்கள் ஏன் யாழ்ப்பாணத்திலேயே ஒரு ஆசிரியையாக இருக்கக்கூடாது" என்றான்.

"இருக்கலாம்; என்னிடம் பணம் இருந்தால் ஆயிரமோ இரண்டாயிரமோ பாடசாலைக் கட்டிட நிதிக்கென்று கொடுத்து விட்டு அங்கேயே படிப்பித்துக் கொண்டிருக்கலாம்" என்றாள் பிலோமினா.

நடராஜனுக்கு அடுத்ததாக அவளிடம் என்ன பேசலாம் என்று தெரியவில்லை. ஏனென்றால் அவனுக்கு உணர்ச்சிவயப்படும் இருதயம் மட்டும் இருந்தது. பிறரின் சோகத்தைத் தன்னுடையதாக எண்ணித் தன் இதயத்தையே உலக வக்கிரங்கள் என்ற முள்ளில் அழுத்திக்கொண்டு இரத்தக்கண்ணீர் வடிக்க அவனுக்கு தெரிந்திருந்தது. ஆனால் இந்தச் சமூக நிலைகளை — அதன் அடிப்படைகளை மாற்றியமைத்துத் தானாகவேண்டும். இலட்சிய நோக்கோ — அல்லது



மாற்றி அமைத்துத்தான் ஆகவேண்டும் என்ற வெறியோ அவனிடம் இருக்கவில்லை.

எனவே வேறு ஒன்றும் பேசாமலே "நான் மத்தியானம் வருகிறேன்" என்று வெறுமனே சொல்லிவிட்டு அவன் வெளியே இறங்கி நடக்கையில் அவன் உதடுகள் மட்டும் புதுமைப்பித்தனின் அடிகளை முணுமுணுத்துக்கொண்டு இருந்தன.

புண்பூத்த மேனி புகைபூத்த உள்ளமடா — அவள்
மண்பூத்த பாவம்நம் மதிபூத்த கோரமடா

என்று நடந்துகொண்டே வந்தவன் தன் வீட்டை நெருங்கும்போது அங்கே தியாகு நின்றுகொண்டிருந்தான். அவனைக் கடந்ததும் நடராஜனுக்கு உடலெல்லாம் வியர்த்தது.

*****
*****
*****

## 34

## திரிதல்

மார்கழிமாதம் போய்விட்டது. பள்ளிக்கூட விடுமுறை முடிந்து மறுபடியும் பாடசாலை ஆரம்பமாயிற்று.

விடுதலையிற் பாடசாலையில் இருக்காமல், எங்கெங் கெல்லாமோ திரிந்துவிட்டு வந்திருந்த கனகம் மறுபடியும் பாடசாலைக்குள் வந்து புகுந்து கொண்டபோது சற்றுத் தூரப்போயிருந்தது போலத் தோன்றிய கவலையும் ஏக்கமும் மறுபடியும் அவளைப் பிடித்துக் கொண்டன. ஆயினும் அடி வானத்தே கண் சிமிட்டும் நட்சத்திரம் போலக் குட்டையாய்க் கலங்கும் சிந்தனைகளுக்கு அப்பால் தெளிவின்றித் தெரியும் புனித லட்சியம் என்ற ஒன்றைக் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொள்ளும் ஒரு முயற்சியில் அவள் கவலைகள் ஓரோர் வேளை அகன்று விட்டனபோற்றான் தோன்றின. ஆனாலும் இந்த இலட்சியம் இருக்கிறதே. அது யாரை வாழவைத்தது? எப்போது வாழ வைத்தது? இலட்சிய நோக்கில், அதை பிடிக்கப் போகிறேன் என்ற வெறியில் இலட்சியவாதி தன்னை மறந்திருந்தால் அதற்கு வாழ்க்கை என்ன அர்த்தம்? கனகமும் ஏதோ வாழ்ந்துகொண்டிருந்தாள்.

இதற்குள் அவள் தந்தையார் ஒருதடவை வந்து அவளை ஊருக்குக் கூப்பிட்டார் அவள் மறுத்தாள். செல்வனின் இடையீடு மட்டக்களப்பிலேயே அவளை



நிரந்தரமாகத் தங்கவைத்து விட்டதுபோற் தோன்றிற்று. ஆனால் எவர் முயற்சியும் அவள் கலக்கத்தைத் தணியவைப்பதாக இல்லை சுவாமி விவேகானந்தர் ‘தமது பெண்கள் அழுவதைவிட வேறெதற்குமே பழக்கப் பட்டிருக்கவில்லை என்று கூறியது உண்மைதானா? கனகம் இன்னும் இன்னும் அழுதுகொண்டேயிருக்கக்கூடாது என்றுதான் அந்தலட்சியத் தூணிலே சாய்ந்து நிற்க முயன்றாள்.

மார்கழி விடுமுறைக்குள் அவள் மாந்தீவு குஷ்டரோக ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தாள். தண்ணீரில் மிதக்கும் வெண்ணெய்த்திரள் போல மட்டக்களப்பு வாவிக்கும் வங்காளக் கடலுக்குமிடையே தத்தளித்து மிதந்துகொண்டிருக்கும் அந்தச் சின்னஞ்சிறு தீவின் அழகு நிமிர்ந்த நேரான தென்னை மரங்களின் நிழலிலிருந்து பார்த்தால் கிழக்கே கண்ணைக் கூசவைக்கும் சூரியன் ஒளியில், பாலாற்றில் மூழ்கித் தலைநிமிர்ந்து பார்க்கும் அப்ரசியைப்போல நுரைகக்கும் கடல் மத்தியிலே தோன்றும் அந்தத்தீவு கனகத்துக்கு எத்தனையோ தடவை காதல் நினைவுகளைக் கொடுத்திருக்கலாம். ஆனால், இம்முறை, ஆயிரமாயிரம் கருநாகங்களாகப் படமெடுத்துச் சீறியடிக்கும் அலைகளின் நடுவே, ஆலிலையில் அறிதுயிலில் அமர்ந்துகிடக்கும் மகாவிஷ்னுவைப் போல் அடங்கிக் கிடப்பதுதான் அவளுக்குத் தென்பட்டது. அந்தச் சின்னஞ்சிறு தீவைப்போல, கொந்தளிக்கும் வெளியுலகிலிருந்து தானும் மனத்தை ஒரு நிலைப்படுத்தி அடக்கிக் கொண்டால்... என்று அவள் எண்ணினாள் அந்த எண்ணத்தோடு அங்கே வந்தவள், அனுதினமும் அங்கம் அங்கமாக அழுகிச் செத்துக் கொண்டு இருக்கும் பயங்கரமான வியாதிக்காரர்

களின் மத்தியில் சாந்தத்திற்பிறந்த புன்னகையோடு, இவர்கள் தெய்வப்பிறவிகளா? என்று எண்ணும் படியாக தன்னலமற்ற சேவைசெய்து கொண்டிருக்கும் மேனாட்டுக் கன்னியர்களைக் கண்டபோது கனகத்தின் மனதிலும் ஓர் உறுதி பிறந்தது 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்றநில் கனகத்தின் மனம் தீவிரமற்றதாக இருக்கலாம். ஆனால் இளமைக் கனவுகள் அவள் மனத்தை நிறைத்து நின்றபோது அவள் வாழவே விரும்பினாள்! அந்த வாழ்க்கை, வாழமுடியயாது என்றமனநிலையில் அவளும் அந்தக் கன்னியர்களைப் போலப் பிறருக்காகவாவது வாழவிரும்பினாள்! எனவே துறவியாகிவிடுவது என்று அங்குவைத்தே மனதில் முடிவு செய்துகொண்டாள்.

அப்படி முடிவுசெய்து கொண்டு மான்தீவை விட்டு மறுபடியும் கல்முனைக்கு வந்தபோது அவள் மனம் குழம்பியது. அதிலும் பாடசாலை மறுபடியும் தொடங்கிச் சக ஆசிரியைகள் எல்லாம் பாடசாலைக்கு வந்து சேர்ந்தபோது அவள் அதிகமாகக் குழப்பப்பட்டாள்!

முதலிலே தான் துறவியாக ஆவதானால் மதம் மாறியாக வேண்டுமே என்று எண்ணியபோது அவளுக்கு அவ்வெண்ணமே அருவருப்பாக இருந்தது! பரம்பரை பரம்பரையாக வந்த சைவக் குடும்பம் அவளறிய அவள் குடும்பத்திலே யாரும் மதம் மாறியது கிடையாது. இங்நிலையில் தன் ஏமாற்றத்தைத் தீர்ப்பதற்காக அவள் மதம் மாறிவிட்டால் ஊரிலே அவள் தந்தை யாருக்கு, அவள் குடும்பத்திற்கு எத்தனை அவமானம்! என்றெண்ணியபோது அவ்வெண்ணத்தின் அழுத்தத்தில் அவள் மனத்திலிருந்த தீர்மானம் அப்படியே நசிந்து உரு மாறிப்போயிற்று.



ஆனாலும் இயந்திரம் போலக் கனகம் பாடசாலை விடுதியிற் கிறீஸ்தவப் பிள்ளைகள் அனுஷ்டிக்கும் மத சம்பந்தமான ஒழுங்குகளைக் கடைப்பிடித்து வந்தாள். அதிகாலையில் பூசைக்குச் செல்லும்போதும், சாப்பாட்டின் முன்னும் பின்னும் செபிக்கும் போதும், படுக்கைக்குப் போகுமுன் பிரார்த்திக்கையிலும் கனகமும் அவர்களோடு தானும் பங்கெடுத்துக் கொண்டாள். அவள் மனத்திற்கு வேண்டியது அமைதி! சாந்தி! அழையா விருந்தினராக மனத்தில் வந்துறுத்தும் நினைவுகளை வராமல் விரட்டியடிக்க முழு நேரவேலை! அவ்வளவுதான்.

இங்நிலையிற் கந்தையா மறுபடியும் அங்கே வந்தார். வந்தவர், எப்படியாவது கனகத்தை ஊருக்குக் கொண்டுபோய் விடவேண்டும் என்றுதான் விரும்பினார். பாவம்! வீட்டை விளங்கவைக்க வேண்டிய அந்த விளக்கு அனாதையாக ஒரு மூலையிற் தூக்கி எறியப்பட்டதுபோலக் கிடப்பதை காண அவரால் முடியவில்லை.

ஆனால் கனகம் அவர், தன்னை இவ்வளவுக்கு வலிந்து அழைப்பதிற் சந்தேகப்பட்டாள். தன்னைக் கூட்டிக் கொண்டு போய், அந்தச் சுந்தரத்திற்கே கல்யாணம் முடித்துவைத்துவிடுவாரோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது.

இந்த எண்ணத்தில் எப்படியோ சாக்குச்சொல்லித் தந்தையை அனுப்பிவிட்ட கனகம், முழுதாக மனம்

மாற்றமடைந்து விட்டாள்! கெதியில் மதம் மாறிக் கொண்டு துறவியாகிவிடத் துணிந்தாள்.

இந்த எண்ணத்தை மடத்துத் தலைவியிடம் வெளியிட்டுத் தந்தையார் வந்து திரும்பிய ஒருவாரத்திற்குள்ளாகவே, கனகம் கல்முனையை விட்டுக் கிளம்பிப்போய்விட்டாள்! அமைதியற்றுத் தவித்த அவள் உள்ளத்துக்கு ஓரளவு அமைதியும் கிடைத்து விட்டது. ஆனால் அந்த அமைதி நிலையானதா? போகுமிடத்திலே அவள் நடராஜனைக் கண்டாள்?

மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு வந்த கனகம் பொல்காவலைச் சந்தியில் மலைநாட்டுப் புகையிரதத்தைக் காத்துக்கொண்டு நின்றாள். அவளோடு மதப் படிப்புக்காக இன்னமும் இருவர் இருந்தார்கள்.

புகையிரத நிலையத்திலே, நித்திரை அழுத்தும் இமைகளோடு, கையிலே பைபிளைத்திறந்து வைத்துக் கொண்டு அவர்கள் மூவரும் இருக்கையில் கொழும்புக்குப் போய்க் கொண்டிருந்த தியாகு அவர்களைக் கண்டான்.

தூரத்திலிருந்து அவர்களைக் கண்ட தியாகு யாரோ தனக்குத் தெரிந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டு அருகாமையில் வந்து கூர்ந்துபார்த்தான். அவர்கள் தனக்கு அறிமுகமானவர்கள் அல்ல என்பதை அறிந்து கொண்டபோதுகூடத் தியாகு அவ்விடத்தை விட்டு நகரவில்லை. தன் சுபாவ குணப்படியே அவர்களை வளைத்துக் கொண்டு திரிந்தான். அவன் செய்கை அவர்களுக்கு அருவருப்பைக் கொடுத்தது. எனினும் அவனைத் தடுப்பதெப்படி?



இறைச்சித் துண்டைக் கண்ட சொறிநாயைப் போல அவர்களையே மோப்பம் பிடித்துக்கொண்டு சுழல்கையில், அப்பெண்களின் சம்பாஷணையிலிருந்து அவர்களில் ஒருத்திக்குக் கனகம் என்று பெயர் என அவனுக்குத் தெரிய வந்தது.

தியாகராஜன் நடராஜனை எண்ணினான். அந்த நடராஜன் சதாஎண்ணிக்கொண்டிருக்கும் கனகத்தை எண்ணினான்! அந்தக் கனகந்தான் இவள் என்று அவன் மனம் அகாரணமாகச் சொல்லிற்று. மேலும் தியாகுவிற்கு அப்பெண்களோடு சும்மாவாவது கதைக்கவேண்டும் என்றிருந்தது. எனவே அவன் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு "நீங்கள் திருகோணமலையிலிருந்து வருகிறீர்களா?" என்று கேட்டான். அவர்கள் அடக்கமாக "இல்லை மட்டக்களப்பிலிருந்து வருகிறோம்" என்றார்கள்.

ஆனால், தியாகு கதையை வளர்த்து அவள், தான் நினைத்த கனகந்தான் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டான். அவள் எங்கே போகிறாள் என்பதையும் கண்டுகொண்டு விட்டான்.

இதைத் தெரிந்துகொண்டவன் அவளை மேலும் அதிகம் குழப்பாமல்விட்டு உடனே நடராஜனிடம் வந்து மேலே நடக்க வேண்டியவைகளைக் கவனிக்க வேண்டுமென்று மனதுட் திட்டமிட்டுக் கொண்டு போய்விட்டான்.

கனகத்தின் மனத்திலோ அவன் ஏன் என்னை விசாரித்தான்? என்பெயர் அவனுக்கு எப்படித் தெரிந்தது? ஒருவேளை நடராஜனுக்கும் அவனுக்கும் ஏதாவது உறவு இருக்குமோ? என்றெல்லாம் எண்ணிக் கொண்டாள். மறுபடியும் அவள் மனம் குழப்பமடைந்தது.

---

# 35

## சூத்ரதாரி

தியாகராஜனைக் கண்டதும் நடராஜன் திகைத்து நின்றானல்லவா? ஆனாலும் ஒருகணத்தினுள் தன்னைத் தானே சுதாரித்துக்கொண்டு "ஹல்லோ எப்போ வந்தாய்" என்றான்.

நடராஜனின் பதட்டத்தையும் பயத்தையும் விளங்கிக்கொண்ட தியாகு வழக்கம்போலவே இன்னமும் அவனைக் கிண்டல்பண்ணி அழவே வைத்து விடவேண்டும் என்ற எண்ணத்துடன் "ஏன் வரக் கூடாது?" என்று கேட்டான்.

"யார் சொன்னார்கள் வரக்கூடாது! என்று ஆனால் ஒரு முன்னறிவிப்புமின்றித் திடுதிப்பென்று வந்துவிட்டாயே; அதுதான் கேட்கிறேன்" என்ற நடராஜன் அவனை அழைத்து வந்து ஆசனத்தமர்த்தினான்.

அமர்ந்துகொண்ட தியாகு, நடராஜனை வைத்த கண் வாங்காமற் பார்த்துக் கொண்டிருந்தான். பாவம்! பிரகாசமாக எரியும் மின்சார விளக்கிற்குப் போடப்பட்ட 'ஒளி அடக்கி'யைப்போல எப்போதும் இளஞ் சிவப்பு முகமாகப் பிரகாசித்துப் புன்னகைத்துக் கொண்டிருக்கும் அவன் அழகான முகம் சில மாதங்களுக்குள் ஏன் இப்படிக் களையிழந்துபோய் விட்டது? என்றைக்குமே நேர்த்தியாகச் சீவப்பட்டு



ஒழுங்காக இருக்கும் அவன் கேசம் ஏன் இப்படி அலங்கோலமாகக் கிடக்கிறது? குழம்பிக் கிடக்கும் அந்தத் தலையின் முன் அசைவிலே வெள்ளிக்கம்பி போல ஒரு நரைமயிர் ஓடிக்கிடந்ததுகூடத் தியாகுவின் கண்ணிற்பட்டது. அவன் கோலத்தையே பார்த்துக்கொண்டு இருந்தபோது வாழ்விற் சிரிப்பதைத் தவிர வேறெதையுமே அறியாத தியாகுவிற்குக் கூட மனம் இளகியது.

"நீ உருமாறிப் போய்விட்டாய்?" என்று அங்கலாய்த்தான் தியாகு.

"உன் கண்களுக்கு அப்படித் தெரியலாம்; நான் அப்படி எண்ணவில்லை."

"நீ அப்படி எண்ணத்தான் மாட்டாய்; இதையெல்லாம் எண்ணிப் பார்ப்பவனாக இருந்தால் உன் வாழ்க்கை இந்த நிலைக்கு வந்திருக்காது" என்றான் தியாகு.

"ஏன் என் வாழ்க்கைக்கென்ன? நான் மன நிறைவோடுதானே வாழ்கிறேன்."

"வாழ்வதாக எண்ணிக்கொள்கிறாய் அல்லது அப்படி வாழ்வதாக நடிக்கிறாய். ஆனால் உன் மனதைத் தொட்டு உண்மையைச் சொல்லு. உன் தந்தையாரை, தாயாரை, அழகான உன் கிராமத்தை எல்லாம் விட்டுப் பிரிந்து வாழ்வது உனக்கு மன நிம்மதியாக இருக்கிறதா?

நடராஜனால் அந்தக் கேள்விக்குப் பதில் கூற முடியவில்லை. மன நிம்மதியே இல்லை என்ற

உண்மையைச் சொன்னால் அது தன் மடைமையை ஒப்புக் கொண்டதாக முடியும் நிம்மதியாக இருக்கிறேன் என்று மேலும் பொய் சொல்லவும் அவனால் முடியவில்லை. எனவே தொணதொணத்துப் பெய்து கொண்டிருக்கும் மழைச் சப்தத்தைத் தன் கற்பனைக்கும் நினைவுக்கும் ஏற்றதாக மனதில் ரூபிகரித்துக்கொள்ளும் குழந்தையைப்போலத் தன் சோகத்தையும் தாபத்தையும் தன் மனச்சாந்திக்காகத் திரித்து "எப்படியாயிருந்தாலும் அப்போதிக்கரி உத்தியோகத்துக்குப் படித்தவன் ஊரைவிட்டுப் பிரிந்துதானே வாழவேண்டும்" என்றான்.

"அப்படி வாழ்பவர்களுக்கு எப்போதாவது ஊருக்குப்போகலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது ஆனால் உனக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறதா?"

"ஏன் இல்லையா?" என்று வெடுக்கென்று கேட்ட நடராஜன் தடாரென்று தன் தவறையுணர்ந்தவனாக, நெருப்பை மிதித்தவன்போலத் திகைத்துநின்றான்.

வாக்குமூலத்திலே பிடிகொடுத்துவிட்டு எதிரியைக் கண்டு சந்தோஷிக்கும் நியாயதுரந்தரைப் போலத் தியாகு மனம் நிறைந்தவனாக "நடராஜா, எப்போதாவது உன் மனம்மாறி ஊருக்குப் போவாய் என்பது எனக்குத் தெரியும். அப்படி எண்ணிக்கொண்டு தான் நீளக்கயிற்றில் பிணைத்துக் கணுவிலே கட்டி வைத்திருக்கும் பசு மாட்டைப்போல உன்னையும் உன்னிஷ்டத்திற்கு எப்படியாவது கூத்தாடு என்று நான் விட்டுவைத்திருந்தேன். எனக்கு நன்றாகத்



தெரியும். பாசம் என்ற கயிற்றிற் கனகம் என்ற அந்தக் கணுவிற் கட்டப்பட்டிருக்கும் வரையும் நீ எங்கேயுமே போய்விடமாட்டாய் என்று இன்னமும் ஏன் இங்கிருக்கவேண்டும். ஊருக்குப் புறப்படலாமே" என்றான் தியாகு.

நடராஜன் "தியாகு" என்று தன் பலங்கொண்ட மட்டும் மூர்க்கமாகக் கத்தினான். குழியினுள்ளே கிடந்த அவன் கண்கள் உடனே சிவந்து விட்டன. உச்சிவெய்யிலிலே காஞ்சோன்றிச்சுனை பட்டவனைப் போலப் பதைபதைத்தவனாய் "இதற்காகத்தானா நீ இங்கு வந்தாய்?" என்று மறுபடியும் சீறினான்.

அவன் சீற்றத்தைக்கண்ட தியாகு வழக்கம் போலச் சிரித்தான். சிரித்துக்கொண்டே சொன்னான்: "எதற்காக என்னிற் கோபிக்கிறாய்? வீட்டுக்குப்போக உனக்கு விருப்பமில்லை என்றால் அதனால் எனக்கு என்ன கெட்டுவிடப்போகிறது? ஆனாற் 'காதற்ற ஊசியும் வாராது காணுங்கடைவழிக்கே' என்று எந்தப் பரதேசியோ பாடியதைக் கேட்டுவிட்டுத் தன் மனைவியை, மாதாவை எல்லாரையுமே விட்டுச்சென்ற திருவெண்காடனைப்போல நீயும் உன் மாமனாரின் ஒரு சொல்லுக்காக இத்தனை பிடிவாதமாக எல்லாரையுமே பிரிந்து இப்போது உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டிருப்பதில் ஏதாவது அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்தப் பட்டினத்தடிகள்கூட 'அன்னையிட்ட தீ' என்று கடைசியிற் கதறினான். உனக்கும் எல்லாந்தான் போனாலும் அந்தத் தாயின் பாசம்கூட விட்டுப் போய் விட்டதா?

அவன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பது நடராஜனுக்கு முள்ளின்மேற் குந்திக்கொண்டிருப்பதைப் போல வேதனையாக இருந்தது. தன் ஊரைப்பற்றிய எண்ணங்கள் எல்லாம் நொந்து கொண்டிருக்கும் அவன் மனத்திலே ஓடி நெளிகையில், என்ன காரணத்திற்காகத் தியாகு இங்கு வந்திருக்கிறான் என்று எண்ணமிடுகையில் நடராஜனுக்கு எழுந்து எங்காவது தூரமாக ஓடிவிடவேண்டும்போல இருந்தது.

நடராஜனின் முகபாவங்களை அந்த முகத்திலே ஓடி நெளியும் துன்பத்தையும் ஆற்றாமையையும் கண்ட போது தியாகுவுக்கும் மேலே பேச முடியாமல் இருந்தது. நடராஜனின் நிலைக்கு அழுவதா சிரிப்பதா என்று அவனுக்குத் தெரியவில்லை எனவே அவனாகவே பேச்சை மாற்ற விரும்பினான். தியாகுவின் மனதிலே 'நடராஜன் என்றைக்காவது ஒருநாள் மனம்மாறி வீட்டுக்குப் போகத்தான் போகிறான். இடையே நாம் குழப்பாமல் மௌனமாக இருப்போம்' என்று தோன்றிற்று.

எனவே தியாகு நடராஜனின் தோட்ட ஆஸ்பத்திரியைப் பற்றிக் கேட்டான்; தோட்டச் சொந்தக்காரரைப்பற்றி விசாரித்தான். தன் கொழும்பு நண்பர்களைப் பற்றிப் பேசினான். தான் படிப்பை விட்டு விட்டதையும், கொழும்பிலே தான் தொடங்க இருக்கும் வியாபாரத்தையும் பற்றிப் பேசினான். விரைவில் நிகழஇருக்கும் தனது இங்கிலாந்துப் பயணத்தையும் சொல்லி வைத்தான்.

இந்தப் பேச்சுக்களினிடையே செல்வராஜன் தன்னைக் கொழும்பிலே சந்தித்ததையும் சொன்னான்.



அவன் பேச்சுக் குறுக்கிட்டபோது நடராஜனுக்கு அந்தப் பேச்சு முழுவதையுமே கேட்க வேண்டும் என்ற ஆவல் தோன்றிற்று. ஆனால் அந்த ஆவலை வெளிப்படுத்தவும் அவனுக்கு வெட்கமாக இருந்தது.

அவன் மன நிலையை உணர்ந்துகொண்ட தியாகு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப் போலக் கடந்த கால நிகழ்ச்சிகளை அவனுக்கு ஞாபகமூட்டினான். உத்தியோகத்தைச் சம்பாதித்துக்கொண்டு கனகத்தை அழைத்துவரக் கல்முனைக்குப் புறப்பட்டபோது "நீ அழைத்ததும் கனகம் வராவிட்டால்......' என்றுதான் கேட்டதைத் தியாகு ஞாபகமூட்டியபோது நடராஜனின் உள்ளம் உடல் எல்லாமே அவமானத்தாற் குறுகிச் சாம்பின. செல்லன் மூலமாகத் தான் அறிந்தவைகளைக் கல்முனையில் நடந்தவைகளை எல்லாம் அப்படி அப்படியே சொன்னபோது, நடராஜன் அவற்றைக் கிரகித்தானா என்னவோ, ஆனால் ஒன்றுமே பேசாமல் மௌனமாகத்தான் இருந்தான். அவன் மனத்துள்ளே தியாகு தன் இருப்பிடத்தைச் சொல்லிவிட்டானோ என்பதை அறிய ஆவலாக இருந்தது. ஆம், சற்றுமுன்பெல்லாம் அவன் ஊரை, குடும்பத்தைக், கனகத்தைச், செல்லனை எல்லாம் வெறுத்துக் கொண்டிருந்தவன், இப்போது அவைகளை எல்லாம் நினைத்துப் பார்க்கையில் வெட்கப்பட்டான். செல்லனோ அல்லது தன் தந்தையாரோ தன்னைத் தேடி இங்கேயே வந்துவிட்டால் என்று எண்ணிய போது அவன் தலை சுற்றியது. தலையை மணலிற்குள் புதைத்துக்கொண்டால் சூழ இருக்கும் உலகமே தன்னைக் காணாது என்று நினைக்கும் தீக்கோழியைப் போல மலைநாட்டில் வந்து குடியிருந்துகொண்டால்

எல்லாக் கண்களுமே இருண்டுவிடும் என்ற தன் எண்ணத்தை, அந்த எண்ணத்தின் பரிதாபகரமான முடிவை அவன் சிந்திக்கையில் நடராஜன் அவசரமாகத் தியாகுவிடம் கேட்டான்: 'செல்லனுக்கு நான் இங்கிருப்பது தெரியுமா?'

அவன் பதட்டத்தைக் கண்ட தியாகு சிரித்துக்கொண்டே சொன்னான்: "ஏன் பயப்படுகிறாய்? நீ எங்கிருக்கிறாய் எப்படியிருக்கிறாய் என்பதைப்பற்றி ஒன்றுமே நான் அவனிடஞ் சொல்லவில்லை. நடந்த விஷயங்களை அவன் மூலமாக அறிந்துகொண்டு கல்முனைக்கு வந்ததற்குப் பின்னால் ஒன்றுமே எனக்குத் தெரியாது என்ற உண்மையைத்தான் அவனிடம் சொன்னேன். இனிமேற்றான் உன் தந்தையாருக்கு அறிவிக்கப்போகிறேன்" என்றான்.

"ஏன் நான் உலகிலே சீவிப்பது உனக்கு விருப்பமாயில்லையா?" என்று ஒரேயடியாகக் கேட்டான் நடராஜன்.

அவன் பயத்தையும் பதட்டத்தையும் உணர்ந்த தியாகு "பயப்படாதே; சும்மா கேலிக்குத்தான் அப்படிச் சொன்னேன். நிச்சயமாக உன் தந்தையாருக்கோ, எவருக்கோ நான் எதையும் அறிவிக்கப் போவதில்லை ஆனால் என்றைக்காவது ஒருநாளைக்கு இந்நிலை மாறத்தான் போகிறது. அப்போது நீ ஊருக்குப் போகத்தான் போகிறாய். அங்கே கனகத்தோடு வாழத்தான் போகிறாய். அந்தச் சுபதினத்தைக் காண நான் வந்துதான் ஆகவேண்டியிருக்கும். அந்த நிலை வரட்டும், எதையுமே நான் செய்யவில்லை.



"அந்த நிலை வந்தாற் பார்ப்போம்" என்று வேண்டா வெறுப்பாகக் கூறினான் நடராஜன்.

இதற்குள் இராமசாமி வந்து நடராஜனை அவசர அவசரமாக அழைத்தான். நடராஜனும் புறப்பட ஆயத்தமானான். தியாகு தன் பேச்சை முடிவுரையாக "சரி நானும் வருகின்றேன். ஒருவாரங்களுக்கு இந்தப் பக்கமாகத்தான் திரிவதாக எண்ணம். ஆனால் வேறு அலுவல்கள் இருந்தாற் கொழும்புக்குப் போனாலும் போய்விடுவேன்" என்றவன் 'சரிதான் இவ்வளவு நேரமும் மறந்துவிட்டேன் சென்றமுறை கொழும்புக்குப் போய்க்கொண்டிருக்கையிற் பேராதனையிற் கனகத்தைச் சந்தித்தேன்" என்றான்.

"கனகத்தையா? அவளை உனக்கு முன்பின் தெரியாதே" என்றான் நடராஜன்.

"தெரியாவிட்டால் என்ன, நான் சந்தித்தது கனகத்தையேதான். உன்னைத் தேடிக்கொண்டுதான் வந்தாளோ என்னவோ" என்றுவிட்டு நடராஜனின் பதிலுக்குக் காத்திராமற் காரிலேறிக்கொண்டு நடந்தான்.

இராமசாமி துரிதப்படுத்தினான். 'கனகம் உன்னைப் பார்க்க வந்தாளோ' என்று தியாகு சொல்லியது வெளியை நிரப்பிக்கொண்டு நிற்கும் காற்றைப் போல அவன் மனத்தை நிறைத்துக்கொண்டு நின்றது. நடராஜனுக்குத் தியாகு சூத்திரதாரியாக இருந்து ஏதோ நடத்துகிறான் என்று பட்டது. மனத்தில் தியாகுவைப் போய்க் காணவேண்டும் என்று எண்ணிக்கொண்டான்.

# 36

## தாயார்

நடராஜன் மனம் மறுபடியும் சலனமடையத் தொடங்கிற்று. தியாகராஜன் தன்னிடம் கதைத்த வைகளை மீட்டும் மீட்டும் அவன் மனம் நினைவுக்குக் கொண்டு வருகையில் தியாகு தன்னை ஊருக்கு அனுப்பி வைக்கவே ஏதேதோ திட்டம் எல்லாம் போட்டு வைத்திருக்கிறான் என்று அவன் மனம் நம்பிற்று. கடைசியாகக் கனகம் இங்கே வந்திருக் கிறாள் என்று தியாகு போட்ட வெடிகுண்டு நடரா ஜனை அப்படியே ஒரு கலக்குக் கலக்கிற்று.

நடராஜன் ஊரிலே நடைபெறும் எத்தனையோ கல்யாணப் போர்களைக் கவனித்திருக்கிறான். பொது வாகக் கிராமப் பகுதிகளில் நடக்கும் ஒவ்வொரு கலியாணமும் 'இந்த மகத்தான கலியப்தத்திலே கல்யாணம் என்றுற் சாதிப் பேச்சுக் கிளத்தும் கல காரம்பம்' என்று புதுமைப்பித்தன் எழுதியதைப் பிரதிபலிப்பதாகவே இருக்கும். இந்த லட்சணத்தில் காதற் கலியாணங்கள் கூட நடைபெறுவதுண்டு. யாராவது ஒருவன் தாய் தந்தையர் சம்மதமின்றி ஒரு பெண்ணை மணமுடித்துக் கொள்வான். இதனுல் சம்பந்தப்பட்ட இரு கலியாணப் பகுதியினருக்கும் ஒரே போராக இருக்கும். ஒரு வருடத்திற்குள் இந்தத் துவந்த யுத்தம் எல்லாம் அடுத்த வருடமே இரு குடும்பங்களும் ஒன்ருகிவிடும்.



தியாகுவின் திட்டத்தையும் தன் நிலையையும் கவனித்தாற் கல்யாணத்தின் பின் நடைபெற வேண் டிய இந்தத் துவந்த யுத்தம் கல்யாணத்துக்கு முன்னமேயே நடைபெற்று விட்டதுபோல நடராஜ னுக்குத் தோன்றிற்று. இனிஎன்ன? தியாகு அப்பா மாமா எல்லாரையும் கூட்டிக்கொண்டு வருவான். மறுபடியும் பிரிந்தவர்கள் கூடுவார்கள். தனக்கும் கனகத்துக்கும் கல்யாணம் நடக்கும். தான் மறுபடி யும் ஊருக்குப்போய் வழமைபோல மாமனுர் வீட்டிலே வாழவேண்டியிருக்கும் என்று எண்ணிய போது இப்படி ஒரு முடிவுக்குத்தானு இத்தனை வைராக்கியத்துடன் எல்லாரையும் பிரிந்தேன்? படிப் பைத் துறந்தேன் என்று ஏங்கினுன். அடக்குமுறை பிரயோகம் பண்ணப்பட்ட இலட்சிய வாதியின் மனம்போல் அவன் மனம் உள்ளுக்குள் குமைந்து சாம்பியது. இப்படியெல்லாம் நேருவதாக இருந்தால் ஏன் ஊரைவிட்டு வந்திருக்கவேண்டும்? ஏன் தந்தை யைப் பிரிந்திருக்க வேண்டும்? என்றெல்லாம் எண்ணி ஞன் மறுபடியும்.

ஒன்றன் பின் ஒன்ருய், சங்கிலிக்கோவையாய் எண்ணங்கள் அவனுள்ளே ஒன்றை ஒன்று துரத் துகையில் அப்படித் தொடரும் எண்ணங்கள் சரியா பிழையா, தியாகுவைப்பற்றித் தன் யூகம் உண்மையா பொய்யா என்பதைப் பற்றிச் சிந்திக்க முடியாமலே அவன் சமநிலை கெட்டுப்போயிருந்தான். வெறிபிடித்த தேசியவாதி தன் அரசியற் கொள்கைகள் எல்லாமே சரியென்று எண்ணுவதைப்போல நடராஜனும் தான் நினைப்பதெல்லாம் சரியென்று எண்ணிக்கொண்டு அந்த நினைவின் முடிபாய், அந்த நினைவுகளின்

காரணமாய் இருந்த தியாகுவை மீண்டும் சந்தித்து அவனைத் தன் வாய்கொண்ட மட்டும் திட்டித்தீர்த்துவிட எண்ணினான்.

இத்தனைக்கும் அவனையே காத்துக்கொண்டு நின்ற இராமசாமி "ஐயா கொஞ்சம் கெதியா வந்தாற் தேவல" என்றான்.

நடராஜன் தன் உணர்ச்சி ஓட்டங்களை இராமசாமியின் முன்னால் காட்டிக்கொண்டதற்கு வெட்கிக் கொண்டவனாய்ச் 'சரி புறப்படு' என்று சொல்லிக் கொண்டே நடந்தான்.

பிலோமினாவின் வீட்டை அடைந்ததும் வழக்கம் போல "இப்போது எப்படி இருக்கிறது?" என்று கேட்டான்.

பிலோமினா பதிலே பேசாமல் அவன் முன்னால் நின்றுகொண்டிருந்தாள். வெளியே உலகையே பனிப் புகாரும் குளிரும் இறுக்கி மூடிக்கொண்டிருக்கையில் இயற்கையே நிரந்தரத்துவம் பெற்று நின்றுகொண்டிருப்பதைப்போல இருந்தது.

தனக்கு முன்னால் அசையாமல் நின்ற பிலோமினாவின் முகத்தை உற்றுப் பார்க்கையில் அவள் இரவு முழுவதும் நித்திரை கொள்ளவில்லை, அழுது கொண்டேயிருந்திருக்கிறாள் என்ற உண்மை நடராஜனுக்குத் தெரிந்தது.

எதிரே அவள் தாயார் படுத்திருக்கும் கட்டிலைக் கவனித்தான். எல்லா உபாதைகளையும் படுக்கையிலேயே தீர்த்தவளாக ஓர் அசைவோ, ஆட்டமோ இன்றி அடித்துப்போட்ட பாம்பைப்போலச் செயலற்றுக்கிடந்தாள் அவள் தாய். அந்த அறைக்குள்ளே மருந்துப் போத்தல்கள், பழஞ்சீலைகள், கோப்பைகள், பீங்கான்கள் எல்லாம் ஓர் ஒழுங்குமின்றி மூலைக்கு மூலை இறைக்கப்பட்டுக் கிடந்தன. அவ்வறையின் செயலற்ற தன்மையும், களையிழந்த தோற்றமும் ஒரு பயங்கரத்தைக் கொடுப்பதாக இருந்தது.



"இராத்திரி அமைதியாகத் தூங்கினார்களா?" என்று கேட்டபடியே நடராஜன் அவள் தாயாரின் நாடியைப் பரிசோதித்தான். தீர்ப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கும் கொலைக் குற்றவாளிபோலப் பிலோமினா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். நித்திரையற்றிருந்ததாற் சிவந்து போயிருந்த அவள் கண்களிலிருந்து, கடற்பஞ்சிலே பட்டு ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீர்த் துளிகளைப்போலக் கண்ணீராறு அவள் கன்னங்களில் ஓடிற்று.

இத்தனைக்கும் அவள் தாய் செயலற்றுப் போய்க் கிடந்தாள். இரவுமுழுக்கப் பயங்கரமாக வெட்டி இழுத்துக்கொண்டிருந்த இழுப்பும் இப்போது இல்லை. எத்தனையோ கஷ்டங்களுக் கிடையில் தன் மகளை உருவாக்கிவிட்ட அந்தத் தாய், கடைசிகாலத்தில் அவள் அனாதரவான நிலையைப் பார்க்கக்கூடாது என்று எண்ணினாளோ என்னவோ படுக்கையில் பிரக்ஞையற்றுப்போய்க் கிடந்தாள்.

அவளைப் பரிசோதித்து முடிந்த நடராஜன் கேட்டான். "யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்

களுக்கு அறிவிக்கலாம். அவர்கள் இங்கே இருப்பது தங்களுக்கு உதவியாக இருக்குமல்லவா?" என்றான் பிலோமினாவிடம்.

"அப்படியானால் அம்மா......" பிலோமினா அதற்குமேலே தொடரமுடியாமல் விம்மி விம்மி அழத்தொடங்கினாள்.

நடராஜனுக்கு அவளுக்கு எப்படி ஆறுதல்செய்வது என்று தெரியவில்லை. அப்படியே கல்லுப்போலக் கதிரையில் இருந்துகொண்டிருந்தான். அவள் விம்மல் முடிந்ததும் அவளைச் சிரிக்கவைக்க வேண்டும் என்று விரும்பினவனாகப் "பெண்கள் எல்லாரும் இப்படித்தான் எதற்கும் அழுது தீர்த்து விடுகிறார்கள். இப்போது அழுதீர்களே அதனால் யாருக்கும் என்ன பயனும் ஏற்பட்டிருக்கிறதா?" என்றான்.

தூண்டிற்காரனுக்கு மிதப்பிலே கண் இருக்குமாம். நடராஜனின் இந்தக் கேள்வி பிலோமினாவின் மனத்தில் எந்த மாற்றத்தையும் உண்டாக்கவில்லை. தன் அன்னையின் நிலையை அறிவதிலேயே அவள் கண்ணாயிருந்தாள். அந்த நிலையை அறிந்துவிடுவதற்காக அவள் பதட்டத்தோடு கேட்டாள்: "அம்மாவிற்கு எப்படியிருக்கிறது?"

"வயது போய்விட்டது. பலவீனமான உடம்பு" நடராஜன் இதை அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டு சொல்லத் திராணியற்றவனாய் நிலத்தைப் பார்த்துக்கொண்டே சொன்னான்.

"அப்படியானால்..."



"ஒன்றுமில்லை; ஆனாலும் உறவினர்கள் யாராவது பக்கத்திலிருந்தால் உங்களுக்குத் தைரியமாக இருக்கும் அல்லவா?"

"உறவினர்களா?" பிலோமினா நீண்ட பெருமூச்சு விட்டாள்; ஏக்கத்தின் சுவாலைபோல இருந்தது அந் நெடுமூச்சு.

இதற்குள் நடராஜன் அவள் தாயாருக்கு ஏதோ ஊசியைப் பாய்ச்சினான். பாய்ச்சிக்கொண்டே "இன்னும் சில நிமிடங்களில் உணர்வு வரும். எதற்கும் தைரியத்தை விடாமற் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்றே புறப்படுவதற்கு ஆயத்தமானான்.

"அதற்குள்ளாகப் போகப்போகிறீர்களா?"

நடராஜன் அதற்கு விடைசொல்ல முடியவில்லை; அவள் முகத்தைப் பார்த்துப் பேசவே அவனால் முடியவில்லை.

"உங்கள் தாயாராக இருந்தால் இப்படி விட்டு விட்டுப் போவீர்களா?" என்றாள் பிலோமினா.

அவள் கேள்வியில் நடராஜன் அப்படியே திகைத்துப்போனான். துன்பத்தின் எல்லையிலே நிற்கும் எந்த உயிருக்கும், அது அஃறிணையாயின் என்ன, உயர்திணை உயிராயின் என்ன, தன்னை மறந்த ஒரு வெறியிற் பிறக்கும் தைரியம் ஒன்று ஏற்படுகிறது போலும்! நடராஜன் மனதிலே இராமசாமி பிலோமினாவைப்பற்றிச் சொன்னதெல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. "மூன்று வருடங்களாக ஊருக்கே போகவில்லை தனியாகத்தான் இருக்கிறார்கள்." ......... பாவம்!

உறவினர்களும் இல்லை. பிலோமினா பயப்படுகிறாள். என்று எண்ணிக்கொண்டான் ஆனாலும் அவள் கேள்விக்கு விடையாக "வைத்தியனுக்கு எல்லா வியாதிக்காரரும் ஒன்றுதான் எல்லாரையும் தன்னால் முடிந்தவரை வியாதியிலிருந்து நீக்குவதே அவன் இலட்சியம்" என்றான்.

"அப்படியாயின் பெற்ற தாயாரிடத்திற்கூட உங்களுக்குப் பாசம் கிடையாதா?"

"யார் அப்படிச் சொன்னது? பிலோமினா! இப்படிக் கதையை வளர்த்துக்கொண்டிருப்பது உன் மனதிற்கு ஓர் திருப்தியைக் கொடுத்தால் நான் நீண்ட நேரத்திற்கு இப்படியே பேசிக்கொண்டிருக்க விரும்புகிறேன். ஆனால் இப்படிப் பேசிக்கொண்டிருப்பதால் ஆகப்போகிறது ஒன்றும் இல்லை. உங்கள் நிலை எனக்கு நன்றாக விளங்குகிறது. எனக்கும் இதயம் இருக்கிறது. என் தாயார் என்று எண்ணிக் கொண்டே உன் தாயாரைக் கவனித்தேன். ஆனால் இப்போது நான் போகவேண்டும். எப்படியும் அரை மணித்தியாலத்தில் உன் அம்மாவுக்கு உணர்வுவரும். அப்போது இம் மருந்தைக் கொடு இரண்டு மூன்று மணித்தியாலங்களில் நான் வந்துவிடுவேன்" என்று எழுந்து நடந்தான்.

"இருங்கள் என்று சொல்லிக்கொண்டே பிலோமினா அவனுக்குக் கோப்பி கொடுத்தாள். அவளை மூடி மறைத்திருந்த நாணத்திரை அகன்றது. எங்கோ இரு துருவங்களில் இருந்த இரண்டு உயிர்களும் துன்பத்தின் உச்சியில் ஒருவரை நெருங்குகையில் இருவரிடையுமிருந்து இடைவெளி நெருங்கி நெருங்கிக் கொண்டே வந்தது.

# 37

## தழுவல்

வீட்டுக்கு வந்ததும், நடராஜன் தியாகுவிற்குத் தந்தி பேசினான். ஆனால் யோசித்து யோசித்து உருக் குலைந்து கொண்டிருக்கும் செயலற்றவனா தியாகு? அவன் அங்கேயில்லை என்று தெரியவந்தது. அவன் எங்கு போனான் என்பதைக்கூட நடராஜனாற் தெரிந்து கொள்ள முடியவில்லை. இப்படியே மூன்று நாட்கள் கழிந்து விட்டன.

நடராஜனின் மனதிலிருந்து வந்த சந்தேகமும் அதன் பயங்கரமும் காற்றிற் கரைந்து அற்றுப்போன ஒலியைப் போலக் காலம் என்ற சூன்யத்தில் அற்றுப் போய்விட்டன.

இவ்வளவுதூரம் தன்னைத் தேடிக்கொண்டு வந்த செல்லன் தியாகுவிடம் தன் இருப்பிடத்தை வற்புறுத்திக் கேட்காமலிருப்பானா? அப்படிக் கேட்டுப் பிடித்திருந்தால் இதுவரை தன்னைவந்து சந்திக்காமல் இருப்பானா? செல்லன் தன்னைத்தேடிவந்தது என்று சொன்னதெல்லாம் தியாகுவின் புரளி என்று அவன் மனம் எண்ணிற்று.

இந்த மனவேதனைக்குள்ளே பிலோமினாவின் வீட்டுக்கு அடிக்கடி போய்க் கொண்டிருப்பது அவனுக்கு ஆறுதலாகவே யிருந்தது.

மலை நாட்டிலே அவனுக்கு நண்பர்கள் என்று சொல்லிக்கொள்ள எவரும் இல்லை. மனம் விட்டுப் பேச ஓர் உயிர்ப்பிராணி கிடையாது இந்நிலையிற் தத்தளித்தவனுக்குப் பிலோமினுவிடம் பேசுவது இதமாக இருந்தது! ஆம் பெண்கள் - வேதனையாகவும் அதைத்தீர்க்கும் மருந்தாகவும் இருக்கிறார்கள் என்று திருக்குறள் சொல்லுகிறது. யாரோ ஒருத்தியால் ஏற்பட்ட மனோவேதனைகளைப் பிலோமினு தீர்த்துக் கொண்டிருந்தாள்!

இந்த மனநிம்மதி அவனுக்கு மட்டுந்தானு? பிலோமினுவுக்கு இல்லையா? அவளைப் பொறுத்த வரையில் நடராஜனைப்போற் 'சுடுபட்ட' மனம் அவளுக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனுல் அவள் மனதிலே தனிமையின் பயங்கரம் இருந்தது! இளமையின் உணர்ச்சிகள் இருந்தன.

சாதாரணமாகப் பெண்கள் எல்லோருமே, தங்களையொத்த இளைஞர்களுடன் பேசுகையில் விட்டுக் கொடுக்காமல்தான் பேசுகிறார்கள். ஏட்டிக்குப் போட்டியாகத் தங்களைக் குறைவாகக் காட்டிக்கொள்ளாமற் பேசுகிறதற்கு இயற்கை அவர்களுக்குப் படிப்பித்துக் கொண்டுதான் இருக்கிறது! பிலோமினுவும் அவனுடன் அப்படித்தான் பேசினுள்.

தனியாக இருக்கையிற் பிலோமினு பேசியதெல்லாம் நடராஜனின் நினைவுக்கு வரும். நேற்று அவள் பேசியதை நடராஜன் எண்ணிப்பார்த்தான்.

"மத்தியானம் சாப்பிட்டுவிட்டுப் போகலாமே."



"இல்லை; இராமசாமி எனக்காகச் சமைத்து வைத்திருப்பான்"

"ஒருநேரச் சாப்பாட்டைக் கொட்டுவதால் அப்படி ஒன்றும் அதிகமாகச் செலவழிந்து போய்விடாது."

"அப்படியானுல் எனக்காகச் சமைத்ததினுல் தங்களுக்குச் செலவு அதிகமாகி விட்டதாக்கும்"

"பெண்கள் சமைக்கும்போது கணக்குப் பார்த்துச் சமைப்பதில்லை."

"அதனுல்தான் எனக்கு மணஞ்செய்து கொள்ள இன்னமும் மனம் வரவில்லை" இதைச் சொல்லியதும் நடராஜன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் கல்லைக் கடித்தவன்போலக் கணம் அப்படியே செயலற்று நின்று விட்டான். பேசத்தகாததைப் பேசி விட்டோம் என்ற எண்ணத்தில் அவன் மனம் நாணிற்று.

"கணக்குக் காட்ட வேண்டுமே என்ற பயத்தினுலேதான் எத்தனையோ பெண்களும் கல்யாணத்தை வெறுக்கின்றார்கள்" என்றாள் பிலோமினு. அவளிடம் எந்தச் சலனத்தையும் காணவில்லை.

எப்படியோ சாப்பிடாமலே வந்துவிட்டான் அன்று மத்தியானம். அன்று இரவு அவளாகவே அவனிடம் பேச்சைத் தொடக்கினுள். "இராமசாமியிடம் சமைக்க வேண்டாம் என்று சொல்லியிருப்பீர்கள்?

"ஏன்? நீங்கள் கணக்குப்பார்க்காமற் சமைத்து வைத்திருக்கிறீர்களோ?"

"கணக்குப் பார்க்க வேண்டிய தேவை இன்னமும் வரவில்லை"

"அந்தத் தேவை வருவதும் தங்களுக்கு விருப்பமாயில்லையே என்று மத்தியானம் சொன்னீர்களே."

பிலோமினா அவ்வளவில் எதையோ மறைக்க விரும்பியவள் போல "அதெல்லாம் இருக்கட்டும். நீங்கள் இன்றைக்குச் சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும்?" என்றாள். அவள் குரலிலே உரிமையோடு கூடிய வற்புறுத்தல் இருந்தது.

அவள் வற்புறுத்தலான வேண்டுகோளை மறுக்கத் திராணியற்றுப் போன நடராஜன் அன்று சாப்பிட்டான்.

வீட்டை விட்டு வெளியேறிய பிறகு அன்றுதான் அவன் நல்ல சாப்பாட்டை, பெண் கைப்பட்டுச் சமைக்கப்பட்ட உணவைச் சாப்பிடுகிறான். அது நன்றாகத்தான் இருந்தது.

சாப்பிட்டு முடிந்ததும், கையைத் துடைத்தவாறே வெளியே வந்தவனுக்கு மேசையிற் கிடந்த புத்தகம் ஒன்று காட்சி கொடுத்தது. அழகான அட்டைப் படத்தோடு கூடிய எட்டணாப் புத்தகம் அது. புத்தகத்தின் பெயர் ஆசை அண்ணா.'

பெயரைப் பார்த்ததுமே அவனுக்கு அதில் வெறுப்பு ஏற்பட்டது; அட்டைப்படமே பிடிக்கவில்லை. ஆபாசப் புத்தகமாயிருக்கும் என்று எண்ணிக் கொண்டே "இவைகளையும் படிக்கிறீர்களா?" என்றான்



"ஏதோ கிடைப்பதெல்லா வற்றையும் நேரங் கிடைத்தாற் படிக்கிறேன்" என்றாள் பிலோமினா.

"இந்த ஆபாசமான படத்திற்கு 'ஆசை அண்ணா?' என்று பேரிட்டிருக்கிறார்களே?" என்றான்.

"எடுத்த எடுப்பில் ஆபாசம் என்று விட்டீர்களே"

"படம் அப்படித்தான் இருக்கிறது."

"நீங்கள் வடநாட்டுக் கதைகள் படித்திருக்கிறீர்களா?"

"ஓரளவு படித்திருக்கிறேன்."

"அதில்வரும் கதாபாத்திரங்கள் அண்ணன் தங்கை என்றுதான் முதலிலே தொடங்குவார்கள். கடைசியிற் கதை கல்யாணத்திலே முடியும். அந் நிகழ்ச்சியொன்றைச் சுருக்கிப் படமாக வரைந்தால் அது ஆபாசமாகத்தான் படும்.

"சந்தர்ப்பமும் சூழலும் அவர்களைக் காதலர்களாகப் பண்ணியிருக்கும்."

"அப்படிப் பண்ணிய சூழ்நிலையை ஆபாசம் என்பதாக இருந்தால் இப்படத்தையும் ஆபாசம் என்று விடலாம். சூழ்நிலை ஆபாசமா? ஏன் அதைத் தெய்வ நியதி என்றால் என்ன?"

"அப்படி என்றால் அண்ணன் தங்கையாகப் பழகுவதே கூடாது?"

"நம் நாட்டுக்குப் பொருந்தாது. வயது வந்த ஆணும் பெண்ணும் நெருங்கிப்பழகுவதனால் நம் நாட்டில் அவர்கள் கணவனும் மனைவியுமாக இருக்க வேண்டும்; அல்லது உடன் பிறந்த அண்ணன் தங்கைகளாக இருக்க வேண்டும்."

"இந்த வசனத்தை நானும் ஏதோ ஒரு நாவலிற் படித்ததாக நினைவு. இரகுநாதனோ, காண்டேகரோ என்று எனக்குத் தெரியாது. உன் தத்துவப்படி நானும் நீயும் நெருக்கமாகப் பழகுவதுகூட ஆபத்துத்தான்" என்று சிரித்தான் நடராஜன்.

"அப்படி ஒன்றும் பயப்படாதீர்கள்" என்று பிலோமினாவும் சிரித்தாள்.

நடராஜன் மனதிலே இந்தக் காட்சி படமோடிக் கொண்டிருக்கையில் ராமசாமி வந்தான். வந்ததும் வராததுமாக "சாமி சீக்கிரமாப் பொறப்படுங்க; அந்த அம்மாவுக்கு ரொம்ப சீரியஸாக இருக்கு" என்றான்.

ராமசாமி உடனே புறப்பட்டான். அப்போது இரவு எட்டு மணியிருக்கும். ஆனாலும் காலத்தை வென்று எங்கும் வியாப்பித்திருக்கும் கடவுளைப் போல உருவற்ற கும்மிருட்டு அந்தச் சுற்றுப்புறமெங்கும் வியாப்பித்துக் கிடந்தது. கடவுளோடு இரண்டறக்கலந்து விட்ட ஆத்மாக்கள் போல மலை நாட்டுத் தேயிலைப் புதர்களெல்லாம் அந்த இருட்டோடு இருளாக உருத் தெரியாமல் கலந்திருந்தன. தூரத்தே அங்கங்கேயிருந்த 'லயிற்று'களிலிருந்துதோன்றிய வெளிச்சம் மட்டும் அஞ்ஞானிகள் போலப் பகட்டிக்கொண்டிருந்தன.



அந்த இருளிலே நடராஜன் சிரமத்தோடு வழியைக் கண்டுபிடித்தபடி ஓடிக்கொண்டிருந்தான்! கையிலே மின்சூளுடன் ராமசாமி நடராஜனைத் துரத்திக்கொண்டிருந்தான்.

வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தபோது பிலோமினாவின் தாயார் ஏதேதோ படுக்கையிற் கிடந்தபடி புலம்பிக்கொண்டிருந்தாள். பிலோமினா அவள் கட்டிலுக்குப் பக்கத்தில் அழுதவண்ணம் நின்றுகொண்டிருந்தாள்!

நடராஜனைக் கண்டதும் அவள் அழுகை மடையை உடைத்த வெள்ளமாய்ப் பொங்கியது. தனியனாய் விடுவேனோ என்ற பயங்கரத்தில், அந்த பயத்தினியல்பாற் பிறந்த சோகத்தில், அவள் இதயத்தின் ஊற்றுக் கண்கள் எல்லாம் திறந்து குபீர் குபீரென்று விம்மி வெடித்து அழுகையில் அவ்வழுகை என் நிராதரவான நிலையை உன்னிடம் மட்டும்தான் சொல்லியழ முடியும் என்று நடராஜனிடம் முறையிடுவது போல இருந்தது.

நடராஜன் நோயாளியின் நாடியைப் பரிசோதித்தான்! பரிசோதித்து என்ன செய்வது? என்ன ஆகப் போகிறது? என்ன நடக்க இருக்கிறது? என்பது அவனுக்கு எப்போதே தெரிந்திருந்தது. ஆனால் அதைப் பிலோமினாவுக்குச் சொல்லத்தான் திராணியில்லை.

அவன் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் அந்தத் தாய் சொன்னாள் "ஏன் தம்பி நீ அவதிப்படுகிறாய், இன்னும் கொஞ்ச நேரத்தில் எல்லாம் சரியாகிவிடும்."

"அம்மா" என்று மறுபடியும் அலறினாள் பிலோமினா!

அந்தத்தாய் மறுபடியும் தன் மகளை அணைத்த படியே சொன்னாள் "என்னமோ நீ கொடுத்து வைத்தது அவ்வளவுதானம்மா. இனி எல்லாவற்றிற்கும் ஆண்டவன் இருக்கிறார்" என்றாள். அவள் பேச்சுத் தெளிவாக இருந்தது. எண்ணெய் வற்றிப்போகும் அகல் விளக்கின் கடைசி அனற்பிளம்பைப்போல.

அப்படிச் சொல்லியவள் சிறிது தயங்கினாள். அந்தியகாலத்திலே மரிக்கப்போகின்றவனின் மனதைத் தங்கள் பக்கமாக இழுப்பதற்குப் பிசாசும், தேவதூதர்களும் தங்கள் கடைசிப் பிரயத்தனத்தைச் செய்வார்களாம் என்று நடராஜன் கிறீஸ்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறான். அந்தப் போராட்டந்தான் அவளுள்ளே நடந்துகொண்டிருக்கிறதோ அல்லது தன் மகளின் எதிர்காலத்தைப் பற்றிக் கடைசிக்காலத்தில் இந்தத் தாயுள்ளம் எண்ணிப் பார்த்ததோ! நடராஜன் கூடப் பரிதாபகரமாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்தில் அவள் பிலோமினாவைப் பார்த்துச் சொன்னாள். "உன் பக்கத்தில் இந்தப் 'பொடி'யையும் பார்க்கிறபோது எனக்கு ஆறுதலாக இருக்கிறது"

இதைச் சொல்லிவிட்டு அவள் நடராஜனைப் பார்த்தாள். நடராஜனிடம் எதற்கோ கெஞ்சுவதைப் போலிருந்தது அவள் பார்வை! அவள் கெஞ்சுவதற்கு எந்தப் பதிலும் கொடுக்கமாட்டாதவனாக நடராஜன் சிலையாகிப் போய் நின்றான்.



சொல்ல வேண்டியதைச் சொல்லி யாகிவிட்டது என்று எண்ணினாளோ என்னவோ, மறுபடியும் கிழவி தன் மகளைப் பார்த்து "பிலோமினா! திருமணித்தியாலப் புத்தகத்தை எடுத்துப் படி. அழாதே" என்றாள்.

பிலோமினா புத்தகத்தை எடுத்து விம்மியபடியே "என் காலிரண்டும் அசைவின்றிக் கைகளிரண்டும் செயலற்றுக் குளிர்ந்து நான் மரணாவஸ்தையாகக் கிடக்கிறபோது......"என்று வாசித்தாள்.

கிழவி, "என் தயாபர யேசுவே, என் பெயரிற் தயவாயிருஞ் சுவாமி" என்று வாய்க்குள்ளே முணுமுணுத்தாள்.

பிலோமினா அந்தச் செபத்தைப் படிப்பதும் இடைவிட்டுத் தன் தாயைப் பார்ப்பதுமாக இருந்தாள்.

நிமிஷங்கள் சென்றுவிட்டன.

பிலோமினா மறுபடி தன் தாயைப் பார்த்தாள். பார்த்தாள்! தன்னைப் பெற்று வளர்த்த பேரன்பைக் கடைசி முறையாகப் பார்த்தாள்! அவள் குடியிருந்த கோயிலின் கருணைமிகுந்த கண்கள் தன்னையே இன்னமும் உற்று நோக்குவதை அப்படியே நோக்கிக் கொண்டேயிருப்பதைப் பார்த்தாள்! தாயின் தலைமாட்டிலே நின்ற நடராஜன், கண்களில் ஆறாக நீரைப் பெருக்கிக்கொண்டு மௌனமாக அழுது கொண்டிருந்தான். அதைக்கண்ட பிலோமினா அம்மா என்று அலறிக்கொண்டே தடாரென்று சாய்ந்தாள்.

# 38

## தியாகம்

கொழும்புக்குப் போன செல்வராஜன் எந்த நற்செய்தியும் இன்றி மூதூருக்கு வந்துவிட்டான். அவனையே எதிர்பார்த்துக்கொண்டிருந்த கந்தையா அவன் வெறுங்கையோடு வந்ததைக்கண்டு இடிந்து போய் விட்டார்!

எவருக்குமே சொல்ல முடியாத ஓர் அருவருப்பான கனவைக் கண்டவர்போலக் கந்தையா தவித்தார். நடராஜனைப்பற்றி யாரிடம் சொல்வது? அவனை எங்கு தேடுவது? தான்பெற்ற பிள்ளையைவிட அருமையாக வளர்த்த நடராஜன் இப்படிக் கண்காணுமற் போய் விட்டானே என்றெண்ணும்போதெல்லாம் அவர் நெஞ்சம் வெடித்தது.

ஆனல், செய்வதென்ன வென்றுதான் எவருக்கும் புலப்படவில்லை.

ஆனல் இந்தக் கவலைக்கிடையிலும், கார்த்திகை மாதத்திலே வாடைக்காற்று மழையை வருஷித்தது. காடு கரம்பெல்லாம் நீர் நிறைந்தது. மகாவலிகங்கை பிரவாகித்தது. கடல் குமுறியது. தை மாதம் பனி கொட்டிற்று. கதிர்கள் முற்றிப் பழுத்துத் தலை சாய்த்தன. புல்லிற் தேங்கிய பனித்துளிகளை வைரத் துண்டுகளாகப் பிரகாசிக்கச் செய்த சூரியனுக்குப் பொங்கலும் நடந்தேறியது. அறுவடையும் நடந்தது.



கோபமும் தாபமும், சண்டையும் சச்சரவும், உலக இயற்கை. அவைகள் இல்லாமல் மனித குணங்களே உருவாவதில்லை என்று தெரிவிப்பது போல இயற்கை தன் தொழிலைச் செய்துகொண்டுதான் இருந்தது.

கூனி வேலை பார்த்த கிழவியும், குடிலர் வேலை பார்த்த சண்முகம்பிள்ளையுங்கூட நடராஜனை மறந்து விட்டார்கள்! ஊரே நடராஜன் என்ற ஒருவன் இருந்தான் என்பதை மறந்துவிட்டிருந்தது.

தன்னைக் காட்டிக் கொடுத்த துரோகியான யூதாசுக்குக் கிறீஸ்துநாதர் சொன்னராம்: "நீ பிறவாதிருந்தால் உனக்கு நலமாயிருக்கும்" என்று. அம்பலவாணர் கிறீஸ்துநாதரல்ல. 'ஒரு கன்னத்தி லடித்தவனுக்கு மறு கன்னத்தைத் திருப்பிக் கொடு' என்ற கிறீஸ்துநாதரின் போதனையைத்தானும் அம்பலவாணர் ஏற்றுக்கொள்ளக் கூடியவரல்ல. ஆனலும் பிள்ளைப் பாசமும் வாஞ்சையும் அவர் இதயத்தை அலக்கழிக்கையில், வீம்பு பேசி அலுத்த அவர் உள்ளம் கூம்பிச் சாம்புகையில், கிறீஸ்துநாதரைவிட ஒருபடி மேலே போய் "அவன் பிறவாதிருந்தால் அவனுக்கு மட்டுமல்ல எனக்கும் நலமாயிருக்கும்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்! ஆனலும் தன் மகனைத் தேடிப் பார்க்க வேண்டும்; எங்கே எப்படி இருக்கிறனே என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமே; இந்த நினைவு அவருக்கு வரவில்லை. அவரைப் பொறுத்தமட்டில் அவன் இல்லாமற்போன பொல்லாப் பிள்ளையாகவே இன்னமும் இருந்தான்.

கந்தையாவிற்குக்கூடக் கனகத்தைப் பற்றிய விசாரம் ஏற்படவில்லை. கல்முனையிலே கனகம் ஏதோ உயிரொடு இருக்கிறுள் என்ற நினைவுமட்டும் அவருக்கிருந்தது. அவர் மனைவிமட்டும் மகளைக் கூட்டிக் கொண்டு வந்து நாம் வேறு வழி பார்க்கிறதுதானே; அவள் இப்படித்தானு இருக்கிறது? என்று அடிக்கடி அவரைக் கேட்பதுண்டு. அப்படி அவள் கேட்கும் போதெல்லாம் கந்தையா அகாரணமாக அவள்மேற் சிறிவிழுந்தார்.

பாவம்! மலை குலேந்தாலும் மனங்கலங்காத அவர் அத்தான் உருக்குலேந்து போய்க்கொண்டிருக்கிறுர்! அவர் மட்டும் அப்படி வாடி வதங்கிக்கொண்டிருக்கையில் தன் வீட்டில் மட்டும் மங்கள காரியம் நடக்காததுதான் குறையா? என்று எண்ணிக்கொண்டார். சந்தர்ப்பம் கிடைத்தால், அத்தானிடம் சரணுகதியடைந்து புண்பட்டுக் கிடக்கும் அவர் மனதைத் தேற்றுவிக்கக்கூட ஆயத்தமாகத்தான் இருந்தார் கந்தையா. ஆனுல் அம்பலவாணர் அவரை எப்போதாவது முகங்கொடுத்துப் பார்க்கிறுரா? அப்படிப் பட்டவரிடம் தாஞக எப்படிப் போய் உறவு கொண்டாடுவது? கந்தையாவுக்கும் ஒன்றுமே விளங்கவில்லை.

எப்படியோ இருவரும் வாழ்ந்துகொண்டுதான் இருந்தார்கள்! இருவர்க்கும் பொதுவான காரியங்கள் எத்தனேயோ ஊரில் நடக்கத்தான் செய்தன. கல்யாண வீடுகள், சாவிடு எல்லாவற்றிலும் இருவரும் மரம்போல மட்டைகள்போலக் கலந்துகொண்டார்கள். மட்டையும் மரமுமாகவே பிரிந்து போனுர்கள். எந்த உணர்ச்சியும் அவர்களை ஒன்றுக்கி வைக்கவில்லை.



இப்படியிருக்கையிற்றுன் கல்முனையிலிருந்து கனகத்தின் கடிதம் வந்தது. கனகம் தான் மதம் மாறிவிட்டதாகவும், அத்தோடு தான் ஒரு கன்னிகாஸ்திரி ஆகிவிடப் போவதாகவும், கல்முனையை விட்டுப் போய் விட்டதாகவும் எழுதியிருந்த அந்தக் கடிதம் கந்தையாவை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது!

உண்மைதான்! நூறு இருநூறு வருடங்கட்கு முன்பாகக் கிறீஸ்தவ சமயப் பாதிரிகள் கீழ்க் கரைகளில் தங்கள் மதத்தைப் பலவழிகளிலும் பரப்பிக் கொண்டிருக்கையில் அவர்கள் நோக்கம் மட்டக்களப்புப் பகுதிகளில் அமோக வெற்றியைக் கொடுத்தாலும் திருகோணமலைப் பகுதிகளிற் பிரதிகூலமாகத்தான் இருக்கிறது. பிறவாத பெம்மானுன தென்கைலை நாதன் கோயில்கொண்டிருக்கும் இடமல்லவா அது! வைதீகமான சைவர்கள் இடையில் மதமாற்றம் எடுபடவேயில்லை என்றுதான் சொல்லவேண்டும்! இப்போதும் இந்தப் பகுதிகளிலுள்ள சைவர்கள் மதமாற்றத்தை இழிவான செயலாகவும், மதம் மாறியவர்களை அருவருப்பாகவுமே எண்ணுகின்றனர். அப்படியான சூழ்நிலையில் வளர்ந்த கந்தையா தன் மகள் மதம் மாறிவிட்டாள் என்பதைக் கேள்விப்பட்டபோது உள்ளத்தில் நெருப்பைக் கொட்டிக்கொண்டவர்போல அவஸ்தைப்பட்டார்! தனக்கு இப்படியுமா அவமானம் வரக் காத்திருந்தது என்று நொந்துகொண்டார்!

ஆனுல் புத்திசாலியான அவர் எதையும் அமர்க்களப் படுத்துவதில்லை. தன் மனைவிக்குக்கூட விஷயத்தைச் சொல்லவில்லை. இந்திரதனுவால் அடிபட்டதைப்

போல வலிக்கும் தன் இதயத்தை எவருக்குமே காட்டாமல் இதற்கு என்ன பரிகாரம் செய்யலாம் என்பதை இரகசியமாக யோசித்துக் கொண்டிருந்தார்.

‘கனகம் மதம் மாறுவதையோ தான் எண்ணியபடி எதையும் செய்வதையோ சட்டப்படி அவர் தடுக்கமுடியாது. அவள் வயது வந்தவளாக இருந்தாள். தந்தை மகள் என்ற ஒரே பாசந்தான் அவளைத் தடுத்து நிறுத்தக்கூடியதாக இருக்கும். தந்தை மகள் என்ற பாசங்கூட அவருக்கு இல்லாமலா போய்விட்டது? கனகத்தின் போக்கைத் தடுத்து நிறுத்த முடியாமற் கந்தையா தவிக்கிறாரே. அது ஏன்? தங்கள் ஆசாரம், பெருமை எல்லாவற்றையுமே உதறி எறிந்து விடுவதாக எழுதியிருக்கும் தன் மகளைக் கந்தையா எரித்துவிடாமல் வாளாவிருக்கிறாரே. அதன் இரகசியந்தான் என்ன?

கனகத்தின் போக்கைத் தடுத்து நிறுத்தி அவளை வீட்டுக்குக் கொண்டுவந்து என்ன செய்வது? தன்னை அணைத்து வளர்த்த அத்தான் அம்பலவாணர், அருமையான ஒரே மகனைப் பிரியாமற் பிரிந்து சாகாமற் செத்துக்கொண்டிருக்கிறார். அவர் வீடு இழவு விழுந்த வீட்டைப்போலப் பொலிவிழந்து நிற்கையில் தன் வீட்டிற் தனது மகளுக்கு எந்த மங்களகரமான காரியத்தைச் செய்வதையும் கந்தையாவினால் எண்ணிப்பார்க்கவே கஷ்டமாக இருந்தது. கண்ணுக்குக் கண், உயிருக்கு உயிர் என்று அந்தக்காலத்திலே அரசநீதி இருந்ததாம். அதைப்போலவே கந்தையாவும், அம்பலவாணரின் மகனுக்காகத் தன் மகளையே இழக்கத் தீர்மானித்துவிட்டாரா?



அவருடைய வீட்டிற்தான், நடராஜனைத் தவிர வேறு எவரும் உரிமை பாராட்ட முடியுமா? அப்படி ஒரு உரிமை பாராட்டுவதைக் கனகம் சம்மதிப்பாளா? கந்தையாவிற்குத்தான் அது சம்மதமா? மணக்கோலத்தில் கனகத்தையும் நடராஜனையும் கற்பனை செய்து பார்த்த அவர் கண்கள், அந்தக் கற்பனையுருவைச் சித்திரவதை செய்து நடராஜனிடத்தில் வேறொருவனை ஒட்டவைத்துப் பார்ப்பதைக்கூட வெறுத்தன.

ஒருவேளை நடராஜன் தன் மனம் மாறித் திரும்பி வந்துவிட்டால் ..... என்று எண்ணிப்பார்த்தார் கந்தையா! அப்போது கனகமும் இங்கே கன்னியாகவே இருந்தால்...... அதற்குள்ளே அவள் இப்படி ஒரு முடிவு செய்துவிட்டாளே என்று எண்ணிக்கொண்டிருக்கையிற் கந்தையாவினால் அந்நினைவின் கோரத்தைச் சகித்துக்கொள்ள முடியவில்லை.

நடராஜன் என்றைக்காவது ஒருநாள் வருவான். ஆண்டவனே அவன் வந்துதானாகவேண்டும். அவன் இங்கே வந்ததும், கனகம் இங்கில்லாவிட்டால், ஏன் இருந்தாற்தானென்ன, அத்தான் அவனுக்குத் தடபுடலாக யாரையாவது கல்யாணஞ் செய்துவைப்பார். அவர் மனமுங் குளிரும். அதனால் என்ன? அந்தச் சுபதினத்தைத் தன் கண்ணாற் காணக் கொடுத்து வைக்கவில்லையா? என்று நினைக்கையில் கந்தையாவின் கண்கள் கண்ணீரைக் கொட்டின.

கந்தையா மறுபடியும் பெருமிதத்துடன் எண்ணினார். என் மகள் வேசையாடவில்லை. எவருக்கும் துரோகம் பண்ணவில்லை. தீங்கிழைக்கவில்லை. எவருக்கும் தொந்தரவு இல்லாமற் தன்பாட்டில் ஒதுங்கிக்

கொண்டாள். அவளை நாம் ஏன் தடுத்து நிறுத்த வேண்டும்? அவள் இப்படிப் போய்விட்டாள் என் பதை அறிந்தாலாவது நடராஜன் வரமாட்டானா? அத்தான் மறுபடியும் அம்பலவாணராக ஆகிவிட மாட்டாரா? கனகம் இப்படிப்போவது நல்லதென்றே அவருக்குப் பட்டது! ஆனாலும் வெட்டுப்பட்ட ஆம ணக்கிலிருந்து சொட்டும் பாலைப்போல அவர் கண்கள் கண்ணீரைச் சொட்டவிடுவதை அவரால் நிறுத்தவோ தடுக்கவோ முடியவில்லை.

வேதனைப்படும் அவர் உள்ளத்திற்கு ஒரேஒரு ஆறுதல். சமயசம்பந்தமாக எத்தனை வேறுபாடு அவர் மனதில் இருந்தாலும், கிறிஸ்தவ சமயத் துற விகளைப் பற்றி அவருக்கு மேலான எண்ணமே இருந் தது. அவர்களின் தன்னலமற்ற சேவையும், அயராத உழைப்பும் அவர் மனதை எப்போதுமே கவர்ந்திருந் தன. அதனுற்தான் கனகத்தைக்கூடக் கல்முனைக்கு அவர்களின் பாடசாலைக்கு அனுப்பியிருந்தார்.. தன் மகளும், இந்த நிலையில் ஒரு துறவியாகிவிட்டதை வர வேற்றுக்கொண்டு, எல்லா ஆறுகளும் கடலிற் சங்க மிப்பது போல மதங்கள் எல்லாம் கடவுளிடம் சங்க மிக்கின்றன என்ற விவேகானந்தரின் தத்துவத்தில் ஆறுதலடைந்துகொண்டிருந்தது! ஆம், அத்தான் அவஸ்தைப்படுகிறர். நடராஜன் காணுமலே போய் விட்டான்; இவர்களிருவருக்காகவும் தன் மகளையே தியாகம் பண்ணிவிட்டார் கந்தையா! அவரது தந் தைப் பாசம் என்ற ஆட்டுக்குட்டிகூட வேதனை என்ற உள்ளத்திற் பலியிடப்பட்டுவிட்டது.

தந்தையார் இப்படிப் பதைக்கையில், கனகமும் அவள் பாடசாலையின் மற்றைய ஆசிரியைகளும், பிலோ மினுவின் தாய் இறந்த துக்கம் விசாரிப்பதற்காகப் பிலோமினுவின் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

---

# 39

## மிருத்யூவின் வாயிலில்

கீழே விழப்போன பிலோமினுவை நடராஜன் தாங்கிப் பிடித்துக்கொண்டான்! தனக்கு இருந்த ஒரே ஆறுதலான தன் தாயாரின் பிரிவைத் தாங்க முடியாத கொடியாக அவள் துவண்டு விழுந்து நட ராஜனின் கைத்தாங்கலில் தடைபட்டு, அவன் மடியிலே பிரக்ஞையற்றுப்போய்க் கிடக்கையில், அநாதரவாய் விட்ட அவள் நிலையின் பயங்கரமான எதிர்காலந்தான் நடராஜன் மனத்தை நிறைத்து விட்டது. அவன் வைத்தியன்! அவளை மூர்ச்சை தெளியப்பண்ண வேண்டுமே என்ற அவன் தொழில்கூட அவனுக்கு மறந்துபோய்விட்டது! பலமான பந்தரிலே செழித்துப் படர்ந்திருந்த கொடியிலிருந்து வாடி விழுந்துவிட்ட புடலம் பூவைப்போன்ற அவள் முகத்தையே அவன் பார்த்துக்கொண்டு இருக்கையில் எதிரே கட்டிலில் கட்டையாய் விறைத்துக் கிடந்த அவள் தாயாரின் சடலத்தைப்போல அவனுடைய சர்வ உணர்ச்சிகளும் அவனுள்ளேயே அடங்கி சாகக்கொடுத்தவனைப் போலக் கல்லாய்ப்போய் இருந்தான்.

சற்று நேரத்திற் பிலோமினு கண்ணைத் திறந்தாள். தன்னை மறந்த வெறியில் நித்திரையாய்விட்ட வெறி யன், நித்திரை முறிவிற் கண்ணை விழித்தால் அவனுக்கு நினைவு வந்திருக்கலாம். ஆனுல் மயக்கம் தீர்ந்திராது. கண் விழித்த பிலோமினுவிற்கும் சித்தம் சுவாதீனத்தி

லில்லே. தான் எங்கிருக்கிறேன், எப்படியிருக்கிறேன், என்ற எண்ணம் இன்னமும் வரவில்லே. ஆனல் பயங்கரமான கனவாக 'அம்மா செத்துப் போய்விட்டாள்' என்றது மட்டும் அவளுக்கு நினைவுக்கு வந்துவிட்டது. அவள் மறுபடியும் அலறி அழத் தொடங்கினுள்.

"பிலோமினு அழுதழுது என்ன ஆகப் போகிறது? எழுந்திரு" என்று அவளேத் தூக்கி நிறுத்த முயன்ருன் நடராஜன்.

"இந்த உலகிலே நான் எப்படித் தனியாக நிற்கிறது" என்று விம்மி விம்மி அழுதாள் அவள்.

நடராஜன் கண்களும் அவனேயறியாமலே கண்ணீரைக் கொட்டின. இப்போது "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்........." என்ற பழைய பாட்டின் தத்துவத்தைச் சொல்லி அவளே அழாமலிருக்கச் செய்யவேண்டும் என்ற மனநிலேகூட அவனுக்கு மாறிவிட்டது! அவள் நன்ருக அழவேண்டும். அவள் கண்களிலே கட்டுண்ட கடைசிச் சொட்டுக் கண்ணீரும் வெளிவந்து கண்கள் வரண்டு விடும் வரை, வரண்ட அந்தக் கண்கள் இரத்தகண்ணீரைக் கொட்டும் வரை நீ அழு; நன்ருக அழு பிலோமினு" என்று அவளுச்குச் சொல்லவேண்டும் போல இருந்தது நடராஜனுக்கு.

அவள் இன்னமும் அழுதுகொண்டுதான் இருந்தாள். "அம்மா! என்னேத் தனியாக விட்டிற்றியே." அவள் உள்மனதின் பாதாளங்களிலேயிருந்து சூன்யமாகிவிட்ட எதிர்காலத்தின் பயங்கரம் வெடித்துக் கிளம்பி



ஓலமிடுகையில், அந்த ஓலத்திற்கு ஒரு பதிலே நடராஜன் உதடுகள் கொடுத்தன.

"பயப்படாதே பிலோமினு, உன்னேடு நான் இருக்கிறேன்."

"அம்மா வீட்டைவிட்டுப் போனல் எல்லாருமே போய்விடுவீர்கள்!"

"உண்மையாக, சத்தியமாக நான் போகமாட்டேன்" என்று கம்மிய குரலில் அவசரமாகச் சொன்னுன் நடராஜன். அவன் கைகள் அவள் தலேயைத் தடவிக்கொடுத்தன.

இதற்குள் திடீரென்று பிலோமினு எழுந்து நின்ருள். தான் எப்படியிருக்கிறேன் என்ற உணர்ச்சி, வெளிறிக்கிடந்த வானத்தில் இடி இடித்ததைப்போலத் திடீரென்று அவளுக்கு வந்துவிட்டது. தன் அழகை அதிகப்படுத்தி அங்கங்களே மறைத்து நின்ற ஆடை சற்றுக் குலேந்து கிடந்ததை எண்ணுகையில் அவளுக்குத் தன்னிலேயே ஒரு அருவருப்பு வெறுப்புப் பிறந்தது. தடாரென்று தன் ஆடைகளேச் சரிப்படுத்திக் கொண்டாள்!

அவள் போக்கு நடராஜனுக்குப் பயத்தைக் கொடுத்தது. இத்தனே நேரமாக அவளின் உடலின் மிருதுத்தன்மையை உணர்ந்தபோதுதான் அவள் தனிமையின் பயங்கரத்தையும் அவனுல் நன்ருக உணர முடிந்தது. ஆனுற் திடீரென்று எழுந்துவிட்டபோது தான் அவனுக்கு அவள் பெண், தான் ஆடவன் என்பதை உணர முடிந்தது. ஏதும் தவறுதலாக எண்ணிக்

கொள்வாளோ? என்று நடராஜன் யோசித்துக் கொண்டு நின்றான்.

உடைகளைச் சரிப்படுத்திக்கொண்ட பிலோமினா திரும்பினாள். தன்னை உணராமலே அவனிடம் அழுது புலம்பிய அவளுக்கு, இப்போது மறுபடியும் அவனைக் கட்டியணைத்துக்கொண்டு அழவேண்டும் என்று இருந்தது. உண்மைதான்! துக்கத்தை யாரிடமாவது சொல்லியழுதாற்றான் அது திரும் என்று மனித மனம் நம்புகிறது. அவள் சோகத்தைச் சொல்லி யழக்கூடிய ஒரே ஒரு மனிதன் நடராஜன்தானிருந்தான். ஆனால் அவன் இளைஞன்! எனவே பிலோமினா விம்மிப் பொருமிக்கொண்டு நின்றாள்.

இதற்குள் இராமசாமி தோட்டத்திற்குப் போய் இரண்டு மூன்று பெண்களை உதவிக்குக் கூட்டிக் கொண்டு வந்துவிட்டான்.

பிலோமினா விடியும் வரை தாயின் கட்டிலடியில் விம்மிப் பொருமிக்கொண்டு இருந்தாள்.

விடிந்தது!

நடராஜன் வெளியிற் சென்று பிரேத அடக்கத் துக்கான ஏற்பாடுகளைக் கவனித்தான்.

இதற்குள் ஒரு கூட்டம் ஆசிரியைகள் அங்கே துக்கம் விசாரிக்க வந்தார்கள். அவர்களிற் கனகமும் இருந்தாள்.

வந்தவர்கள் உபசாரத்திற்கு ஏதேதோ சொல்லிப் பிலோமினாவைத் தேற்றினார்கள். அவர்கள் கடமை முடிந்தது என்ற திருப்தியிற் போய்விட்டார்கள்!



மழை கொட்டத்தொடங்கு முன்பதாக மத்தியானத்திலேயே பிரேத அடக்கம் முடிந்துவிட்டது.

அவள் தாய் கட்டையாக வீட்டிலிருந்தபோது பிலோமினாவுக்கு ஏதோ ஆறுதலாக இருந்தது. ஆனால் அவள் தாயும் வெளியேறிய பிறகு அவ்வீட்டிலிருந்தவர்களும் செத்த மாட்டிலிருந்து உண்ணி கழன்றதைப்போல ஒவ்வொருவராகப் பிரிந்துபோய் விட்டார்கள். இரவு இருண்டுகொண்டு வருகையில் புறத்தே உலகைக் கவ்விக்கொள்ளும் இருளைப்போலப் பிலோமினாவின் மனத்தில் பயமும் தனிமையும் கவிகையில் பிலோமினா செயலற்றுப் போய் ஒரு மூலையில் அப்படியே குந்திக்கொண்டிருந்தாள். இமைக்காத அவள் கண்கள் பார்க்கும் சக்தியையே இழந்துவிட்டாற்போல இருந்தன. எந்த அவயவமும் அசையவில்லை. அசையத் திராணியற்றிருந்தன.

நடராஜன் சாப்பாடு கொண்டுவந்தான். பிலோமினா இன்னமும் மூலையிற் குந்தியபடிதான் இருந்தாள்.

நடராஜன் அவளை நெருங்கி "இப்படியேதான் இருப்பதா, எழுந்து சாப்பிடு."

"சாப்பிடவா! இப்போதுதான் அம்மாவைத் தின்றுவிட்டு இருக்கிறேனே!"

நடராஜனுக்கு அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. ஆனால் அவளை எப்படியாவது தேற்றுவிக்க வேண்டும் என்ற மனம்மட்டுமிருந்தது. அவளை நெருங்கித் தேற்றவிருந்த நாணமும் பயமும் கூட இப்போது இல்லை. அவளில் ஏதோ ஒரு உரிமை

அவனுக்கு இருக்கிறதுபோல அவன் மனத்திற்குத் தோன்றியது. நடராஜன் அவளை நெருக்கமாக அணுகி 'எல்லோரும் சாகத்தானே வேண்டும்; உன் தாயார் உலகில் வாழ வேண்டிய காலம் வாழ்ந்துவிட்டாள் அதற்காகக் கவலைப்படலாமா? எழும்பு, இதைச் சாப்பிடு'' என்று நடராஜன் அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

நடராஜன் கைகளிலே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு 'நாளைக்கு நீங்களும் போய்விடுவீர்கள்: அம்மா இழுத்து இழுத்துச் சாகாமலிருந்தாலல்லவா எனக்கு ஆறுதலாக இருக்கும்'' என்று புலம்பினாள்.

உண்மைதான். ஆனால் கடவுளின் சித்தம் இருக்க வேண்டுமே. இதெல்லாம் நம் கையிலா இருக்கிறது? ......சாப்பிடு'' என்று மறுபடியும் அவளைக் கெஞ்சினான் நடராஜன்.

பிலோமினா இன்னும் அழுதுகொண்டுதானிருந்தாள். சூடான அவள் கண்ணீர் நடராஜனின் மார்பை நனைத்தது. ''பிலோமினா! உனக்குத் துணையாக நான் என்றைக்குமே இருப்பேன்'' என்றான் நடராஜன் அவளை அணைத்தபடி.

அன்றிரவு அவர்கள் இருவருமே சாப்பிடவில்லை. இருவருமே நித்திரை செய்யவுமில்லை. அம்பு பட்ட அன்றிற் பேட்டைப் பரிதாபகரமாகப் பார்த்துக் கொண்டேயிருக்கும் சேவலைப்போல நடராஜன் அவள் பக்கத்திலேயே இருந்தான். நடுக் கடலிலே திசை தப்பி அலைந்த படகுக்காரனுக்குத் திடீரென்று படகும் உடைந்துவிட, அந்த அநாதரவான நிலையிலும்



அங்கு ஒரு கட்டுமரம் வர அதிலே ஏறி உட்கார்ந்து கொண்டவனைப்போலப் பரபரப்போடும் பயத்தோடும் பிலோமினா இருந்தாள்.

விடியற்காலையானபோது பிலோமினா நடராஜன் மடிமீது தலையை வைத்தபடியே நித்திரையாகி விட்டாள். இமையை அழுத்திக்கொண்டிருக்கும் தூக்கக் கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு நடராஜன் அவள் முகத்தைப் பார்த்தான். அதிற்தான் என்ன கலவரம்! அந்தக் கலவரத்தினிடையே கூட அவளுக்குத் தன்னிடம் எவ்வளவு நம்பிக்கை! அந்த நம்பிக்கையில் அல்லவா அவள் பயம், கலவரம், தனிமை, சோர்வு எல்லாமே அடங்கிவிட்டன. அவள் தன்னிடம் எதிர் பார்ப்பது ஒரு பாதுகாப்பைமட்டுந்தானா? அந்தப் பாதுகாப்பை எதிர்பார்த்துத்தான் தன்னிடம் அன்பு பாராட்டுகிறாளா?

அன்பு! கனகம் கூடத்தான் அவனிடம் அன்பு பாராட்டினாள்! அவன் அன்பின் சுயநலந்தானா காதல்? அல்லது அவள் வேண்டிநிற்கும் பாதுகாப்பின் சுய நலமா காதல்?

கனகத்தை அவன் பிரிந்து வந்துவிட்டான். ஆனால் இனி அவன் பிலோமினாவைப் பிரிய முடியாது! விலக முடியாது.

'அருமை அண்ணா' என்ற அட்டைப் படம் அவன் நினைவுக்கு வந்தது. அந்தப் படத்திலும் இப்படித்தான் மனங் கலங்கிக் கதறியழும் பெண்ணொருத்தி ஓர் இளைஞன் மார்பில் முகத்தை வைத்துக்

கொண்டு புலம்புகிறாள். சைத்ரிகன் அப்பெண்ணை ஆபாசமாக வரைந்திருக்கிறான். ஆனால் அப்படம் புலப்படுத்தும் கதை தன்னுடைய கதையைப்போலத் தானிருக்குமோ?

அவன் என்றைக்கோ ஒருநாட் படித்த காண்டேகரின் தத்துவம் அல்லலாடும் அவன் மனதிற்குச் சாந்தியளித்தது. 'எந்த இரு உயிர்கள் மிருத்யூவின் வாயிலிற் சந்திக்கின்றனவோ அவைதான் முடிவு பரியந்தம் தங்கள் வாழ்க்கைப் படகைச் செலுத்த முடியும்!

ஆம்! நடராஜன் தன் வாழ்க்கைப் படகைப் பிலோமினாவின் துணையோடு கொண்டு செலுத்தத் துணிந்துவிட்டான்! அது அவனால் தடுக்க முடியாததாகிவிட்டது.

# 40

## மீட்சி

கனகத்திற்கு இன்னமும் சாந்தி கிட்டவில்லை. பூவுக்குட்கிடந்து குடையும் வண்டைப்போல அவள் உள்ளத்தையும் ஏதோ ஒரு வேதனை குடைந்து கொண்டுதானிருந்தது. மனத்தை ஒருநிலைப்படுத்தும் முயற்சியில் அவள் தோல்வியடைந்துகொண்டுதானிருந்தாள் 'நாய்க்கு வேஷம் போட்டாற் குரைத்துத்தானாகவேண்டும்' அல்லவா? கனகமும் ஒரு துறவியாவதற்காக இத்தனை தூரம் வந்துவிட்டாள்! ஆனால் அவளாற் குரைக்க முடியவில்லை. முயற்சி செய்துகொண்டிருந்தாள்.

ஒருநாள் அவள் ஆண்டவன் உண்டாக்கிய ஆதிமனிதனையும் மனுஷியையும் பற்றிப் படித்துக்கொண்டிருந்தாள். "கடவுள் அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டுத் துரத்திய பிறகு அவர்கட்குப் பிள்ளைகள் பிறந்தனர்.

"மூத்தவன் பெயர் காயீன். இளையவன் பெயர் ஆபேல்."

"இருவரும் சர்வேசுரனுக்குப் பலி ஒப்புக்கொடுக்க நினைத்தார்கள்."

"தோட்டக்காரனான காயூன். தன் தோட்டத்திலிருந்து வாடிய காய்களையும், புழுக்குத்திய பழங்களையும் கடவுளுக்குப் பலியாகக் கொடுத்தான்."

"மந்தை மேய்ப்பவனுன ஆபேல், தன் மந்தையிலிருந்து கொழுமையான ஆட்டுக்குட்டியைக் கொடுத்தான்."

"காயீனின் பலியைச் சர்வேசுரன் ஏற்றுக்கொள்ளவில்லை."

கனகம் அதற்குமேற் படிக்கவில்லை. அவ்விடத்தில் அவள் உள்ளத்திலே நெருஞ்சி முள் குத்தியது போலச் சுருக்கென்று தைத்தது.

துறவு அருமையானது. துறந்தோர் பெருமையும் அளவிட முடியாதது. ஆனுல் எல்லோராலும் எல்லாவற்றையுந் துறந்துவிட முடிகிறதா? கனகத்தால் அவள் நினைவுகளைத் துறந்துவிட முடிகிறதா? நடராஜனைப்பற்றி அவளால் எண்ணுமல் இருக்க முடிகிறதா?

இராஜாஜியின் 'சுதரிசனத்தைலம்' என்ற கதையில் குரு ஒரு சீஷனுக்குச் சொன்னுர்: "துறவிகளுக்கு வேண்டுவது முதன் முதலில் ஆசைகளாற் தீட்டப்படாத அப்பழுக்கற்ற மனம்."

அவளிடம் அப்பழுக்கற்ற உள்ளக் கமலம் இருக்கிறதா?

ஏற்கனவே அவள் மனம் யாரிடமோ பறிபோயிருந்தது. பறிபோன அவள் மனத்தை இப்போது நினைவுகள் துளைத்துக்கொண்டிருக்கின்றன.

வாடி வதங்கிய காய்களையும், புழுக்குத்திய பழங்களையும் கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுத்த



காயீனைப்போல, அவளும் உளுத்துப்போன, உழுத்துப் போய்க் கொண்டிருக்கும் மனத்தையா கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுப்பது?

செல்லாக் காசைக் குருட்டுப் பிச்சைக்காரனுக்குக் கொடுக்கும் தர்மப் பிரபுவைப்போலத் தூய்மையற்ற மனத்தையா ஆண்டவனுக்கு அர்ப்பணிப்பது? மனிதனின் நடபடிக்கைகளை இருட்டிலும் கண்காணித்துக்கொண்டிருக்கிற கடவுளைக் குருட்டுப் பிச்சைக்காரனுக எண்ணி ஏமாற்றுவதா?

உலகிலே வலியவன் எளியவனை ஏமாற்றுகிருன். கள்ள ஞானிகள் பக்தரை ஏமாற்றுகிருர்கள். கணவன் மனைவியை ஏமாற்றுகிருன். அரசியல்வாதி பொது மக்களைத் தேர்தலுக்குத் தேர்தல் ஏமாற்றுகிருன். ஆனுல் இதற்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போலத் துறவு என்ற புனிதமான போர்வையில் எத்தனையோ பேர் அந்தப் பரம்பொருளையே ஏமாற்றத் துணிகிருர்கள்!

தானும் அப்படித்தான் ஆண்டவனை ஏமாற்றிவிட வேண்டுமா?

மாதவியும் துறவிதான். மணிமேகலையும் துறவிதான்.

கோவலனுடன் வாழ்க்கை இன்பந்தைச் சுதித்து, அவள் பிரிவினுற் துறவியாய் விட்ட மாதவியை, தமிழ்நாட்டுக் கிராம மக்களின் பிரதிபிம்பமான நாட்டுக் கூத்துக்காரன் இன்னமும் 'தாசிகள் நேசம் மோசமே' என்றுதான் தூஷிக்கிருன்.

ஆனுல் மணிமேகலையை 'மணிமேகலா தெய்வம்' என்று போற்றுகிறன்.

ஆம்! மாதவியின் கலைச்சிறப்பு, கோவலன்மேல் கொண்ட காதல், அவன் பிரிந்ததால் அவள் உலகையே பிரிந்துவிட்ட பண்பு ஒன்றையும் இந்தநாடு ஏற்றுக் கொள்ளவில்லை. தன்னையும் அப்படித்தான் 'காதலிற் தோல்வி ஏற்பட்டுத்தான் இந்தக் கோலம் போட்டிருக் கிருள்' என்று இந்தநாடு என்றைக்கும் இழிவாகத் தான் பேசும்!

கனகத்திற்கு மனம் குழம்பியது.

இந்தக் குழப்பத்தோடுதான் அவள் பிலோமினு வின் வீட்டிற்குத் துக்கம் விசாரிக்கக் கூட்டத்தோடு கூட்டமாகப் போனுள்.

ஊரிலே செத்தவீடு என்ருல் இப்படியா இருக்கும்? ஒப்பாரியும் ஓலமும் ஒரு மைலுக்கு மேலே கேட்கும் படி ஊரே திரண்டு அழும். தங்கள் தங்கள் குரல்களை அந்த ஒருநாளைக்காவது ஒதுக்கி வைத்துவிட்டு இழவு வீட்டில் எல்லாருமே கூடிவிடுவார்கள்.

ஆனுல் இங்கே பிலோமினு மட்டுந்தான் அழுகி ருள். வந்தவர்கள் எல்லாரும் சேர்ந்தாவது ஒரு சொட்டுக் கண்ணீர் விடவேண்டுமே!

அவளுக்கு உற்ருர் உறவினர்கூட இல்லையா? இருந் தால் அந்தவீடு இப்படியா இருக்கும்?

அவளோடு வந்தவர்களிற் சிலர் சுக துக்கங்களைக் கடந்த நிலையிலுள்ள துறவிகள்; மற்றையோர் அழு வது மரியாதைக் குறைவானது என்றெண்ணிக்



கொள்ளும் புது நாகரீகக்காரர்கள். கனகத்துக்குத் தன்னேடு வந்தவர்களிடம் வெறுப்பாக இருந்தது. பிலோமினுவோடு சேர்ந்து அழவேண்டும் போல இருந் தது. அங்கேயே தங்கிநின்று அவளுக்குத் தன்னுலான உதவிகளைச் செய்யவேண்டும் என்று தோன்றிற்று.

ஆனுல் தன்னேடு வந்தவர்கள் திரும்பிப்போகை யில் அவர்களோடு தானும் திரும்பிச் செல்வதைத்தவிர வேறெதையுமே செய்யக்கூடியதாக இருக்கவில்லை. ஆனுற் பிலோமினுவின் நிராதரவான நிலையை மற்றவர் களைவிட அதிகமாக அவளால் உணரமுடிந்தது.

அவள் தன்னுடன் வந்த சிங்கள ஆசிரியையான பிரேமாவிடம் விசாரித்தாள்.

அவளிடமிருந்து அறிந்த செய்தி கனகத்தைத் திகைக்க வைத்தது. பிலோமினு தன் தாயாரோடு மூன்று நான்கு வருடங்களாக இங்கேதான் இருக் கிருள் என்றதைக் கேட்டபோது கனகத்துக்கு வேதனை பிறந்தது. 'அவளுக்கு இன்னும் மணமாக வில்லை' என்று தெரிந்தபோது, அதற்குமேல் அவளுக்கு உற்ருர் உறவினர் இல்லைப்போலும் என்று கேள்விப் பட்டபோது கனகம் தன்னையறியாமலே 'ஐயோ' என்ருள்.

அவள் உள்ள நெகிழ்வையுணர்ந்த பிரேமா தாழ்ந்த குரலில் "ஆனுல் கருணையுள்ள கடவுள் அவளை அனுதரவாக விட்டுவைக்கவில்லை. ஓர் அப்போதிக்கரி யாம்; நடராஜா என்று பெயராம்; அவர்தான் அவ ளுக்கு இப்போது துணையாக இருக்கிருராம். இன் னும் கல்யாணமாகாவிட்டாலும் அவர்கள் இருவரும்

கணவனும் மனைவியும் போலத்தான் வாழ்கிருர்களாம்'' என்றபோது கனகம் ''யாரது நடராஜனு'' என்று வெலவெலத்துப் போய்விட்டாள்.

அவள் பேச்சிற் தொனித்த படபடப்பு, அவள் கண்களிற் தேங்கிநின்ற ஆவல், அவள் சர்வாங்கத்திலுமே உண்டான அதிர்ச்சி எல்லாவற்றையும் அவதானித்த பிரேமா, ''ஏன் உனக்கு நடராஜனைத் தெரியுமா? ஏன் இப்படிப் படபடக்கிருய்?'' என்று கனகத்தைக் கேட்டாள்.

''சை, சும்மா கேட்டேன்'' என்று கனகம் தன் உணர்ச்சிகளை மறைக்க முயன்ருள். ஆனுற் பிரேமா நடராஜன் என்ற பெயருக்கும் இவளுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கும் என்பதைத் தனக்குத் தானே திடமாக்கிக்கொண்டுவிட்டாள்.

'யார் இந்த நடராஜன்? அத்தானுகத்தான் இருக்குமோ? அவர்தான் இங்கே வந்து ஒருவருக்கும் சொல்லாமல் ஒளித்துக்கொண்டிருக்கிருரோ?' கனகம் மனத்துள்ளே இப்படி எண்ணற்ற கேள்விகள் நீர்க்குமிழிகள் போலத் திடீர்த் திடீரென்று பொங்கி வெடித்துக் கொண்டிருக்கையில், அவள் கால்கள் நடந்தன; வாய் ஒன்றையுமே பேசவில்லை.

ஆனுலும் மனத்துள்ளே பொங்கியெழுந்துகொண்டிருந்த ஆவல், சீறியடித்த புயல்காற்றுத் தாழ்ப்பாளிடாத கதவைப் படீரென்று திறந்ததுபோல அவள் வாயைத் திறக்க வைத்தது.

கனகம் கேட்டாள்: 'நடராஜன் எந்த ஊராம்?



'எனக்கு நன்ருகத் தெரியாது. திருகோணமலை என்று சொல்கிருர்கள்' என்ருள் பிரேமா.

'திருகோணமலையா?' கனகம் தன்னை மறந்தவளாய்க் கேட்டாள். உடைந்த வெண்கல மணியின் நாதம்போல அவள் குரல் அலறியது.

பாடசாலையை அடைந்ததும் நடராஜனைப்பற்றிய எண்ணங்கள் கனகத்தை வதைத்தன. அவனைப் பற்றிய ஒவ்வொரு நினைப்பும் ஒவ்வொரு வேதனையை, நிராசையை அவள் மனத்தில் நிறைத்தன.

கிராமப்புறத்திற் பிறந்த தமிழன் ஒவ்வொருவனும் வெளியூருக்குப் போனுல் தன்னை யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், திருகோணமலையான் என்றுதான் சொல்கிருன். நடராஜனும் திருகோணமலையாம். அப்படியானுல் திருகோணமலையைச் சார்ந்த கிராமத்தவனுக, மூதூரானுக ஏன் இருக்கக்கூடாது?

ஆண்டவனே அவர், அவராகவே இருந்துவிட்டால் .........ஆம், அவர் அப்படித்தான் இருக்கவேண்டும். இந்த உலகிலே அவர் வாழத்தான் வேண்டும். சந்தோஷமாக வாழவேண்டும் என்று அவள் மனம் பிரார்த்தித்தது.

அந்த நடராஜன் தன் அத்தானுகவே இருந்துவிட்டால் தான் அவரை மறுபடியும் சந்திப்பதா? தன்னைக் கண்டால் அமைதியான அவர் வாழ்க்கை கெட்டுவிடாதா? அநாதரவான பிலோமினுவிற்குக் கிடைத்த ஆறுதல் தன் இடையீட்டாற் கெட்டுவிடுமா?

'வேண்டாம், எனக்குத்தான் அவரோடு வாழக் கொடுத்து வைக்கவில்லை. அவளாவது அவரோடு

வாழட்டும். அவர் வாழ்க்கை என் தலையீட்டால் நாசமாகிவிடவேண்டாம்.

கனகம் தனக்குள்ளே வாதப் பிரதிவாதங்களை எழுப்பிக்கொண்டு எதிலேயும் பற்றற்றவளாக, அப்படியே செயலழிந்து, தன் சூழலை மறந்து இருந்துவிடுவாள்! இரண்டு மூன்று வாரங்களாக மனம் இப்படியே போராடிக்கொண்டிருந்தது. இந்தப் போராட்டத்தினிடையில் அவள் மடத்திலே தான் அனுபவிக்க வேண்டிய விதிகளைக்கூடத் தவறவிட்டுக் கொண்டிருந்தாள்.

கடைசியாய் அவள் தீர்மானித்தாள், அவர் தன் அத்தான்தான் என்பதைக் கண்டுகொண்டால், தான் அதற்குமேல் அவர் கண்முன்னால் அவ்வூரிலேயே இருக்கக் கூடாது. அவர் வாழ்விற்குத் தன்னாற் குந்தகமேற்படக் கூடாது. அந்த ஊரிலே இராமற் திரும்பிக் கல்முனைக்கோ, மூதூருக்கோ எந்த நகரத்திற்கோ திரும்பிப் போய்விடவேண்டும்.

ஆனால் அம்மடத்துச் சட்ட திட்டங்கள் அவனைக் கண்டு பிடிப்பதற்கு அவளுக்கு அனுசரணையாக இருக்கவில்லை. பிலோமினா வந்தாற்கூட அவளையே விசாரித்துப் பார்த்துவிடலாம். அவள் இன்னமும் பாடசாலைக்கே வரவில்லை. இனி அவள் பாடசாலைக்கே வரமாட்டாள் என்றுகூடச் சொல்லிக் கொள்கிறார்கள். யாரிடமும் கேட்கவும் அவளுக்கு வெட்கமாய் இருந்தது; பயமாக இருந்தது.

எனவே பிலோமினா நடராஜனைத் தேடும் முயற்சியில் எதெதையெல்லாமோ சாக்காக வைத்துக்



கொண்டு அடிக்கடி வெளியே போய்வரத் தொடங்கினாள்.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் கடைத் தெருவிலிருந்த கூட்டமாக நிறைந்துபோயிருந்த தோட்டத் தொழிலாளர் எல்லாரும் திரும்பிப்போய் விட்டார்கள் ஏதோ பெரிய வேலையைச்செய்து ஓய்ந்து விட்டவனைப்போலக் கடைத்தெரு ஓய்ந்திருந்தது. புகையாகப் படர்ந்து படிந்திருந்த பனி அந்த ஓழிச்சலான நிலைக்கு மேலும் ஓர் அசதியைக் கொடுத்தது போல இருந்தது. ஹற்றனுக்கு வந்தபிறகு தனக்கு அறிமுகமான மட்டக்களப்பு ஆசிரியை ஒருத்தியோடு கனகம் ஹைலண்ட்ஸ் பாடசாலை விடுதியிலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தாள். மலை முகட்டிலிருந்து கீழே பார்க்கையில் இளந் தம்பதிகள் இருவர் கடைத் தெருவிலே குசாலாக நடந்து கொண்டிருந்தனர்.

கனகம் கீழே இறங்கி வருகையிற் குறிப்பாக அவர்களையே பார்த்தாள். உலகமே இன்பவெள்ளம் என்று எண்ணிக்கொண்டு அந்த வெள்ளத்தில் மிதப்பவர்களைப்போல அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். அவள் பிலோமினாதான்; அவன்...... கனகம் கூர்ந்து மிகக் கூர்ந்து பார்த்தாள். அதே ஒல்லியான தேகம்; அதே இளஞ்சிவப்பு நிறம்; எங்கேயோ எதையோ பார்த்துக்கொண்டு நடக்கும் சிந்தனை நடை; ஆம் அது நடராஜனேதான்.

விடுதிக்குச் சென்றதும் மனத்துள்ளே அடங்கியிருந்த, அடக்கப்பட்டிருந்த வேதனையும் வெறுப்பும் ஊற்றுக்கண் திறந்து பீறும் நீரைப்போலக் கனகத்துள்ளிருந்து கிளம்பின. நடராஜன் பிலோமினாவுடன்

இணைந்துகொண்டு சென்ற அந்த மனச்சித்திரம் அவனுள்ளே பொறாமைத் தீயாய்க் கனன்று எரிந்தது! காலங் காலமாகத்தான் தனக்கென்று எண்ணிக் கொண்டிருந்த தன் நடராஜன் இன்னொரு பெண்ணின் கணவனாய் இருப்பதை எண்ணுகையில் அவளுக்கு உன்மத்தமே பிடித்துவிட்டது. ஓடிப்போய் அந்தப் பிலோமினாவைக் கழுத்தைத் திருகிக்கொல்ல வேண்டும் என்று எண்ணினாள். நடராஜன் காலடியில் விழுந்து கதறவேண்டும் என்று நினைத்தாள். இருளிலே, தனிமையில் எதிர்ப்பட்ட எல்லாவற்றிலும் தலையை முட்டிக் கொண்டு அழுதாள்; அழுதாள்.

ஆனால் மாண்டவன் மீள முடியுமா? நடராஜன் இனித் தனக்குக் கிடைப்பானா? அவன் நன்றாக இருக்கட்டும்! என்றுதான் அவளால் முடிவுபண்ண முடிந்தது.

இதற்குள் கனகத்தின் நடவடிக்கைகளை மறைமுகமாகக் கவனித்த மடத்துத் தலைவி, அவள் துறவி யாவதற்குத் தகுதியுள்ளவள் அல்ல என்று தனக்குட் தீர்மானித்துவிட்டாள்.

அவள் கனகத்தை ஒருநாள் அழைத்துச் 'சில மாதங்களுக்கு நீ வீட்டிற்றான் இருக்கவேண்டும். அதன் பிறகும் உனக்குத் துறவியாவது விருப்பமாக இருந்தால் இங்கே வரலாம்' என்றாள்.

நடராஜன் முன்னுக்குத் தான் இருக்கவே கூடாது என்று ஏற்கனவே தீர்மானித்திருந்த கனகம் அதைக்கேட்டமறுநாளே மூதூருக்குப் புறப்பட்டாள்.

---

# 41

## அவநம்பிக்கை

'ஒருவனுடைய புதைகுழியிலேதான் இன்னொருவனுடைய இன்பம் பிறக்கின்றது' என்று ஆங்கிலக் கவி பாடினான். அரசியற்தகடுதத்தங்களை மனத்திற் கொண்டே இது பாடப்பட்டதாயினும் பிலோமினாவைப் பொறுத்தவரை அது அவள் வாழ்விலே சில நிதர்சனமான உண்மையாகி விட்டது.

ஆம். செத்தும் கொடைகொடுத்த சீதக்காதியைப் போலத் தான் வாழ்ந்தவரையும் வல்லூறுகளினின்றும் குஞ்சைக் காப்பாற்றிய தாய்க் கோழியைப்போலத் தன் மகளைக்காத்து வளர்த்த அந்தத் தாய் இறந்த பின் அவளுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பைத் தேடி வைத்துப்போய்விட்டாள். இருக்கும் வரையில் மகளுக்கு இன்னமும் கல்யாணமாகி விடவில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்த அந்தத்தாய், தெய்வமாக நின்றுதான் தன் மகளின் மணவாழ்வைக் காண முடிந்தது.

மணம்! இந்தத் தமிழ் நாட்டிலே எத்தனை சிக்கலான விஷயம் அது! கடுவிரைவாய்ச் சுற்றும் பம்பரம் தன்மேலிருக்கும் சதுரக்கடதாசியையும் வட்டமாக மாற்றி விடுவதுபோல, இந்த மணம் என்ற ஒரே சிக்கல் எல்லாச் சிக்கல்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு, நம் சமுதாயத்தையே பம்பரமாக ஆட்டி, அந்தப் பம்பர வட்டம்போல எல்லா

வற்றையும் தன் ரூபமாக்கிக்கொண்டு சுழல்கிறது. ஒரு தந்தைக்குத் தன் புத்திரியின் கல்யாணத்தை விட மேலான பிரச்னை நம் சமுதாயத்திலே இருக்கிறதா?

மாளாத இந்தப் பிரச்னை பிலோமினாவைப் பொறுத்தவரையிற் தெய்வ சங்கற்பம் என்ற அறிவுக்கெட்டா விதிப்படியோ, அல்லது உணர்ச்சிச்சேர்க்கை என்ற இயற்கை விதிப்படியோ, எப்படியோ இலேசாக நடந்துவிட்டது.

தன் இளவயது தொடக்கமாக ஏழ்மை, போராட்டம், ஏக்கம், கவலை என்ற சூழலிலே வளர்ந்த பிலோமினாவுக்கு இந்தப் புது உறவு அளித்த தெம்பும் திடமும், சாந்தியும் நிறைவும் அவளை எங்கோ கற்பனைக்கும் எட்டாத இன்பபுரிக்கு அழைத்துச் சென்றது.

இளமையின் மென்மையான காதல் நினைவுகள் தன்னுள்ளே திரிந்து கரடுமுரடான ஆத்திரமாய், விண்ணென்று குத்தும் மனப் புண்ணின் உளைச்சலாய் விட்டிருந்த நடராஜனுக்கு இந்த உறவு அதனை மறுபடியும் மனிதனாக்கும் மகா மருந்தாய்த்தான் அமைந்தது. சொர்ப்பனாவஸ்தையான காதலைவிட, சம்போகமான மணவாழ்வு அவனுக்கு ஆனந்தமாகவே இருந்தது.

நீண்ட இரவின் மௌனம் அவனுக்கு இன்பமாகவே இருந்தது. மலைநாட்டிலே கொட்டும் மழையையும், பனியையும் அவனால் அனுபவிக்க முடிந்தது. வெள்ளிக் கம்பிகளாய் ஒழுகும் மலையருவிகளின் இன்பத்தை அவனால் நுகர முடிந்தது. மாலை மதியத்தின் குளுமையையும், வேனிற்காலத்து வனப்பையும் அவனால் உணர முடிந்தது.



தனிமையின் கொடுமையையும், அதன் பயங்கரத்தையும் மறக்கச் செய்து தன்னை நிலத்திலே நன்றாக வேரூன்றி நிலைக்கச் செய்துவிட்ட புருஷன் என்ற கொம்பிலே அந்தக் கொடியும் செழிப்பாகப் படர்ந்தது. நாளுக்கொரு முகையும், தளிரும் விட்டு ஆனந்தமாகப் படர்ந்து அக்கொடி தென்றலில் ஆடிற்று. வேனிலில் விகசித்தது. நிலவிலே குளிர்ந்து ஒளிர்ந்தது. காலம் வரும்போது அது பூக்கும்; காய்க்கும். தன் இனத்தைப் பெருக்கியே தீரும்.

அந்தக் கொடியும் கொம்பும் ஓரோர்வேளை தம்மை மறந்தன. இளமை வெள்ளத்தின் உணர்ச்சிச் சுழிப்பில், ஆற்று வெள்ளத்தில் மிதந்து வந்த இரண்டு இலைகள் ஒன்றை ஒன்று அணைத்துக் கொண்டது போல அணைந்தன. எங்கிருந்து வந்தோம் என்ற இறந்தகாலம் அவர்களுக்கு மறந்து போய்விட்டது. எங்கே போகிறோம் என்ற எதிர்காலத்தைப் பற்றி அவைகள் கவலைப்படவில்லை. இணைந்து கொண்டிருக்கும் இந்தக் கணந்தான் சாஸ்வதமானது! அதிலே எவ்வளவு இன்பம்! அந்த இணைப்பிலே நேர்ந்த துயரம் தெரியவில்லை. நேரும் துன்பம் வெளிச்சமில்லை! அவ்வளவுதான்.

இந்தப் புதுமோகத்தின் உச்சியிலே பிலோமினா தன்னை முற்றுமே மறந்துவிட்டாள். தன் வீட்டையும் துறந்து நடராஜனின் இல்லத்திற்கே வந்துவிட்டாள்! அங்கே நடராஜனோடு அமைதியாக வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தாள்.

பாடசாலையை நினைத்தால் மட்டும் அவளுக்குப் பயமாக இருந்தது! தான் நடராஜனோடு நடத்தும்

வாழ்க்கையை நெறியற்றதாகத்தான் பாடசாலை மேலதிகாரிகள் கருதுவார்கள். மேலும் நடராஜனுக்கும் அவளுக்குமிடையில் மதத்திற் பெரிய இடைவெளி! ஆகவே இந்த உறவு அவள் வேலைக்கே உலை வைக்கும் என்று அவளுக்குத் திட்டமாகத் தெரிந்திருந்தது.

ஆனால் வாழ்க்கை வேதனைகளிற் சிக்கி மனம் நொந்துபோயிருந்த அவள் மதத்தில் அத்தனை ஆழ்ந்த பற்றுள்ளவளாக இருக்கவில்லை. மேலும் மதம் என்ற சிக்கலைக் கிளப்பித் தனக்குக் கடவுள் விட்ட துணையான நடராஜனைக் கைநெகிழ விட்டுவிடவும் அவள் விரும்பவில்லை.

அவளுக்கு இப்போது வேண்டியது கொண்டவனின் அன்பு! அது தாராளமாகவே கிடைத்தது. நடராஜனின் அன்பு மழையிலே தன் எதிர்காலம் என்ற பயிர் செழிப்பாக வளரும் என்று அவள் நம்பினாள். அந்த நிலையிற் தன் உத்தியோகத்தைக்கூட அவள் துரும்பாக எண்ணிவிட்டாள்! பாடசாலைக்கு நீண்ட விடுதலை எழுதிக்கொடுத்துவிட்டு ஆனந்தமாகக் குடும்பம் நடத்தினாள். அவள் வாழ்க்கைப் படகு இன்பக் கடலில் மிதந்துகொண்டுதானிருந்தது.

ஒருநாள் சாயந்தரம் ஐந்துமணியாகி இருக்கும். பிலோமினா தன் வேலைகளை எல்லாம் முடித்துவிட்டுத் தலைவாயிலில் நடராஜனின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். வெளியே உலகை இறுக்கிப் போர்த்துக்கொண்டிருந்த பனிப்புகாரின் சில்லென்ற தனிமையில் அவள் மனம் இறந்தகால நிகழ்ச்சிகளை



எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தது. அந்த நினைவு ஓட்டம், பெட்டியிலே இதுவரை பத்திரமாக வைத்திருந்த தன் தாயின் புகைப்படம் ஒன்றை நினைவுக்குக் கொண்டுவந்தது.

அப்படத்தின் நினைவு வந்ததும் ஓட்டமாக ஓடிப் போய் அந்தப்படத்தை எடுத்து கையில் வைத்துக் கொண்டு அந்த அன்பினுருவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

நடராஜன் வந்ததுகூட அவளுக்குத் தெரியவில்லை! அந்தப் படத்தையே பார்த்துக்கொண்டிருந்த அவள் கண்கள் பனித்தன.

நடராஜன் இலேசாகச் செருமினான். பிலோமினா கலவரப்பட்டு நிமிர்ந்தாள்.

நடராஜன் ஒன்றுந் தெரியாதவனைப்போலக் கேட்டான்; 'என்ன யோசித்துக்கொண்டிருக்கிறாய், பிலோமினா?'

"ஒன்றும் யோசிக்கவில்லை. அம்மாவின் படம் பெட்டிக்குள் இருந்தது. எடுத்துப் பார்த்தேன். இதைச் சட்டம் போட்டுச் சுவரிலே வைக்கலாம் என்று நினைத்தேன்."

"உனக்காவது அம்மாவின் படமாவது இருக்கிறது பார்த்துக்கொண்டிருக்க." கடலினடியிலே மறைந்து கிடந்த பவளப் பூச்சிக் குன்று திடீரென்று வளர்ந்து நீர்ப்பரப்பிற் தலைகாட்டியதுபோல, அவன் மனதின் அடித்தளத்திலே மறைந்து கிடந்த ஏக்கம் இப்படித் திடீரென்று வெளிப்பட்டது.

"ஏன்? தங்கள் தாயார்......" ஆவலும் இரக்கமும் நிறைந்த தொனியிற் பிலோமினு கேட்டாள்.

"என்னைப்பற்றியவரையில் அம்மா, அப்பா எல்லோரும் செத்தே போய்விட்டார்கள். 'ம்' அந்தக் கதை ஏன்?" என்று நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டுத் தன் உடைகளை மாற்றினுன் நடராஜன்.

பிலோமினுவுக்கு விளங்கிவிட்டது. அவர் தாயும் தந்தையும் இருக்கிருர்கள். ஆனுல் ஏதோ மனஸ்தாபம் தன் கணவரையும் அவர்களையும் பிரித்து வைத்திருக்கிறது.

பிலோமினு பேச்சை அவ்வளவில் முடித்துக் கொண்டாள். இரவு சாப்பாடானதும் பிலோமினு தருணமறிந்து தொடங்கினுள்.

"இரண்டுகிழமை லீவு எடுத்துக்கொண்டு ஊருக்குப் போவோமா?"

"எந்த ஊருக்கு? யாருடைய ஊருக்கு?" என்று நடராஜன் படபடத்துக் கேட்டான்.

"உங்கள் ஊருக்குத்தான்; அதுதானே இனி என்னுடைய ஊரும்."

"அந்த ஆசையை மட்டும் விட்டுவிடு. இனிமேல் உனக்கும் எனக்கும் இதுதான் ஊர்" என்று பெருமூச்சு விட்டான் நடராஜன்.

"ஏன்? உத்தியோகம் பார்க்கப் போனவன் யாரோ வேதக்காரியைக் கிளப்பிக்கொண்டு வந்திருக்கிறுன் என்று எல்லோரும் திட்டுவார்கள். அதனுற்தான் ஊருக்கே போகிறதில்லை என்கிறீர்களாக்கும்."



"அவ்வளவு பயந்திருந்தால் உன்னைக் கையேற்றிருக்கவே மாட்டேன்."

"அப்போது ஏன் ஊருக்குப் போகமாட்டேன்" என்கிறீர்கள்? தன் தோளிலே கைகளைப் பின்னிப் போட்டுக்கொண்டு தொங்கிய பிலோமினுவின் கன்னத்தைக் கிள்ளியவாறே நடராஜன் சொன்னுன்: எல்லாம் உன்னைப்போல ஒரு அழகான பெண்ணுற்தான்."

பிலோமினுவின் உள்ளம் சுருக்கென்றது. தனக்குப் போட்டியாக யாரோ ஒருத்தி இருக்கிருள் என்ற எண்ணம் அவளை வதைத்தது. அவள் நாளைக்கு இங்கேயே இவரைத்தேடி வந்துவிட்டால் என்றெண்ணிய போது, அந்த நினைவு அவளைக் கொன்றே விட்டது.

அவள் மனதிலே ஓடி நெளிந்த எண்ணங்களை முகத்திலே வாசித்த நடராஜன் "சும்மா சொன்னேன். அதற்கு யோசிக்கிருயா? அப்பாடா! பெண்கள் என்ருலே எரிச்சலின் மறு உருவந்தான்" என்ருன்.

"சும்மாவும் இல்லை; சுமந்துகொண்டும் இல்லை; எனக்கு எல்லாந் தெரியும்."

"என்ன தெரியும்?"

"ஊரிலே உங்களைக் காத்து ஒரு அழகி இருப்பது?"

"அப்படி நீ நினைக்கிருய்?"

"நீங்கள்தானே சொன்னீர்கள்!"

"அதுதான் சும்மா" என்றேனே.

"அப்படியானால் நான் தங்களை நம்பலாமா?" என்றுகொண்டே பிலோமினா நடராஜன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதாள்.

"நன்றாக நம்பு. என்னை யாரும் அனுப்பவும் முடியாது. அனுப்பப்படவும் மாட்டேன்" என்று அவளைத் தேற்றினான் நடராஜன்.

ஆனாலும் அன்றிரவு இருவருக்குமே மன நிம்மதி யில்லை.

பிலோமினாவுக்கு அவநம்பிக்கை. நடராஜனுக்குத் தியாகுவின் கடிதம் உண்டாக்கின திகில்.

# 42

## வெளிச்சம்

சுழற்றியடிக்கும் கச்சான் காற்றுத் தெருப் புழுதியைக் கிளப்பி மேலெழுப்பிக்கொண் டிருக்கையிற் கனகம் தன் கைப்பெட்டியைக் கையிற் பிடித்தவாறு மூதூர்க் கிராமத்தின் பழமைக்கும் சிறுமைக்கும் சாட்சி பகர்ந்துகொண்டிருக்கும் கிரவல் ரோட்டிலே தனியாக நடந்துகொண்டிருந்தாள். தெருவோரத்திலே அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த வீடுகளிடையே பரந்து கிடந்த பாழ் வளவுகளிலே தகரைப் பற்றைகள் பசுமையும் பொலிவுமின்றி வெறும் கம்பாய்க் கழியாய் நீட்டிக்கொண்டிருந்தன. அவைகளினடியிலே புற்கள் கூட வைக்கோலாய்க் காய்ந்து வெளிறிக்கிடந்தன. அச்சூழலே அவள் இதயத்தைப் போல இனிமேலும் பசுமையைக் காண்போம் என்ற நம்பிக்கை வரண்டு காய்ந்து கிடக்கையில், வேம்புகள் மட்டும் குலை குலையாய்ப் பழங்களைத் தாங்கிக் கொண்டு நின்றன. அவ்வளவும் கசப்பான பழங்கள்; கனகத்தின் நினைவுகள் போல.

எவர் கண்ணிலும் படாமல் ஒரேயடியாக வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற எண்ணத்திற் கனகம் விரைவாகவே நடந்தாள். ஆனால் அவளுக்கென்ன கண்கட்டு வித்தை தெரியுமா? யாரோ ஒருத்தி —அவளின் பெயர்கூட இப்போது மறந்துவிட்டது கனகத்திற்கு—தெருப் படலையைத் திறந்துகொண்டு

வெளியே எட்டிப் பார்த்தாள். அவ்வளவுதான், ஒவ்வொரு படலையிலுமே அவள் வருகையை எத்தனையோ விழிகள் பார்த்துக்கொண்டேயிருந்தன. முதலில் அக் கண்களில் ஒரு ஆச்சரியம். பிறகு அவைகளிலே ஒரு ஏளனம். அதற்குப்பின்னுல் அக் கண்களின் சொந்தக் காரர்களான பெண்கள், கச்சான் காற்றிலே வரண்டு போய்க் கிடந்த தங்கள் உதடுகளை நெளித்தார்கள். பின்னர் அவ்வுதடுகளை ஈரமாக்கிக்கொண்டு எதையோ குசு குசுத்தார்கள்.

எப்போது வீட்டுக்குப்போய்ச் சேருவேன் என்று ஓட்டமும் நடையுமாகச் சென்ற கனகத்தின் கால்கள் அவள் வீட்டை அண்மியதும் ஒன்றையொன்று பின்னின. அந்தத் தயக்கம் கணநேரந்தான். அதற்குள் அவள் சடலம் முழுதுமே தெருப் படலைத் தகரத்தில் பொத்தென்று சாய்ந்தது, படலை திறபட்டதும் அவள் வேகமாக ஓடினுள்; அவள் கண்கள் கண்ணீரைக் கொட்டின; அவளாலே தன்னுணர்ச்சிகளை அடக்க முடியவில்லை. திறந்து கிடந்த வீட்டிற்குட் போய்ப் படுக்கையொன்றிற் பொத்தென்று சாய்ந்தாள்.

இதற்குள்ளாகத் தெருப்படலை திறக்கப்பட்ட சத்தங்கேட்டு அடுக்களைக்குள் இருந்த அவள் தாயார் வந்து விட்டாள்; தந்தையும் வந்துவிட்டார்.

அவர்களைக் கண்டதும் கனகம் சிரமப்பட்டுப் பொங்கிவரும் தன் அழுகையை அடக்கிக்கொண்டாள்.

எவருமே பேசாமல் மௌனமாயிருக்கையில் அந்த மௌனமே எல்லார் இதயங்களையும் சித்திரவதை செய்தது.



கந்தையா மட்டுமல்ல, அந்த ஊரே நடராஜன் கனகத்தைக் கூட்டிக்கொண்டு எங்கோ கண்காணுத இடத்திற்குப் போய்விட்டான். இருவரும் எங்கோ ஓரிடத்தில் இன்பமாக வாழ்கிருர்கள்! என்றைக்கோ ஒருநாளைக்கு அவர்கள் இருவரும் இவ்வூருக்குத் தம்பதிகளாக வரப்போகிருர்கள் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தது. கனகம் கல்முனையில் இல்லை என்று கேள்விப்பட்ட நாள் முதலாகக் கந்தையாவின் மனம் இதை எண்ணி எண்ணித்தான் தளிர்த்தது. ஆனுல் இன்று கனகம் மட்டும் ஒற்றைக் கட்டையாய்த் தனியே வந்து நின்றது. ‘மௌலிக வித்தகன் வருமென்று தழைக்கின்ற உள்ளத்தால் முன்னெரு தமியன் சென்ற’ கதையாகவே இருந்தது.

கனகத்திடம் எதையும் விளக்கமாகக் கேட்க எவராலும் முடியவில்லை. எதையாவது கேட்டால் அழுவாள்; இல்லாவிட்டால் எரிந்து விழுவாள்.

கந்தையாவிற்குத் தன் மகள் ஏன் வந்தாள் என்பது தெரியவில்லை. நடராஜனுக்கும் இவளுக்குமிடையில் ஏதோ மனத்தாங்கல்; அதுதான் இவள் வந்து விட்டாள் என்று அவர் மனம் சாதாரணமாக எண்ணிக் கொண்டுவிட்டது. காலம் போனுல் விஷயம் தானுகவே வரும், அதுமட்டும் அவளைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று எண்ணிக்கொண்டார். இது வரை நடராஜனைக் காணவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த அவர் மனம் இப்போது அவன்மேல் எரிந்து விழுந்தது. ஊர்க் கதை தன் மகளைப்பற்றி ஈனமாக இழிவாக இருக்கையில் கந்தையா தன் ஆத்திரத்தை எல்லாம் நடராஜன்மேற் காட்டி ‘அவன்

எங்கேயிருக்கிறான் என்று சொல்லிவிடு பல்லை உடைத்து விடுகிறேன்' என்று குதித்தார். கனகமோ பிடிவாதமாக எனக்குத் தெரியாது என்று மறுத்தாள்.

கனகம் வந்துவிட்ட செய்தி காதில் விழுந்த உடனே பொன்னம்மாவும் தன் சகோதரன் வீட்டுக்குப் போனாள். மாமியைக் கண்டபோது குமுறி ஆர்ப்பரித்த கடலலைகள் தரையைத் தழுவுவதுபோலக் கனகம் அவளுட் புதைந்துகொண்டு அழுதாள். ஆனாலும் அவள் ஏன் அழுகிறாள் என்பதன் அர்த்தம் அவளுக்கும் விளங்கவில்லை! நடராஜனைப்பற்றிய செய்தியை எல்லாருக்கும் மர்மமாகவே வைத்திருந்தாள்.

அம்பலவாணருக்குக்கூடக் கனகம் தனியாக வந்தது ஆச்சரியமாகத்தான் இருந்தது. எல்லாரையும் போலவேதான் அவரும் தன் மகன் எங்கேயோ கனகத்தோடு வாழ்கிறான் என்ற எண்ணத்திற்றான் மேலுக்குக் குமுறும் கடல் ஆழத்தில் சலனமற்றிருப்பதுபோல நிம்மதியாக இருந்தார். அந்த நிம்மதியை அவர் மனம் இழந்து போயிற்று. அவன் கனகத்தோடு வந்தாற்கூட அவனை வரவேற்கத் தயாராயிருந்த அத் தந்தையின் உள்ளம் இப்போது தன் ஒரே மகனை உயிரோடு பறிகொடுத்துவிட்ட ஏக்கத்தில் துடித்தது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டுத் தன்னிற்றானே நொந்துகொண்டிருந்த கனகம் தனிமையில் தன் வாழ்வை நினைத்துப் பார்ப்பாள். அவள் மனக்கண்ணிலே நடராஜன் பிலோமினாவின் கையைக் கோத்துக்கொண்டு கடை வீதியிலே உல்லாச நடைபோட்டது ஞாபகத்



திற்கு வரும்! அந்த நினைவு அவளைக் கொல்லும். காலங்காலமாகத் தான் கனவுகண்ட, காத்துக்கிடந்த வாழ்வு எவளோ ஒருத்திக்குக் கிடைத்து விட்டதே என்ற எரிச்சல் மறைமுகமாக அவளை வதைத்தது. சுயநலத்தின் சூழலிலே சுற்றியிருப்பனவெல்லாம் தனக்கென்றே எண்ணும் மனிதப்பிராணிக்குக் கழுதையைப் போலப் பின்னங்காலால் உதைத்த கற்பனைகள் கவலையைத் தான் கொடுத்தன. பாவம்! நமக்காவது அந்த வாழ்க்கை கிடைக்கவில்லை. பிலோமினாவாவது வாழட்டுமே என்று அவள் மனம் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொள்ளும்! ஆனாற் தன்னையும் சுந்தரத்தையும் கல்முனையில் நேருக்கு நேர் கண்டதால், அந்தக் காட்சியின் மேலெழுந்த விபரீதமான எண்ணத்தாலல்லவா தன்னை நடராஜன் பிரிந்துவிட்டான் என்று எண்ணுகையில் அவ்வெண்ணத்தை அவளாற் தாங்கமுடியாது போய்விடும்.

அவரை நேரிலே சந்தித்து 'இந்தத் தப்பபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளுங்கள் என்று சொல்லாமல் ஏன் வந்தேன்' என்று கனகம் தன்னைத் தானே நொந்துகொள்வாள்! இப்படியே மனத்துட் குமுறிக்கொண்டிருந்த கனகம் தன் ஆத்திரத்தை எல்லாம் அவனுக்குக் கடிதமாக எழுதினாள்.

இதற்குள் மட்டக்களப்பிற்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுக் கூட்டத்திற்கு மூதூர்ப் பிரதிநிதியாகச் சென்றிருந்த செல்லன் வந்துவிட்டான்! கனகத்தைக் கண்டபோது அவனுக்குத் திகைப்பாக இருந்தது.

ஆனால் கனகம் அவனுக்கும் முழு உண்மையையும் சொல்லவில்லை. 'கன்னிகாஸ்திரி ஆவதற்காக ஹற்ற னுக்குச் சென்றேன். அது எனக்குப் பிடிக்கவில்லை. திரும்பி வந்துவிட்டேன்' என்றுமட்டும் சொல்லி வைத் தாள். நடராஜனைப் பற்றிய எதையுமே அவள் சொல்ல வில்லை.

ஆனால் அடுத்தநாள் அவன் வெளியேயிருந்த போது அவன் விலாசத்துக்கு வந்த கடிதம் ஒன்றை எங்கேயோ வைத்துவிட்டு அப்போதுதான் நினைவு வந்தவராய் எடுத்துக்கொடுத்தார் கந்தையா.

செல்லன் கடிதத்தைப் பிரித்துப் படித்தான். அதிலே தியாகு எழுதியிருந்தான்:

அன்புள்ள செல்வராஜனுக்கு:

வணக்கம், நீர் நடராஜனைத் தேடிக்கொண்டு கொழும்புக்கு வந்தபோது அவனைப்பற்றிய விஷயங் களை வேண்டும் என்றே மறைத்து மழுப்பினேன். என் றைக்காவது அவன் வைராக்கியம் தணிந்து ஊருக்குப் போவான்; அதுவரை யாரும் அவனைக் குழப்பக்கூடாது என்று அப்போது நான் எண்ணினேன். அந்த எண் ணத்தை மனத்தில் வைத்துக்கொண்டு அவனைக் கண் காணித்துக்கொண்டு இருந்தேன். இப்போது அவன் மனம் மாறுபட்டிருக்கும் என எண்ணுகிறேன். ஆனால் நான் வெளிநாடு செல்கிறேன். திரும்பி வர நாட்க ளாகும். அதுவரை அவனைக் கவனிக்கவும் என்னால் முடியாது.

இப்போது அவன் ஹற்றனிலே ஜயலதாத் தோட் டத்தில் வேலையாக இருக்கிறான். அந்தவூர்க் கன்னி



காஸ்திரி மடத்திலேதான் தங்கள் தங்கையும் இருப் பதாக அறிகிறேன். இவ்விஷயங்களை இனியும் மறைத்துவைப்பது சரியென்று எனக்குப் படவில்லை. எனவே திடீரென்று உணர்ச்சிவசப்பட்டுவிடும் நொய் தான அவன் மனதைக் குழப்பாமல் மேற்கொண்டு செய்யவேண்டியவைகளைக் கவனமாகச் செய்யும்படி கேட்கிறேன்

இப்படிக்கு,
அன்புள்ள தியாகு

கடிதத்தை வாசித்த செல்லன் அந்தகார இருட் சிறையிலே அடைபட்டுக் கிடந்தவன் திடீரென்று, விடைபெற்று ஒளியைக் கண்டதுபோன்ற மகிழ்ச்சி யுடன் 'அப்பா இதைப் படியுங்கள்' என்று தன் தந்தை யாரிடம் கடிதத்தை நீட்டினான்.

கடிதத்தை வாசித்த கந்தையா கறுவினார். இரு வரும் ஒரே ஊரில் இருந்திருக்கிறார்கள். ஆனால் கனகம் திடீரென்று திரும்பி வந்துவிட்டாள். இதன்காரணம் என்னவாயிருக்கும்? என்று கந்தையா எண்ணுகையில் அந்த எண்ணத்தின் முடிபு நடராஜன்மேல் அவருக்கு வெறுப்பைத்தான் கொடுத்தது. கல்முனையிலிருந்து கனகம் நடராஜனைத் தேடிக்கொண்டு போயிருக்கிறாள். அவன் தன் மகளை நிராகரித்திருக்கிறான். அவளை அவ மானப் படுத்தியிருக்கிறான். அதுதான் கனகம் ஓடிவந் திருக்கிறாள் என்ற எண்ணத்தொடர்களின் சுவாலை நடராஜன் மேல் அவர் இதுவரை வைத்திருந்த பிள் ளைப் பாசத்தைப் பொசுக்கிவிட்டது! தர்மசாஸ்திரம் கூடத் தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லச் சொல்கிறதே. கந்தையா கனகத்தின் தந்தையல்லவா? அவர் என்ன செய்வார்?

நடராஜன் ஹற்றனில் இருக்கிறன் என்ற செய்தி அம்பலவாணருக்குத் தெரியவந்தபோது அவருக்கும் அவன்மேல் எரிச்சலாகத்தான் இருந்தது. ஆத்திரந் தணிந்து இத்தனை காலமாகப் 'பிச்சை வேண்டாம் தாயே நாயைப்பிடி' என்றதுபோலத் தன் மகன் எப்படியாவது ஊருக்குத் திரும்பி வந்தாற்போதும் என்று மனத்துள் எண்ணிக்கொண்டவருக்குக் கனகம் தன் மைந்தனுல் நிராகரிக்கப்பட்டு வந்திருக்கிருள் என்ற நினைப்பு, 'என் மகனல்லவா நடராஜன்' என்ற பெருமிதத்தைக் கொடுக்கவில்லை!

'எப்படித்தானிருப்பினும் போய் அவனைப் பார்த்துக்கொண்டு வாருங்களேன்' என்று அவர் மனைவி சொன்னபோது, அவர் வீம்புதான் பேசினுர். 'எனக்கு அவனைப் பார்க்கவேண்டிய அவசியமேயில்லை' என்றுதான் தன் மனைவியிடம் சொன்னுர். ஆம் அவருக்குத் தேவையில்லை. தேவையுள்ளவர்கள் கூட்டிக் கொண்டுவந்து அவனைப் பூவும் மணமுமாக வாழ வைத்தால் அவர் தூரத்தேயிருந்து பார்த்து மனங் குளிர்வார். அவ்வளவுதான்.

ஆனுல் தன் தந்தையோரின் வெறுப்பையோ, அம்பலவாணரின் அலட்சியத்தையோ, கனகத்தின் தடுப்பையோ எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டுச் செல்லன் ஹற்றனுக்குப் புறப்பட்டான்.

# 43

## திருமணம்

'கனகமும் உன் பக்கலிலேதான் இருக்கிருள். என்றைக்கோ ஒருநாள் நீ அவளைக் கூட்டிக்கொண்டு ஊருக்குப் போகத்தான் போகிருய். ஆனுல் அந்தச் சுபதினத்தைக் காணும் பாக்கியம் எனக்கில்லாமற் போய்விட்டது. நான் ஏற்கனவே உன்னிடம் அறிவித்திருந்ததுபோல இன்றைக்கே இங்கிலாந்துக்குக் கப்பல் ஏறுகிறேன். உன்னைப்பற்றிய விஷயங்களை இன்னமும் ஒரு மூடுமந்திரமாக வைத்துக்கொள்ள என்னுல் முடியவில்லை. எனவே, உன்னைப்பற்றிச் செல்வராஜனுக்கு எல்லாவற்றையும் அறிவித்திருக்கிறேன். இது தவறான செய்கையாக உனக்குப்பட்டால் அதற்காக என்னை மன்னித்துவிடு. சரி, நான் விடை பெற்றுக்கொள்கிறேன். இங்கிலாந்துக்குப் போனதும் உனக்கு மூதூர் விலாசத்துக்குத்தான் கடிதம் எழுதுவேன். அப்போது நீ மனச் சம்மதமாகக் கனகத்துடன் ஊரிலே இருப்பாய் என்பது எனக்குத்தெரியும். வணக்கம்' என்றிருந்த கடிதத்தைக் கண்டநாட் தொடக்கம் நடராஜனின் மனம் அமைதியை மறுபடியும் இழந்துவிட்டது.

பிலோமினுவின் இதமான அணைப்பிலே, அவளின் அன்புப்பிணைப்பிலே இவ்வுலகத்தையே மறந்திருந்த நடராஜனுக்கு மறுபடியும் தன் ஊர் உற்றுர் உறவினர்கள் எல்லாரையும் பற்றிய நினைவுகள் வசந்தத்திற் தேசாந்தரம் போகப் புறப்பட்ட வண்ணுத்திப் பூச்சிக் கும்பல்களாகக் குபு குபு என்று கிளம்பின.

அவன் தியாகுவை நொந்தான்; சூத்ரதாரியாக இருந்துகொண்டு தியாகு ஏதோ நாடகம் நடத்துகிறான் என்று. அவன் இங்கு வந்திருந்தபோது தான் நினைத்தது சரி என்று இப்போது அவனுக்குப் பட்டது. அவன் பண்ணிய சூத்ரதாரி வேலையை அப்போது பண்ணியிருந்தால் அதனால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. ஆனால் இப்போது அவன் நிலை என்ன? பிலோமினா அவன் மனமறிந்த மனைவியாகி விட்டாள். சட்டமும் மதமும் அங்கீகரிக்கவில்லையாயினும் அவள் அவனுக்கு மனைவிதான். இந்த நிலையில் தன் ஊரிலிருந்து எல்லோருமே படையெடுத்து இங்கு வந்துவிட்டால்......

எவ்வளவு மறைக்க முயன்றும் நடராஜனின் குழப்பத்தைப் பிலோமினா கண்டுவிட்டாள். ஆனால் அவன் குழப்பத்திற்கான காரணத்தை அவளாற் கண்டுபிடிக்க முடியவில்லை. அமைதியான இரவைத் துளைக்கும் சுவர்க்கோழியின் அலறலைப்போல அவன் மனத்தை ஏதோ ஒன்று துளைப்பதை மட்டும் அவளால் அறிய முடிந்தது. அந்த ஏதோ ஒன்று, நடராஜன் சொன்னதுபோலத் தன்னைப்போல ஒரு அழகான பெண்ணா? அப்படியாயின் தன்னுடைய கதி?

பிலோமினாவும் பயந்தாள். இந்தப் பயங்கரத்தையும், அவநம்பிக்கையையும் தெளிவிக்க இன்னமும் பொழுது வரவில்லை.

இதற்குள் நடராஜன், 'கனகம் அங்கே வந்திருந்தாள்; இப்போது மறுபடியும் மூதூருக்குப் போய்விட்டாள்' என்பதை விசாரித்து அறிந்து கொண்டான்.



'அப்படியாயின் இந்தத் தியாகுதான் கனகத்தையும் இங்கே வரச் செய்திருப்பான்' என்று நடராஜன் எண்ணினான். 'வழித்துணைக்கு மடையனைக் கூட்டிக் கொண்டுபோய் அவதிப்பட்ட செட்டியாரைப் போல நம் அந்தரங்கங்களை எல்லாம் இந்தத் தியாகுவிடம் சொல்லி அவனிடம் உதவி கேட்டோமே' என்று தன்னைத்தானே நொந்துகொண்டான் நடராஜன்

யாரை நொந்தும் என்ன செய்வது? இனி எந்தக்கணமும் அப்பாவோ, அம்மாவோ, யாராவது இனி ஊரிலிருந்து வரக்கூடும். வந்தால் என்ன? இங்கே தன்னிலையைக் கண்டுவிட்டுத் திரும்பிப்போவார்கள் என்று அலட்சியமாய் எண்ணிச் சமாதானமடைய அவனால் முடியவில்லை. தந்தையின் கண்டிப்பு, தாயின் கண்ணீர், மாமனாரின் பாசம், கனகத்தின் அன்பு எல்லாம் தன்னைப் பிலோமினாவிடமிருந்து பிரித்து அவளை நிர்க்கதியாக்கி விட்டுவிடுமோ என்று அவன் எண்ணினான்.

இந்தப் பயத்தினிடையே கனகம் ஹற்றனுக்கு ஏன் வந்தாள்? எப்படிவந்தாள்? ஏன் திரும்பிப் போய்விட்டாள்? ஏன் என்னைச் சந்திக்காமலிருந்து விட்டாள்? என்று அந்தரங்கத்தில் அவன் மனம் எழுப்பிய அத்தனை கேள்விகளுக்கும் கனகத்திடமிருந்து வந்த நீண்ட கடிதம் அவனுக்குப் பதில் சொல்லிற்று.

அந்தக் கடிதம் அவனைப் பைத்தியமாகவே ஆக்கிற்று. அக்கடிதத்தின் ஒவ்வொரு வரிகளும் பழைய நினைவுகளைக் கிளறி அவனை வதைத்தன. ஆத்திரந்தந்த பைத்தியகாரத்தனத்தாற்றான் கனகத்தைப் பிரிய

நேர்ந்த முட்டாள்தனத்தை யெண்ணி அவனால் கண்ணீர் விடாமலிருக்க முடியவில்லை. அக் கடிதத்தின் ஒவ்வொரு வாக்கியமும், தன்னால் அநியாயமாக வஞ்சிக்கப்பட்ட கனகமே அழுதழுது அவனிடம் சொல்வதுபோல இருந்தது. அவள் சொல்லம்புகள் அவனைத் தைத்தன. அவ் வார்த்தைகளின் வேதனையை அவனாற் தாங்க முடியவில்லை.

ஆனாலும் கடந்துபோனவைகளுக்கு அவனால் என்ன பிராயச்சித்தம்பண்ண முடியும்? வெறுமனே அழுவதைத் தவிர அதுவும் இன்றைய நிலையில் பிலோமினாவிற்குத் தெரியாமல் இரகசியமாக அவன் அழவேண்டும். இல்லாவிட்டால் கனகத்தின் வாழ்க்கை மட்டும் போதாதென்று, பிலோமினாவின் வாழ்க்கைகூட நரகமாகிவிடும். ஆனாலும் அவன் அழுதான். கையாலாகாதவன்போல விம்மி அழுதான்!

உணர்ச்சிப் போராட்டங்களின் சோர்விலே அதனுள்ளே பிலோமினாவின்மேல் அவனுக்குள்ள கடமையுணர்ச்சி, நெருப்புப்பிடித்து அழிந்த காட்டிலே நீண்டு கருகியிருந்த பெரு மரம்போலத் தலைதூக்கி நின்றது. ஆம் இப்போது பிலோமினாவைக் காப்பாற்ற வேண்டியது அவன் கடமை! அந்தக் கடமையைக் கனகத்தின் கண்ணீரோ, அன்போ, பாசமோ எதுவும் இனித் தடுக்க முடியாது. அந்தக் கடமையுணர்ச்சி, ஊரைப் பற்றி யெழுந்த எண்ண அலைகளின் முடிபில் அவனுக்குள் ஒரு வெறியாகவே மாறிவிட்டது!

அந்த வெறியுணர்ச்சியில் ஊரிலேயிருந்து வரக்கூடிய சில்லறைத் தொந்தரவுகளிலிருந்து தப்பிக் கொள்ளப்பிலோமினாவை உடனடியாகப் 'பதிவுமணம்'



செய்துகொள்வதெனத் தீர்மானித்தான். பழைய காதலுக்கும் புதிய கடமைக்கும் இடையில் அல்லாடும் தன் மனதைக் கடமையில் லயிக்க வைப்பதற்குச் சட்ட பூர்வமான பாதுகாப்புத் தேடிவிட எண்ணினான். கனகத்தின் காதலனாக இல்லாமல் பிலோமினாவின் கணவனாக மட்டும் இருப்பதற்கு எதையெல்லாம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்ய அவன் தயாரானான்.

கண்டிக்குப்போய்க் காரியாலயத்திற் பதிவு முடிந்தபிறகுதான் பிலோமினாவுக்கு அவன் ஏன் தன்னைக் கண்டிக்கு அழைத்துவந்தான் என்பது விளங்கியது. ஆனாலும் இந்தக் காரியத்தை நினையாப்பிரகாரமாக முடித்ததின் மறைபொருள் அவளுக்குப் புலப்படவில்லை. எனவே பதிவு கந்தோர்க் காரியாலயத்திலிருந்து வெளியே வந்ததும் பிலோமினா 'இதற்குத்தானா இவ்வளவு அவசரமாகக் கண்டிக்குக் கூட்டி வந்தீர்கள்.'

'பிறகென்ன? நீதான் அவநம்பிக்கைப் பட்டுக் கொண்டிருக்கிறாயே' என்று சிரித்தான் நடராஜன்.

'அப்படி இல்லை; நான் எங்காவது ஓடிவிடுவேன் என்று நீங்கள்தான் பயந்து கொண்டிருந்தீர்கள். அதனால் ஒன்றையும் வெளியிடாமல் என்னை இழுத்து வந்தீர்கள்' என்று பிலோமினாவும் சிரித்தாள்.

அதன்பிறகு அவர்கள் இருவரும் கண்டி நகரிலே அலைந்தார்கள். இதற்கு முன் எத்தனையோமுறை அவர்கள் பார்த்த தலதா மாளிகையும் தெப்பக்குளமும், அரசமாளிகையும் ஏதோ சொர்ப்பன லோகத்து

விந்தைகளாக அவர்களுக்குப் பட்டன. சனங்களின் இரைச்சலும், அழகிய பொருள்களின் நாற்றமும் அவர்களுக்குக் கந்தர்வ கானமாகக் காதிற் பட்டன. தேவலோகச் சுகந்தமாக நாசியைத் துளைத்தன. இருவர் உள்ளத்திலும் உடலிலும் ஓர் புதுத்தென்பு பிறந்தது. பேட்டோ படம் ஒன்று பிடித்துக்கொள்வதற்காக ஒரு 'ஸ்ரூடியோ'வுக்குள் இருவரும் நுழைந்த போது அந்த ஸ்ரூடியோவின் வரவேற்பு மண்டபத்தில் இருந்த வானொலி மெதுவாகப் பாடியது.

துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம்
அன்பி லழியுமடி—கிளியே அன்புக்கழி வில்லைக் காண்]

இப்படியே திரிந்ததில், மதியம் திரும்பிவிட்டது. பிலோமினாவுக்கு அலுத்து விட்டதோ என்னவோ 'வீட்டுக்குப் போகலாமே' என்றாள்.

'இப்போதா, இப்போதுதான் நாம் புதுத் தம்பதிகளாகியிருக்கிறோம். அந்தத் திருநாளை உல்லாசமாகக் கழிக்காமல் வீட்டிலே என்ன காத்துக்கிடக்கிறது' என்றான் நடராஜன்.

'நல்ல திருமணந்தான்; இந்தத் திருமணத்தை எப்போதோ நாம் கொண்டாடி யிருக்கவேண்டும். இப்போது கிழட்டுக் கல்யாணம் ஆகிவிட்டதே' என்றாள் பிலோமினா.

'என்ன மாதிரியாவது இருக்கட்டும். கல்யாணம் வாழ்க்கையில் ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்கு ஒரு தடவைதான் வருகிறது! அந்தத் தினத்தை அவனோ, அவளோ வாழ்க்கையில் மறக்கமுடியாது. கொட்டா



விட்டாலும் தேள் பிள்ளைப்பூச்சியாகி விடாது. இந்தக் கல்யாணம் மட்டும் ஊரில் நடந்திருக்குமானால்...'

அதற்குமேல் நடராஜனால் பேசமுடியாமற் போய் விட்டது. அவன் தொண்டை கரகரத்தது; கண்கள் கலங்கிவிட்டன.

அவன் மனக் குறையை உணர்ந்த பிலோமினா 'ஏன் ஊருக்குப்போய் இதைச் செய்திருக்கலாந்தானே. நான் வேண்டாமென்றேனா?' என்றாள் பிலோமினா.

'செய்திருக்கலாந்தான்...' என்று தரித்துப் பெருமூச்சுவிட்ட நடராஜன் 'அதெல்லாம் பெரிய கதை. அதையெல்லாம் ஆறுதலாகச் சொல்கிறேன். இப்போது வா பேராதனைப் பூந்தோட்டத்துக்குப் போகலாம்' என்றான் நடராஜன்.

இருவரும் பேராதனைப் பூந்தோட்டத்துக்கு வந்த போது இரண்டு மணியாகிவிட்டது. அந்த உக்கிர வெய்யிலில் அப்பூந்தோட்டத்தின் பசுமையான குளுமையோ, உலகத்தின் அத்தனை தாவரங்களும் நிரம்பியிருக்கும் அத்தோட்டத்தின் பெருமையோ, பூக்களின் வனப்போ, மரங்களின் காம்பீர்யமோ, செடிகளின் சௌந்தர்யமோ, புல் போர்த்திருக்கும் செழுமையான தரையின் மரகதப் பசுமையோ ஒன்றுமே கனகத்தின் மனதைக் கவரவில்லை. அத்தோட்டத்தை வளைத்துக் கொண்டு துடிக்கும் கலகலப்பும் நிறைந்த பெதும்மைப் பருவத்தாளைப்போலக் குதிநடை போட்டுக் கொண்டிருக்கும் மகாவலிகங்கைகூட அவளைக் கவரவில்லை. அவள் மனது நடராஜனிடம் கதை கேட்பதையே எண்ணிக்கொண்டிருந்தது.

கங்கைக்கரையோரத்தே அடர்ந்து வளர்ந்த புத ரோரமாக ஆசனத்தில் இருவரும் அமர்ந்து கொண் டனர்.

அவரவர் கவலைகளோடு இருவரும் மௌனமாகச் சில நிமிடங்களைக் கழித்தனர். அந்த மௌனத்தை "இங்கே இருக்கத்தானு வந்தோம்; இதையெல்லாஞ் சுற்றிப் பார்க்க வேண்டாமா?" என்ருன் நடராஜன்.

"எனக்குக் காலெல்லாம் நோகுது. நான் இப்படித் தான் இருக்கப்போகிறேன்" என்ருள் பிலோமினு.

"சரி எனக்கென்ன, தேவியின் ஆணைப்படிதான்" என்று குறும்பாகச் சிரித்தான் நடராஜன்.

நடராஜனைத் தன் இலக்கிற்குத் திருப்பப் பிலோ மினு முயன்ருள். அவள் ஆசிரியையாக இருந்தவள். தான் கருதியதை மாணவன் வாயிலிருந்தே விடை யாகப் பெறுவதன் சூட்சுமம் அவளுக்குத் தெரியும். அந்த முறையிலேதான் அவள் நடராஜனிடம் கேட் டாள். இந்த ஆற்றைப்பார்ப்பதால் தங்களுக்கு என்ன நினைவு உண்டாகிறது?"

"ஆற்றைப் பார்த்தால் தமிழனுக்கு என்ன நினைவு உண்டாகும்? வெள்ளைக்காரனைப்போல 'ரோமர்க ளாகிய நாங்கள் வணங்கும் தந்தையாகிய தைபர் நதியே' என்று அவனுற் பாடமுடியுமா? கங்காதேவி என்று சொல்லிப் பெண்ணெருத்தியைத் தான் நினைவு படுத்துவான் தமிழன்."

"அப்படியானுல் தங்களுக்கு எந்தப் பெண்ணின் ஞாபகம் வருகிறது?"



"அதை நான் சொல்ல வேண்டுமா?"

"சொன்னுல் என்னவாம்?"

"அப்படியா! பிலோமினு நன்ருகக் கேள். இப் போது நம் அருகிலே ஓடிக்கொண்டிருக்கும் இந்த மகாவலிகங்கையைப் பார்க்கும்போது பெதும்பைப் பருவத்தினளாக இருக்கும்போது நீ பயமறியாது துள் ளிக் குதித்து ஓடியதைக் கற்பனையிற் காண்கிறேன். இது உற்பத்தியாகுமிடத்திலே கல்லுக்குக் கல் கலீர் என்று துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடும்போது உன் னைக் குழந்தையாகக் காண்பேன். இந்த நதி இன்னும் சில மைல் வேகமாக ஓடிச் சமதரையில் மெதுவாக ஊர்கையில், நான் உன்னை முதலிற் சந்தித்தபோது நீ மெதுவாய் அடிமேல் அடி வைத்து உள் அறைக்குள் அசைந்து நடந்ததைக் காண்பேன். அதற்கும் சூழ உள்ள வயல்களை நீர் பாய்ச்சிக்கொண்டு கரைததும்பச் செல்லும் போது அதிலே ஓர் அன்பு மிகுந்த தாயாக உன்னைக் காண்பேன்.

பிலோமினுவுக்கு அவன் பதிலில் திருப்தி ஏற்பட வில்லை. ஆனுல் நாடகத்திலே நடிப்பவன் போன்று நெளிந்து வளைந்து பேசும் பேச்சையும், அவன் அபி நயத்தையும் இரசித்தாள்.

அவன் முடித்ததும் "அதற்கும் மகாவலிகங்கை கடலோடு கலக்கும் இடத்தில்...... அதைச் சொல்ல மாட்டீர்கள்" என்ருள் பிலோமினு குறும்பாக.

"அட இதுதான் மகாவலிகங்கையா? எனக்குத் தெரியாதே. என்ன இருந்தாலும் நீ ஆசிரியை. பெய ரும் உருவமும் உங்கள் கூட்டத்துக்கே முக்கியம்.

பாட்டைப் படிப்பித்துவிட்டு 'இது அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்' எதுகை மோனை எல்லாம் அருமையாக இருக்கும் என்று சொல்வீர்களே தவிர, அதன் உட்பொருளை இரசித்துச் சுவைக்க உங்களுக்கும் தெரியாது; மாணவர்களையும் விடமாட்டீர்கள்'' என் ருன் நடராஜன்.

அவனிடம் பேசி வெல்ல முடியாதென்பதை உணர்ந்த பிலோமினு ''எனக்கு இந்த ஆற்றைப்பார்த் தால் இந்த ஆற்றின் கரையோரமாக நடந்து மூதூருக் குப் போகலாம் என்ற நினைவு வருகிறது'' என்ருள்.

நடராஜன் மௌனமானுன் அவன் குதூகலம் எல்லாம் மூதூர் என்ற சொல்லைக்கேட்டதும் தொட் டாச்சிணுங்கிபோலச் சுருங்கிவிட்டது. பிலோமினு. அவனில் மெதுவாக அணைந்துகொண்டே ''ஊருக்குப் போகமாட்டீர்களா?''

''போவோம்''

''அது பெரியகதை என்றீர்களே! அந்தக் கதை யைச் சொல்லுங்களேன்.''

சற்றுநேரம் அப்படியேயிருந்த நடராஜன் இன் னும் ஏன் பிலோமினுவிடம் தன்னைப்பற்றிய விபரங் களை மறைக்கவேண்டும் என்று தீர்மானித்தவனுய் ''உங்கள் பாடசாலையிலே கனகம் என்று ஒருத்தி. அவளை உனக்குத் தெரியுமா? அவளும் மூதூர்தான்''

''நான் இருக்கும்வரை இல்லை. பிறகு வந்தாளோ என்னவோ. கல்முனையிலிருந்துதான் யாரோ வரப் போவதாகக் கேள்விப்பட்டேன்''



''அவள்தான். அவள் எனக்கு மச்சாள். அவள் உன்னை ஒருநாளுமே காணவில்லையா?''

''எனக்கே அவளைத் தெரியாது. அம்மா செத்த அன்று இரண்டு மூன்று புது முகங்கள் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருத்தியாக இருக்குமோ என்னவோ? ஏன் இப்போது அவளுக்கென்ன?''

''அவளுக்கென்ன? இப்போது அவள் திரும்பி ஊருக்கே போய்விட்டாள். ஒருகாலத்தில் நான் அவ ளைக் காதலித்தேன்.

பொழுது போனதே தெரியாமல், ஆர்வத்தோடும் குழப்பத்தோடும் பிலோமினு அந்தக் கதையைக் கேட்டாள்.

கதையைச் சொல்லி முடித்த நடராஜன் ''பிலோ மினு! நம்பிக்கை அன்பு என்ற அத்திவாரத்தின் மேற்ருன் நம் வாழ்க்கை அமையவேண்டும். அதற்கு முதற்படியாக என் மனம் முழுதையுமே திறந்து உனக்குக் காட்டியிருக்கிறேன். இதோ இந்தக் கடி தத்தையும் படி'' என்று கனகத்தின் கடிதத்தையும் அவள் கையிற் கொடுத்தான்.

# 44

## கனகத்தின் கடிதம்

அந்தக் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினுள்.

**அன்புள்ள அத்தானுக்கு,**

இந்தக் கடிதத்தை எழுதுவதா வேண்டாமா என்ற போராட்டத்தில் எத்தனையோ நாட்களைக் கடத்திவிட்டு எப்படித் தொடங்குவது என்ற கேள்வியில், எத்தனையோ தடவை எழுதி எழுதிக் கிழித்துவிட்டு எப்படியோ இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். தமிழ்நாட்டுக் கதாசிரியன் ஒருவன் தன் கதைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'என் மனதில் எழுதாக் கிளவியாய்க் கிடந்து வேதனைப் படுத்தும் எண்ணங்களை எழுதாமலிருக்க என்னுல் முடியவில்லை. அதனுற்ருன் நான் எழுதுகிறேன்' என்று சொன்னுனும். அவனைப் போலவே, கடந்துபோன சம்பவங்கள் என் மனத்தைப் பிய்த்துப் பிடுங்கிக் கொண்டிருக்கையில் என்னுல் இக் கடிதத்தை எழுதாமலிருக்க முடியவில்லை. அதனுலேதான் இதை நானும் எழுதுகிறேன். அந்தக் கதாசிரியனின் எழுத்துக்களைப்போலவே என் எழுத்துக்களும் மோட்ச சாம்ராச்சியத்தில் இடம் பிடித்துக்கொள்ள ஏற்பட்ட இன்சூரன்ஸ் ஏற்பாடல்ல. இதனுல் யாருக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறதோ என்பதும் எனக்குத் தெரியாது. ஆனுல் எனக்கு இதிலே ஒரு திருப்தி உண்டு என்பதுமட்டும் எனக்குத் தெரியும். ஆனுல் அதே நேரத்தில்



இக்கடிதம் தங்களுக்கு எந்தக் குழப்பத்தையும் தரக்கூடாது என்று என் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன்.

சரி, கடந்துபோன சம்பவங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வருகின்றன. 'தம்பி, இங்கு நீர் வரவேண்டாம்' என்ற அப்பாவின் வார்த்தைகளைத் தாங்க மாட்டாமல் நீங்கள் அதுவரை பேசிக்கொண்டிருந்த என்னிடங்கூட ஒருவார்த்தை சொல்லாமற் திடீரென்று போய்விட்டீர்கள். அன்றைக்கு நான் அதிகமாக ஒன்றும் துக்கப்படவில்லை; எப்படியும் திரும்பி என்னிடம் வருவீர்களென்ற நம்பிக்கை எனக்கிருந்தது. ஆனுல் உண்மையாகவே துக்கப்பட்டவர் அப்பாதான். அன்றையிலிருந்து இன்றுவரை அப்பாவை உங்கள் பிரிவு எவ்வளவு தூரம் வதைத்து விட்டது என்பதை என்னுல் எழுதிக்காட்ட முடியாது!

ஆனுற் கொழும்புக்குப் போன நீங்கள், அண்ணனுக்கு எழுதிய கடிதத்தைப் படித்தபோதுதான் தங்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் ஏற்பட்டுவிட்ட இடைவெளியின் கோரத்தை உணர முடிந்தது!

அதன்பிறகு நான் கல்முனைக்குப் போனேன். அங்கேயிருந்து தங்களுக்குக் கடிதம் எழுதினேன். நீங்கள் ஒருநாள் திடீரென்று கல்முனைக்கு வந்தீர்கள்! அதை நினைத்தாலே என் நெஞ்சம் வேகிறது. சர்வாங்கமும் படபடக்கிறது.

நீங்கள் வருவதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்னர்தான் அங்கே சுந்தரம் வந்தான். அவன் ஏன் வந்தான்

என்று எனக்குத் தெரியாது. சத்தியமாகச் சொல்கிறேன். நான் எங்கெங்கே திரிந்துவிட்டு மறுபடி மூதூருக்கு வரும்வரையிலும் என்னை அவனுக்கு மணம் முடிப்பதற்கு யோசித்திருந்தார்கள் என்ற விஷயமே எனக்குத் தெரியாது!

தங்களைக் கண்டதும் அவன் போய்விட்டான். ஆனாலும் அவன் நிழல் அங்கே தங்கிவிட்டது. அந்த நிழல் தங்கள் மனதில் பூதாகாரமான சந்தேக உருவிற் தங்கியேவிட்டது.

அதன்பிறகு நீங்கள் கேட்டீர்கள் "வா போவோம்" என்று.

நீங்கள் சுயமாக இருந்து யோசித்துப் பார்த்தால், நான் மட்டுமல்ல எந்தப் பெண்ணுமே இந்தக் கேள்விக்கு 'உடனே வருகிறேன்' என்று பதில் சொல்லியிருக்கமாட்டாள் என்ற முடிவுக்கு வருவீர்கள். ஆனால் அன்று நீங்கள் சுயமாகச் சிந்திக்கும் நிலையில் இல்லை; சந்தேகம் உங்கள் கண்களை மறைத்துவிட்டது!

நீங்கள் போய்விட்டீர்கள்! உங்களுடைய அழகான உருவமும் என்றைக்கும் மறக்கமுடியாத உங்கள் முகமும் போயே விட்டன.

அத்தான்! கல்கியின் கவிதை ஒன்றை நீங்களும் படித்திருப்பீர்கள். மால்மருகன் வேலன் வந்து வள்ளியின் கையைப் பற்றி வா என்றிழுக்க அவள் வெடுக்கென்று கையை இழுத்தாளாம். உடனே இன்பமான அவள் கனவு கலைந்துவிட்டது. தான் கையை இழுத்த பேதைமைக்காக அவள் பின்னர் கலங்கினாளாம்!



நீங்கள் கல்முனைக்கு வந்தது கனவுபோலவே எனக்கிருந்தது என்னை வாவென்றழைத்ததும் கனவு போலவே இருந்தது. ஆனால் நீங்கள் போனபின்புதான் அவை ஒன்றுமே கனவல்ல நனவு என்ற மகா உண்மை எனக்குத் தெரிந்தது. அதன்பிறகுதான் நான் தங்களோடு வாழ்வதைப்பற்றி உண்மையாகவே கனவு காணவேண்டி நேரிட்டது. ஆம், வாழ்க்கை கனவாயிருக்க முடியாது வாழவேண்டும் என்ற ஆசைதான்; வாழப்போகிறேன் என்ற நினைவுதான் கனவாயிருக்க முடியும்.

ஆனால் அதன்பிறத நான் ஆசைப்பட்ட வாழ்க்கைக் கனவு என்றைக்குமே நனவாகாமல் விட்டது. 'நீங்கள் வா என்று கூப்பிட்டதும் ஏன் போகாமல் இருந்தேன்' என்பதை எண்ணிக் கலங்கும் ஒன்றுதான் என் வாழ்க்கையின் நனவு; மற்றெல்லாம் கனவேதான்!

கோபித்துக்கொண்டு போய்விட்ட நீங்கள் திரும்பி வருவீர்கள் என்றுதான் நான் எண்ணினேன்; சில நிமிஷங்களின் பின்னுகுதல் நீங்கள் திரும்பிவந்து மறுபடியும் என்னை வா என்று அழைத்தீர்களானால் நான் நிச்சயமாகத் தங்களுடன் வந்திருப்பேன். ஆனால் நீங்கள் போய்விட்டீர்கள். உங்கள் மனதிற் குடிபுகுந்த சந்தேகப் பிசாசு உங்களை என்னைவிட்டுத் தூரமாக்க, மிகத் தூரமாகச் சென்று விட்டீர்கள்.

ஆனால் இந்த நிலையிலும் தங்களைப்பற்றிய ஓர் எண்ணம் எனக்கு ஆறுதலாகத்தான் இருக்கிறது; ஆம், நீங்கள் பெற்று வளர்த்த தாயைத் துறந்து, அரவ

ணைத்துக் காத்த தந்தையைத் துறந்து, தங்கள் எதிர்கால வாழ்வுக்கு ஊன்றுகோலாயிருந்த தங்கள் படிப்பையே வீசி எறிந்துவிட்டு, எனக்காகக் கல்முனைக்கு வந்தீர்கள் என்ற நினைவு ஆறுதலைக் கொடுக்கிறது. என்றாலும் அவ்வளவு அன்பையும் ஒரே வார்த்தையில் உதறி எறிந்துவிட்ட என் பேதைமையை நினைத்து என்னாற் துக்கப்படாமலிருக்க முடியவில்லை. அதே நேரத்தில் நீங்கள் என்மேல் வைத்த அதீதமான அன்புதான் என் வாழ்க்கையைப் பாழ்படுத்தி விட்டது என்று என்னாற் தங்கள் மேற் குற்றஞ் சாட்டாமலிருக்கவும் முடியவில்லை. தங்களுக்குத் தாகூரின் கவிதை நன்றாகத் தெரியும் என்று எண்ணுகிறேன். அவர் ஓரிடத்திற் பாடினார்.

"மலர் ஏன் கருகி விட்டது? தணியாத ஆசையோடு அதை என் இருதயத்தோடு அணைத்துக்கொள்ள முயன்றேன். அதுதான் மலர் கருகிவிட்டன.

"வீணைக் கம்பிகள் ஏன் அறுந்துவிட்டன? அவற்றின் சக்திக்கு அப்பாற்பட்ட நாதத்தை அவற்றிலே மீட்க முயன்றேன். அதுதான் வீணைத்தந்திகள் அறுந்துவிட்டன" என்று.

தங்களைப்போலத் தீவிரத்தோடு அன்பு செலுத்தி அதனால் ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழ்படுத்தி விட்ட ஒருவனைப்பற்றித்தான் அவர் இப்படிப் பாடியிருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன்.

சரி, எங்கேயோ போய்விட்டேன்; ஆனால் என்ன செய்வது? கடிதத்தை எழுதத் தொடங்குமட்டுந்தான்



எழுதுவோமா வேண்டாமா என்று தயங்கினேன். ஆனால் எழுதத் தொடங்கியபின் பேனா எதையோ எழுதிக்கொண்டு போகிறது. ஆனாலும் 'இதய சம்பூரணத்திலிருந்ததுதான் வாய் பேசுகிறது' என்ற பைபிள் வாக்கியப்படி எல்லாம் என் மனதிலிருப்பதுதான் வெளிவருகிறது. இனி விட்ட இடத்திற்கு வருகிறேன்.

நீங்கள் கொழுப்புக்குத் திரும்பியிருப்பீர்கள் என்ற எண்ணத்தில் அதன் பிறகு உங்களுக்குக் கொழும்பு விலாசத்திற்குக் கடிதங்கள் எழுதினேன்; ஒன்றிற்கும் பதில் வரவில்லை.

காலகதியில் நீங்கள் மறுபடியும் என்னிடம் வருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு அற்றுப்போய்விட்டது. எனவே என் வாழக்கையின் போக்கை மாற்றிக்கொள்ள விரும்பினேன், மதம் மாறினேன். துறவியாகப்போக எண்ணிக் கற்றனுக்கு வந்தேன்.

ஆனால் அங்கே மறுபடியும் தங்களை அறிந்துகொள்ள நேரிட்டது. தாங்கள் பிலோமினாவை மணமுடிக்க இருப்பதைத் தெரிந்துகொண்டபோது மறுபடியும் என் மனம் அமைதியை இழந்தது. இனி அங்கே இருந்தால் பாவம்! எந்தக் குற்றமுமே புரியாத பிலோமினாவின் வாழ்க்கை பாழாகிவிடும் என்று எண்ணி ஊருக்கே வந்துவிட்டேன். வந்தாரை வாழவைக்கும் இத் தமிழ்நாடு, பெற்றுவளர்த்த என்னைக் கைவிடாது; ஆகவே நீங்கள் இனிமேல் என்னைப்பற்றிக் கவலைப் பட வேண்டாம். உங்கள் புது மனைவியோடு நிம்மதியாக வாழ்ந்தீர்களானால் அது ஒன்றுதான் எனக்கு இப்போது தாங்கள் கொடுக்கும் ஆறுதலாக இருக்கும்!

நீங்கள் நிம்மதியாக வாழ்வீர்கள் என்றுதான் எண்ணுகிறேன். ஏனென்றால் சமுதாயத்திலே பெண்ணின் நிலையைச் சரியாக அளந்தறிந்த ஒஸ்கார் வைல்ட்

ஓரிடத்தில் எழுதினான்: ஆண் பெண்ணின் முதற் காதலை விரும்புகிறான். பெண் ஆணின் கடைசிக் காதலை விரும்புகிறாள்' என்று; தாங்கள் என்னை அடியோடு மறந்துவிட்டுத் தங்கள் மனைவியிடம் அன்பு காட்டினால், அவள் தங்கள் பூர்வகால வாழ்க்கையை அறிந்துகொண்டாற் கூட அதனால் உங்களுக்கு ஒரு இடைஞ்சலும் ஏற்படாது. நம் நாட்டிற் பெண்களின் நிலை அப்படி!

நான் என்ன செய்யப்போகிறேன் என்று கேட்கிறீர்களா? அதற்கும் நம் நாட்டவர்கள் வழி செய்துதான் வைத்திருக்கிறார்கள். மனப்பாரத்தை எல்லாம் இறக்கி வைப்பதற்கு விதி என்ற சுமைதாங்கியை ஏற்கனவே கட்டி வைத்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் உங்களோடு சேர்ந்த 'தெய்வகீதம் பலவுண்டு, சேர்ந்துபாட நீயுண்டு' என்று பாடிய நான் இன்றைக்கு அதே கவிஞனின்

எழுதிச் செல்லும் விதியின்கை எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கொஞ்சி நின்றாலும் சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னே சோர்ந்து ஒரு வார்த்தையேனும் மாற்றிடுமோ
அழுத கண்ணீர் ஆறெல்லாம் அதிலோர் எழுத்தை அழித்திடுமோ!

என்ற பாட்டோடு திருப்தியடைந்து கொள்வேன்.

கடைசியாகத் தங்கள் இருப்பிடத்தையோ, வாழ்க்கையையோ நான் இங்குள்ளவர்களுக்குச் சொல்லித் தங்கள் நிம்மதியைக் குலைக்கமாட்டேன். ஆனால் என்றைக்காவது நீங்கள் தங்கள் மனைவியோடு ஊருக்கு வந்தால் தங்களுக்கு மனம் நிறைந்த வரவேற்பளிக்கும் முதலாம் ஆள் நானாக இருப்பேன் என்றதை



மட்டும் எழுதிக்கொண்டு என் நீண்ட கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் அபுன்ள்ள
**கனகம்**

சுவையான கதையைப் படிப்பவள்போலப் பிலோமினா ஒரே மூச்சில் கடிதத்தை வாசித்து முடித்தாள். அவளுக்குக் கனகத்தின்மேல் இரக்கம் உண்டாயிற்று. நடராஜன்மேல் எரிச்சல் ஏற்பட்டது. வரித்த கணவனை இன்னொருத்திக்கு பறிகொடுத்துவிட்ட பெண்ணின் மன உளைச்சல் அவள் பெண்ணுள்ளத்தைத் தொட்டது. 'பெண் ஆணின் கடைசிக் காதலையும், ஆண் பெண்ணின் முதற் காதலையும்...... என்று கனகம் குறிப்பிட்டிருந்த ஒஸ்கார் வைல்டின் வரிகள் தன்னை ஏளனஞ் செய்வது போலப்படுகையில் அவளுக்குக் கனகத்தின் மேல் எரிச்சலாகவும் இருந்தது. இப்படிப் பல உணர்ச்சிகள் அவள் உள்ளத்தில் ஒரே நேரத்திற் சலனப்படுகையில் அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை. நடராஜனும் வாங்கின் இன்னொரு மூலையில் வானத்தைப் பார்த்தவாறு எதையோ யோசித்துக்கொண்டு இருந்தான்.

அந்தி மயங்கிக் கொண்டிருந்தது!

இருவருக்குமிடையே சுவராய் அடைத்துநின்ற மௌனத்தை நடராஜன் கலைத்தான். 'போகலாமா?'

பிலோமினா பதில் ஏதும் சொல்லாமல் எழுந்து நின்றாள்.

அன்றிரவை அவர்களிருவரும் கண்டியிலே கழித்துவிட்டு அடுத்தநாள் ஹற்றனுக்குச் சென்றபோது அங்கே செல்வராஜன் வந்திருப்பதைக் கண்டார்கள். பிலோமினாகூட அவன் கனகத்தின் அண்ணனாகத்தான் இருப்பான் என்று தீர்மானித்துக்கொண்டாள்.

# 45

## மூவர்

நடராஜனைக் கண்டதும் புன்னகை புரிந்த செல்லன், பிலோமினாவைக் கண்டதும் துணுக்குற்றான். ஓரிரண்டு நிமிஷத்திற்குள்ளாக அவன் மனம் எவ்வளவையோ எண்ணிக்கொண்டது. யாரிந்தப் பெண்? நடராஜனின் பின்னால் மனைவி என்ற உரிமையோடு வருகிறாளே. தியாகு கூடக் கடிதத்தில் இவளைப்பற்றி எழுதவில்லையே. நடராஜன் இந்தப் பெண்ணை மனைவியாக்கிக் கொண்டுவிட்டதை அறிந்து ஆற்றாமையினாற்றான் கனகம் மூதூருக்குத் திடுதிப்பென்று ஓடி வந்துவிட்டாளா?

தன் தங்கையின் நிலையை எண்ணியபோது என்னதான் வெள்ளை மனம் படைத்தவனாயிருந்தாலும் அவனால் நடராஜன்மேல் வெறுப்புக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. கணத்துள் 'இப்படித் துரோகம் பண்ண எண்ணியிருந்தவன் மீதுதானா கனகம் இத்தனை அன்பு பாராட்டினாள்' என்று அவ்வெறுப்புக் கனகத்திலும் மேலும் படர்ந்தது.

தூரத்திலே செல்லனைக் கண்ட நடராஜனும் தலையைக் குனிந்து கொண்டான். அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே நடராஜனுக்கு வெட்கமாக இருந்தது.

ஆனாலும் தியாகுவின் கடிதம் வந்த நாளிலிருந்து ஊரிலிருந்து யாராவது வருவார்கள் என்பதை அவன்



எதிர்பார்த்தே யிருந்தான். வந்தால் அவர்களிடம் என்ன பேசுவது என்பதைக்கூட ஓரளவு திட்டம் பண்ணியே இருந்தான். எனவே தைரியதத்தை வரவழைத்துக் கொண்டு செல்லனிடம் பேச்சுக்கொடுத்தான்.

'இப்போதுதான் வருகிறாயா?'

'இல்லை; நேற்றுப் பின்னேரம் வந்தேன்; உன்னைக் காணவில்லை. பட்டினத்தில் இரவு தங்கிவிட்டு இப்போதுதான் மறுபடியும் இங்கே வந்தேன்.'

அவர்களை அப்படியே பேசிக்கொண்டிருக்க விட்டுவிட்டுப் பிலோமினா உள்ளே சென்றுவிட்டாள். அவளுக்கு எதிலுமே மனம் செல்லவில்லை. ஓரே குழப்பமாக இருந்தது.

நடராஜனால் அதற்குமேல் என்ன பேசுவது என்பதும் தெரியவில்லை. சிறிதுநேரம் அப்படியே மௌனமாக இருந்துவிட்டு 'நாங்கள் நேற்றுக் கண்டிக்குப் போயிருந்தோம்; இன்றைக்குத் தான் வந்தோம்' என்றான்.

'கேள்விப்பட்டேன்' என்றான் செல்லன். அதைத் தொடர்ந்து கனகம் சுகமாயிருக்கிறாளா? என்று கேட்க எண்ணினான் நடராஜன். ஆனால் எந்த நாவைக்கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்பது என்ற உள்ளுணர்வு அவன் மனதைக் குடைகையில் 'கனகம்' என்ற ஒரே வார்த்தையோடு அவன் வாய் அடைத்துக் கொண்டது.

'அவள் சுகமாகத்தான் இருக்கிறாள்' என்றான் தியாகு மடியிலே கனமில்லாதவனுக்கு வழியிலே பய

மிராது. செல்லனுக்கும் நடராஜனுக்கு வெடுக்கு வெடுக்கென்று பதில் சொல்வதற்கு எந்தத் தயக்கமும் இருக்கவில்லை.

"நான் கல்முனைக்குச் சென்று அவளை அழைத்தேன். அவள்..."

'அந்தப் பழைய கதைகளை எல்லாம் ஏன் கிளறுகிறாய்? இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னே உன்னை மறுபடியும் சந்திக்க முடியும் என்று நான் எண்ணியிருக்கவில்லை. இப்போது உன்னைக் காண்பதே எங்கள் எல்லோருக்கும் பெரிய ஆறுதலாக இருக்கிறது' என்று செல்லன் உணர்ச்சியோடு சொல்கையில் அவன் கண்களில் நீர் முட்டிற்று.

அவன் முகபாவத்தைக் கண்டபோது நடராஜனை வெட்கம் பிடுங்கித் தின்றது. செல்லனின் முகத்தைப் பார்க்கத் திராணியற்றவனாகத் தலையைக் குனிந்து கொண்டான்.

இதற்குட் பிலோமினா இருவருக்கும் கோப்பி கொண்டுவந்து வைத்துவிட்டு உள்ளே போய்விட்டாள்.

நடராஜன் கோப்பியைக் கையில் எடுத்துச் செல்லனிடம் நீட்டினான், செல்லன் அதைக் கையில் வாங்கிக் கொண்டே 'உன் கல்யாண விருந்தை இந்தக் கோப்பியுடனேயே முடித்துவிடலாம் என்று நினைக்கிறாயா?' என்றான் சிரித்துக்கொண்டே.

அவன் சிரிப்புத் தன்னை ஏளனஞ் செய்வதாக நடராஜன் எண்ணினான். அவனோடு பேசிக்கொண்டிருக்காமல் எழுந்து எங்காவது ஓடிவிடுவோமா? என்றிருந்தது நடராஜனுக்கு.



அவன் உணர்ச்சிகளைத் தெரிந்துகொண்ட செல்லன் 'நடராஜா! நீ கடந்தவைகளை யோசித்து வீணாகக் கவலைப்படுகிறாய். இந்த மடைத்தனமான எண்ணத்தை விட்டுவிட்டு உற்சாகமாக ஊருக்குப் போவோம் வா' என்றான்.

'ஊருக்கா? இப்போதா?' என்று திகைத்துப் போய்க் கேட்டான் நடராஜன்.

'ஏன் வந்தால் என்ன? நடராஜா! உன் தந்தையும் தாயும் உன்னையே நினைத்து உருக்குலைந்துகொண்டு இருக்கிறார்கள். நீ எதற்கோ அடம்பிடித்துக்கொண்டு அவர்களைப் பிரிந்து, அந்தப் பிரிவினால் அவர்களை மீளாத் துயரத்துக்குள்ளாக்கிச் சித்திரவதை செய்து கொண்டிருக்கிறாய். உலகிலே இன்னமும் பல்லாண்டு வாழவேண்டியவர்களின் சீவியமே உன்னால் சுருங்கி விடும் போல் இருக்கிறது. இன்னமும் அவர்களைக் கொன்று கொண்டிருக்காமற் புறப்பட்டுவா' என்றான் செல்லன்.

'செல்லா! நீ எதையென்றாலும் சொல். அப்பா அம்மாவினுடைய நிலையை என்னால் நன்றாக உணர முடிகிறது. நான் என்றைக்காவது ஒருநாள் ஊருக்கு வரத்தான் போகிறேன். ஆனால் இப்போது இல்லை. என்னைத் தொந்தரவு பண்ணாதே' என்றான் நடராஜன்,

'எப்போது வரப்போகிறாய்? அப்பாவும் அம்மாவும் செத்தபிறகா?' என்று கோபத்தோடு கேட்டான் செல்லன். உணர்ச்சி மிகுதியில் அவனுக்கு மங்கல அமங்கலச் சொற்களே தெரியவில்லை.

சற்றுத் தயங்கிய நடராஜன் பிறகு கம்மிய குரலிற் சொன்னான்; "ஏதேதோ இன்புக்கனவுகளில் மிதந்து கொண்டிருந்த நாங்கள் குறைக்காற்றிலடிபட்ட துரும்புபோலத் திசைதப்பி ஆளுக்கொரு திக்காற் போய்விட்டோம். அப்படியும் நான் இப்போது ஓரளவு நிம்மதியுடன் வாழ்கிறேன். அப்படி ஒரு வாழ்க்கை கனகத்திற்குக் கிடைக்கும் வரையிலும் நான் ஊருக்கு வரப்போவதில்லை; சத்தியமாக வரப்போவதில்லை."

'அப்படியானால் நீ இன்னமும் கனகத்திற்காகத் தானா வாழுகிறாய்?'

'அப்படியில்லை; அவளுக்காகவும் வாழவேண்டி யிருக்கிறது' என்றான் நடராஜன்.

'சரிதான், அப்படியானால் நீ வாழ்ந்த மாதிரித் தான், நடராஜா! இந்தச் சிக்கலிலும் குழப்பத்திலும் மாட்டிக்கொண்டால் உன் வாழ்க்கை அமைதி கெடுமே ஒழிய உருப்படியான பலன் ஒன்றும் ஏற்படாது. கன கத்தைப்பற்றிக் கவலைப்பட இனி நாங்கள் இருக் கிறோம். இனி நீ உன்னைப்பற்றி உன் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படு. அவர்கள் இன்னமும் நீண்ட காலம் உலகில் வாழவேண்டும் என்று கவலைப்படு' என்றான் செல்லன்.

அவர்களைப்பற்றி ஏன் இப்போது கவலைப்படவேண் டும்? அவர்களுக்குத்தான் நான் எங்கே எப்படியிருக் கிறேன் என்பது நன்றாகத் தெரியுமே. அப்பா இப் போது என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய நியாய மில்லையே;



'நீ அப்படித்தான் எண்ணிக்கொண்டிருக்கிறாய் போல இருக்கிறது நடராஜா. நீ உன் பிதா மாதாக் களுக்கு ஒரே மகன். நீ நடத்தும் குடும்ப வாழ்க்கை யைக் கண்முன்னே கண்டு களிப்பதற்கு அவர்களுக்கு எவ்வளவு ஆசையாக இருக்கும். அதை எண்ணிப் பார்.'

'என் வாழ்க்கையைக் கண்டு மனங் குமுறுவதற் கும் அங்கே ஒருத்தி இருக்கிறாள். அதையும் நான் எண்ணிப்பார்க்க வேண்டும்.'

செல்லனுக்குக் கோபம் வந்துவிட்டது. வேகத் தோடு அவன் சொன்னான்: 'நடராஜா! நீ எல்லோரைப் பற்றியும் பிழையாக எண்ணிக்கொண்டிருக்கிறாய். நீ கனகத்தின் கணவனாகி விடவில்லை என்ற காரணத் திற்காக உன் வாழ்வைக் கண்டு பொறாமைப்பட்டுக் கொண்டிருக்கும் மனம் எங்களில் எவருக்குமே கிடை யாது. என் மூக்கு அறுபட்டாலும் சத்துராதிக்குச் சகுனப்பிழை உண்டாகவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் நான் உன்னைத் தேடிக்கொண்டு இங்கே வந்திருக்க மாட்டேன். நீ வேறு பெண்ணை மணம் முடித்துவிட்டாய் என்று அறிந்தபின்பும் உன்னோடு முகம் கொடுத்துக் கதைத்திருக்கமாட்டேன். எதை யெதையோ எண்ணிக்கொண்டிருக்கும் உனக்கு இதை யெல்லாம் எப்படி விளக்குவது என்பதுகூட எனக் குத் தெரியவில்லை. நீ பிரிந்துபோனபிறகு எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் உனக்காக எவ் வளவு வேதனைப்படுகிறோம் என்பது ஆண்டவனுக் குத் தெரியும். உன்னை எப்போது திரும்பிக் காணப் போகிறோம் என்ற எங்கள் மன ஆவலையும் அவன்

தான் அறிவான்! எப்படியும் உன்னைக் கூட்டிக் கொண்டு போகாமல் நான் இவ்விடத்தை விட்டு நகரப் போவதில்லை.'

செல்லன் உணர்ச்சியோடு பேசிமுடித்தபின் நடராஜன் அமைதியாகச் சொன்னான்: 'அதற்கென்ன இங்கே இருந்துவிடேன்.'

'ஆம் இநுக்கத்தான் போகிறேன். ஆனால் உன்னோடு அல்ல; எனக்குக்கிடைத்த புதுத் தங்கையோடு' என்றான் செல்லன்.

எப்படித்தான் இருப்பினும் நடராஜனை ஊருக்கு வரும்படி சம்மதிக்கச்செய்யச் செல்லனால் முடியவில்லை. இப்படியே அன்றைப்பொழுதும் கழிந்து விட்டது.

அன்றிரவு செல்லன் நடராஜனிடம் சாந்தமாகக் கேட்டான்: 'உன்னைப்பற்றிய எல்லா விஷயங்களும் உன் மனைவிக்குத் தெரியுமா?'

'நன்றாகத்தெரியும். நான் எல்லாவற்றையுமே சொல்லியிருக்கிறேன்' என்ற நடராஜன் அதைத் தொடர்ந்து தான் பிலோமினாவை மனைவியாக்கிக் கொள்ள நேரிட்ட கதை முழுவதையுமே செல்லனுக்குச் சொன்னான்.

அந்தக் கதையைக் கேட்டுவிட்டுச் செல்லன் அவனை மனமாரப் பாராட்டினான். 'நீ இன்னமும் கனகத்தை எண்ணிக் கலங்கிக்கொண்டிருந்தால் அது அபலையான பிலோமினாவுக்கு நீ செய்யும் மகத்தான மன்னிக்க



முடியாத துரோகமாயிருக்கும்' என்று புத்தி புகட்டினான். ஊரிலே உன்னைக் காண்பதற்கு எல்லோரும் ஆவலோடிருக்கிறார்கள். இந்நிலையில் நீ பிலோமினாவோடு ஊருக்கு வந்தால் உன் எதிர்காலம் எவ்வளவோ நன்றாகவிருக்கும்' என்பதை நயமாக எடுத்துச் சொன்னான்.

செல்லனின் பேச்சுக்களை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பிலோமினாவுக்கும் அவன்மேல் ஓர் அலாதியான பிரீதி உண்டாயிற்று. 'இப்படியும் ஒரு மனிதன் இருக்க முடியுமா?' என்று அவள் எண்ணிக்கொண்டாள். ஆனால் நடராஜனை வெறுப்பதா, விரும்புவதா என்ற புரியாத குழப்பத்தில் மூழ்கிக்கொண்டு செயலற்றுப் போயிருந்தாள்.

தன் பேச்சு ஏதுமே நடராஜனிடம் எடுபடாததைக் கண்ட செல்லன், கடைசியாகப் பிலோமினாவிடம் பேசிப் பார்ப்பதெனத் தீர்மானித்தான்.

பிலோமினா செல்லனை ஓர் உத்தமன் என்று மதித்தாள். பகைவனுக்கருளும் அவன் நன்னெஞ்சைப் பாராட்டினாள். ஆனாலும் அவள் வேண்டுகோளுக்கு விடுக்கக்கூடிய பதில் அவளுக்கே திருப்தியளிக்கவில்லை. 'எனக்கென்ன இருக்கிறது; அவர் வருவதாக இருந்தால் எங்குபோகவும் எனக்குத் தடையில்லை. ஆனால் ஊருக்குப் போவோம் என்று அவரைக் கேட்கவும் நான் விரும்பவில்லை' என்று அவள் செல்லனிடம் அழுத்தமாகச் சொல்லிவிட்டாள்.

இப்படியே நான்கு நாட்கள் ஓடிவிட்டன. அவர்கள் மூவரும் மூலைக்கொருவராகக் குந்திக்கொண்டு தங்கள் தங்கள் பாட்டிற்கு யோசிப்பதிலேயே காலம் கழிந்துகொண்டிருந்தது செல்லனுக்கு நம்பிக்கையிருந்தது. நடராஜனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல இருந்தது. பிலோமினாவிற்குத் தன்னிற்தானே வெறுப்பாயிருந்தது.

இந்தச் செயலற்ற குழப்பத்தில் அவ்வீட்டின் இன்பமே எங்கே ஓடிவிட்டது.

ஒருநாள் செல்லனும் நடராஜனும் வெளியே சென்றிருந்தார். வீட்டிற்குத் திரும்பி வந்தபோது அங்கே பிலோமினாவைக் காணவில்லை.

# 46

## கொழுகொம்பு

'மணவாழ்க்கை என்பது நாளுக்கு நாள் புதிது புதிதாக மலர்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கை அற்புதம்' என்று ஓர் ஆங்கிலர் கவிஞன் பாடினன். மணமான புதிதில் நடராஜனின் வாழ்க்கையும் அப்படித்தான் இருந்தது. நாளுக்கு நாள் புது உற்சாகம், புது மலர்ச்சியாகக் கழிந்த அவன் வாழ்க்கை கனகத்தின் கடிதத்தைக் கண்டபிறகு மலர்வதை மறந்துவிட்டது. செல்லனின் வருகைக்குப் பிறகு கூம்பியே விட்டது.

மூன்று நான்கு நாட்களாக முகங் கொடுத்துப் பேசிக்கொள்ளமாட்டாமல் மூலைக்கொருவராகப் பிரிந்துகொண்டிருந்த நடராஜனும் பிலோமினாவும் வாழ்க்கையின்பத்தை இழந்தே விட்டனர். செல்லனின் வரவால் அவர்கள் வாழ்க்கை தொட்டாச்சிணுங்கிப் பற்றையைப்போலச் சுருங்கியே விட்டது.

இந்த நிலையிலே அன்று காலை தன் உத்தியோகத்துக்குப் புறப்பட்டுப் போன நடராஜன் திரும்பி வருகையில், வெளியேபோயிருந்த செல்லனும் அவனோடு சேர்ந்துகொண்டான். இருவரும் வீட்டுக்கு வந்துபார்க்கையில் அங்கே வீடு பூட்டப்பட்டுக் கிடந்தது. அதைப் பார்த்ததும் நடராஜனுக்குப் பகீர் என்றது! அவன் எதிர்பார்த்த பயங்கர நிகழ்ச்சி நடந்திருக்க வேண்டும் என்று அவன் மனம் தடாரென்று எண்ணிக்கொண்டது! நடராஜன் திரும்பிச் செல்லனைப் பார்த்தான்.

அந்தப் பார்வை வெறுப்பைக் கொட்டியதா ஆற்ரு மையைப் பிரதிபலித்ததா? என்று செல்லனுக்கு விளங்க வில்லை.

செல்லன் வீட்டைச் சுற்றித் தேடினன்; பயன் இல்லை.

நடராஜன் வீட்டுக் கதவை உடைத்துத் திறந் தான். அங்கே பொருட்கள் எல்லாம் வைத்தது வைத் தது மாதிரியே இருந்தன. அவசரமாக அங்குமிங்கும் தேடிப் பார்த்த நடராஜன் கண்ணில் அவன் பேருக்கு விலாசமிடப்பட்ட கடிதம் ஒன்று கண்ணிற்பட்டது. நடராஜன் அந்தக் கடிதத்தை எடுத்துப் பரபரப்போடு படிக்கத் தொடங்கினன். பிலோமினு அந்தக் கடிதத் தின் வரிகளில் கரந்திருந்து அழுதாள்.

இராசா!

தங்களுக்கு நான் எப்போதாவது கடிதம் ஒன்று எழுதவேண்டி யிருக்கும் என்று கனுக்கூடக் காண வில்லை. ஆனுல் எனது முதற் கடிதமே கடைசிக் கடித மாக அமைவதையிட்டு என்னுற் கண்ணீர் வடிக்காம லிருக்கவும் முடியவில்லை.

'மனித வாழ்க்கையை' நின்ருன், இருந்தான், கிடந் தான், தன்கேள் அலறச்சென்ருன்' என்று ஒரு சில சொற்களில் முடித்துவிட்டார்கள் சமண முனிவர்கள். நீங்கள் மட்டும் என் வாழ்க்கையிற் குறுக்கிட்டிரா விட்டால் எனது வாழ்க்கையும் அப்படித்தான் முடிந் திருக்கும். ஆனுல் அப்படித் தென்னைமட்டையைப் போல உணர்ச்சியற்று வீழ்ந்து அழியாமல் முழு மனுஷி யாக இன்றைக்கு என் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறேன் என்ருல், எனக்கு அந்தப் பூரண வாழ்



லவத் தந்த தங்களுக்கு நன்றி செலுத்தாமல் என் ஞல் இருக்கமுடியவில்லை.

ஆம், இளமை தொடக்கம் இன்பத்தின் வாடையே வீசாது வளர்ந்த என் வாழ்க்கையின் பிற் பகுதி தங்கள் ஒட்டுறவினுல் பூரணமடைந்தது. உலக வாழ்க்கையிற் பெண்ணுெருத்தி எந்த இன்பத்தை எதிர்பார்ப்பாளோ, அந்த இன்பத்தை நான் அடைந்து விட்டேன். அந்தப் பொற்காலம் குறுகியதாஞலும் அது அநித்தியமானது. நான் எந்த உலகிலிருப்பினும் அது என் மனத்தைவிட்டு அந்த இன்பம் சாகாது.

ஆனுல் அந்த இன்பத்தை இன்னமும் சகித்துக் கொண்டிருப்பது எனது சுயநலமாகவே இருக்கும்; என் சகோதரி ஒருத்திக்குச் செய்யும் துரோகமாக இருக் கும் அதுமட்டுமல்ல, உங்கள் மனத்திற்கும் அது தீராத உளைச்சலாகவே இருக்கும்.

நெடுங்காலந்தொட்டு 'நீ வாழ்வதுடன் பிறரையும் வாழவிடு' என்பதுதான் தமிழனின் சிறந்த பண்பா டாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த உன்னத மான இலட்சியத்திற்கு ஓர் இழுக்காக நான் வாழ விரும்பவில்லை.

என்முன்னுல் இப்போதிருக்கும் பிரச்சினை கனகத் துக்காக நான் வாழுவதல்ல. 'கனகத்தை — வாழவிடு' என்பதுதான். உங்களிருவரையும் வாழ விடுதற்காக நான் வாழாமலிருப்பது தர்க்கவாதத்திற்குக் கூடப் பொருத்தமானதுதான். ஏனென்ருல் என் வாழ்வைப் பூரணப்படுத்தினீர்கள் என்று ஏற்கனவே குறிப்பிட் டேன் அல்லவா? அந்த உபகாரத்திற்கு நான் பிரதி யுபகாரம் பண்ண வேண்டாமா?

ஆனால் என் தர்க்கவாதத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் எந்தச் சிறிய சம்பவமும் தங்களைக் கெதியாக உணர்ச்சிவசப்படச் செய்துவிடுகிறது. இரக்கம் மிகுந்த மனம், உணர்ச்சிவசப்பட்டபின், தாங்கள் தீர்மானிப்பது சரியாயிருந்தாலும் பிழை என்றாலும் அத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் ஒரு தீவிரங் கொண்டுவிடுகிறது. அதன் பலாபலன்களை அலசிப் பார்ப்பதில்லை. அதை எண்ணும்போது என் செய்கையும் தங்கள் மனத்தை எப்படிக் குழப்புமோ என்றெண்ணித்தான் நான் பயப்படுகிறேன்! என் கடைசி நேரத்தில் மனத்திலே எந்தக் களங்கமுமின்றிச் சொல்கிறேன். 'உண்மையாகவே நான் இந்த முடிவுக்கு வந்தது கனகமும் நீங்களும் மனச் சமாதானமாக வாழவேண்டும் என்ற ஒரே எண்ணத்தினாற்தான். என் கடைசி ஆசையை நிறைவேற்றாவிட்டால் அந்தப்பாவம் உங்களைச் சும்மாவிட்டு விடாது' என் தாயார் இறந்த நேரத்தில் எனக்கு அடைக்கலந் தந்ததுபோலவே என் கடைசிக் காலத்திற் தாங்கள் துணையாக இருக்க வேண்டும் என்று தங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் கொஞ்சம் பொறுமையாகச் சிந்தித்துப் பாருங்கள். கனகம் உங்களுக்காகப் பிறந்தவள். நான் தற்செயலாகத் தங்கள் வாழ்விற் குறுக்கிட்டவள். நான் எப்படிக் குறுக்கிட்டேனோ அப்படியே பிரிந்தும் போகிறேன். என் பிரிவு தங்களுக்குச் சமாதானத்தைக் கொடுக்கிறது என்பதை எண்ணிக்கொண்டு நான் மிகுந்த மனநிறைவோடேயே பிரிகின்றேன். அதைப் பற்றிக் கவலைப்பட என்ன இருக்கிறது.



தங்களைச் சமாதானப்படுத்த எதையெதையெல்லாம் பூசி மெழுகுகிறேன் என்று எண்ணுகிறீர்களா? நிச்சயமாக அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. உண்மையைத்தான் எழுதுகிறேன்.

'நான் செத்தேன் என்று துக்கப்படுவதைவிட, ஏன் செத்தேன் என்று எண்ணிப்பார்த்தால், தங்களுக்கு அப்படி எண்ணிப்பார்ப்பதற்கு ஒரு தடையமாகத்தான் இதை எழுதுகிறேன்.

'ஆம், நான் ஏன் சாகிறேன்? நன்றாக நீங்கள் யோசித்துப் பாருங்கள்.

'கனகம் ஏன் தங்களுக்கு அழுதழுது கடிதம் எழுதினாள்? அதையும் எண்ணிப்பாருங்கள்.'

'இரண்டையும் நீங்கள் யோசித்துப் பார்த்தீர்களானால் நீங்கள் வாழவேண்டியதின் அவசியத்தை வாழ்க்கையிற் தாங்கள் செய்யவேண்டியிருக்கும் ஒரு மகத்தான சேவையின் தேவையை உணர்வீர்கள். அந்தத் தேவைக்காக வாழ்வீர்கள். வாழவேண்டும் என்று விரும்புவீர்கள்.'

நான் ஏன் சாகிறேன்? 'கனகம் வாழவேண்டும் என்பதற்காக' என்று ஏற்கனவே பதில் எழுதிவிட்டேன். அவள் வாழ்வதானால் நான் ஏன் சாகவேண்டும் என்று கேட்பீர்களா? நான் பிரிந்து போவதுதானே என்று நினைக்கிறீர்களா?

நல்ல கேள்விகள்தான். உண்மையாகவே என்னாற் பிரிந்துகொண்டு தனியாக வாழ்க்கை நடத்த முடியுமாயின் நான் சாகவேண்டிய தேவையே இராது. ஆனாற் சமூகத்தில் அப்படி நான் வாழ முடியுமா?

கனகமும் அப்படித்தான். என்னை வாழவிட்டுக் கனகம் தனித்து வாழ முடியுமா?

எங்களில் யாராவது ஒருத்தர் வாழவேண்டும்: அதற்கு ஒருவர் சாகவேண்டும்; இல்லாவிட்டாற் செத்துக்கொண்டிருக்க வேண்டும். செத்துக்கொண்டிருப்பதை விடச் சாவது மேலல்லவா?

ஆம், நமது சமுதாயம், அதன் செம்பாதியான பெண்களை, தன் பலத்தில் நிமிர்ந்துநிற்கத் திராணியற்றவர்களாகத்தான் காலங்காலமாக வைத்துக்கொண்டிருக்கிறது அவர்கள் கொடிகளாம் அந்தக் கொடிகள் படரக் கொழுகொம்பு அவசியமாம் என்று என்னவோ எல்லாம் பேசிக்கொண்டு வருகிறது. மதவாதிகண்ணுக்குத் தெரியாத மோட்சத்தைக் காட்டிக் காட்டி நாளும் பொழுதும் மனிதர் கூட்டத்தைச் சாவதற்குத் தயார் பண்ணுவதுபோலவே பெண்களுக்கும் காதல் என்ற மோட்சத்தைக் காட்டி, ஆண்கள் அவர்களைச் சாவுக்குத் தயார் பண்ணி வருவதே எங்களினத்தின் சரித்திரமாக இதுவரைக்கும் இருந்து வருகிறது. இந்தப்போக்கு மாருவிட்டால், மாற்ருவிட்டால் நாங்கள் சாவதையும் தங்களாற் தடுக்க முடியாது.

பெண்களெல்லாம் வரிந்து கட்டிக்கொண்டு கையிலே வாள் பிடித்து வீராங்கனைகளாக, ஆண்களோடு எல்லாவற்றிலும் சரிநிகர் சமானமாக வாழவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆண் துணை கிடைக்காவிட்டாலும் நாட்டிலே தனித்தியங்கக்கூடிய ஒரு நிலையைத்தான் நான் வேண்டுகிறேன். காந்தி மகாத்மா குறிப்பிட்டதுபோல எந்தப் பெண்ணும்



எந்த நேரத்திலும் தன்னந் தனியளுகத் தெருவிலே நடக்கக்கூடிய ஒரு புதிய சமுதாய அமைப்பைத்தான் நான் கேட்கிறேன். அப்படியான ஒரு சூழலை உண்டாக்காதவரை என் பிரிவுக்காகத் துக்கப்பட்டால் அதிலே அர்த்தமேயில்லை. இப்படியான ஒரு சமுதாய அமைப்பை உண்டாக்குவதற்காக நீங்கள் பாடுபடுங்கள். அதற்குக் கனகத்தையும் துணையாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். அந்தப் புதிய சமுதாயத்தைச் சிருட்டித்தபின் வேண்டுமானுற் கனகத்தை துரத்திவிடுங்கள்.

ஆண்கள் மனத்தை அப்படித் தூய்மைப்படுத்த முடியாவிட்டால் எந்தப் பெண்ணின் கடந்த கால வாழ்வைப்பற்றி விசாரிக்காமல் இருங்கள். அகராதியிலிருந்து கற்பு என்ற வார்த்தையையே விலக்கி விடுங்கள். பெண்களின் கடைசிக் காதலுக்கும் மதிப்பளியுங்கள். இல்லாவிட்டால் எங்களைச் சாக அனுமதியுங்கள்! அதைவிட்டு வேலி பயிரை மேய்வதுபோல எங்களுக்குக் 'கொழுகொம்பு' என்று பெருமைப் பட்டுக் கொண்டிருக்கும் நீங்களே எங்களை நாசமாக்காதீர்கள்.

என் சக்திக்கும் மேலாக எதையோ எழுதி விட்டேன் போல இருக்கிறது. எல்லாம் நான் சாகாமல் இருந்தால் என்ன? என்று நான் சிந்தித்ததின் விளைவு! என் எண்ணம் எப்போதாவது நடைமுறைக்கு வருமோ என்னவோ? ஆறுற் கடைசி முறையாக மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன், என் ஆசைகள் எல்லாம் நிறைவேருவிட்டாலும் நீங்கள் கனகத்தைக் கைவிட்டுவிடாதீர்கள். என்னையுந் தேடாதீர்கள். உங்

கள் கண்ணிற் படாமலே நான் போய்விடுகிறேன். என் பிரேதத்தைக்கூட நீங்கள் காணமுடியாதவாறு நான் சாகிறேன்.

பிலோமினுவின் கடிதத்தைப் பார்த்த நடராஜனுக்குத் தலையிலே இடி விழுந்ததைப்போல இருந்தது. சுவரிலே தலையை முட்டிக்கொண்டு அழுதான்.

இதற்குள் செல்லனின் கடிதத்தைக் கண்டு மூதூரிலிருந்து புறப்பட்டுக் கந்தையாவும், அவர் தங்கையும் அங்கே வந்திருந்தார்கள். நடராஜன் அவன் தாயின் மடியிற் குழந்தையைப்போல விம்மி விம்மி அழுதான்!

அதன்பிறகு பிலோமினுவுக்குக் கொழுகொம்பு கிடைத்திருக்கும் என்று நான் எழுதத்தேவையில்லை.

அவளுக்குக் கொழுகொம்பு கிடைத்தால் மட்டும் போதுமா? பிலோமினுவின் கடைசி ஆசையான புதிய சமுதாயம் உருவாவதற்கு நடராஜன் தனித்து என்ன செய்வது? எல்லாரின் மனமுமல்லவா மாறவேண்டும். அந்தப் புதிய சமுதாயந் தான் பெண்களின் உண்மையான கொழுகொம்பு.

முற்றும்

★

EE /24